# இளங்கதிர்.



# இளங்கதிர்

**33வது ஆண்டு மலர் (99/2000)**

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"*

*இதழாசிரியர்கள்:*

**வேலாயுதம் முருகதாசன்**

**மதுராந்தகி சின்னத்தம்பி**

*வெளியீடு :*

**தமிழ்ச்சங்கம்**

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**பேராதனை**

Students Copy

# தமிழ்ச் சங்கக் கீதம்

புகழ் திகழ் தமிழ் மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக! வருக!!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு
மலைவிளக் காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன்பிள்ளை கள்போல்
சமத்துவ மாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக! எங்கள்
தமிழ்க் குற ளறநெறி தழைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க்கலை மன்றம்
வளர்க! வளர்க! வளர்க
மாநிலம் போற்றிட வளர்க!!

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண் டிலங்கி மிளிர்க
இளந்தமிழ் மாணவர் இன்கலைக் கோட்டம்
இவ்வுலக குளவரை துலங்க
ஈழமணி நாடுவுயர்க! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண் டுயர்வுடன் வாழ்க.

மெட்டு : "ஜன கண மன" எனும் இந்திய தேசிய கீதம்
ஆக்கம் : சக்திதாசன்

## *Message from The Vice - Chancellor*

*I am pleased to write this message to the "Ilankathir" magazine published by the University Tamil Society, Sharing and exchange of information among members of different interests through publication of an annual magazine is indeed laudable. The university has to support such activities to encourage the creative works of the students and also the academic staff. As the Vice Chancellor of the University of Peradeniya. I wish to extend my support and encouragement to the publicaton of "Ilankathir". I wish them every success and look forward to the continuation of this publication in the future too.*

**Professor Kapila Goonasekera**
*Vice Chancellor*

*University of Peradeniya,*
*Peradeniya.*

## *பெருந்தலைவரின் வாழ்த்துச்செய்தி*

எங்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் அதற்கு வெளியேயுள்ள சமூகத்திலும் பண்பாட்டு வளர்ச்சியும் அறிவு விருத்தியும் வேண்டிப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் ஆற்றிவரும் பணிகள் குறிப்பிடத்தக்கவை. அச்சங்கம் 1948ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வரும் இளங்கதிர் சஞ்சிகையின் முப்பத்து மூன்றாம் இதழுக்கு இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவது எமக்கு உவகையும் பெருமையும் தருவதாகும்.

தமிழ் இலக்கியம், பண்பாடு முதலியவற்றை வளர்ப்பதையும் தமிழறிவைப் பரப்புவதையும் கலை ஆக்கங்களை ஊக்குவிப்பதையும் பிரதான நோக்கங்களாகக் கொண்டு, இலங்கைப் பல்கலைக்கழகம் தோன்றுவதற்குப் பதினாறு ஆண்டுகளுக்கு முன், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. எங்கள் தமிழ்ச் சங்கம். அதன் முயற்சிகளும் வெளியீடுகளும் கலை, இலக்கியத்துறைகளைச் சார்ந்தனவாகவே நீண்டகாலமாக விளங்கின. ஆனால், சமீப காலத்தில் விஞ்ஞான, விவசாய, பொறியியல், மருத்துவ, பல் மருத்துவ,கால்நடை வைத்தியத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் அறிவையும் ஆய்வுகளையும் அனுபவங்களையும் தமிழ் மொழி மூலம் பரிமாறிக் கொள்வதில் காட்டும் ஆர்வம் தமிழ்ச் சங்கத்துக்கும் இளங்கதிருக்கும் புதிய பரிமாணத்தைச் சேர்த்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாகும்.

உலகத்தையும் அதன் பன்முகத் தன்மையினையும் செவ்வனே புரிந்து கொள்வதற்கும் எதிர்கால முன்னேற்றத்துக்கு வேண்டிய அறிவையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்வதற்கும் உகந்த முறையில் தமிழ் சங்கத்தின் செயற்பாடுகளும் இளங்கதிரின் வெளியீடுகளும் அமையவேண்டி வாழ்த்துகிறோம்.

*பேராசிரியர் சி. தில்லைநாதன்*
*பெருந்தலைவர்*
*தமிழ்ச்சங்கம்*

*தமிழ்த்துறைத்தலைவர்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*
*பேராதனை*

## பெரும் பொருளாளரின் வாழ்த்துக்கள்

பேராறு மாவலிசூழ் பெருவனப்பு நிறைநல்ல
பேராதனை நகரின் பேர்பெறுபல் கலையகத்தில்
முறையாக முத்தமிழை முனைப்புடனே காத்துவரும்
நிறைவான வரலாற்று நீடுபுகழ் தமிழ்ச்சங்கம்
தீராத தமிழன்பில் திளைத்திடும்நம் எல்லார்க்கும்
சீராக ஆண்டுதோறும் செவ்வனே அளித்துவரும்
குணதிசையைப் பிளந்து குதித்தெழும் இளங்கதிர்போல்
தண்டமிழின் பெருமைதனைத் தரணியிற் கதிர்வீசும்
இன்பத் தளிராம் "இளங்கதிர்" சஞ்சிகைக்கு
அன்பான ஆசிகளை அளிப்பதில் மகிழ்கின்றேன்
முப்பத்து மூன்றாண்டு முதிர்ச்சிபெற்ற இவ்விதழை
ஒப்பற்ற முயற்சியினால் உயர்ச்சியாய் வெளிக்கொணர்ந்த
இவ்விதழின் ஆசிரியர், இணைந்தசெயற் குழுவினர்
ஒவ்வொருவ ருக்கும் உவப்புடனே என்பாராட்டு
மென்மேலும் தமிழ்ச்சங்கம் மேன்மைகள் பலபெற்று
எந்நாளும் இனிதோங்க இதயத்தால் வாழ்த்துகிறேன்.

*டாக்டர் எம். ஏ. எம். சித்தீக்*
*தமிழ்ச்சங்கப் பெரும் பொருளாளர்*

*பல்மருத்துவ பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

## *தலைவரின் வாழ்த்துச் செய்தி .....*

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பழம்பெரும் சங்கங்களுள் ஒன்றான தமிழ்ச் சங்கத்தின் கலை இக்கிய நடவடிக்கைகள் இன்று உலகளாவிய ரீதியில் பேசப்படுவதோடு மட்டுமல்லாமல் அது தன் செயற்பாடுகளையும் உலகளாவிய ரீதியில் விஸ்-தீரணப்படுத்தியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடமாகும். இதில் அதன் ஆண்டு மலரான இளங்கதிரின் பங்கு அளப்பரியதாகும்.

இந்த ஆண்டிற்கான இதழ் பல்கலைக்கழக மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கலை, இலக்கிய, சமூகவியல் படைப்-புக்களை தாங்கி வருவதோடு சமகால நிகழ்வுகளின் பிரதி-பலிப்பாகவும் வெளிவருகிறது. இதன் வெளியீட்டிற்காகவும், புலமைப் பரிசிற் திட்டத்திற்காகவும், ஹட்டன் நகரில் நடைபெற்ற "குறிஞ்சித் தென்றல்" நிகழ்விற்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் இந்நேரம் நன்றியோடு பார்க்கின்றேன்.

இனிவரும் காலங்களிலும் இளங்கதிரின் பணிகள் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*செ. ருக்ஷகான்.*
*தலைவர்*

## செயலாளரின் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினது 65ஆவது செயற்குழுவினராய எம்மிடம் இருந்து "இளங்கதிரின்" 33ஆவது இதழ் மலர்ந்திருக்கிறது.

மலர்ந்துள்ள இதழைப் பேராசியர்கள், விரிவுரையாளர்கள், முதலிய பெரியோர்களும், ஆற்றல் வாய்ந்த நண்பர்களும் அலங்கரித்துள்ளார்கள். அவர்கள் அத்துணைப்பேருடைய ஆற்றலும் "இளங்கதிர்" இதழைப் பெறுமதி உடையதாக்கி இருக்கின்றது.

இவ்விதழின் சிறப்புக்குப் பலவகையிலும் பாடுபட்ட இதழாசிரியர்க்கும், துணை நின்ற தோழர்களுக்கும் சங்கத்தின் சார்பில் என் நன்றிகள்.

வழமை போலவே, காத்திரமாக வெளிவரும் "இளங்கதிர்" இதழ் சிறப்பாக மொழியார்வமுள்ள மாணவர்க்கும், பொதுவாக அனைவர்க்கும் பயன்படும் என்பதென் நம்பிக்கை அனைவரும் பயன்பெற வேண்டும் என்பதென் வேண்டுகோள்.

நன்றி.

*வ.ஜெயரூபன்.*
*செயலாளர்*

# பகிர்ந்து கொள்கின்றோம் .....

வளாகத்தில் எங்கள் இருப்புக்களே கேள்விக் குறியாகிப் போன இந்தக் கசப்பான காலகட்டத்தில், இளங்கதிரின் ஒளிவீச்சுக்கள் தடையின்றி வெளிவந்ததையிட்டு மனம் நிறைவடைகிறோம். எழுத்தாலும், வரலாற்று ஆய்வுகளாலும் இது வரை நாங்கள் சாதித்து என்ன? என்ற நியாயமான கேள்வி நெஞ்சை உலுக்குகின்ற அதேவேளை ஒரு இனத்தினை அடையாளப்படுத்தும் கலாசார விழுமியங்களை கட்டிக்காக்கும் ஒரு கருவியாக மொழி இருப்பதனை எவருமே மறுக்க முடியாது. அந்த வகையில் எமக்கான வரலாற்றில் எம்மை நிலைநிறுத்தும் சிறிய முயற்சியாக இதனைக் கொள்ளலாம் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

புதிய நூற்றாண்டில் உலகம் காலடிகள் பதிக்கும் இந்த வேளையில், இலங்கை வாழ் தமிழ் சமூகத்தினர் சில நூற்றாண்டுகள் பின்தள்ளப்பட்டுள்ளனர் என்பது வேதனை தரும் வெளிப்படை உண்மையாகும். அகதிமுகாம்களாக்கப்பட்ட பாடசாலைகளும், சூனிய பிரதேசங்களாக்கப்பட்ட மக்கள் குடியிருப்பும், முடிவிலாது நீளும் காணாமல் போனோர் பட்டியலும் இதற்குச் சான்று பகரும். நாளை என்பதை விட இன்று என்பதே கேள்விக்குறியாகிப் போன இந்த வேளையில் தமிழ் சமூகத்தின் சமகாலத் தேடல்களை இங்கே பதிவு செய்ய முயற்சித்திருக்கின்றோம்.

ஆக்கங்கள் அனைத்திற்கும் களம் தரும் நோக்கில் பக்கங்களின் எண்ணிக்கையினை அதிகரித்திருந்தோம். எனினும் சில ஆக்கங்களிற்கு களம் கொடுக்க முடியாமல் போனமைக்கு மனம் வருந்துகிறோம். கிடைக்கப்பெற்ற ஆக்கங்களில் கூடுதலானவை கவிதைகளாகவே இருந்தன. எமது சமூகத்தை பிரதிபலிப்பது போலவே வளாக மட்டத்திலும் கட்டுரையாளர்களினதும் சிறுகதை எழுத்தாளர்களினதும் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கிறது. இந்நிலைப்பாடு ஆரோக்கியமானதல்ல எனவே நாளைய இளங்கதிரின் எழுத்தாளர்கள் இக்குறையினை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் கைகளை விலங்கிட்டிருக்கும் தமிழ்ச்சங்கத்தினராகிய எங்களின் 33வது இளங்கதிர் மலரை இம்முறையும் இயலுமானவரை வீரியமாக்க முயற்சித்திருக்கின்றோம். இம்முயற்சியில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளோம் என்பதை வாசகர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

இளங்கதிரே!
நாளைய விடியல்களிலும் தொடரப்போகும்
உனது பிரசவங்கள்
சுகப்பிரசவங்களாகட்டும்.

வாழ்த்துக்களுடன்

இதழாசிரியர்கள்

அட்டைப்படக்கவிதை

# முடிவின் தொடக்கத்தில் .........

சி. பத்மசீலன், 2ம் வருடம், விஞ்ஞானபீடம்

கலங்காதே கண்ணே
கண்களில் தெரியும்
கவலையை வெறுத்து
கனவினை நனவாக்க
கங்கணம் கட்டிக்கொள்
ஆண்டாண்டு காலமாக
கோட்டைகள் பலவற்றில்
கொடியேற்றி ஆண்டவர் நாம் - இன்று
பாழடைந்த கோட்டைகளாய் - எம்
பழைய சரித்திரம்
எலும்புத்துண்டுகளால்
எழுத்து மாறிய நிலையில்!
கல்வெட்டுகளில் - வீர
வரலாற்றைப் பொதித்தவர்கள்
கல்லறைகள் ஏதுமின்றி
ஆச்சார அடக்கமற்று
அகன்ற குழிகளில்
புதிர்களாய் மாறிவிட்டார்
கட்டுக்கோப்பான - எம்
கலாசாரம்
அடிமை விலங்குகளால்
கலையிழந்து
அடுத்த தலைமுறையின்
ஆராய்ச்சிப் பாடமாகுதடா

கலங்காதே கண்ணே
காரிருளில் உறைந்து
கலங்கிக் கொண்டிருப்போரை
கதிரவன் கைவிட்டாலும்
காலன் கைவிடுவதில்லை
இழப்புக்களே நிவாரணமாகி
ஊனமுற்ற சமுதாயம்
உன்னி எழும்ப வேண்டும் - உன்
ஊன்றுகோலின் உதவியாலே
ஊனம் என்பது - உனக்கு
உரித்தாகிப் போனாலும்
உணர்ச்சி இருக்கும் வரை
முன்னேறிக் கொண்டேயிரு

இனியும் கலக்கமேன்
இறுகப்பற்றிக் கொள் - உன்
கரத்தை
இதயமுள்ள மனிதன் அல்ல
இடையில் கைவிட்டு விட - இவன்
இலத்திரனியல் மனிதன்
உலகமே வியந்து நிற்கும்
விஞ்ஞானம் ஈன்றெடுத்த
மகத்தான பேறு இவன் - ஆனால்
இவனது பாதையிலும்
ஆக்கமும் அழிவுமே
இரண்டு எல்லைகள்
இவன்மேலல் ஏறியிருந்து
நல்வழிக்கு அழைத்து வந்து
தலைகுனியா - உன்
சந்ததியை - உலகம்
தலைநிமிர்ந்து பார்க்கவை

# மனவெழுச்சிகளும் (Emotions) அவை மனித நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கமும்

எம். ஐ. அப்துல் மஜீட், உதவி விரிவுரையாளர், மெய்யியல் துறை.

பொதுவாக மனிதன் மனவெழுச்சிகளினால் இயக்கப் படுகிறான். நாம் யாவரும் மனவெழுச்சிகளை அனுபவிக்கின்றோம். சகல மனவெழுச்சி நிலைகளும் யாவருக்கும் பொதுவானவை. முழு உயிரியின் செயற்பாடும் மனவெழுச்சிகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது. நம் வாழ்வின் பெரும்பாலான செயல்கள் மனவெழுச்சிகளினால் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு மனிதனின் நடத்தைக்குச் சக்தியளிப்பதும் ஊக்கமளிப்பதும் மனவெழுச்சிகளாகும். இவை மனிதனின் இயக்கங்களுக்கான உள்ளிடை ஊற்றுக்களாகும்.

மனவெழுச்சியென்ற சொல்லுக்கு நேர் ஆங்கிலச் சொல்லான "Emotion" என்பது "Emovere" என்னும் லத்தீன் சொல்லிலிருந்து வந்ததாகும். இதன் பொருள் 'வெளிக்கொணர்தல்' என்பது. பொதுவாக இது தூண்டி விடப்பட்ட நிலை அல்லது சூழ்நிலை என்று வரையறுக்கப்படுகின்றது. மனவெழுச்சி வாழ்க்கையுடன் ஒன்றித்துள்ளது. இது நடத்தைகள், அறிவுச் செயன் முறைகள் சம்பந்தப்பட்டனவாகவும், முக்கியமானவையாகவும் உள்ளன. அறிவுச் செயன்முறைகளின் தொடர்பே மனவெழுச்சிகளுக்கு வளர்ச்சிப் பாங்கினைக் கொடுக்கும் காரணியாகும்.

மனவெழுச்சி பற்றி எல்லா உளவியலாளர்களும் ஏற்கும் படியான ஒரு வரைவிலக்கணத்தைத் தருவது கடினம். மனவெழுச்சி உலகு சிக்கல் வாய்ந்ததாகும். அத்துடன் அது பல்வேறு கோணங்களிலிருந்தும் அவதானிக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. இது நடத்தை வாத விஞ்ஞானிகளாலும், சமூக விஞ்ஞானிகளாலும், பௌதிக வாதிகளாலும், மனோ தத்துவ நிபுணர்களாலும் பல கோணங்களிலிருந்து பகுப்பாய்வு செய்யப்படலாம்.

இருந்தும் மனித நடத்தையின் மூலமாக அவனது உணர்வுகள் (feelings), பண்புகள் (attitutes) அவனைச் சூழவுள்ள உலகை நோக்கி வெளிப்படுதல் மனவெழுச்சிகள் எனக் கூறலாம். இவை ஏதாவது தூண்டல்கள் காரணமாக ஏற்படும் உணர்வு நிலைகளாகும். இதனால் இவை மிகவும் சிக்கலான துலங்கல்களாகும். அதாவது இவை ஒருவனின் உடனடிப் பிரதிபலிப்புக்களாகும். உட்புற வெளிப்புற மாற்றங்களைக் கொண்ட செயற்பாடுகளாகும்.

மனித மனவெழுச்சிகள் சமூகத்தால் வடிவமைக்கப்படுகின்றன. மனித நடத்தையின் ஒழுங்கமைப்பில் பிரத்தியேக இடத்தை இவை வகிக்கின்றன. ஒரு தனி மனிதனின் மன

வெழுச்சி, அதன் மூலமாக அவனது நடத்தையில் உருவாகும் மாற்றம் உடலியல் மாறுதல்களினாலும், சமூகத் தொடர்புகளினாலும் கட்டுப்பாடுகளினாலும் பாதிக்கப்படுகின்றது. இளைய வயதில் வாழ்க்கையில் இயங்கும் கல்விச் சக்திகளும், கட்டுப்பாடுகளும் மனவெழுச்சி நிலையை உண்டு பண்ணலாம்.

பொதுவாக மனவெழுச்சிகளை இனிமையானவை, இனிமையற்றவை எனும் இரண்டு பிரிவுகளுக்குள் கொண்டுவரலாம். இவற்றில் அன்பு (affection), மகிழ்ச்சி (joy), களிப்பு (Delight) போன்றவை இனிமையானவை. இவற்றை இசைவான எதிர்வினைகள் எனலாம். இவற்றை மனிதன் தவிர்க்க முயல்வதில்லை. இவை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென விரும்புகின்றான். ஆனால் வெறுப்பு (disgust), பயம் (fear), கோபம் (anger), கவலை (Worry), பொறாமை (Jealousy), சலிப்பு(Beredom) போன்றவை இனிமையற்ற மன வெழுச்சிகளாகும். ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சியற்ற எதிர் வினைகளை இவை தோற்றுவிக்கின்றன. இவற்றின் பின்விளைவுகள் அவனுக்குத் தீமை பயப்பனவாக அமையலாம். அத்தோடு மனவெழுச்சிகளின் ஒரு விசேட பிரிவு உயர்ந்த உணர்வுகளை உள்ளடக்குகின்றது. ஒழுக்கம், கடமையுணர்வு, நேர்மை, அழகு என்பன இவற்றில் சிலவாகும்.

ஒருவனது மனவெழுச்சி நிலைகுலையும் போது உடலியல் வெளிப்புறங்களில் சில மாற்றங்கள் நிகழ்வதோடு உள்ளுறுப்புக்களிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதயத்துடிப்பு அதிகரிக்கும், முகம் சிவக்கும், சமிபாடு சீர்குலையும் அத்துடன் குருதிச் சுற்றோட்டத்தில், சமிபாட்டில், சுவாசத்தில் ஒரே சமயத்தில் ஏற்படும் மாற்றங்கள் உயிரியின் நிலையில் பெருமாற்றத்தை உண்டுபண்ணும். உடல் தொடர்பான மாறுதல்களுடன் வியர்வை, கண்ணீர் தோன்றல், மயிர்க்கூச்செறிதல் என்பனவையும் ஏற்படும். மேற்குறித்த உட்புற உடலியல் பிரதிபலிப்புக்கள் மனவெழுச்சிப் பிரதிபலிப்புக்களாகும். இவற்றைப் பூரண தூலங்கல்கள் எனலாம். இதனால்தான் வளர்ச்சிப் போக்கில் மனவெழுச்சிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வயதில் சிறியதொரு குழந்தையை விட பெரிய குழந்தை தன் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் நன்கு வெளிப்படுத்தலாம். இதுபோல் தன் கருத்து, உணர்ச்சிகளை நன்கு மறைத்துக் கொள்ளலாம். வயதான பின் ஒருவனுக்குக் கிளர்ச்சியூட்டும் பல மனவெழுச்சிகள் அவன் குழந்தைப் பருவத்தில் கிளர்ச்சியூட்டுவதில்லை. பத்து வயதுச் சிறுவன் சண்டைக்காட்சி, குதிரைச் சவாரியுள்ள படங்களைப் பார்ப்பதில் காட்டும் அக்கறை நல்ல காதல் கதையம்சமுள்ள படங்களைப் பார்ப்பதில் காட்டுவதில்லை. ஆனால் அதே பையன் சில வருடங்களின் பின்னர் காதல் கதையம்சமுள்ள படங்களைப் பார்ப்பதில் அக்கறை காட்டுகின்றான். காரணம் அவனின் பாலியல்பருவம் விருத்தியடைந்திருத்தலாகும். இவ்வகையில் பார்க்கின் ஒருவனின் வயது மாற்றத்திற்கேற்ப மனவெழுச்சி நிலைகளிலும் மாறுதல்கள் உண்டாகின்றன. வயது அதிகரிக்க அதிகரிக்க மனவெழுச்சிகளைத் தோற்றுவிக்கின்ற தூண்டல்களும், சூழ்நிலைகளும் அவற்றுக்கான துலங்கல்களும் வெளிப்பாடுகளும் மாற்றமடைகின்றன. குழந்தை வளர வளர அவனிடம முதலிடம் பெறும் மனவெழுச்சி தன்மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆசையாகும்.

பிள்ளைகள் தடைகளையே அதிகம் அனுபவிப்பார்களானால் இதன் விளைவாகக் கடும் கோபத்தை வெளிப்படுத்தவர். பெற்றோரிடமிருந்து தண்டனைகள் விதிக்கப்பட்டால் அவை மனமுறிவையும், சினத்தையும் தூண்டுபவனவாக அமையும். சினத்தைத் தூண்டும் நிலைமைகள் குறைத்துக் கொள்ளப்படுவதே புத்திசாலித்தனமானதாகும். பெரும்பாலான பிள்ளை

கள் வன்செயல்களைக் கற்றுக் கொள்ளக் காரணம் மனமுறிவிற்கான நிலைமைகளாகும். இத்தகைய பிள்ளைகளில் வன்செயல் ஒரு மனவெழுச்சிப் பிரச்சினையாக அமைந்து விடும்.

மனோதத்துவ வைத்தியத்தில் மனவெழுச்சி பிரதான இடத்தை வகிக்கின்றது. மனித முழு ஆளுமையுடனும் மனோ தத்துவப் பரீட்சை தொடர்பு கொண்டுள்ளது. ஆனால் சிந்தனைச் செயற்பாட்டுடன் தொடர்புடைய மனவெழுச்சிகள் மீது விசேட கவனத்தை அது வைத்துள்ளது. ஒரு நேர்முகப் பரீட்சையின் போது ஒரு மனோதத்துவ நிபுணர் மனவெழுச்சிகளின் எதிர்விளைவுகள் பற்றி நன்கு அவதானிக்கின்றார். ஒரு சக்தி வாய்ந்த மனவெழுச்சி ஒரு நோயாளியைக் கடுமையாகத் தாக்குகின்றது.

சகல பிள்ளைகளும் அல்லது சிறு குழந்தைகளும் தத்தம் சுபாவத்தில் ஒரே மாதிரியான தாக்கத்திறன், உணர்ச்சித்திறன் கொண்டவர்களல்ல. அவர்களின் நடத்தை மாதிரிகளைக் கொண்டு பல்வேறு வகைப்பட்டவர்களாகப் பாகுபடுத்தப்படலாம். சிறுகுழந்தைகள் யாவரும் ஒரே மாதிரியானவர்களல்ல. சிலர் சுறுசுறுப்பானவராயும், சிலர் அமைதியானவராயும் இருப்பர். ஒரே வகையான தூண்டல்களுக்கு இவ்வொவ்வொரு பிரிவினரும் வெளிப்படுத்தும் துலங்கல் கோலங்கள் பெரிதும் வேறுபடும். வயது செல்லச் செல்ல குழந்தையின் உணர்ச்சித் திறனும் அதிகரிக்கும். அத்துடன் பிரித்தறிதலும் சுற்றாடலிலுள்ள தூண்டிகளால் ஏற்படக்கூடிய அபாயங்களை இனங்கண்டு கொள்ளும் ஆற்றல்களும் தோன்றும். எல்லாக் குழந்தைகளும் பிறப்பில் ஒரே தன்மையானரல்லாத போது அவர்கள் வாழும் சூழலின் தன்மையும், வளர்ப்பு முறையும் அவர்களின் மனவெழுச்சிகளின் சிறப்பியல்புகளில் செல்வாக்குச் செலுத்தும்.

எத்தகைய மனவெழுச்சி நிலையும் நடத்தை ஒழுங்குகளைச் சீர்குலைக்கவல்லன. உட்புற, வெளிப்புற உளவியல் மாறுதல்களைத் தோற்றுவிக்கவல்லன. நுண்ணறிவையும், ஒழுங்கான செயற்பாடுகளையும் கடுமையான மனவெழுச்சி தடை செய்யும். இம்மன வெழுச்சிகள் சீராக அமையும் போதே நுட்பமான தீர்வுகளை அல்லது நுண் இயக்க இணைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளைச் சிறப்புற நடைமுறைப்படுத்த முடியும். இருப்பினும் மன வெழுச்சிகள் இல்லாவிடில் வாழ்க்கையே இல்லை யென றாகிவிடும் எனக் கூறப்படுகின்றது. குடும்பவுறவுகள் மறைந்து விடுவதாயும் சமயம், கடவுள் நம்பிக்கை அற்றுப் போவதாயும் சொல்லப்படுகின்றது. மனவெழுச்சிகள் வாழ்வில் கசப்பான விடயங்களை மட்டுமன்றி இனிப்பான விடயங்களையும் தருகின்றன.

மனவெழுச்சிகள் சக்தி வாய்ந்த செயல் போக்குகளை ஒருவனில் உண்டு பண்ணினால் அம்மனவெழுச்சிகளின் வெளிக்காட்டுதல்கள் கட்டுப்படுத்தப்படுவது அவசியம். மன வெழுச்சி வேகத்தை அடக்கத்தூண்டும் சக்திகளும், உணர்வுகளை மறைக்கத் தூண்டும் சக்திகளும் குழந்தைப் பருவத்திலிருந்தே தொழிற்படத் தொடங்குகின்றன. குழந்தை தன் மனவெழுச்சிகளை அடக்கும் பண்பைப் பெற்றோர், உடன் பிறந்தோர், உறவினர்கள், பின் அந்நியரிடமிருந்து பெறுகின்றது. பிள்ளைகள் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். ஆனால் அடக்கப்பட்ட மனவெழுச்சிகள் ஆளுமைக் கோளாறுகளைத் தோற்றுவிக்கலாம். இருந்தும் பிள்ளை தன் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தும் பழக்கத்தைப் பெற முன் பள்ளிப் பருவம் தொட்டே படிப்படியாக இதனைப் பழக்கத்தில் கொண்டு வரவேண்டும்.

சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், மனப் பாங்குகளிலும், நடத்தையிலும் ஏற்படும் தீமைகளைக் களைவதற்கும் மனவெழுச்சிகளையும் அவற்றின் வெளிக்காட்டுதல்களையும் கட்டுப்படுத்துவது கட்டாயத் தேவையாகும். பகுத்தாயும் மனப்பாங்குடன் ஒரு

சூழ்நிலையை அணுகி, மனக்கிளர்ச்சியடையாது அறிவுத் தெளிவுடன் அதில் செயப்படுவதையும் மனவெழுச்சிக்கட்டுப்பாடு குறிக்கின்றது. மனவெழுச்சி முதிர்ச்சியின் ஓர் அறிகுறியே மனவெழுச்சிக் கட்டுப்பாடாகும்.

வாழ்க்கையென்பது உணர்ச்சிகளிடையே ஏற்படும் கொந்தளிப்பும், போராட்டமுமாகும். உணர்ச்சிகள் இல்லையேல் வாழ்க்கையே இல்லை. மனிதனைக் கல்லினின்றும், மண்ணினின்றும் பிரித்துக்காட்டுவது அவனிடம் காணப்படும் மனவெழுச்சித் தன்மையேயாகும். இம்மனவெழுச்சிகளின் வளர்ச்சி மனித வாழ்க்கையின் மூலவேராக, மனிதர்களை ஒருங்கே இணைக்கின்ற பாலமாக அமைகின்றது. எனினும் சில மனவெழுச்சிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இவற்றைக் கட்டுப்படுத்தத் தன்னடக்கம் தேவை. மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த விரும்பும் ஒருவன் முதலில் தன்னைத் தானே கட்டுப்படுத்துபவனாகவும், தன் புலன்களை அடக்கியாள்பவனாகவும், இருக்க வேண்டும். கூட்டுறவு, பாரபட்சமற்ற நடத்தை, நம்பிக்கையான பழக்கவழக்கங்கள், மற்றவர்களினது உரிமைகளைப் பெரிதாக எண்ணுதல் போன்றனவும் மனவெழுச்சிக் கட்டுப்பாட்டுக்கு அவசியமான முன்தேவைகளாகும்.

**உசாத்துணை நூல்கள்**


Encyclopedia of philosophy

The Dictionary of philosophy.

இளையோர் உளவியல் (அ-அப்துல் கரீம்)

பொது உளவியல்

Encyclopedia of psychology

கல்வி உளவியல் (பாகம் -1)

சமூக உளவியல்

வாழ்வியல் களஞ்சியம்


### இப்படியும் ஒரு ஆராய்ச்சி

'திவயின' என்ற பத்திரிகையில் 'ஹேமசிறி பெரேரா' என்பவரின் கருத்துக்கள்.

இலங்கைத்தீவு முத்தொன்றின் தோற்றத்தை கொண்டுள்ளது. ஆதி காலம் தொட்டு இத்தீவு சிங்களவர்களின் சொந்த பூமியாக விளங்கியது. செல்வச் செழிப்புடன் இலங்கை விளங்கிய ஆதிகாலத்தில் அடிக்கடி அயலிலுள்ள தென்னிந்தியாவிலிருந்து கொள்ளைக்காரர்கள் இங்கு வருகை தந்தனர். அவர்கள் மேலும் தென்னிந்தியாவிலிருந்து அகதிகளாகவும் வந்தார்கள். அவர்களே தமிழர்கள். சிங்களவர்களின் இயற்கையான கருணைத் தன்மை காரணமாக அந்தத் தமிழர்கள் வடக்கிலும், வட மத்திய பகுதிகளிலும் குடியேறினார்கள். எனினும் தமிழ் இராச்சியம் ஒன்று இருக்கவில்லை.

# 1940 வரை இலங்கைத் தமிழ்க் கவிதை மரபு பற்றிய ஒரு நோக்கு

செ. செல்வமோகன், மூன்றாம் வருடம், பொறியியல் பீடம்

ஒரு மொழியின் இலக்கிய வகைகளில் ''கவிதை'' என்பது ஒரு வகையாகும். இலக்கிய வரலாறு என்ற கட்டமைப்பிலே ஓர் அம்சமான இக்கவிதை பற்றிய சில எண்ணக்கருக்களையும், அதன் வரலாற்றினையும், மரபுச் செழுமைகளையும் பற்றி நோக்குவதே இக்கட்டுரையின் வெளிப்பாடாகும் அந்த வகையிலே 1940 வரை இலங்கையிலே இலங்கிய இலக்கிய வகைகளில் ஒன்றான கவிதை பற்றிய நிலைகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

ஓர் இலக்கியப் படைப்பினை நோக்கும் போது; அது உணர்த்தும் கருத்து, வெளிப் படுத்தும் தன்மை, உணர்வுநிலை, காலத்தேவை, வெளிப்படுத்தும் கருவி சாதனம், அதன் பின்னணியாகத் தொடரும் ஏனைய படைப்புக்களின் பரிமாணங்கள் என்ற வகையிலே நோக்குதல் வேண்டும். இலங்கைத் தமிழ்க் கவிதை இலக்கியத்துக்கு அன்று தொட்டு இன்றுவரை ஒரு மரபுத்தன்மை இருப்பது தெரிகின்றது. தமிழகத் தமிழ்க்கவிதைக்குப் போல அல்லாவிட்டாலும் இலங்கைத் தமிழ்க் கவிதைக்கும் ஒரு நீண்ட வரலாறு உண்டு. எனினும், இன்றைய தமிழ்க் கவிதை என்று நாம் கூறும் பண்புகளை உள்ளடக்கிய கவிதைகள், ஏறத்தாழ முதல் 40 ஆண்டு காலமாகவே இலங்கைத் தமிழ் உலகில் பெருகி வருகின்றன எனலாம்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக சமய உணர்வும் தனிமனிதரைப்பாடும் நோக்கும் முத ன்மைப்பட்டு நின்ற இலங்கைத் தமிழ்க் கவிதைச் சூழலிலே 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து சமூகப் பார்வைக்கான தொடக்க நிலையின் கூறுகளை அவதானிக்க முடிகிறது. நாம் இன்று ''நவீனத்துவம்'' எனக்கருதுவதை அதன் முழு அர்த்த பரிமாணத்துடன் அக்காலப்பகுதி இலங்கைத் தமிழ்க் கவிதையிலே காண்பதற்கில்லை. எனினும் அதன் குறித்த சில கூறுகள் அக்காலத்தில் மெல்ல மெல்லத் தம்மை இனங் காட்டத் தொடங்கின எனலாம். குறிப்பாக சமூகப்பார்வை என்ற வகையிலே சமூகப்பிரச்சினைகளை இலக்கியத்திற்குப் பொருளாகக் கொள்வதாக இதன் தோற்றம் அமையலாயிற்று,

இதன் தோற்றுவாயை சுன்னாகம் முத்துக்குமார கவிராசன் (1780- 1851) உடுப்பிட்டி குமாரசுவாமி முதலியார் (1791 - 1874) ஆகியோரின் சில பாடல்கள், வண்ணார்பண்ணை சுப்பையா புலவர் (1820 - 1896) இயற்றிய ''கனகிபுராணம்'' கோப்பாய் இராமலிங்கம் என்பவரால் பாடப்பெற்ற ''கோட்டுப்புராணம்'', திருகோணமலை சரவணமுத்துப்பிள்ளை

அவர்களின் ''தந்தை விடு தூது'', அ.சதாசிவம்பிள்ளையின் ''கீர்த்தனா சங்கிரஹமம்'', அச்சுவேலி தம்பி முத்துப்புலவர் (1857 - 1937) இயற்றிய ''சன்மார்க்க - வந்தாதி'', ''சன்மார்க்க சதகம்'' என்பவற்றில் அவதானிக்க முடிகிறது.

1920ம் ஆண்டுக்குப் பின்னரே மலையகத்தில் மழைத் தூறல்கள் போல் கவிதை முயற்சிகள் வாய்மொழிப்பாடல்களாக, சிறுசிறு துண்டுப் பிரசுரங்களாக தோட்டத் தொழிலாளர்க ளிடையே பாடிப்பரப்பப்பட்டன. இதற்கெல்லாம் முக்கிய காரணகர்த்தாவாக விளங்கியவர் கோ.நடேசையர் ஆவார். இவற்றைத் தொடர்ந்து 1930 களிலும் பல கவிதையாக்கங்கள் பாடல் வடிவில் வெளிவரலாயின. இவற்றுட்பல வழிபாடு சார்ந்த கும்மி, சிந்து வகைகளில் அமை ந்தவை. சில கொலை, மதுக்கொடுமை, பஞ்சம் என்பவற்றை உள்ளடக்கமாகக் கொண்டவை. இந்திய தேசிய உணர்வின் பிரதிபலிப்பாகவும் சில அமைந்தன.

இவற்றினை விட இன்றும் பல செழுமை ததும்பும் கவிதை இலக்கியங்கள் தோன்றி யிருந்தும் அவை சமயமீட்பு, இயக்கத்தின் சாம்ராச்சியத்துக்கு உட்பட்டு சமாதி கட்ட ப்பட்டுள்ளன என்று தெரிகிறது. அதாவது பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறியது போல ''மனம் வைத்து அழிக்கத் தேவையில்லை புறக்கணிப்பே அழிவைத் தேடிக் கொடுக்கும்'' என்பதாகும். எனினும் அவற்றின் சாயல்களை ஒத்த சிருஷ்டிப்புக்களை இனங்காணக் கூடியதாக இருக்கின்றது.

சுன்னாகம் முத்துக்குமார கவிராசரவர்களின் பாடல்களை நோக்கின், சமகாலத்தில் கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகளால் ஏமாற்றப்பட்டு அல்லலுற்ற சிலரின் குரலாகத்தந்துள்ள பாடலானது சமய எதிர்ப்பு அடிப்படையில் அமைந்துள்ள தாயினும் சமகாலத்தில் மேனாட்டுத் தொடர்பாடல் பாரம்பரிய நிலவுடமைச் சமுதாய வாழ்க்கை முறைகளில் நிகழ்ந்த மாற்றங்களை உணர்த்தி நிற்பதால் சமூகச் சாயல் கொண்டது அவ்வகையில் ஆரம்ப முயற்சியாக இப் பாடலைக் கொள்ளலாம். உடுப்பிட்டி குமாரசுவாமி முதலியாரவர்கள் மனிதநேய நோக்கில் சில பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் ''எந்தெய்வம்'' என்ற தலைப்பிலான கீர்த்தனையின் அமைப்பிலே நவீனமயப்பாட்டின் ஆரம்ப சாயல்கள் தோற்றம் கொள்கின்றன எனலாம்.

கனகி என்ற கணிகையை பாட்டுடைத் தலைவியாகக் கொண்ட சுப்பையாப்புலவரால் பாடப்பட்ட கனகி புராணத்தில் பரத்தையர்பால் செல்வங்களைச் சொரிந்து சிற்றின்ப வெள்ளத்தில் திணறமுன்னிற்கும் ஒரு சமூகப் பகுதியின் தோற்றப்பாடு தெரிகிறது. அங்க தச்சுவையுடன் எழுந்த முதல் இலங்கைத் தமிழ் இலக்கியம் என்ற பெருமையும் இதற்கு உண்டு. எனவே சமயம் சாராத இலௌகிகக் கவிமரபு ஒன்று யாழ்ப்பாணத்திலே நிலவியுள்ளது என்பது புலனாகின்றது. சமயம் சாராத இலக்கியங்களைப் பொறுத்த வரையில் சில செம்பொருள் அங்கதம் என்று கூறப்படத்தக்கனவாக அமைந்தன. உ-ம் கல்லடி வேலுப்பிள்ளையால் பாடப்பட்ட அழகம்மா கும்மி ஆகும்.

கோட்டுப்புராணம், நீதிமன்றத்தில் வழக்காடுபவர்கள் எய்தும் இன்னல்கள் பலவற் றையும் எடுத்துரைப்பதாகத் தெரிகிறது. வாதி - பிரதி வாதிகளுக்கு ஏற்படும் பணநஷ்டம், தொல்லைகள் முதலான துன்பங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. கோட்டுக்குப் போனதில் வென்றவன் கரி - தோற்றவன் சாம்பல் என்ற தன்மை நாசூக்காகச் சுட்டப்படுகின்றது.

சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நல்லறிவுச் சுடர், கொழுத்தும் மேற்படி இரு ''புராண'' நூல்கள் எழுந்த காலப்பகுதிக்கு முன்பு ''தாலபுராணம்'' (தாலம் - பனை) என ஒரு நூல் எழுந்ததாக அறியப்படுகிறது. பனையின் பெருமை கூறினும் ஒரு வகை கேலிப் பாடலா கவும் இருக்கலாம், எனப்பாவலர் சரித்திரத்தீபக ஆசிரியர் கூறுகின்றார். யாழ்ப்பாணத்தின்

தனிப்பாடல் மரபினை ஆராயும் போது சமயஞ்சாராத ஒரு கவிமரபு நிலவிற்று என்றே தெரிகிறது. கனகிபுராணம், கோட்டுப் புராணம் என்பன புலப்படுத்திய சமுதாயப் பார்வையும் இன்னொரு பரிமாணத்தை புலப்படுத்துவதாகவும் அமைந்த ஆக்கம் தி.த.சரவணமுத துப்பிள்ளையின் தந்தைவிடு தூது (1892) ஆகும். திருமண உறவில் மணமக்களின் மனப் பொருத்தத்திற்கு முதன்மை தராத சமூக மனப்பான்மையைக் கண்டிப்பதுடன், பெண்ணடக்கு முறைக்கு எதிரான சிந்தனையும் இதில் அமைந்துள்ளது. பெண்ணடிமை பற்றிப் பாடிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ்க் கவிதை உலகிற் பிரவேசிப்பதற்கு 12 ஆண்டுகட்கு முன்பே இப்பிரபந்தத்தை இவர் பாடியுள்ளார்.

தம்பி முத்துப்பிள்ளை அவர்கள் கத்தோலிக்கப் பக்தி நெறியில் தோய்ந்தவர் என்றாலும் அச்சமயச் சார்பிற்குப் புறம்பான நிலையிலும் அறம் பற்றிச் சிந்தித்துள்ளார். இப்பண்பு நவீன தமிழ் இலக்கியத்தின் அடிப்படைகளில் ஒன்றான மதச்சார்பின்மைக்கு அடிகோலுவதாகும்.

சுப்பையாப்புலவர், சரவணமுத்துப்பிள்ளை, சதாசிவம்பிள்ளை, தம்பிமுத்துப்புலவர், ஆகியோரது கவிதையாக்கங்கள் பொருள்நிலையில் நவீனமயப்பாட்டுக்குரிய சமுதாய ப்பார்வையின் பல்வேறு பரிமாணங்களைச் சுட்டி நிற்கின்றன. புராணம் தூது, சதகம், அந்தாதி என அவற்றின் பெயர் அமைந்த நிலை மட்டுமன்றி கட்டமைப்பிலும் மரபுக்குட்பட்ட னவாகவே அவை அமைந்தன. சராசரி வாசகன் பற்றி இங்கு சிந்திக்கப்படவில்லை.

இத்தகைய மரபினையுடைத்து பொருள், வடிவம் ஆகிய இருநிலைகளிலும் நவீன மயப்பாட்டுக்குரிய பொதுமக்கள் அறிமுகம் செய்தவகையில் குறிப்பிடத்தக்கவர் பாவலர் அ.துரையப்பாப்பிள்ளை ஆவர். சமுதாயச்சார்பான உள்ளடக்கத்தை வெளியிடும் முறையில் கும்மி, பதம், கீர்த்தனை ஆகிய இசைப்பாக்களைக் கையாண்டு நமது சமுதாயச்சாரியை வெளிப்படுத்திய வகையிலே பாவலர் அவர்கள் மேற்சுட்டியவர்களில் இருந்து வேறுபட்டுத் திகழ்கின்றார். பாவலருக்கு சமகாலத்தவரான வண்ணை நெ.வை.செல்லையா (1878 - 1940) சமய நோக்கில் பல பாடல்கள் பாடியதோடு சமூக நோக்கில் ''மதுமானிடக்கும்மி'' என்ற சிறு பிரபந்தத்தை ஆக்கியுள்ளார்.

சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவரும் அவரையடுத்து தி.சதாசிவஐயர் முதலியோரும் வடமொழி மூலங்களைத் தமிழாக்கியும், தழுவியும் இலங்கைத் தமிழ் கவிதை மரபை வளம்படுத்த முயற்சித்து நின்ற காலப்பகுதியிலே ஆங்கில மூலங்களை ஆதாரமாகக் கொண்டும் மேற்படி முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின. இவ்வகையில் சிறப்பாகப் பணிபுரிந்த முதன் முயற்சியாளராகத் திகழ்ந்தவர் விபுலானந்த அடிகளார் ( 1892 - 1947) ஆவர்.

இலங்கைத் தமிழ்க் கவிதை மரபானது புறக்கணிக்கப்பட்ட இலக்கியங்களை விடுத்துப் பேணப்பட்டவற்றின் அடிப்படையிலே நோக்கப்படுகிறது. புலமை தொழின்முறையாகக் காணப்படுவதுடன், எத்துணை சாதுரியமாக - இலைமறை காயாகக் கருத்துக்களைக் கூற முடியுமோ அதனையே சிறந்த இலக்கியமாகக் கொள்ளும் பண்புகள் காணப்படுகின்றன. மேலும், இக்காலத்துச் செய்யுளை நுணுகி நோக்கும் போது அவற்றின் மரபு நிலைப்பாடு முக்கியமான ஒரு பண்பாக அமைவதை அவதானிக்கலாம் பாட்டியல், அணியியல், மரபின் இறுக்கமான நழுவுதலை இக்கவிதைகளிற் தரிசிக்கலாம்.

# காளிதாசனின் இருதுசம்ஹாரம் - மழைக்கால வர்ணனை

க. ஆனந்தகுமார், தமிழ்த்துறை, இறுதிவருடம்

உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத்தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை.

இது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் கவிதையைப் பற்றிய கவிதை. கவிதை எங்கோ இருந்து வருவதில்லை. உள்ளத்திலிருந்தே வருவது. உள்ளத்திலிருந்து வரும் அக்கவிதை இன்பமாக உருக்கொள்ளும். அவ்வின்பமானது உலகத்தவர்களால் நுகரப்படும். தெள்ளத் தெளிந்த தமிழில் மட்டுமன்றி உலகில் வழக்கிலுள்ள வழக்கிலில்லாத மொழிகளிலும் கவிதை வாழ்ந்து கொண்டிருக்கிறது. மனித வரலாற்றில் இற்றை வரை பல்வேறு மொழி களிலும் பல கவிஞர்கள் தோன்றி அவரவர் மொழிக்கும், பண்பாட்டிற்கும், பிரதேசத்திற்கும், தம் படைப்புக்களால் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அவர்களில் வடமொழிக் கவிஞரான காளிதாசன் சிறப்பிற்குரியவன். வடமொழி இன்று வழக்கு மொழியாக இல்லாவிடினும், அதன் இலக்கியங்கள் காலத்தை வென்றவையாகக் காட்சி தருகின்றன. அவ்விலக்கியங்களில் பெரும்பாலானவை காளிதாசனுடையவை. தமிழில் ஒரு கம்பனைப் போல, ஆங்கிலத்தில் ஒரு ஷேக்ஸ்பியர் போல வடமொழியில் காளிதாசன் விளங்குகின்றான்.

காளிதாசனின் வாழ்க்கைக் காலப் பகுப்பில் பல பிரச்சினைகள் வரலாற்று ஆசிரியர்களிடையே உண்டு. 2ம் சந்திரகுப்தர், முதற் குமாரகுப்தன் (375 - 455) ஆகிய பேரரசர் ஆட்சிக் காலத்தில் அவன் வாழ்ந்திருக்கலாம் என்ற கருத்து பொதுவாக இருந்து வருகிறது. பல காவியங்களை அவன் இயற்றினான் என்று கூறப்படினும் ஏழு நூல்கள் அவனால் இயற்றப்பெற்றன எனப் பொதுவாக அறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். அவையாவன

1) சாகுந்தலம்
2) விக்ரம ஊர்வசீயம்
3) மாளவிகாக்னிமித்திரம்
4) இரகுவம்சம்
5) குமாரசம்பவம்
6) மேகசந்தேசம்
7) இருதுசம்ஹாரம்

இவற்றில் முதல் மூன்றும் நாடகங்கள். ஏனையவை செய்யுள் காவியங்கள். செய்யுள் காவியங்களில், இருதுசம்ஹாரம் எனும் நூலே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதனுள்ளும் நாம் இங்கு இலக்கியச்சுவை பருக வேண்டி எடுப்பது, அதன் ஒரு பகுதியான மழைக்கால வர்ணனையே.

இயற்கை என்பது இறைவனின் வெளிப்பாடு என்கிறார் தாங்பெல்லோ எனும் அறிஞர். அவ்வியற்கையைப் பாட அவனால் படைக்கப்பட்டவனே கவிஞன். எல்லாக் காலத்திலும் எல்லாவகை இலக்கியங்களிலும் இயற்கைக் காட்சிகளைக் கற்பனைத் திறனுடன் உவமை முதலான பல்வேறு அணிகளுடன் சிறந்த ஒலிநயம், சொற்திறன் என்பவற்றுடன் கவிஞர்கள் பாடியுள்ள பாடல்கள் இனிமையானவை.

அந்த வகையில் இருதுசம்ஹாரத்தை இயற்கைக் காட்சிகளுடனும், கற்பனைத்திறனுடனும், உவமை முதலான அணிகளுடனும், சொற் திறமையுடனும் படைத்திருக்கின்றான் கவிஞன். இருது என்பது காலத்தைக் குறிக்கும். சம்ஹாரம் என்பது சேர்க்கை. ஆகவே, இருது சம்ஹாரமானது இந்தியாவின் ஆறு பருவகாலங்களை சுவைபட விளக்குகிறது. ஆறு பருவங்களாவன.

| | | | |
|---|---|---|---|
| 1) | வசந்த இருது | - சித்திரை, வைகாசி | - இளவேனிற்காலம் |
| 2) | கிரிஷ்ம இருது | - ஆனி, ஆடி | - முதுவேனிற்காலம் |
| 3) | வர்ஷ இருது | - ஆவணி, புரட்டாதி | - கார்காலம் |
| 4) | சரத் இருது | - ஐப்பசி, கார்த்திகை | - கூதிர்காலம் |
| 5) | ஹேமந்த இருது | - மார்கழி, தை | - முன் பனிக்காலம் |
| 6) | சிசிர இருது | - மாசி, பங்குனி | - பின்பனிக்காலம் |

மேலே குறிப்பிடப்பட்ட இக்காலங்களில் மனிதர் முதல் பிராணிகளையிடையிட்டு புல், பூண்டு, வரை நடைபெறுகின்ற இயற்கை எழிலை இன்புற நுண்ணிய ஆராய்ச்சியுடன் எடுத்துக் கூறுகிறான் கவிஞன். அதிலும் வர்ஷகாலவர்ணனை (மழைக்கால வர்ணனை) நெஞ்சையள்ளும் விதமாகத் திகழ்கிறது.

மழையைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். சங்ககாலப் புலவர்கள் தொட்டு இக்கால கவிஞர்கள் வரை பாரதி உள்ளிட்ட அனைவரும் மழையைப் பல்வேறு கோணங்களில் பாடியுள்ளனர். ''வர்ஷம்'' என்பதற்கு பொழிதல் என்பது பொருள். மழை, புல், பூண்டு, செடி, கொடி விலங்குகளுக்கு மட்டுமன்றி எம்முள்ளங்களுக்கும் குளிர்ச்சியையும் மகிழ்ச்சியையும் பொழிவிப்பதால் அதற்கு இப்பெயர் பொருத்தமானதே.

மழைவருவது காளிதாசன் பார்வைக்கு ஓர் அரசன் தன் பரிவாரங்களோடு வருவது போலத் தெரிகிறது. மழை வருவதை அவன் இவ்வாறு கூறுகிறான். மேகமாகிய யானையும், மின்னலாகிய கொடியும், இடியோசை எனும் கோஷமும் சூழ கம்பீரதொனியோடு மழையாகிய அரசன் வருகின்றான் என்கிறான். பின் மழையால் ஏற்பட்ட நன்மைகளை விபரிக்கிறான்.

பசும் புற்கள் எங்கும் முளைத்துள்ளன. பச்சை நிறத்தளிர்கள் தலைகாட்டுகின்றன. செந்நிறமான இந்திர கோபப்பூச்சிகள் தரையில் ஊர்கின்றன. பூமி, பலநிற மணிகளைக் கொண்ட கட்டழகி போலக் காட்சியளிக்கிறது என்கிறான் அவன்.

இதோ, காளிதாசனின் இன்னோர் கற்பனை, தெருவீதிகளில் மழை நீரானது நீரோடையாக வளைந்து வளைந்து ஒடுகிறது. அதைக் கண்ட தவளைகள் இது தங்கள் இயற்கை விரோதியான பாம்போ என்று பயந்து ஆடாது அசையாது பிரமித்து விழித்துக் கொண்டு நிற்கின்றன எனும்

கற்பனை கற்போர் உள்ளத்தைப் பெரிதும் கவர்வது. மேலும், காளிதாசனின் இக்கார்கால வர்ணனைகள் சில சங்க அகத்திணைப் பண்புகளை எமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

எவ்வாறெனில், மேகங்களின் கம்பீரமான ஓசையும், கண்ணைப் பறிக்கின்ற மின்னல்களும், கார்காலத்தில் வருவதாச் சொல்லிச் சென்ற காதலர்கள் திரும்பி வராமையால் அவர்களின் மனைவியர்களை வருத்துகின்றன என்கிறார்.

இக்கார்காலமானது மனைவியரைப்பிரிந்து வெளியூர் சென்றிருக்கும் ஆடவர்கள் உள்ளத்தை ஈர்க்கிறது. தனிமையின் கொடுமையை உணர்த்துகிறது எனவும், மேகங்களின் கம்பீரமான ஓசையும், கண்ணைப்பறிக்கும் மின்னலும் அருகே படுத்திருக்கும் குற்றம் செய்த கணவரையும் கட்டியணைக்கத் தோன்றும்படி மனைவியரைத் தூண்டும் எனவும் கூறுகிறான்.

கவிஞன், காதலர்களைத் தேடிச் செல்கின்ற நங்கையர்களுக்கு ஒளியை ஏற்றி வழி காட்டும் விளக்கு என மின்னலை வர்ணிக்கிறார். மொத்தத்தில், காதலர்களுக்கு இயைவான காலமாக இக்கார்காலம் வெளிப்படுகிறது. முடிவில் உயிரினங்களுக்கு இன்றியமையாத நீரைத்தருவதால் இது உயிருமாக (ப்ராணிநாம் ப்ராணபூத:) இருக்கிறது எனக் கூறுகின்றான்.

இத்தகைய நயங்களையுடைய இக்கார்கால வர்ணனைகளை உலகில் உள்ளோரனைவரும் சுவைக்க வேண்டும். ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' என்ற பாரதி வாக்கிற்கமைய எவ்வெவ் மொழிகளிலெல்லாம் நல்ல இலக்கியங்கள் இருக்கின்றனவோ அவையெல்லாவற்றையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். அதனால் தமிழ் மொழி அழகும், வளமும் பெறும்.

இதழ்விரிக்கும் இரண்டாயிரமாம் ஆண்டிலும் இன்பத்தமிழ்ச் சுவை பருகி இன்புற்றிருப்போமாக.

## மேதைகளா?

கம்பராமாயணத்தில் வாலிக்கும் சுக்கிரிவனுக்கும் யுத்தம் நிகழ்கிறது. அண்ணன் தம்பியாகிய அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அடித்து உதைத்து போர் புரிகின்றனர். கொடிய பற்களினால் ஒருவரை ஒருவர் கடிப்பதனால் கடிவாயில் இருந்து இரத்தம் தெறிக்கின்றது. தெறிக்கும் இரத்தம் திக்கின் எல்லை வரை செல்கிறதாம். அதனால் நட்சத்திரங்கள் இரத்தத்தில் தோய்ந்து சிவப்பு நிறத்தை அடைகின்றனவாம். நட்சத்திரங்கள் செவ்வாய் கிரகம் போன்று செந்நிறமாகக் காட்சியளிக்கின்றன என்றான் கம்பன்.

வெவ்வாய் எயிற்றான் மிடல் வீரர்
கடிப்பமீச் சென்று
அவ்வாயெனை சோரிய தசைகள்
தோறும் வீச
எவ்வாயுமெழுந்த கொழுச் சுடர்
மீன்கள் எல்லாம்
செவ்வாயை நிகர்ந்தன செக்கரை
இந்த மோகம் (வாலி வதை அடி)

செவ்வாய்க் கிரகம் சிவப்பு நிறமானது என்பதை கண்டுபிடித்து அதற்கு "செவ்வாய்" என காரணப்பெயரும் இட்டழைத்தனர் எமது வானியல் அறிஞர்கள். இன்று பல கோடிக்கணக்கான பொருட்செலவின் பின்பு விஞ்ஞான உலகம் செவ்வாய் செந்நிறமுடையது என்று கண்டு பிடித்திருக்கிறது.

(06.09.1992 வீரகேசரி)

# இலங்கையின் அரசியலில் பெண்கள்

எச். எம். எம். றைஹான் (அரசறிவியல் விசேட துறை) விடுகை வருடம்

உலகின் சனத்தொகையிலும் சரி இலங்கையின் சனத்தொகையிலும் சரி பெண்கள் 50% மும் தேசிய, பொருளாதார கட்டமைப்புகளில் அவர்களது பங்களிப்பு இன்னமும் இலை மறை காய் மறைவாகவே இருந்து வருகின்றது. உலக நாடுகளின் 189 நாடுகளில் 5 நாடுகளில் பெண்கள் தலைமைத்துவமும் 154 நாடுகளில் பெண்களுக்கு தலைமைத்துவ முடிவு எடுக்கும் பொறுப்பு அளிக்கப்படவில்லை. 50 நாடுகளில் பெண்கள் தலைமைத்துவம் வாய்ந்த பதவிகளில் அடியோடு இல்லை (அமைச்சர், பிரதி அமைச்சர், செயலாளர்கள்) தொழில் பார்ப்போரில் 38% பெண்கள் ஆனால், இவர்கள் ஆண்களிலும் பார்க்க 20% - 40% இடையேயான குறைவான கூலியே பெறுகின்றனர். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அறிக்கையின் கூற்றுப்படி உலகில் 2/3 பங்கு பெண்களே வேலை செய்கின்றனர். அதற்கு அவர்கள் பிரதியுபகாரமாக 10% தேசிய வருமானத்தையே பெறுகின்றனர். உற்பத்திக் கருவிகளுக்கு 1% மான பெண்களே உடமையாளராகின்றனர்.

இலங்கையில் பெண்கள் அரசியலில் பங்கு பற்றுதல் என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டது. இது பற்றி மகாவம்சம், தீபவம்சம் போன்ற வரலாற்று நூல்களில் உள்ளதையும் எடுத்துக் காட்டலாம். அதன்படி விஜயனின் வருகையின் போது இலங்கையை குவேனி என்ற இயக்கர் இனப் பெண் ஆண்டாள் என்றும், பின் ரஜரட்டையில், இலங்கையின் முதல் அரசி என அறியப்பட்ட அனுலாதேவி என்ற அரசியும் ஆண்டாள் என்றும் அறியப்படுகின்றது. இதேபோல் துட்டகைமுனுவின் தாயார் விகாரமகாதேவி என்பவளின் செல்வாக்கு எல்லாளன் - துட்டகைமுனு போரிலும் தென்பட்டது. பின் கண்டி ராஜ்ஜியத்தில் நாயக்க வம்ச ஆட்சியில் சுருமாதேவி என்ற அரசன் மனைவியின் செல்வாக்கு தென்பட்டது.

இலங்கையில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படாதபோது 1909ம் ஆண்டு முதன்முதலாக பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது. இதனை இடதுசாரிக் கட்சிகள் ஏற்பாடு செய்திருந்தன. பின் முறையே 1919 - 1920 காலப்பகுதியில் பெண்கள் கருச்சிதைவு செய்வது பெனல்கோர்ட் 294வது பிரிவின்படி மரண தண்டனைக்குரிய குற்றமாகியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெண்கள் கவர்னருக்கு மகஜர் அனுப்பி இச்சட்டத்தை மாற்றியமைத்தனர். இலங்கையில் பெண்களுக்கு சம வாக்குரிமை கேட்டு பெண்கள் இயக்கங்கள் தோன்றின. அதில் 1925 ம் ஆண்டு "மல்லிகா குலங்கின சமீத்திய" பெண்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை வேண்டி நின்றது. இதேபோல் 1927ம் ஆண்டு டெயிசி பண்டாரநாயக்கா (ஜனாதிபதி

சந்திரிகாவின் தந்தை வழிப் பாட்டி) பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தை தோற்றுவித்தார். 1928ம் ஆண்டு ஜனவரி 14ம் திகதி பெண்களுக்கு வாக்குரிமை கேட்டு திருமதி. வி. வி. குணவர்தன, ஜியோ. டி. சில்வா, நில்லம்மா என்போர் வாதாடினர். (சாட்சி இலக்கம் 114 - டொனமூர்) இவர்களுடைய கோரிக்கைக்கு டொனமூர் பதிலளித்து அறிக்கை சமர்ப்பிக்கையில் : பெண்கள் வாக்குரிமை பற்றிய சமத்துவத்துவம் என்பவற்றை விட மருத்துவம், குழந்தை நலம், கர்ப்பிணிகளுக்கான உதவி ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட வேண்டிய தேவை பற்றி குறிப்பிட்டது. இந்தியப் பெண்களுக்கு உள்ள திறமை இலங்கைப் பெண்களுக்கும் உண்டு என்பதை யாழ் கூட்டுறவு சங்க வாக்கெடுப்பில் கலந்து கொண்டு காட்டியதை காணலாம். எனவே, இவர்களின் வாதத்தை மறுப்பது கடினம் என்று பெண்களுக்கு வாக்குரிமையை டொனமூர் யாபபு உள்ளடக்கி இருந்தது. ஏனைய வளர்முக 3ம் மண்டல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது ஒரு முன்னேற்ற நிகழ்வு எனலாம். பிரான்ஸில் 1945ம் ஆண்டே வாக்குரிமையை பெண்கள் அனுபவிக்க, யப்பானில் 1947ம் ஆண்டு பெண்கள் வாக்குரிமையை அனுபவிக்க, இலங்கை மாதர் காலத்தால் வாக்குரிமையை முன் பெற்றனர்.

1946ம் ஆண்டு பெண்கள் ஐக்கிய முன்னணி உருவாகியது. இதுவே இலங்கையின் சோஷலிச பெண்கள் அணியெனலாம். இந்த பெண்கள் தரப்பில் திருமதி. வி. வி. குணவர்தன, திருமதிகளான குணசேகர, மீனாட்சியம்மாள், மங்களம்மாள், மாசிலாமணி, நல்லம்மா, சதியவாகிஸ்வர ஐயர், மைமூன், தம்பிமுத்து போன்றோர் இருந்தனர். முதன்முதலாக டொனமூர் யாப்பின் கீழ் நடந்த 1வது சட்டசபைத் தேர்தலில் ரூவான்வெல்ல தொகுதியில் போட்டியிட்ட அட்லின் மொனமுரேகுமாரி ஹாமி என்பவர் தெரிவு செய்யப்பட்டு இலங்கையின் சனநாயக போட்டி அரசியலில் முதற் பெண் என்ற பெருமையைத் தட்டிக் கொண்டார். பின் அவ்வாண்டு இடைத்தேர்தலில் நேசம் சரவணமுத்து வடகொழும்பு தொகுதியில் போட்டியிட்டு வென்றார். பின் சரவணமுத்து திரும்பவும் 1936 இல் தெரிவு செய்யப்பட்டார். இதே வேளை அமைச்சரவை நிருவாகக் குழுவிலும் இடம் பெற்றனர்.

சோல்பரி யாப்பின் கீழ் இடம் பெற்ற 1947ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் டெய்சி மரியா புலோரன்ஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் சுதந்திர இலங்கையின் 1வது பெண் பாராளுமன்ற உறுப்பினரும் ஆனார். பின் 1952 தேர்தலில் 12 பெண்கள் போட்டி இட்டனர். 1956ம் ஆண்டு விமலா விஜேவர்தனா (ம. ஐ. மு) தெரிவு செய்யப்பட்டதுடன் தென் ஆசியாவின், இலங்கையின் 1வது பெண் அமைச்சராகவும் (சுகாதாரம்) தெரிவு செய்யப்பட்டார். 1960 மார்ச் பாராளுமன்ற தேர்தலில் 14 பெண்கள் போட்டியிட்டு 3 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். 1960 ஜுலை தேர்தலில் திருமதி. சிறிமா பண்டாரநாயக்க தெரிவு செய்யப்பட்டதுடன் இலங்கையின் முதலாவது பெண் பிரதமராக மட்டுமன்றி உலகின் முதலாவது பெண் பிரதமராகவும் தெரிவு செய்யப்பட்டு வரலாற்று ஏட்டில் தனது பெயரை ஏற்றிக் கொண்டார். 1965ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் 12 பெண்கள் போட்டியிட்டு 4 பேர் வெற்றி பெற்றனர். 1970 இல் 14 பெண்கள் போட்டி இட்டு 5 பேர் வெற்றியீட்டினர். 1977 இல் 14 பெண்கள் போட்டியிட்டு 4 பேர் வெற்றியீட்டினர். பின் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் 1989ம் ஆண்டு ஐ. தே. கட்சி சார்பில் 7 பெண்களும் ஐக்கிய முன்னணி சார்பில் 4 பெண்களுமாக 11 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். 1994 ம் ஆண்டுத் தேர்தலில் பொது சன ஐக்கிய முன்னணி சார்பில் 7 பெண்களும், ஐ. தே. கட்சியின் சார்பில் 3 பெண்களும் தெரிவு செய்யப்பட்டனர். அதே வேளை இவ்வாண்டு தேர்தலில் கம்பஹா, மாவட்டத்தில் திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா 4,64,588 வாக்குகளை பெற்று சாதனை படைத்தார். அதேபோல் கொழும்பு மாவட்டத்திலும், பதுளை மாவட்டத்திலும் பெண்களே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றனர். இதைத் தவிர பொ.ச.ஐ.மு. சிறிமா பண்டாரநாயக்கா தேசிய பட்டியல் உறுப்பின-

ராகவும் ஐ. தே. க. சார்பில் அமர பண்டார திசாநாயக்க தேசிய பட்டியல் உறுப்பினராகவும் நியமிக்கப்படனர்.

அண்மைக்காலமாக, 1977, 1989, 1994 தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட பெண் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் ஓரளவு படித்தவர்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இதில் 7 பேர் ஆசிரியைகளாக இருந்து பாராளுமன்றம் பிரவேசித்தனர். உதாரணம் ரேணுகா ஹேரத், இராஜ மனோகரி புலேந்திரன். இதே வேளை, இரத்தினபுரி M.P. பவித்திரா வன்னியாராச்சி சட்டத்தரணியாவார். இதேபோல் சிறிமணி அத்துலத்முதலி UNCTADஇல் தகுதி நிலை செயலாளர் பதவி வகித்தவர் . இவ்வாறு பெண்களின் பாராளுமன்ற பிரவேசம் கிராம, நகர படித்த, படிக்காதவர் என்ற வேறுபாடின்றி இடம் பெறுவதைக் காணலாம்.

விமலா விஜயவர்த்தன அமைச்சரானதைத் தொடர்ந்து பெண்கள் அமைச்சரவையில் இருந்தே வந்துள்ளனர். அவர்கள் முறையே சிவா ஒபேசேகர, விமலா கன்னங்கர, 1977 - 1989 வரை சுனெத்ரா ரனசிங்ஹ போதனா வைத்திய அமைச்சரும், 1வது மகளிர் விவகார அமைச்சரும் (1983). 1989 - 1994 வரை ரேணுகா ஹேரத் பின் சிறிமணி அத்துலத் முதலி பின் இன்று ஹேமா ரத்நாயக்கா. இவர்கள் மகளிர் விவகார அமைச்சராக இருந்துள்ளனர். மகளிர் விவகார அமைச்-சுக்களின் கோரிக்கை 1975ம் ஆண்டு பெண்கள் தசாப்தத்தை தொடர்ந்து வேண்டி நின்றதாகும். 1978ம் ஆண்டு பெண்கள் பணியகம் ஜனாதிபதியின் கீழ் உள்ள, திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டது. பின் 1982இல் நடைபெற்ற தேசிய பெண்கள் கருத்தரங்கு மகளிர் விவகாரத்துக்கு என ஓர் அமைச்சினை உருவாக்கும்படி சிபாரிசு செய்ததைத் தொடர்ந்து இப்பணியாகும். 1983இல் புதிதாக உருவாக்கப்பட்ட போதனா ஆஸ்பத்திரிகள் மகளிர் விவகார அமைச்சாக மாற்றப்பட்டது.

இலங்கையில் பெண்கள் 3 முறை பிரதமராாகவும், 2 முறை எதிர்க்கட்சித் தலைவியாகவும் வந்துள்ளதுடன் 1994 இல் முதல் தடவையாக ஜனாதிபதி தேர்தலில் பெண் வேட்பாளரான சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா 62% வாக்குகளை பெற்று இதுவரை பெற்ற ஜனாதிபதி தேர்தலில் கூடுதலான வாக்கைப் பெற்று வெற்றியீட்டியது மட்டுமல்லாமல் இத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சி சிறிமா திசாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியது குறிப்பிடத்தக்கது. பின் 1999 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் சந்திரிக்கா பணண்டார நாயக்க குமாரணதுங்க 2ம் தடவையாக 52.22% வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக வந்தார்.

இன்று இலங்கையின் நகர சபையில் 2.8% பெண்களும் உள்ளூராட்சி சபையில் 1.1% பெண்களும் அமைச்சரவையில் 20% பெண்களும் உள்ளனர். சுதந்திரம் பெற்ற 1948ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்| விகிதம் 2.8% இன்று 4.8% பெண்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். அதேபோல் 1947 - 1971 இடைப்பட்ட கால செனட் சபையில் 13 பெண்கள் இடம் பெற்றனர்.

உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் பெண் வாக்காளர் தாக்கம் அதிகம். அதுவே வெற்றியை நிர்ணயித்தது எனலாம். உதாரணமாக, 1960, 1977, 1994 தேர்தல்கள் இதற்கு சிறந்த உதாரணம் எனலாம். இதேபோல் பெண்கள் வாக்களிப்பு வீதமும் அதிகரித்து வந்துள்ளதைக் காணலாம். 1947 இல் 56% , உம் பின் 1960 இல் 77.6%, 1956 இல் 81% உம், 1977 இல் 87% உம், என்று அதிகரித்த வாக்களிப்பு வீதத்தையே காட்டி வந்துள்ளதை காணலாம். இலங்கையின் அரசியல் கட்சி பற்றிய அளவீடு சராசரியாக கட்சி அங்கத்துவத்தில் பெண்கள் 35%

உம், கட்சி உத்தியோகத்தர்கள் பதவியில் பெண்கள் 15% உம் இடம் பெறுகின்றனர். இலங்கையின் தொழிற்சங்கங்களில் 20% பெண்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். தொழிற்சங்க தலைவிகளாக 1% பெண்கள் இடம்பெறுகின்றனர். இலங்கையின் பெரும் கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவியாக சிறிமா பண்டாரநாயக்க இருந்து வருகின்றார். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) கட்சித் தலைவியாகவும், சிறிமா அத்துலத் முதலி இருந்து வருகின்றார். ஐக்கிய தேசிய கட்சியின் 51 பேர் அடங்கிய செயற்குழுவில் கூட 2 பேர் பெண்கள் அக்கட்சியின் ஒழுங்கமைப்பு கட்டுப்பாட்டுக்குழுவில் 13 பேர் உள்ளனர். அதில் ஒரு பெண் உள்ளார். சிறிலங்கா சுதந்திர கட்சியின் 16 பேர் அடங்கிய கட்டுப்பாட்டாளர் குழுவில் 2 பெண்கள் அங்கம் வகிக்கின்ளர். அதே போல LSSP யின் 55 பேர் அடங்கிய மத்திய குழுவில் ஒரு பெண் இருக்கின்றார். இவ்வாறு கட்சி அரசியலில் பெண்கள் ஓரளவு செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்பதுதான் உண்மை. பெண்கள் செல்வாக்குச் செலுத்துவது குறைவு எனலாம்.

இலங்கை அரசியலில் இலங்கைத் தமிழ் பெண்கள் அரசியலில் பங்கு பற்றியது குறைவு எனலாம். சுதந்திர இலங்கையின் பாராளுமன்றத்தில் தமிழ்ப்பெண் என்ற வகையில் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர் ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் 1982இல் நியமிக்கப்பட்டார். பின் 1989ம் ஆண்டு முதல் இராஜ மனோகரி புலேந்திரன் தேர்தலில் மக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து நகர சபைக்கு யாழ்ப்பாண மாநகர முதல்வாராக சரோஜினி யோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார். இதைத் தவிர மலையக மக்களின் சார்பில் தமிழ்ப் பெண்மணி என்ற ரீதியில் வேலம்மாள் செல்லச்சாமி மேல் மாகாணத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். முஸ்லிம் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது மிக மிக அரிது. ஆனால், கடந்த மாகாண சபைத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் ஜனதா விமுக்தி பெரமுன சார்பில் அம்ஜான் உம்மா என்ற பெண் தெரிவு செய்யப்பட்டது ஒரு திருப்பு முனை எனலாம்.

### சேகுவாரா!

சேகுவாரா ١٩٢٨ம் ஆண்டு ஆர்ஜென்ரினாவில் பிறந்தவர். பிறகு அங்கிருந்து புறப்பட்டு டிரினிடாட், பிரிட்டிஷ் கயானாவிலெல்லாம் சிறுசிறு வேலைகள் பார்த்து தென் அமெரிக்கா முழுதும் பயணம் செய்தார். மறுபடி ஆர்ஜென்ரினாவிற்கு வந்து மருத்துவப் படிப்பை முடித்தார். அதன்பிறகு மெக்ஸிக்கோவில் நடந்த புரட்சியில் பங்கு கொண்டு சிறைவாசம் செய்தார். விடுதலையானதும் அங்கு ஃபிடல் காஸ்ட்ரோவை சந்தித்தார். கியூபாவின் புரட்சிக்காக அவருடன் இணைந்து காடுமேடுகளில் சண்டையிட்டு கியூபாவின் விடுதலைக்குப் பாடுபட்டார். காஸ்ட்ரோவின் இராணுவத்தில் மேஜர் அந்தஸ்திற்கு உயர்ந்தவர். அப்போது நடந்த அமெரிக்க தாக்குதலை எதிர்த்து போர்க்களம் சென்றார். அவரது தீரச்செயல்களிற்கு பரிசாக கியூபாவின் தேசியத் தலைவர் அந்தஸ்த்திற்கு நிகரான அந்தஸ்து உடையவராக மதிக்கப்பட்டார். ஐ. நா. சபையில் கியூபாவின் பிரதிநிதியாக சூடுபறக்கும் உரைகளை நிகழ்த்தினார். இறுதியில் தனது பதவிகளையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு பொலிவியாவில் நடந்து கொண்டிருக்கும் புரட்சிக்கு உதவி செய்யப் புறப்பட்டு விட்டார். அங்கே வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். தாயக மண்ணை மறந்து வாழும் நம்மவர்கள் வேற்று நாட்டு மக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணம் செய்த சேகுவாராவினை மனதில் இருத்திக் கொள்வது நல்லது.

# பாரதியும் விஞ்ஞானமும்

அ. மு. றியாஸ் அஹமட், கிழக்குப் பல்கலைக்கழகம்.

'அவன் அகிலத்தின் துண்டு துணுக்குகளுடனெல்லாம் விளையாடினான். அவன் கண்களில் சிக்கிக்கொண்டதெல்லாம் அவனுக்கு பாடுபொருளாயின. அவன் தமிழைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான் என்று மற்றவர்கள் சொன்னார்கள். இல்லை. தமிழ் அவனைத் தேர்ந்து கொண்டது. ஒவ்வொரு கவிதையையோ, பாடலையோ படைத்து முடித்தபோது அவன் தான் படைத்தல் தொழிலைச் செய்து பிரமாவானதாகக் களிப்புற்றான் "

விஞ்ஞானம் என்பது தொகையான தொடரான முடிவற்ற அவதானங்களின் மூலம் கொள்கைகளையும் விதிகளையும் உருவாக்கும் ஒரு முறையும், கனதியான, ஒழுங்கமைக்கப்பட்ட கற்கை முறையுமாகும். பொதுவாக விஞ்ஞானத்தை, (ஒரு வகையில்) இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என இருவகையாகப் பிரிக்கலாம். இங்கே பாரதியின் இயற்கை விஞ்ஞானத்தின் மீதான பார்வையையே நோக்கவிருக்கின்றோம். பாரதி விஞ்ஞானத்தில் நோக்கிய கோணங்களும், பார்வைகளும் மிகவும் அனந்தமானவை. அவையெல்லாவற்றையும் விரிவஞ்சி தவிர்க்கவேண்டியிருக்கின்றது. இங்கே இலகு கருதி அவன் நோக்கிய நோக்கல்களையும், கோணங்களையும் இலகுவிற்காக சிறிது வகைப்படுத்தியுள்ளோம்.

முதலில் பாரதியினது விஞ்ஞானம் பற்றிய கருத்துக்களை நோக்குவோம். இதனை பாரதியின் "தராசு" எமக்கு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. எடைபோட்டும் கொடுக்கிறது. தமிழ் மக்கள் உலகத்து விஞ்ஞான சாத்திரங்களை எல்லாம் தமிழில் படைக்கவும் வேண்டும்: படிக்கவும் வேண்டும். அப்போது தான் மேலே சொன்ன காரியங்களைத் தமிழன் செய்ய முடியும் என்று அழுத்தமாகச் சொல்கிறது பாரதியின் தராசு. ஐரோப்பிய பஞ்சபூத இயற்கை நூலுக்கு இங்கிலீஷ் பாஷையில் "சயன்ஸ்" என்று பெயர். ஐரோப்பிய இயற்கை நூல் என்று தனியாகச் சாத்திரம் உண்டா? அப்படி இல்லை. அந்தச் சாத்திரத்தில் நம்மைக் காட்டிலும் அவர்கள் அதிகத் தேர்ச்சி அடைந்து இருக்கிறார்கள். அதிலே என்ன பயன் உண்டாகிறது? புதிய விழி உண்டாகிறது. புதிய விழி என்பது என்ன? பூமண்டலத்தையும் வான்மண்டலத்தையும் பற்றிய அறிவு. நமது பூர்வீகர்களுக்கு இல்லாத அறிவு இப்போது சாத்தியப்படுமா? அதைப் பற்றிய பேச்சு இல்லை. நமக்கு இதுவரை இல்லாத அறிவை இப்போது செய்ய முடியுமா? முற்படுக! எழுக! விஞ்ஞான நுட்பத்தின் மூலமாகவே புதிய தொழில்களைச் செய்ய முடியும் என்பதை மகாகவி

பாரதி எவ்வளவு அழுத்தமாக சொல்லி இருக்கிறார் என்பதைப் பாருங்கள்

இனி அவரது பாடல்களை நோக்கினால், பாரத ஜனங்களின் தற்கால நிலமையில்

1. **நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த**
   **நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால் ....**

2. **மந்திரவாதி என்பார் - சொன்ன**
   **மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார் ......**

3. **சாத்திரங்கள் ஒன்றும் காணார் - பொய்ச்**
   **சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே ......** என்றும்,

புதிய பாடல்களில், உயிர் பெற்ற தமிழர் பாட்டில்,

1. **மனிதரில் ஆயிரம் ஜாதி - என்ற**
   **வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை .....** என்றும்,

மக்களின் மத்தியில் பிரச்சினைகள் தோன்றும்போது விஞ்ஞான ரீதியாக தீர்வு காணும் போது விஞ்ஞானிகள் பின்பற்றும் முறைகளையும் செயற்பாடுகளையும் உணர்ந்து கொண்டு உரிய சந்தர்ப்பங்களை பயன்படுத்தி, நாட்டினதும் அந்நாட்டு மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை அந்த அந்த முறைகளில் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற தொனியில் பாடிக்கொண்டு செல்வதை நாங்கள் காணலாம்.

**வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்**
**வீட்டில் வளருது கண்டீர்**
**பிள்ளைகள் பெற்றந்தப் பூனை - அவை**
**பேருக்கொரு நிறமாகும்.**
**சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்**
**சாந்து நிறமொரு குட்டி**
**பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்**
**பாலின் நிறமொரு குட்டி**
**எந்த நிறமிருந்தாலும் ....**

என்ற பாடல் ,கல்வியறிவின்மை, விஞ்ஞான அறிவின்மை காரணமாக நாளாந்த வாழ்வில் எழும் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைகின்றது. இரண்டு கறுப்புப் பெற்றோருக்கு பிறக்கும் குழந்தை வெள்ளை நிறமாக இருந்தால், கணவன் - மனைவிக்கிடையில் பிணக்குகள் வருவது சகஜம். உண்மையில் பிறப்புரிமையியலில், இரண்டு கறுப்புப் பெற்றோருக்கும் வெள்ளை நிறமான குழந்தை கூட பிறக்க வாய்ப்புண்டு. ஏனெனில் அவர்களின் மூதாதையரில் யாராவது வெள்ளை நிறமுடையவராகவும் இருந்திருக்கலாம்.

பின்னர் அதே பாடலில்,

**வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் - அதில்**
**மானுடர் வேற்றுமையில்லை......**

என்று மனிதரெல்லாம் கட்டமைப்பு, உருவமைப்பு ரீதியாக ஹோமோ சப்பியன்ஸ், இதில் உயர்வு தாழ்வு இல்லை என்றும், மனித இனத்தின் சமத்துவத் தன்மை பற்றி விஞ்ஞான மனப்பாங்கை கூறிக்கொண்டு போகின்றான்.

தமிழ்ச் சாதியில்,

1. சாத்திர மின்றேற் சாதியில்லை.
பொய்மைச் சாத்திரம் புகுந்திடும் மக்கள்..... என்றும்,

2. ஆட்டினைக் கொன்று வேள்விகள் இயற்றி
வீட்டினைப் பெறுவான் விரும்புவார் சிலரே ..... என்றும்

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான விஞ்ஞான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் விருத்தி செய்யப்படலின் அவசியத்தைப் பாரதி சுட்டிக் காட்டுவதுடன், சமூகத்தில் பரவிக் கிடந்த மூடநம்பிக்கை, போன்ற இருளை அகற்றி விஞ்ஞான ஒளியை ஏற்றி கல்வியறிவற்ற மக்களின் வாழ்க்கைக்கு ஒளிகொடுக்க முனைகின்றான்.

பாப்பாப் பாட்டில்,

சாதிகள் இல்லையடி பாப்பா ! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் .... என்றும், பின்னர்

நாலு வகுப்பும் இங்கொன்றே - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்....

என்று வகுப்பில் ஏற்படுகின்ற பேதங்களை, பிழைகளை எதிர்த்தவன் பாரதி. பேதங்களை எதிர்த்தவன் பிழைகளையும் எதிர்த்தான். உயிரினங்களில் மனித இனம் உட்பட அந்த அந்த இனம் இனங்களுக்கு இவை சமமானது என்னும் கருத்தை பாரதி சொல்லிக் கொண்டு போகின்றான்.

தேசிய இயக்கப் பாடல்களில், சத்ரபதி சிவாஜியில் ,

ஆணுருக்கொண்ட பெண்களும் அலிகளும்
வீணில் இங்கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்

என்று அலிகளை கௌரவப்படுத்தி, அவர்களின் பிறப்புரிமையில் நிறமூர்த்தக் கோளாறு-களுக்காக அவர்கள் தாழ்த்தப்படக்கூடியவர்கள் அல்ல என்று பாடி, விஞ்ஞானத்தின் நோக்கங்களில் ஒன்றான தனிநபரின் இருப்பின் நற்றன்மையை நியாயப்படுத்த முனைகின்றான். வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா என்று கூறி தாய்ப்பாலின் சிறப்பைக் கூறுகின்றான்.

1. வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நானுனக்கு இலும்

2. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - இலும் பெண்ணை அனுபவிப்பது சம்பந்தமாக பாலியல் நடத்தைகளின் அவஸ்தைகளைப் பற்றி பேசிக் கொண்டு போகின்றான்.

வெள்ளைத் தாமரையில்,

1. வீடு தோறும் கலையின் விளக்கம்
2. ஊணர் தேசம் யவனர் தேசம்...
3. ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
4. இன்னறு ங்கனிச் சோலைகள் செய்தல் ....
5. நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்...

என்று சமூகத்தின் மேம்பாட்டை பேணுவதற்கு தேவையான அறிவு, திறன், மனப்பான்மைகளை

கல்வி மூலம் வளர்க்க வேண்டும் என்ற கருத்துக்கள், மேலேயுள்ள பாடல்களில் விரவிக்கிடப்பதைக் காணலாம்.

பல்வகைப் பாடல்களில் , தொழில் என்னும் பகுதியில்,

1 **இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே**
**யந்தி ரங்கள் வகுத்திடு வீரே....**

என்று தேசிய வளங்களை இனங்கண்டு அவற்றைப் பயனுறுதியுள்ள முறையில் பயன்படுத்துவதற்கான விஞ்ஞான திறனையும் பெற்று சமூகத்தை உயர்நிலைக்காக்கல் என்னும் விஞ்ஞானத்தின் நோக்கத்தை சுட்டிக்காட்டுகின்றான்.

2. **மண்ணெடுத்துக்கு டங்கள் செய் வீரே!**
**மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே**

என்று பிரச்சினை எழாத ஆபத்தற்ற, தொழில் நுட்ப அபிவிருத்தியைப் பயன்படுத்தி அந்த நாட்டுக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தும், விஞ்ஞானத்தின் நோக்கத்தை சொல்கின்றான் பாரதி.

காணி நிலம் வேண்டும், பாடலில்

1. **காணி நிலம் வேண்டும் - பராசக்தி**
**கேணியருகினிலே - தென்னை மரம்**
**கீற்று மிளநீரும்**

2. **பத்துப் பன்னிரண்டு - தென்னை மரம்**
**பக்கத்திலே வேண்டும் - நல்ல ...** என்றும்

ஜயபேரிகையீல்,

1. **காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம் ....**

என்றும் பாடி, மனிதனுக்கும் ஏனைய உயிர் ஜீவராசிகளுக்கும் தீய, தாக்கமற்ற சுற்றுப்புறச் சூழலின் அவசியத்தையும், இயற்கைச் சமனிலையின் அவசியத்தையும் உணர்த்திக் கொண்டு போகின்றான்.

தமிழ் என்னும் பாடலில்,

**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் .....**
**திறமையான புலமையெனில் வெளிநாட்டோர்**
**அதை வணக்கம் செய்தல் வேண்டும்....**

என்று தேசிய முன்னேற்றத்திற்கு விஞ்ஞான நிறுவனங்களினதும், வெளிநாட்டு நிறுவனங்களினதும் சேவையைப் பெற்று நாட்டினதும், மக்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயல வேண்டும் என்ற விஞ்ஞான நோக்கத்தைப் பாடியிருக்கின்றான்.

தொண்டு செய்யும் அடிமையில்,

1. **கப்பலேறு வாயோ - அடிமை**
**நாடு காப்பதற்கே - உனக்கு**
**ஞானம் சிறிதுமுண்டோ ?**

*கண்ணன் என் ஆண்டானில்,*

1. தோட்டங்கள் கொத்தி செடி வளர்க்கச் சொல்லி....
2. காட்டு மழைக்குறி தப்பிச் சொன்னா லெனைக்

*என்று தேசிய முன்னேற்றத்தை வலியுறுத்துகின்றான்.*

*காற்று, ஞாயிறு போன்ற வசன கவிதைகளில் ஒளி, காற்று போன்றவை பற்றி பல கேள்விகளைக் எழுப்பி பகுத்தாய்வுத் திறன், நிர்மாண சக்தி விருத்தித் திறன் கோலனங்களை உணரும் திறன் போன்ற விஞ்ஞானத் திறன்களை கட்டியெழுப்பிக் கொண்டு செல்கின்றான்.*

*சக்தி விளக்கத்தில்,*

1. மூலப் பழம்பொருளின் நாட்டம் - நின்றனை .... *என்றும்*

*மஹாசக்தி வாழ்த்தில்,*

2. விண்டுரைக்க அறிய அரியதாய்
விரிந்த வான் வெளியென - நின்றதனை ..... *என்றும்*

*மஹா காளியின் புகழில்,*

1. காலமாம் வனத்திலண்டக் கோலமா மரத்தின் மீது
காளி சக்தி யென்ற பெயர் கொண்டு - ரீங் ..... *என்றும்*

*பல்வகைப் பாடலில், சக்தியில்,*

1. சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஒரு குமிழியாம்.... *என்றும்*

*பெரும் வெடிப்புக் கொள்கை* (Big Bang Theory) *பற்றியும் கருத்துளை* (Black hole) *பற்றியும் மறைமுகமாக பாடிக்கொண்டு செல்கிறான்.*

*பொய்யோ மெய்யோ என்னும் பாடலில்,*

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே நீங்க ளெல்லாம்
சொற்பனந்தானோ? - பல தோற்ற மயக்கங்களோ ....

*என்று சார்பியல் தத்துவத்தை கொஞ்சம் சார்ந்து செல்கிறான்.*

*சிட்டுக் குருவியைப் போல் என்னும் பாடலில்,*

1. எட்டுத் திசையும் பறந்து திரிகுபவை ......
2. பெட்டையினோடின்பம் பேசிக் களிப்புறும்.....
3. முற்றத்தி லேயுங் களனி வெளியிலும்...

*என்று சிட்டுக் குருவியினதும், குயிற்பாட்டில் குயிலினதும் நடத்தையியல் பற்றித் தனது ஆழ்ந்த அவதானங்களை சொல்லிக் கொண்டு போகும் அதேவேளை,*

*பாப்பாப் பாட்டில்,*

**சின்னஞ்சிறு குருவி போலே - நீ**
**திரிந்து பறந்து வா பாப்பா!**
**வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ**
**மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா ....**

என்றும் பறவை அவதானிப்பையும் (Bird Watching) ஊக்குவித்து, பின்னர் தொடருகின்ற பாடல்களில் கொத்தித் திரியும் கோழி, எத்தித் திருடும் காகம், பாலைப் பொழிந்து தரும் பசு, வாலைக் குழைத்து வரும் நாய், வண்டி இழுக்கும் குதிரை, நெல்வயலில் உழும் மாடு, அண்டிப் பிழைக்கும் ஆடு போன்றவற்றிற்கு அன்பு காட்டச் சொல்லி பாதுகாத்துப் பேணல் உயிரியலின் முக்கிய கருத்தான விலங்கு நலன்கள் (Animal Welfare)ஐ ஊக்குவிக்கின்றான். உயிர்களிடத்தில் அன்பு வேணும்... என்றுவிட்டு சும்மாயிருந்து விடாது சிட்டுக்குருவிகளுக்கு அரிசிமணி அள்ளித் தெளிக்கிறார். பறவைகளில் நீக்ரோக்களான காகங்களை கண்ணுக்குரிய கருநிறக்காக்கை என்று காதல் மொழி பேசுகிறான். கழுதையோடு கட்டிப் புரள்கிறான். விலங்குகளின் நடத்தை பற்றிய பாரதியின் அறிவு புல்லரிக்க வைக்கின்றது. அச்சமில்லை, அச்சமில்லை... என்று வெறும் பாட்டு பாடுகிற மனிதரல்ல பாரதியார். திருவனந்தபுரம் சென்று கவியரசன் (பாரதி) விலங்கரசனை (சிங்கம்) ஆரத் தழுவுகிறார். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயத்தில் மதம்பிடித்த யானைக்கு அருகே செல்கிறார். அவைகளை தேர்ந்த ஒரு நடத்தையியல் அறிஞரே செய்ய முடியும்.

காக்கை குருவி எங்கள் சாதி - நீள்
கடலும் மலையும் கூட்டம் ....

என்பதில் உலகம் அனைத்திலும் நீந்துவன, ஊர்வன, நிற்பன, நடப்பன அனைத்தும்.... எங்களின-மேயும், இறைவடிவுமாகி என்று கூறிய கூர்ப்புக் கருத்துக்களை சார்ந்து செல்ல முயலுகின்றார்.

பாரதியின் கடவுள் நம்பிக்கை, மதம் சார்ந்த கருத்துக்கள் விஞ்ஞானத்தோடு ஒத்துப் போவதில்லை என்று ஒரு கருத்து நிலவுகின்றது. இதில் பாரதிதாசனையே அறிஞர்கள் பாரதியோடு மேலான சிந்தனையாளராக ஒப்பிடுவர். தனது பாடல்களில் பெருவெடிப்புக் கொள்கை, கருந்துளை, சார்பியல் தத்துவம் போன்றவற்றின் உதவியோடு கடவுளைத் தேடிச் சென்று, கடவுளைக் காண்பதில் தவறில்லை என்றே கூறலாம். விஞ்ஞானமற்ற மதம் குருடு: மதமற்ற விஞ்ஞானம் ஊமை என்று ஐன்ஸ்ரைன் கூறினார். பாரதி விஞ்ஞான தத்துவக் கவிஞன். அவன் நிறைய நேரங்களில் பிழையில்லாதவனாகத்தான் இருந்திருக்கின்றான்.

பாரதி சொல்கின்றான், விஞ்ஞானத்தை நன்கு உணர்ந்து கொள்வதன் மூலமாகத்தான் வளர்ந்து வரும் இன்றைய உலகைப் பற்றிய முழுமையான அறிவை முறையாகப் பெற முடியும். நாம் இந்த அறிவின் மூலமாகத்தான் மனிதன் முன்னேறமுடியும். புத்துணர்ச்சி பெற முடியும். அப்போதுதான் அவன் தன் நாட்டின் பொருளாதாரப் போக்கையோ சமுதாய வாழ்வையோ மாற்றி அமைக்க முடியும். விஞ்ஞானம் நமது நாட்டில் பழங்காலத்தில் இல்லையா? இருந்தது. இருந்தாலும் வாணிபம், கணிதம், மருத்துவம், சங்கீதம், சிறபம் போன்ற சாத்திரங்களில் சிறந்து இருந்த அளவு விஞ்ஞானத்தில் நாம் சிறந்து இருக்கவில்லை. இன்று ஐரோப்பாவில் வளர்ந்து வரும் இயற்கை விஞ்ஞானங்களைப் பற்றிய அறிவை அதன் முழு ஆற்றலுடன் நாம் பெற்றாக வேண்டும். அங்கு வளர்ந்து வரும் விஞ்ஞானத்தைப் பற்றிய பற்பல புத்தகங்கள் தமிழில் இல்லை. அவ்வீதக் கலைகள் மேற்கிலோ, கிழக்கிலோ, உலகின் எந்தப் பகுதியிலே இருந்தாலும் அவற்றை முதலிற் தமிழில் கொண்டு வரவேண்டும். இதற்காக, தமிழா பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாத்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய், என்று பாரதியார் சொல்லுகிறார். பாரதியார் விஞ்ஞானத்தை மக்கள் மத்தியில் பரப்புவதில் எவ்வளவு ஆர்வத்துடன் இருந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மந்திரம் கற்போம், வினைத் தந்திரம் கற்போம், ஔடதம் குறை கைத்தொழில் போற்று, ரஸத்திலே தேர்ச்சி கொள், உலோக நூல் கற்றுணர், லௌகிகம் ஆற்று, வானநூற் பயிற்சி

கொள், விதையினைத் தெரிந்தெடு, வீரியம் பெருக்கு என்று கூறி பொருளாதார முன்னேற்றத்திற்கு வறுமையின்மையும், அமைதியும் காரணம் என்று கூறி பொருள் முதல்வாதியாய் இருந்து நோக்கிய தனிநோக்கே அவனைப் பிறரிலிருந்து பிரித்து உயர்ந்த கவிஞனாக, மறுமலர்ச்சியாளனாக, ஏன் தேசிய மகா கவியாக ஆக்கியிருக்கிறது எனின் மறுக்க முடியுமா? நம் பார்வையினை பாரதி பார்வையாக மாற்றிப் பயன் பெறுதலே அவன் நூலைக் கற்பதின் பயனாகும்.

கவிஞன் சொன்னதை மாத்திரம் பொருள் கொள்வது தவறானது. எது அவனை அவ்வாறு சொல்ல வைத்தது என்று பார்க்க வேண்டும். எட்டயபுரத்து சுப்ரமணிய பாரதி ஒரு வளம் நிறைந்த மண். அந்த மண்ணின் மீது குயவனினதும், விவசாயினதும், ஆராய்ச்சியாளனினதும், புவிச்சரிதவியலாளனினதும், கொத்தனினதும் பார்வைகள் விழுந்தன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு புது விளக்கம் பெற்றனர். ஈற்றில் அவர்கள் ஒரு பானையையோ, பயிரையோ, அரிய மூலகத்தையோ, ஒரு உயிர்ச் சுவட்டையோ பெற்றனர். ஆனால் அந்த மண் உள்வாங்கிக் கொண்டதும், உள்ளடக்கிக் கொண்டதும் இவை மட்டும்தான் என்றால் அது மூடத்தனமாகும். பாரதியின் மீது துரதிருஷ்டவசமாக சமூக விஞ்ஞானிகளினதும், இலக்கியக்காரர்களினதும் பார்வைகள் மட்டுமே விழுந்திருக்கின்றன. அற்பாயுளுக்கும், அதி மேதாவித் தன்மைக்குமுள்ள உறவை உதாரணப்படுத்தி முப்பத்துமூன்று வயதில் உலகைவிட்டு மறைந்து விட்ட சுப்ரமணிய பாரதியில் ஒவ்வொரு துறையினருக்கும் ஏதோ ஒன்று மறைந்து இருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

**துணையன்கள் :**


1. இராஜேந்திரன் கே. எஸ். 1982, ஊருக்கு நல்லது சொல்வேன், கவிதா பப்ளிகேசன் சென்னை 600 033
2. கோவேந்தன் த. 1985, பாரதி களஞ்சியம், நர்மதா பதிப்பகம், சென்னை 600 007
3. சிற்பி, 1981, மகாகவி பாரதி மதிப்பீடுகள், கோலம் வெளியீடு, பொள்ளாச்சி
4. பெரியசாமித் தூரன் ம. ப. 1982, பாரதியின் நூல்கள் ஒரு திறனாய்வு , வானதி பதிப்பகம், சென்னை 17.
5. புலவர் இரா. முருகையன், 1983, புதிய ஆத்திசூடி - மகாகவி பாரதியார், பூம்புகார் பிரசுரம், பிரஸ், சென்னை 600 108.
6. பேராசிரியர் ந. சுப்புரெட்டி. 1982 பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, பாரதி நூற்றாண்டு விழா வெளியீடு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை 625 001
7. மகாகவி சி. சுப்ரமணிய பாரதியார், 1986, மகாகவி பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம், சென்னை 17.
8. முஹம்மது செரிபு, நா, 1982, பாரதியும் பொதுவுடைமையும், முன்னேற்றம் வெளியீடு, மானா மதுரை 623 606
9. வலம்புரிஜான், 1982, பாரதி ஒரு பார்வை, பானுப்பிரியா, சென்னை 600 010
10. விகரு. இராமநாதன், 1992, மகாகவி பாரதியார் கவிதைகள், சிறி இந்து பப்ளிகேசன்ஸ், சென்னை - 6000017

# நாவலரின் 'கொன்றை வேந்தன்' உரைவளம்

இரா. வை. கனகரத்தினம், தமிழ்த்துறை (இந்துப்பண்பாடு).

இந்நூல் காப்புச் செய்யுளில் வரும் கொன்றை வேந்தன் எனும் முதலிரு சொற்களையும், நூலின் பெயராகக் கொண்டது. இது சிவனின் நாமமாகும். இந்நூலில் சூத்திரங்கள் போல் அமைந்த மகா வாக்கியங்கள் கட்டளை மொழிகளால் நான்கு சொற்களால் நெடுங்கணக்கு முறையில் அமைந்துள்ளன. குறிப்பாக மொழிக்கு முதலாக வரும் தமிழ் எழுத்துக்களை முதல் எழுத்துக்களாகக் கொண்டும் அங்ஙனம் வரப்பெறாத இடையெழுத்துக்களைக் கொண்டும் இம் மகாவாக்கியங்கள் அமைந்துள்ளன.

அகர எழுத்து முதலாக அஃகாரம் ஈறாகப் பதின்மூன்று எழுத்துக்களிலும் ககரம் முதல் கௌகாரம் ஈறாக பன்னிரு எழுத்துக்களிலும் சகரம் முதல் சோகரம் ஈறாக பதினாறு எழுத்துக்களிலும் தகரம் முதல் தோகாரம் ஈறாகப் பதினாறு எழுத்துக்களினும் நகரம் முதல் நோகாரம் ஈறாகப் பதினொரு எழுத்துக்களிலும், பகரம் முதல் போகாரம் ஈறாகப் பதினொரு எழுத்துக்களிலும், மகரம் முதல் மோகாரம் ஈறாகப் பதினொரு எழுத்துக்களிலும், வகரம் முதல் வோகாரம் ஈறாகப் பதினொரு எழுத்துக்களிலும் செய்த மகாவாக்கியங்கள் தொன்னூற்றொன்றாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருடார்த்தங்களின் உண்மைகளையும் பாலில் தேன் கலந்து ஊட்டுவது போல் மிகவும் எளிமையான முறையில் இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது. "சூதும் வாதும் வேதனை செய்யும்"(31), "தேடா தழிக்கிற் பாடா முடியும்" (44), என்பதால் அவற்றைத் தவிர்த்தும் "கையொத் திருந்தா லைய மிட்டுண்" (34), என்பதால் அறத்தையும், "திரைகடலோடியுந் திரவியந் தேடு" (39) என்பதால் பொருளையும், "மைவிழியார்தம் மனையகன் றொழுகு" (78) என்பதால் பிறர்மனை புகுவதைத் தவிர்த்து, பிறர்மனை புகாமை யறமெனக் கொண்டு, "காவறானே பாவையர்க் கழகு" (15), "கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை" (14), "இல்லறமல்லது நல்லறமன்று"(3), என்பவற்றால் இன்பத்தையும் "மோன மென்பது ஞானவரம்பு" (80), "சிவத்தைப் பேணிற் தவத்திற் கழகு" (28) என்பதால் வீடு பேற்றையும் இந்நூல் விளக்கும்.

இந்நூலுக்கு நாவலரவர்கள் 1852 ஆம் ஆண்டு உரை எழுதி வெளியிட்டார். நாவலரவர்களின் உரையே காலத்தால் முந்திய உரையென அறிய முடிகின்றது. பின்னெழுந்த உரைகள் பலவற்றுக்கும் இவ்வுரை முன்னோடியாக அமைந்திற்று.

நாவலரவர்களின் உரையில் அகராதிப் பொருள் தருதல், இலக்கணக் குறிப்புத் தருதல், உவமைகளை உணர்த்த கருத்துரை வழங்கல், உரைகளின் மூலம் பழமொழி வடிவங்களை நினைவுக்கு வருவித்தல், சொற்களை வருவித்துப் பொருள் தரல் முதலான உரைத்திறங்களுடன் உரைநயத்தையும் அவதானிக்க முடிகின்றது.

நாவலரவர்கள் நான்கு இடங்களில் அகராதிப் பொருள் காட்டியுள்ளார். சை-பொருள், சொக்கு - பொன், பீர் - முலைப்பால் என்பவற்றை இங்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். "பீரம்பேணி" - (62) என்பதில் வரும் "ஆம்" சாரியை இலக்கணக் குறிப்பாகத் தருவார். ஆத்திசூடி போல் கொன்றை வேந்தனும் உவமைகள் மூலம் மெய்ப்பொருளை உணர்த்தி நின்றது. நாவலரவர்கள் மூன்றே மூன்று இடங்களில் உவமையை புலப்படுத்தி கருத்துரை வழங்கி உள்ளார். எடுத்துக்காட்டாக, "பீரம்பேணி பாரந் தாங்கும்" என்பதற்கு நாவலரவர்கள் "முலைப்பால் உண்டு வளர்ந்தவன் பாரமான சுமையை சுமப்பான்" என உரை கூறுவதோடு அமையாது, "அதே போல முன்னே காரணங்களைக் குறைவறக் கொண்டவன் பின்னே பெரிய காரணங்களையும் வருத்தமின்றி முடிப்பான்" சிந்தித்துச் செயல்படல் என்பதைக் கருப்-பொருளாகக் கொண்டு அதன் தாற்பரியம் உணர்த்துவார்.

"மீகாமனில்லா மரக்க மோடாது" (தன்னை ஓட்டத் தக்க) மாலுமி இல்லாத தோணியானது (கடலிலே செவ்வையாக) ஓடாது. என உரை கூறியதுடன் "அதுபோலத் தன்னை முடிக்கத் தக்கவன் இல்லாத யாதொரு கருமமும் செவ்வையாக முடியாது" என உறுதியைக் கருப்-பொருளாகக் கொண்டு கருத்துரை வழங்குவார். இஃதொரு நயமான உரை விளக்கமாகும்.

"மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" (வானத்திலே காணப்பட்ட) மின்னலுக் கெல்லாம் (அப்போது மழையில்லை யாயினும்) பின்னே மழை உண்டாகும்" என உரைத்ததுடன் முயற்சியை இதன் தாற்பரியமாகக் கொண்டு அதுபோல ஒருவனிடத்திலே காணப்பட்ட நல்ல முயற்சி-களுக்கெல்லாம் அப்போது பயன் இல்லை யாயினும் பின்னே பயன் உண்டாகும்" எனக் கருத்து வழங்குவார். இவ்விளக்கமும் தாற்பரியமும், "முயற்சி திருவினையாக்கும்", முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்னும் பழமொழிகளின் நிழல் வடிவங்களை நினைவூட்டுகின்றது எனலாம்.

நாவலரவர்கள் பதினான்கு (14) சூத்திரங்களுக்கு நேராகப் பதவுரை எழுதியதோடு, எழுபத்தெழு (77) சூத்திரங்களுக்குச் சொல் வருவித்து உரை கண்டுள்ளார். சில உதார-ணங்களை நோக்கலாம்.

(அ) "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" (38) மாதாவைப் பார்க்கிலும் சிறப்புப் பொருந்திய ஒரு ஆலயம் (ஒருவனுக்கு எங்கும்) இல்லை.

(ஆ) "தந்தை சொன் மிக்க மந்திரமில்லை"(87) பிதாவினுடைய சொல்லுக்கு மேற்பட்ட (பலனைத் தரும்) மந்திரமானது (ஒருவனுக்கு எந்த நூலிலும்) இல்லை.

(இ) "காவ றானே பாவையர்க் கழகு" (18) (கற்புக்கு அழிவு வராமல் தம்மைக்) காத்துக் கொள்வது தானே, பெண்களுக்கு அழகாகும்.

(ஈ) "பிறன்மனை புகாமை யறமெனத் தகும்" (61) பிறனுடைய மனையாளிடத்தில் இச்சித்துப் போகாமையே, (எல்லாத் தருமங்களிலும் உயர்ந்த) தருமம் என்று சொல்லத் தகும்.

(உ) "சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு" (28) - (முதற் பொருளாகிய) பரம சிவத்தை (ஒருவன்) வழிபட்டால், (அவன் செய்யுங்) தவத்திற்கு அழகாகும்.

நாவலரவர்கள், ஔவைப் பாட்டியின் கருத்தினை நன்குணர்ந்து அவரது கருத்துப் பிசகாத வகையிலும் அக்கருத்தினை வற்புறுத்தும் வகையிலும் கொண்டு கூட்டியும் பொருளை வருவித்தும் நயம்பட உரை எழுதியிருப்பது நாவலவர்களின் உரைத்திறன் ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கும். எடுத்துக்காட்டாக, சிலவற்றை நோக்கலாம்.

(அ) இல்லற மல்லது நல்லற மன்று (3) - (மனையாளோடு கூடிச் செய்யும்) இல்லறமானது, எளிதிற் செய்யத்தகும் அறமாகும். இல்லற மல்லாத துறவறமானது, எளிதிற் செய்யத் தகும் அறமன்றாகும்.

அறங்கள் பல. அவ்வறங்கள் பலவற்றுக்கும் இல்லறமும் துறவறவும் அடிப்படை, துறவறம் இயல்பாக விருப்பத்தோடு மேற்கொள்ள வேண்டும். இல்லறமற்ற துறவறம் சித்திப்பது அருமை. எனவே தான் துறவறம் எளிதிற் செய்யத் தகும் அறமன்று என நயமாக நாவலரவர்கள் குறிப்பிட்டு எளிமையான இல்வாழ்வை ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ள வேண்டு-மென்று வற்புறுத்துவார்.

(ஆ) "நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை" (50) (தன்னிடத்திலே) நிலை பெறும்படி கற்றலாவது (தான் சொல்லும்) சொல்லுகளிலே, (ஒருபோதும்) தப்பிப் போகாமையாம்.

சொற்றிறம்பாமை என்பது ஒரு அறக் கோட்பாடு. அது மனத்துக்குச் சாட்சியாகவும், காட்சியாகவும் விளங்குவது. கற்புடமைக்கு மாத்திரம் சொற்றிறம்பாமை அவசியம் எனக் கொள்ள வேண்டியதில்லை. சிந்தித்துப் பேசிச் செயற்படும் அனைத்துக்கும் சொற்றிறம்பாமை என்னும் அறம் அவசியமானதாகும். கற்றோருக்கு இது மிகமிக அவசியம். கற்க, கசடறக் கற்க, நிற்க அதற்குத் தக, எனும் படி வள்ளுவர் சொற்றிறம்பாமையின் அவசியத்தை வற்புறுத்திய பொழுதும் இதன் பொருள் வெளிப்படையாக அமையவில்லை. வள்ளுவரின் பொருளை நினைவு கூர்ந்த நாவலரவர்கள் பொருளை வெளிப்படையாக, வேறு பொருள் கொள்ளாது நயமாகக் "கற்றலாவது தான் சொல்லும் சொற்களிலே ஒரு பொழுதும் தப்பிப் போகாமையாம்" எனக் குறிப்பிடுவது ஈண்டு மனங்கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறு நாவலரவர்களின் உரையிற் காணும் தத்துவப் பொருள் உணர்த்தும் பாங்கையும் உரைகளிற் காண்க.

### இப்படியும் ஒரு பெண்ணா!

'தமிழர் கலாச்சாரம் உலகில் மிகுந்த பெறுமதி வாய்ந்தது. அதனை தமிழர்கள் பாதுகாக்க வேண்டுமே தவிர மேற்கு நாகரீகம் சிறந்தது என எண்ணி பின்பற்றப்போய் ஏமாறக்கூடாது' இவ்வாறு கூறியிருப்பவர் வேறுயாருமல்ல தமிழர் திலீபன் திருச்செல்வத்தை மணந்து இந்துவாக மாறிய நோர்வேஜிய பெண்மணி திருமதி. அஸ்திரிறிக்மூர் திலீபன் அவர்களே இவ்வாறு 'சர்வதேச தமிழர்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். குறுநூட் நகரில் பைரிவீல் அலுவலராக கடமைபுரியும் இவர் குங்குமம், சேலை அணிந்தே வீட்டிலும் காணப்படுகிறார். தமிழ் பெண்களில் சிலர் குங்குமம் அணிவதை ஒரு பொருட்டாக மதிக்காத அந்த மேற்கு நாட்டில் இந்த காலத்தில் இப்படியும் ஒரு பெண்ணா...

# எஸ். பொ. வின் இரு கதைத்தலைவர்கள்

கலாநிதி. துரை மனோகரன்

தமிழ் நாவல் முயற்சிகளிலே எழுத்தாளர் சிலர் ஈடுபட்ட காலம் முதலாக ஒழுக்கவியற் கருத்துக்களும் முதன்மை பெறத் தொடங்கின. நீதியும், நேர்மையும், மனச்சாட்சியும், பண்புடைமையும், சான்றாண்மையும், அன்பும், அறனும், ஒப்புரவும் முதலான நல்லியல்புகள் கொண்ட கதைத்தலைவர்களே பொதுவாகப் படைக்கப்பட்டுள்ளனர். கதைத்தலைவர்கள் இவ்வாறு படைக்கப்பட்டிருப்பதன் காரணம், வழிவழி வந்த காவிய மரபினின்றும் விடுபடாமையே ஆகும். காவியக் கதைத்தலைவர் அழகும், வீரமும், சகல நற்குணங்களும் கொண்டவராகப் படைக்கப்பட்டுள்ளனர். இம் மரபினையொட்டிய பிரதாப முதலியார் சரித்திரத்திலே பிரதாப முதலியாரின் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. அசன்பே சரித்திரத்திலே அசனுடைய பாத்திரமும் இத்தகையதேயாகும். கமலாம்பாள் சரித்திரத்திலே இடம்பெறும் ஸ்ரீநிவாசன், நடப்பியல் வாழ்வோடு பொருந்துபவனாகப் படைக்கப்பட்டுள்ளபோதிலும், முற்றுமுழுதாக நற்குணம் வாய்ந்தவனாகவே படைக்கப்பட்டுள்ளான்.

பத்மாவதி சரித்திரத்திலே நாராயணனின், பாத்திரம் ஒழுக்கவியல் ரீதியிற் சற்றே மாறுபட்ட இயல்பினைக் கொண்டதாகப் படைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாவலிலே நாராயணனே முதன் முதலாகச் சாதாரண மனிதனுக்குரிய சுய சிந்தையுடன் படைக்கப்பட்டுள்ளான். நல்லதும், தீயதும் கலந்த குணவியல்புகளே சாதாரண மனிதனுக்குரியவை ஆகும். நாராயணனும் அறிவும், ஆற்றலும், தயாள குணமும், பிறவுமான நல்லியல்புகளோடு சுய சிந்தைகளும் கொண்டவன். பின்னர் வெளிவந்த நாவல்களிலே நாராயணின் பாத்திரப் பண்பின் சாயலே இடம்பெறத் தொடங்கியது. சமூகத்தைப் பிரதிபலிக்க வேண்டிய நாவலிலே, இத்தகைய பாத்திரங்களே படைக்கப்படுதல் அவசியமானது என்னும் கருத்து காலகதியிலேயே நாவலாசிரியர்களிடத்தே வேரூன்றத் தொடங்கியது.

காலப்போக்கில் தமிழ் நாவலிலே ஒழுக்கவியல் ரீதியாக இடம்பெறத் தொடங்கிய கதைத்தலைவர்களை மூன்று வகையாகப் பகுக்கலாம். (அ) பாலுறவுப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தி ஆரவாரிக்கும் கதைத்தலைவர்கள் (உதாரணமாக சி. என். அண்ணாதுரை முதலான திராவிட முன்னேற்றக் கழக நாவலாசிரியர்களின் கதைத்தலைவர்கள்) (ஆ) சமூகத்திலே நடைமுறையிலிருக்கும் ஒழுக்கவியற் கருத்துக்களுக்கு மாறாகப் பாலுறவுத் தொடர்புகளை விரும்பும் கதைத்தலைவர்கள் (உதாரணமாக, ஜெயகாந்தன், தி. ஜானகிராமன், இந்திரா பார்த்தசாரதி

முதலானோரின் கதைத்தலைவர்களிற் சிலர்) (இ) பாரம்பரியமாகத் தமிழிலக்கியத்திலே வற்புறுத்தப்பட்டு வரும் ஒழுக்கக் கருத்துக்களைக் கொண்ட கதைத்தலைவர்கள் (உதாரணமாக மு. வரதராசனின் கதைத்தலைவர்கள்).

ஈழத்தைப் பொறுத்தவரையிலே, ஆத்மீக - ஒழுக்க சம்பந்தமான கதைத்தலைவர்களே இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியிலே முக்கியத்துவம் பெற்றிருந்தனர். ஒழுக்கத்தையும், மதத்தையும் ஒன்றினின்று ஒன்று பகுப்பது கடினமாகும். இரண்டுமே செல்வாக்குடைய சமூகக் கட்டுப்பாட்டுச் சக்திகள் மட்டுமன்றி, மனித நடவடிக்கையை நெறிப்படுத்தும் வழிகாட்டிகளும் ஆகும் என்னும் கருத்து இக்கால நாவலாசிரியரிடத்துக் காணப்பட்டது. சில உதாரணங்களை இங்கு குறிப்பிடலாம். சி. வை. சின்னப்பபிள்ளையின் வீரசிங்கன் கதை (1905)யிலே, உண்மையே ஈற்றிலே வெல்லும் என்பதாகக் கதைத்தலைவனான வீரசிங்கனின் பாத்திரப் படைப்பு அமைந்துள்ளது. செல்லம்மாளின் இராசதுரை (1924) நாவலிலே, இராசதுரை என்னும் நீதியும், நேர்மையும் மிக்க கதைத்தலைவன் படைக்கப்பட்டுள்ளான். இடைக்காடரின் சித்தகுமாரன் (1925) நாவலிற் சித்தகுமாரன் நன்னெறியிலே வாழ்பவனாகக் காட்டப்பட்டுள்ளான். அ. நாகலிங்கத்தின் சாம்பசிவம் ஞானாமிர்தம் (1927) நாவலிற் கதைத்தலைவன் சாம்பசிவம் நல்லொழுக்க நெறி கொண்டவனாகப் படைக்கப்பட்டுள்ளான். ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின் கோபால நேசரத்தினம் (1927), காசிநாதன் நேசமலர் (1929) ஆகிய நாவல்களிலே, முறையே, கதைத்தலைவர்களான கோபாலனும், காசிநாதனும் மதமாற்றப் பிரச்சினைகளில் பாதிப்புக்குள்ளாகியும், தம் மத சம்பந்தமான ஒழுக்க உறுதியினின்றும் நழுவாதவர்களாக இடம்பெற்றுள்ளனர்.

ஒழுக்கத்தினின்றும் மாறுபட்ட சில கதைத்தலைவர்கள் ஈற்றிலே தற்கொலை செய்து கொள்வதாகவோ திருந்தி நடப்பதாகவோ படைக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக, எஸ் தம்பிமுத்துப்பிள்ளையின் சுந்தரன் செய்த தந்திரம் (1918) நாவலிலே, சுந்தரம் ஒரு போலிச் சந்நியாசியாகப் படைக்கப்பட்டுள்ளான். மக்களை ஏமாற்றுவதற்காகப் பல தந்திரங்களைச் செய்த அவனது தீயகுணம் ஈற்றிலே வெளிப்பட்டது. இதன் காரணமாக, அவன் தற்கொலை செய்து கொண்டான். ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின் துரைரத்தினம் நேசமணி (1931) நாவலிலே, துரைரத்தினம் சொந்த மனைவியைப் பிரிந்து, தொழில் புரியும் இடத்திலே வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்து, இறுதியாகத் தன் தவறுகளை உணர்ந்து திருந்தி, மனைவியுடன் வாழத்தொடங்கினான். எம். பி. எம். முகமத் காஸிமின் அருளானந்தம் அல்லது வேசி கையில் சிக்கி மீண்ட வீரன் (1937) நாவலின் கதைத்தலைவன் விபசாரி ஒருத்திமீது மையல் கொண்டு மனைவியைக் கைவிட்டு பின்னர் தவறை உணர்ந்து மனைவியை ஏற்றுக் கொண்டான்.

பின்னர் எழுதத் தொடங்கிய புதிய தலைமுறை எழுத்தாளர்கள், எதனையும் புதுமை வேகத்துடன் சமூகத்துக்குக் கொடுக்க விரும்பினர். வாசகருக்கு நல்லறிவு புகட்டுவது இவர்கள் நோக்கமாக அமையவில்லை. தமிழ் நாவலிலக்கியத்துக்குப் புதிய பரிமாணத்தை ஏற்படுத்த வேண்டும் என இவர்கள் விரும்பினர். இவ்வகையிலே, ஒழுக்கவியற் பிரச்சினைகள் பற்றி எழுத முனைந்த எஸ் பொன்னுத்துரை, பாலுறவுப் பிரச்சினைக்கும் முதன்மை கொடுக்க விரும்பினார். இதனை, அவரது பின்வரும் கூற்று உறுதிப்படுத்துகின்றது. "மேனாட்டார் sexஐ மையமாக வைத்துப் பல நவீனங்களைச் சிருஷ்டித்திருக்கின்றனர். மனித இனத்தின் பின்னமற்ற அடிப்படை உணர்ச்சி பாலுணர்ச்சியே. இவ்வுணர்ச்சியில் வித்தூன்றிக் கருவாகி ஜனித்து, வளர்ந்து அந்த நுகர்ச்சியில் எழும் குரோதம் - பாசம் ஆகிய மன நெகிழ்ச்சிகளுக்கு மசிந்து, சிருஷ்டித் தொழிலில் ஈடுபட்டே வாழ்கிறான் மனிதன். அவன் தனது பலவீன நிலைகளில் செய்வனவற்றையும், அனுபவிப்பனவற்றையும் சொல்லவும், ஒப்புக் கொள்ளவும் ஏன் கூச்சப்பட வேண்டும்,

இவ்வெண்ணத்திலெழுந்த திராணியுடன் மேனாட்டார் சிருஷ்டி இலக்கியத்தை வளர்க்கின்றனர். இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலியும், பிரதிபலிப்புமானால், வாழ்க்கையின் அடித்தளமும், பெரும் பகுதியான sex விவகாரத்தைத் திரையிட்டு, "மரபு" என்ற வரட்டுக் கூச்சலினால் வேலி கட்டி, ஏன் நமது இலக்கிய வளர்ச்சியின் வித்தைக் கருப்பையில் வைத்தே கருச்சிதைவு செய்யும் பணியில் ஈடுபட வேண்டும்? தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள தேக்கத்திற்கு நமது கோழைத்தனந்தான் பிரதான காரணமென்பதை நாம் மனத்திற்குள்ளாவது ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்"[2].

ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியம் காலந்தோறும் பல பரிமாணங்களையெய்தி வளர்ச்சியடைந்து வந்துள்ளது. அதேவேளையில், ஈழத்து நாவல்களிற் பல்வேறு கதாபாத்திரங்களும், அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்கள் தமது பாத்திரப் படைப்பு மூலமாக வாசகர் மனத்திற் தமது ஆளுமையைப் பதிவது மாத்திரமன்றி, தமது பாத்திரங்களின் செல்வாக்கையும் பரப்பி வந்துள்ளனர். அந்தவகையில் ஈழத்து இலக்கியத்துறையில் தமது எழுத்தாற்றலாலும், தனித்துவமிக்க ஆளுமையாலும் தனியிடத்தைப்பெற்ற எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையின் இரு நாவல்களான *தீ (1961)*, *சடங்கு (1971)* ஆகிய நாவல்களில் இடம்பெறும் கதைத்தலைவர் பாத்திரங்களும் அலசத்தக்கவையாகும்.

*தீ* இன் கதைத்தலைவன் தனிமனிதனாகவும், *சடங்கி*லே இடம்பெறுபவன் மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதியாகவும் விளங்குகின்றனர்.

*தீ* நாவலின் கதைத்தலைவன் "நான்" (பெயர் சூட்டப்படவில்லை) ஓர் ஆசிரியனாவான். சிறு வயது முதலாக அவனது பாலுறவுத் தொடர்புகளே நாவல் முழுவதிலும் விபரிக்கப்பட்டுள்ளன.

"நான்" சிறு பையனாக இருந்தபோது, அவனது குறும்புத்தனங்களின் காரணமாக, அவனை நகர்ப்புறக் கல்லூரி ஒன்றின் விடுதிக்குத் தந்தை கல்வி கற்பதற்காக அனுப்பினார். அங்கு யோசெப் சுவாமியார் என்பவர் அவனுக்குப் பாலுறவு உணர்ச்சிகளை ஊட்டினார். அவன் விடுமுறையைக் கழிப்பதற்காக ஊருக்குத் திரும்பும் வேளைகளில் பாக்கியம் என்ற விபசாரியுடன் தொடர்பு ஏற்பட்டது. அதன்பின்னர், பிறனொருவனாற் சோரம் போன சாந்தியின் தொடர்பு அவனுக்குக் கிடைத்தது. பின்னர், தாம்பரத்திலுள்ள கல்லூரி ஒன்றுக்கு மேற்படிப்புக்காக "நான்" அனுப்பப்பட்டான். அங்கு தமிழ்ப் பேராசிரியர் ஒருவரின் பேத்தியான லில்லிக்கும், அவனுக்குமிடையே காதல் ஏற்பட்டது. "நான்" கிறிஸ்தவ ஞானஸ்நானம் செய்யப்பட்டான். அக்காதலுக்கு லில்லியின் தாத்தா தடையாக இருந்தமையினாற் காதலிலே முறிவு ஏற்பட்டது. மேற்படிப்பு முடிவடைந்து சொந்த ஊருக்குத் திரும்பியதும், புனிதத்தை "நான்" மணம் புரிந்தான். மணவாழ்வின் ஆரம்பத்திலே, லில்லியின் நினைவு அவனை மிகவும் வதைத்தது. இதனாலே, அவர்களுக்கிடையிலே அன்புமயமான பிணைப்பு ஏற்படவில்லை. அதனை, புனிதத்தின் அமைதியான வேதனைகளின் மூலமாக உணர்ந்த "நான்", அவளுடனே அளவுக்கதிகமாக உடலுறவு கொண்டான். இதன்விளைவாகப் புனிதத்துக்குப் பல தடவைகள் கர்ப்பச் சிதைவு ஏற்பட்டு, இறுதியிலே மரணத்தின் பின்னர் தனியாக வாழ்ந்துவந்த "நானு"க்கும் திலகா என்னும் சிறுமிக்குமிடையே தொடர்பு ஏற்பட்டது. இறுதியாக, சரசு என்னும் விபசாரியுடன் ஏற்பட்ட சந்திப்பு அவனைப் பாலுறவு விடயங்களிலே அருவருப்புக் கொள்ளச் செய்தது. காமம் ஒரு தீ என்பதனை அவன் உணர்ந்துகொண்டான்.

எம். ஏ. ரஹ்மான் குறிப்பிட்டுள்ளமையைப் போன்று, "*தீ* நான் என்னும் தனி ஒருவனின் பாலுணர்ச்சிச் சிக்கல்களைத் தன் caseஸாக எடுத்துக்கொண்டு விசாரணை நடத்துகின்றது"[3]

நாவலாசிரியர் எஸ். பொன்னுத்துரை தமது விசித்திரமான கதைத் தலைவனைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"இக்கதையின் 'நான்' என்ற கதாநாயகன் விசித்திரமானவன். அவனுடைய வாழ்கக்கையில் நிகழ்ந்த முழுச்சம்பவங்களும் நவீனத்தின் சுருக்கம் கருதியே தரப்படவில்லை. அவனுடைய வாழ்க்கையின் பல்வேறு காலகட்டங்களில், நம் நாட்டுச் சூழலில், எவ்வாறு பாலுணர்ச்சி எழுச்சிகளில் உந்தப்பட்டு அவன் வாழ்கிறான் என்ற மூலக்கருவுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தினாலேதான். ஏனைய பாத்திரங்களின் குணநலன்களை அறிய உதவும் செய்திகளை ஒறுப்பாக்கியிருக்கிறேன்."[4]

இந்நாவலில் இடம்பெற்றுள்ள பாத்திரங்கள் அனைத்தும் கற்பனையே என நாவலாசிரியர் குறிப்பிட்டுள்ளபோதிலும், "இங்கே சித்திரிக்கப்பட்டுள்ள கட்டங்கள் பலவோ, சிலவோ, அல்லது ஒன்றோ, இங்கு விஸ்தரிக்கப்பட்டுள்ள வகையிலேயோ, அல்லது சற்று வேறுபட்ட விதத்திலேயோ அநேகருடைய வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கலாம்"[5] என ஒப்புக் கொள்கிறார். இதன் மூலமாக, "நான்" பாத்திரம் சமூகத்தின் ஓரங்கமே என்பதனைச் சூசகமாக உணர்த்துகின்றார்.

இந்நாவலிற் பாத்திரங்கள் அதிகமாக உள்ளமையினாலே, அப் பாத்திரங்களை முழு வடிவில் படைக்க இயலவில்லை என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[6] இதற்கேற்ப, கதைத்தலைவன் பாத்திரப் பண்பின் முழு அம்சங்களும் இந்நாவலிலே இடம்பெறவில்லை. சமூக ஒழுக்க முறைமைக்கு மாறான அவனது நடத்தைகளுக்கான சமூகக் காரணங்கள் நாவலிற் காட்டப்படவில்லை. தனிமனிதனான "நான்" இன் ஒழுக்க முரண்பாடே கதைத்தலைவனின் பாத்திர ஆக்கத்துக்கும் வளர்ப்புக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

கமலா, பாக்கியம், சாந்தி, லில்லி, புனிதம், திலகா, சரசு ஆகிய ஏழு பெண்களுடன் "நான்" கொண்ட உறவுநிலைகள் நாவலிலே விபரிக்கப்பட்டுள்ளன.

இவ்வேழு பெண்களிற் கமலா, "நான்" இன் பாலிய வயதுத் தோழியாவள். "நான்" உம் அவளுடைய வயதை ஒத்தவனாக, அவளது விளையாட்டுத் தோழனாக இருந்தான். பாக்கியமும் சரசுவும் விபசாரிகளாவர். சாந்தி தனது பருவத் தவறினால் சோரம் போனவளாவள். லில்லி "நான்" இன் காதலியாவள். புனிதம் அவனது மனைவியாவள். பருவமடையும் வயதுடையவளான திலகா, தனது அறியாமையின் காரணமாக "நான்" உடன் தொடர்பு கொண்டவளாவள்.

"நான்" இன் ஒழுக்கமுறைச் சீர்கேட்டுக்கான காரணகர்த்தாவாக யோசெப் சுவாமியார் என்னும் பாத்திரத்தை ஆசிரியர் படைத்துள்ளார். விடுதி ஒன்றிலே தங்கிப் படித்துக்கொண்டிருந்த சிறுவனான "நான்" இன் உள்ளத்திற் கிளர்ச்சிகளை ஏற்படுத்தியவர். யோசெப் சுவாமியாவார். இதன்பின்பு, உணர்ச்சிகளுக்கு அடிமையானவனாக "நான்" மாறி, சமூக ஒழுக்க மரபுகளுக்கு முரணாக நடந்துகொள்ளத் தொடங்கினான்.

"நான்" இன் பாத்திரக் கூற்றின் மூலமாக ஆசிரியர் நினைவோட்ட உத்தியினைக் கையாண்டு கதையை நடத்திச் சென்றுள்ளார். இத்தகையதாக அமைந்த "நான்" இன் பாத்திரப்பண்பிலே இரு விசேட அம்சங்களுக்கு (அ) நடந்த சம்பவங்களை "நான்" கூறிச்செல்லுதல் (ஆ) இச் சம்பவங்களினூடே இடையிடையே இப்பாத்திரம், இவை தொடர்பான தனது கருத்துக்களையும் குறிப்பிடுதல்.

நடந்த சம்பவங்களை "நான்" கூறிச் செல்லுதலுக்கு உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம். "உன் தாத்தாவைக் கவனிக்கிறேன். அவருடைய கவனம் சுவரில் மாட்டப்-

பட்டிருக்கும் முள்முடி தரித்த இயேசுவின் படத்தின்மீது படிந்திருக்கிறது. மலைகளிலே தான் நதிகள் உற்பத்தியாகின்றன என்று சொல்லுகிறோம். ஆனால், அவை தாத்தாவின் கண்களிலிருந்து உற்பத்தியாகின்றன என்ற எண்ணம் வெகு இயல்பாகவே தெரிகிறது.... என் தொண்டையும் அடைக்கிறது. மௌனம் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் அறைக்கு வெளியே, உன் விசும்பல் குரல் மௌனத்தைக் கலைக்கின்றது. அதில் பொறித்துத் தெறிக்கும் சோகம், என் உள்ளத்தை அனலிலிட்டு...." [7]

சம்பவங்களினூடே இடையிடையே இப்பாத்திரம் தனது கருத்துக்களையும் குறிப்பிடுவதற்கு உதாரணமாகப் பின்வரும் பகுதி அமைந்துள்ளது:

"குருதெட்சணையாகப் பெருவிரலைத் தறித்துக் கொடுத்த ஏகலைவன் எங்கே? என் இதயக்குலையையும், அதனுடன் ஒட்டிக் கிடக்கும் இனிய ஆசைகளையும் அந்த ஆசைகள் தளிர் நரம்புகளில் பூத்துக் குலுங்கும் இன்பமயமான களவுகளையும் எடுத்து.... ஏசுநாதரின் சென்னியிலிருக்கும் முட்கிரீடம் மெதுவாக இறங்கி, என் தலையை நெரித்துக் கொள்கிறது... லில்லியுடன் இனிதாக வாழலாம் என்ற இனிய நினைவுகளை அந்த அக்கினி அசுரப் பசியுடன் விழுங்கி...." [8]

தீ நாவலின் கதைத்தலைவன் "நான்" சமூகம் முழுவதனையும் பாலுறவுச் சிக்கலின் அடிப்படையிலேயே நோக்கியுள்ளான். இதனாற் சமூகத்தின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி இப் பாத்திரம் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. இவற்றினாலே "நான" எவ்வகையிலாவது பாதிக்கப்பட்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை. இதனது மனப்போக்குக்கு ஏற்பவே சமூகத்தைப் பற்றியும் இப்பாத்திரத்தின் கருத்தும் அமைந்துள்ளது:

"வெறியே தான்! மனித சமுதாயம் வெறி பிடித்தது. எப்பொழுதும் எதிலாவது ஒரு வெறி. அங்கத்தின் ஒவ்வொரு துணுக்கிலும், ஊசிமுனைத் தவம் செய்யும் இந்த இலக்கிலே, அந்தச் சந்திலேதான் வாசம் செய்கிறது என்று சொல்லிவிட முடியுமா? வாழ்க்கை வெறிமயமானது. அந்த வெறியைத் தீர்க்கும் வெறிதான் வாழ்க்கை. இந்த வெறியைச் சேலையும் நாகரிக உடையும் தடுத்து விடுமா? அல்லது யோசெப் சுவாமியாரின் பிரமச்சரியம் தடுத்து விடுமா? இல்லை. வெறிபிடித்த வாழ்க்கை, அல்லது வாழும் நெறி!" [9]

"நான்" பாத்திரம் ஒரு சந்தர்ப்பத்திலே தர்க்கரீதியாகச் சிந்தித்துள்ளது. அவன் விபசாரியான சரசுவைச் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பத்தில், அவள் விபசாரியாக மாறுவதற்குக் காரணமாக இருந்தவனைப் பற்றிய உரையாடல் இடம்பெற்றது. "நான்" சரசுவிடம் "அந்த அவன் மட்டும் இல்லாவிட்டால், நீ இப்படியான வாழ்க்கையில் ஈடுபட்டு இருக்கமுடியுமா?"[10] என்று கேட்டான். இதனைக் கேட்டுவிட்டுத் தன் மனத்துக்குள்ளேயே சிந்தித்தான். சூழலும், சமூகமும், பசியும் ஆகிய மூன்றினாலும் ஏற்பட்ட விளைவே விபசாரம் என அவன் முடிவுக்கு வந்தான். இதன் பின்பு, "சரசு! உனக்கு இந்த வாழ்க்கை பிடிச்சிருக்கா?"[11] என்று கேட்டான். இந்த வினாவிலே "நான்" சரசுவின் நிலைமைமீது கொண்டிருந்த வருத்தம் தொக்கி நிற்பதனை உணரமுடிகிறது.

சமூகத்தின் ஒழுக்க மரபுகளுக்கு மாறானவை என்று கருதுகின்ற பாலுறவு விடயங்களைச் சமூகமாந்தர் விரசமென ஒதுக்குகின்றனர். ஆயினும், "நான்" இவ்விடயத்தினை விரசமாகக் கொள்ளவில்லை. மனத்துக்குள்ளே தான் புரியும் வாதத்தின் மூலமாக ஓர் ஒழுக்கவியற் பிரச்சினையையே தோற்றுவித்துள்ளான்.

"இது விரசமா? அப்படியானால் எது நெறி, எது விரசம்? மனித உற்பத்தி நெறியானால் கடவுள் அங்கீகாரம் பெற்ற பணியானால், அதன் பயிற்சி எப்படி விரசமாகும்?"[12] என்று வினாதொடுத்த போதிலும், முடிவு கூறப்படவில்லை.

ஒழுக்கக் கருத்துக்கள் ஒழுக்க மனவெழுச்சியைச் சார்ந்து நிற்கவில்லை. ஒழுக்க மனவெழுச்சிகள் தாம் ஒழுக்கக் கருத்துக்களைச் சார்ந்து நிற்கின்றன. சுமாரான மனவெழுச்சியுடைய மனிதன் அதி உன்னத ஒழுக்க நடவடிக்கையுடையவனாக விளங்குவான். அதிகமான மனவெழுச்சி, நல்ல ஒழுக்க வாழ்க்கையின் வளர்ச்சிக்கு ஊறு விளைப்பதாக இருக்கலாம். அவனது அதிகமான மனவெழுச்சியே நன்னெறியிலே அமைய வேண்டிய வாழ்க்கையின் போக்குக்கு ஊறு விளைவித்தது.

"நான்" சிந்தனைப் போக்கிலே நகைச்சுவை உணர்வை ஆசிரியர் இணைத்துள்ளார். இத்தகைய நகைச்சுவை உணர்வு ஓரளவு மனிதத்துவத்தை இப்பாத்திரத்துக்குச் சேர்த்துள்ளது என்று கூறவேண்டும்.

"சடங்கு" நாவலின் கதைத்தலைவர் செந்தில்நாதன் யாழ்ப்பாணக் கிராமமொன்றைச் சார்ந்தவர். கொழும்பிலே அரசாங்க எழுதுவினைஞராகக் கடமையாற்றுபவர், மத்தியதர வர்க்கத்தின் ஒரு பிரதிநிதியாக இனங்காணத்தக்கவர். கொழும்பிலே ஆசாபாசங்களுக்குக் கட்டுப்படாத ஒழுக்கசீலராக வாழ்ந்து கொண்டிருந்த அவருக்குக் கடன்தொகை கிடைத்ததும் ஊருக்குப் பயணமாகிறார். மூன்று மாதங்களுக்குப் பின்னர் வீடு திரும்பும் அவருக்கு, தமது மனைவி அன்னலட்சுமியின் நினைவு தோன்றுகிறது. ஆயினும், விடுமுறையிலே நின்றிருந்த ஐந்து நாட்களிலும் அவர் எதிர்பார்த்தவாறு மனைவியின் உறவு கிடைக்கச் சந்தர்ப்பங்கள் அமையவில்லை. மனத்தில் விரக்தியுடன் மீண்டும் கொழும்புக்குத் திரும்புகின்றார். இந்நாவலின் கதையம்சத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க அம்சம், கணவன் - மனைவியின் தாம்பத்திய உறவினைக் கதையினூடாகப் புலப்படுத்துவதேயாகும். எஸ். பொ. வின் "தீ" என்ற நாவலோடு ஒப்பிடுகையில், இந்நாவல் விரசமின்றி அமைந்த தரமான நாவலென்றே கொள்ளவேண்டும். "சடங்கு" நாவலின் முற்றுமுழுதான சிறப்பம்சம் செந்தில்நாதனின் பாத்திரப்படைப்பாகும்.

செந்தில்நாதன் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஓர் அங்கத்தவராகவும், அதேவேளையிலே தனிமனித உணர்வு கொண்டவராகவும் படைக்கப்பட்டுள்ளார். அரசாங்க எழுதுவினைஞருக்குரிய மனப்போக்குகள் அவரிடம் காணப்படுகின்றன. அரசகருமமொழிப் பரீட்சைகளிற் சித்தியெய்தி, வேதன உயர்வுகளைப் பாதுகாத்தல், எழுதுவினைஞருக்கான இரண்டாம் வகுப்புப் பரீட்சையிலே தேற முயற்சித்தல், அதிகநேர (Overtime) வேலையினாலே அதிகம் சம்பாதித்தல் முதலான அவர்களின் பொதுத்தன்மைகள் அவரையும் பாதித்திருந்தது. அரசாங்க எழுதுவினைஞராகவிருந்த செந்தில்நாதனின் இயல்புகள் பின்வருமாறு எஸ்.பொ.வினால் எடுத்தாளப்பட்டுள்ளன:

"இந்தக் குடும்ப பொறுப்புகள், உத்தியோகத்தில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற வைராக்கியத்தை அவருடைய உள்ளத்திலே பாய்ச்சியது. முதல் நான்கு வருடங்களுக்கிடையிலேயே இரண்டும் அடுத்தடுத்துப் பெண்களாகப் பிறந்துவிட்டதால், முழுமூச்சாக கிளாஸ் டூ சோதினையை ஒரு கை பார்த்துவிடவேண்டுமென்று கங்கணங் கட்டினார். அந்தச் சோதினைமீது மூன்று வருடங்களாகப் படையெடுத்து, அவருடைய கெட்டித்தனத்தாலும், செல்லப்பாக்கிய ஆச்சி செல்லச் சந்நிதியான், நல்லூரான், கதிர்காமத்தான் ஆகிய பிரசித்தி பெற்ற தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன்கள் வைத்த பெறுபேற்றினாலும் சித்தியடைந்துவிட்டார். பலவிதமான குழப்பங்களும், அபிப்பிராய பேதங்களும், அரசியல்வாதிகள் மத்தியிலும் நிலவியபோதிலும், சிங்களத் தேர்ச்சிச் சோதனையையும் நிர்ச்சலனமாக எடுத்து இங்கிறிமென்டையும் காப்பாற்றிக் கொண்டார். அவர் மேலிடத்திலிருந்து வரும் ஒவ்வொரு சுற்றறிக்கைக்கும் மிக மிகக் "கீழ்ப்படிந்து" உழைத்துவரும் அரசாங்க ஊழியராவார்"[14]

செந்தில்நாதனைப் பொறுத்தவரையில், அவர் தம்மையே விரும்பி, தம்மயமாகவே சிந்திக்கும் இயல்புகொண்ட தனிமனிதவாதியாவார். சமூகத்தின் ஓர் அங்கமாக அவர் இருந்தபோதிலும், அதனின்றும் வேறுபட்ட தனி அங்கமாக அவர் வாழப் பழகியிருந்தார். தனிமையையே விரும்பும் இயல்புடையவரான செந்தில்நாதன், சனநடமாட்டம் இல்லாத இடத்திலே இருந்து கொள்வதையே விரும்புபவர்.

நாவலில் எல்லை மீறாத ஒழுக்கவாதியாக அவர் படைக்கப்பட்டுள்ளார். ஒரேயொரு சந்தர்ப்பத்திலே, மதுவருந்திய மயக்கத்தினாற் சில பெண்களுடன் நடனம் ஆடியிருந்தார். ஆனால், இதனைத் தமது மனைவி அறியக்கூடாதெனக் கவலையும் கொண்டிருந்தார்.

எஸ்.பொ. வின் "தீ" (1961) நாவலில் இடம்பெறும் கதைத்தலைவனின்றும் செந்தில்நாதன் பாத்திரம் இவ்வகையிற் பெரிதும் வேறுபடுகின்றது. "தீ"யில் இடம்பெறும் "நான்" என்ற பாத்திரம், எத்தகைய ஒழுக்க நெறிகளுக்கும் கட்டுப்படாததாகவும், உணர்ச்சி செலுத்தும் வழிகளிலேயே செல்வதாகவும் படைக்கப்பட்டுள்ளது. அதன் பாத்திரப்பண்பிற் புறவுலகப் பாதிப்புக்களைக் காண்பதற்கில்லை. ஆசிரியனாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், அவனது மத்தியதர வர்க்க இயல்பு எதுவும் பாத்திரப்பண்பின் உருவாக்கத்துக்குத் துணையாக அமைந்திருக்கவில்லை. இதனால், அப்பாத்திரம் முழுமை பெற்றதாக அமையவில்லை. ஆனால், செந்தில்நாதனின் பாத்திரப்பண்பைப் பொறுத்தவரையில், அவரது மத்தியதரவர்க்கக் குணவியல்புகள் இயல்பாக அமைந்துள்ளன. இத்தகைய இயல்புகளினூடாக ஆசிரியர் இப்பாத்திரத்தின் பாலுறவு தொடர்பான விடயங்களையும் இணைத்துள்ளார்.

குடும்பப் பொறுப்பின் நிமித்தமாகக் கடுமையாக உழைத்துச் சம்பாதிக்கும் நோக்கினால், செந்தில்நாதனால் மூன்று மாதங்களாகச் சொந்த ஊருக்குத் திரும்ப முடியவில்லை. ஆயினும், அவரது உணர்வுகள் உடலுறவினை வேண்டிநின்றன. கடன் பணம் கிடைத்த சாக்கிலே, அவரது மனம் வீட்டுக்குச் செல்வதற்குச் சாதகமான வகைகளிற் சிந்தித்தது. பல எதிர்ப்புக்களுடன் மனைவியைச் சந்திப்பதற்கு அவர் சென்றிருந்தார். ஆயினும், வீட்டிலே விடுமுறையிலே தங்கியிருந்த ஐந்து நாட்களிலும் உடல்ரீதியான தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. நாவலாசிரியர் இது பற்றிக் குறிப்பிடும்போது, "ஐந்து நாட்களுக்கிடையில் பிராய்டின் மனவியற் கோட்பாடுகளைப் புனர் விசாரணை செய்ய வேண்டுமென்ற எண்ணமும் எனக்கு இருக்கின்றது"[15] என்று கூறியுள்ளார். சிக்மன்ட் பிராய்டின் உளவியற் கோட்பாடுகளைப் பிரக்ஞை பூர்வமாகப் பரிசீலனை செய்ய முற்பட்ட ஈழத்துத் தமிழ் நாவல் என்ற வகையிலும் "சடங்கு" குறிப்பிடத்தக்கதாகும். செந்தில்நாதன் பாத்திரம் இத்தகைய பரிசீலனைக்காகப் படைக்கப்பட்டது.

விடுமுறையின் முதல்நாளான சனிக்கிழமை இரவிலே அன்னலட்சுமியிடம் சென்ற செந்தில்நாதனின் கால்கள் தவறுதலாகத் தண்ணீர்ச் செம்பைத் தட்டியதனாலே, செல்லப்பாக்கிய ஆச்சி நித்திரைவிட்டு எழுந்துவிட்டாள். இதனாற் செந்தில்நாதனின் நோக்கம் நிறைவேற முடியவில்லை. ஞாயிற்றுக்கிழமை அவர் எண்ணெய் தேய்த்து முழுகியமையினாலே, அன்று அன்னலட்சுமியுடன் உறவுகொள்ள முடியவில்லை. திங்கட்கிழமை இரவு செந்தில்நாதன் மதுவருந்திவிட்டு வீட்டுக்கு வந்து வாந்தியெடுத்தமையினாலே, அன்றும் அவர்களது தாம்பத்திய உறவுக்குத் தடையேற்பட்டது. செவ்வாய்க்கிழமை அன்னலட்சுமிக்கு மாதவிடாய் ஏற்பட்டமையினாலே, அன்றும் செந்தில்நாதனுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. எனவே, அவர் தமது உடலிச்சைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமலே புதன்கிழமை கொழும்பு திரும்பினார்.

செந்தில்நாதனின் பாத்திரம் ஒழுக்கரீதியாகச் சில பண்புகளைக் கொண்டு விளக்குகின்றது. இவற்றை நாவலாசிரியர் பின்வருமாறு தொகுத்துச் சுட்டியுள்ளார்:

"உண்மையில் செந்தில்நாதனும் அந்த மரியாதைக்கு முற்றிலுந் தகுதியானவர். அவர் மிகமிகப் பண்பாளர். பார்ப்பதற்கு நாற்பத்தைந்து வயதுத் தோற்றமிருந்தாலும், வாஸ்தவத்தில் இன்னமும் நாற்பது வயதைத் தாண்டவில்லை...... இந்த வயதிலேயே செந்தில்நாதன் "அவர்" என்ற மரியாதைப் பன்மையைச் சம்பாதித்துக் கொண்டமைக்கு அவருடைய நன்னடத்தையே முக்கிய ஏதுவாகும். என்னென்னமோ கூத்துக்கள் எல்லாம் நடைபெறுவதாகச் சொல்லப்படும் கொழும்பு மாநகரிலே மிகமிக ஒழுக்கமான வாழ்க்கை நடத்தும் ஒரேயொருவர் தன்னுடைய கணவனே என்பது அன்னலட்சுமியின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அவரும் அந்த நம்பிக்கையை. மனமறிந்து என்றுமே பொய்யாக்கியதில்லை".[16]

செந்தில்நாதன் விசுவாசமான அரசாங்க ஊழியராக இருந்தமை போன்றே, விசுவாசமான குடும்பத் தலைவராகவும், கணவராகவும், மருமகனாகவும் இருந்தார். உண்மையிலே, அவரது நிர்வாக விடயங்கள் மாமியாரான செல்லப்பாக்கிய ஆச்சி மூலமாகவே நடைபெற்றன. செந்தில்நாதனின் பாத்திரப்பண்பின் உருவாக்கத்திற் செல்லப்பாக்கிய ஆச்சி என்னும் பாத்திரமும் உறுதுணையாக அமைந்துள்ளது. கதைத்தலைவர் தமது மனைவி அன்னலட்சுமியைப் பற்றி நினைப்பதைவிட, மாமியாரான செல்லப்பாக்கிய ஆச்சியைப் பற்றியே அநேக சந்தர்ப்பங்களிலே நினைவு கொள்வார் என ஆசிரியர் கதையினூடே கூறிச் செல்கிறார்.[17] அந்த அளவுக்குச் செந்தில்நாதனின் குடும்பத்தை இயக்கி வைக்கின்ற சூத்திரதாரியாக அவளது பாத்திரம் அமைந்துள்ளது. செந்தில்நாதனின் மனைவி அன்னலட்சுமி, கதைத் தலைவர் பாத்திரத்தின் பாலியற் சிந்தனைகளது இலக்காகப் படைக்கப்பட்டுள்ளாள். 'அவருடைய வாழ்க்கைப் பயணம் செல்லப்பாக்கிய ஆச்சி, அன்னலட்சுமி ஆகிய இரண்டு தண்டவாளங்களை ஆதாரமாகக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது"[18] என்ற ஆசிரியரின் குறிப்பினின்றும், கதைத்தலைவர் பாத்திரவார்ப்பிலே மற்றைய இரு பாத்திரங்களினதும் இன்றியமையாத பங்களிப்பினை உணரமுடிகின்றது.

செந்தில்நாதன் என்ற பாத்திரத்தின் தனியான அம்சங்களும் நாவலிற் புலப்படுத்தப்பட்டுள்ளன. அவர் தம் குடும்பமும், தம் தொழிலும், தம் பிரச்சினைகளும் என்று ஒதுங்கி வாழ்பவர். எதனையும் பயன்கருதியே ஆற்றுபவர். செலவைப் பொறுத்தவரையிலும், அவர் பயன் கருதும் சிக்கனவாதியாவர். இவையே அவரது வாழ்க்கை நெறியை நிர்ணயிக்கும் காரணங்களாக விளங்குகின்றன.

அவரிடத்துச் சில பொதுவான இயல்புகள் உண்டு. சொந்தச் செலவிலே மது அருந்துவதை அவர் விரும்புவதில்லை. நிறைவாக உணவு உட்கொண்டால், இடையிடையே "சிகரெட்" புகைப்பார். பத்திரிகை பார்ப்பதாயின், பணத்தைச் செலவழித்து வாங்கமாட்டார், இலவசமாகவே பார்க்க விரும்புவார். அவரது பயணப் பைக்குள் எப்போதும் இரண்டு ஆங்கில நூல்கள் இருக்கும் அவற்றை ஒருபோதுமே அவர் முழுமையாக வாசித்தது இல்லை.

உலகியல் விடயங்களிற் போதிய பரிச்சயமும், அனுபவமும் அவருக்கு இருக்கவில்லை. ஆயினும், தம்மை இயன்றவரையிலே இனங்காட்டிக் கொள்ளாமலே, சமூக நெறிகளுக்கு ஒத்துப்போவதாகக் காட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தார். தனிமனிதர் பற்றிய சமூகத்தின் மதிப்பீடுகளினின்றும் தாம் தவறிவிடாமல் வாழவே அவர் விரும்பியிருந்தார். ஆயினும், சில சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய தமது அறியாமையை வெளிப்படுத்த வேண்டியவரானார். உதாரணமாக, இலக்கிய விடயங்களிலே ஈடுபாடு கொண்ட கனகலிங்கத்தோடு சர்ச்சையிலே ஈடுபட்டு, தமது இலக்கிய அறிவுச்சூனியத்தை அவர் வெளிப்படுத்தியமையைக் குறிப்பிடலாம். இன்னொரு சந்தர்ப்பத்திலே, வார விடுமுறைக்கான தொடர்வண்டி அனுமதிச் சீட்டு விடயமாக மனத்துக்குள்ளே அறியாமை ரீதியாகவே சிந்தித்து

முடிவுக்கு வந்தார். வார விடுமுறை அனுமதிச் சீட்டு மூலமாகச் சென்று, திங்கட்கிழமை திரும்பாவிடின் பதினைந்து ரூபா நட்டமாகும். இவ்வனுமதிச் சீட்டை வீணாக்குவதாயின், ஐந்து ரூபா நட்டமாகும். புதிய அனுமதிச் சீட்டு பத்து ரூபாவாகும். எனவே, ஒற்றை அனுமதிச் சீட்டே எடுக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். ஆனால், ஐந்து ரூபாவைச் சிக்கனம் செய்யக் கருதிய பிரயாணம் தடைப்பட நேரிடின், ஐந்து ரூபாவே மொத்த நட்டமாகும் என்று ஆழமாக அவர் கணக்குப் பார்க்கவில்லை.[19] தமது மூளைக்கு அதிக வேலை கொடுக்காமலேயே பிரச்சினைகளைச் சமாளிக்க முயல்பவராகச் செந்தில்நாதன் காட்டப்பட்டுள்ளார்.

செந்தில்நாதன் சமுதாய ரீதியாக எவ்வகையிலும் முன்னோடியாக அமையத்தக்க பாத்திரமன்று. ஆயினும், எவ்வித செயற்கைப்பாங்குமின்றி, இயல்பான செயற்பாங்குடனும், இயல்பூக்கங்களுடனும் அப்பாத்திரம் வார்க்கப்பட்டுள்ளது. அப்பாத்திரம் சுயமாக இயங்குவதற்கான நாவலாசிரியரால் அதற்கு அளிக்கப்பட்டுள்ளது. சுவையாகவும், அது படைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில், ஈழத்து நாவல்களிலே இடம்பெற்றுள்ள சிறந்த சில கதைத்தலைவர் பாத்திரங்களிற் செந்தில்நாதன் பாத்திரமும் விதந்து குறிப்பிடத்தக்கதாக விளங்குகின்றது.

**சான்றாதாரம்**


1. கிஸ்பார்ட், எஸ். ஜே. பாஸ்கல் (1964) **சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள்** (தமிழாக்கம் ஜெ. நாராயணன்), சென்னை தமிழ் வெளியீட்டுக் கழகம் ப. 303.
2. பொன்னுத்துரை எஸ். (1961) **தீ**, சென்னை, சரஸ்வதி காரியாலயம் பக். 5, 6 (கரு)
3. பொன்னுத்துரை எஸ். (1971) **சடங்கு**, கொழும்பு, அரசு வெளியீடு ப. 17
4. பொன்னுத்துரை எஸ். **தீ**, ப. 6 (கரு)
5. மேலது ப. 6.
7. மேலது ப. 6.
8. மேலது ப. 85.
9. மேலது பக். 85, 86.
10. மேலது ப. 37.
11. மேலது ப. 140.
12. மேலது ப. 36.
13. கிஸ்பார்ட், எஸ். ஜே. பாஸகல். மு.கு.நூ. ப. 310. (அடிக்குறிப்பு)
14. பொன்னுத்துரை. எஸ். **சடங்கு** ப. 42.
15. மேலது. ப. 11 (மேற்கண்டவாறு நாவலாசிரியர் தம்மிடம் கூறியதாகப் பதிப்பாசிரியர் எம். ஏ. ரஹ்மான் நுழைவாயிலிலே குறிப்பிட்டுள்ளார்).
16. மேலது பக். 45, 46.
17. மேலது ப. 44.
18. மேலது ப. 39.
19. மேலது ப. 36.

# தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை

கலாநிதி செ. யோகராசா, கிழக்குப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வி. செல்வநாயகம் "தமிழ் இலக்கிய வரலாறு" எழுதிய காலப்பகுதியிலே "தமிழ் இலக்கிய வரலாறு" என்பது தமிழ் நாட்டு இலக்கிய வரலாறாகவே அமைந்திருந்தது. இப்போது நிலைமை வேறு. பல்வேறு நிலைகளிலும் ஈழத்து இலக்கிய வரலாறு இன்றித் தமிழ் இலக்கிய வரலாறு பூர்த்தியடைய முடியாதென்பது உணரப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் தமிழிலக்கியப் பரப்பில் ஈழத்து நவீன கவிதை பெற்றுள்ள இடம்பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது அவசியமானதென்று கருதுகின்றேன்.

தமிழிலே நவீன கவிதை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பாரதியாருடன் தோற்றம் பெற்றதென்பது இலக்கிய ஆர்வலர் பலருமறிந்த விடயமே. தமிழ்க்கவிதையை பிரக்ஞை பூர்வமாக, சமூகத்துடனும் அவ்வழி அரசியலுடனும் இணைத்தமை பாரதியாரின் முக்கிய சாதனையாகிறது. "இரண்டொரு வருஷத்து நூற் பழக்கமுள்ள பொது ஜனங்களை" அவன் மனங் கொண்டமையினால் கவிதையின் (மேற்கூறியவாறான) உள்ளடக்கம் மட்டுமன்றி வடிவம் வெளிப்பாட்டு முறை என்பனவும் அவன் கவனத்திற்குள்ளாகின. பாரதிக்குப் பின்னர் அவன்தாசனான பாரதிதாசனிடம் தீவிரமான தமிழ்த்தேசியம், சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவுச் சிந்தனை முதலியன வெளிப்பட்டன. இதே காலப் பகுதியில் முப்பதுகளில் தமிழ்நாட்டில் புதுக்கவிதை முயற்சிகளில் மணிக்கொடிக் குழுவினரான ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா. முதலானோர் ஈடுபட்டனர்.

ஆயினும் பின்னர் நவீன கவிதை பாரதிதாசன் பரம்பரையினரிடம் ஓசை ஒலிக்கோலமாயும் அலங்காரப் பந்தலாயும் புதுக்கவிதையாளரிடம் தனிமனித உணர்வுகளுக்கு முதன்மை-யளிப்பதாயும் தளர்ச்சி அடையத் தொடங்கியது. இன்னொரு விதமாகக் கூறின், தமிழ்க் கவிதை சமகால வாழ்விலிருந்து அந்நியப்பட்டு நின்றது.

நவீன தமிழ்க் கவிதையின் மேற்கூறிய ஆரோக்கியமற்ற நிலை முனைப்பற்ற சூழலில் ஐம்பதுகளளவில் ஈழத்திலிருந்து புதுக்குரல்கள் கேட்டன. நவீன தமிழ்க் கவிதையின் தளர்ச்சியுற்ற நிலையினை ஈழத்துக் கவிஞரான மஹாகவி முதலில் உணர்ந்து கொண்டார்.

> "நவீன வடிவங்களான சிறுகதை, நாவல் ஆகியன நவீன உரிப்பொருளைக் கையாண்ட வேளை கவிதை மட்டும் பழைய பொருள் மரபைப் பற்றியே சுழன்றமை-யால் அருகி வரும் கலை எனக் கருதுமாறாயிற்று. நிகழ்காலச் செய்திகளையும்

பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்துவரல் அவசியமாகும்"

என்று குறிப்பிட்ட மஹாகவி அவ்வாறே செயற்பட்டார். கவிதையின் உடன்பிறப்பான பண்பென்று கருதப்பட்ட பாரதி, பாரதிதாசன் ஆகியோரிடமும் காணப்பட்ட றோமானிறிஸத் தன்மை கூட மாஹாகவியூடாக யதார்த்தத்தன்மையாக மாற்றங்கண்டது. அவர் நவீன கவிதையை இன்றைய யுகத்திற்கு இழுத்து வந்தபோது அது தவிர்க்க இயலாததாயிற்று. கூடவே, நவீன கவிதையில் இதுவரை இடம்பெறாத பண்புகளாக, செவிப்புலன் கட்புலனானமை, யாப்பு வழி ஓசை பேச்சோசையானமை, கவிதை வடிவம் சிறுகதை வடிவப் பண்புகள் பெற்றமை என்பனவும் ஈழத்துக் கவிதையூடாக தமிழ்க் கவிதையுலகில் இடம்பெற்றன. இத்தியாதி பண்புகளை வளர்த்தெடுத்ததில் மஹாகவியுடன், நீலாவணன், முருகையன் ஆகியோருக்கும் முக்கிய பங்குள்ளது. இதே காலப்பகுதியில் ஐம்பதுகள் அறுபதுகளில் தமிழ்நாட்டு நவீன கவிதை இத்தியாதி பண்புகளைப் பெறவில்லை என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

நவீன தமிழ்க் கவிதை அறுபதுகளின் பிற்பகுதியிலும் மாற்றங்கள் சிலவற்றைக் கண்டது. இத்தகு மாற்றங்களும் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வெவ்வேறு விதங்களில் இடம்பெற்றன.

தமிழில் புதுக்கவிதை பிரக்ஞை பூர்வமாகவும், ஆழமாகவும் வேரூன்றியது அறுபது-களிலாகும். தமிழ் நாட்டில் எழுத்துக் குழுவினருடாக அது சாத்தியமாயிற்று. ஆயினும், எழுத்துக் குழுவினரின் புதுக்கவிதையும் தனிமனித உணர்ச்சிகளுக்கே முதன்மையளித்தது. அத்துடன் அந்நியப்பட்டுள்ள படிமங்கள், குறியீடுகளையும் பெற்றிருந்தது. மாறாக அதே காலகட்டத்துப் புதுக்கவிதையோ சமூக நோக்கிற்கு முதன்மையளித்தது. தமிழ்ச் சூழலுக்கேற்ற படிமங்கள், குறியீடுகளைக் கொண்டிருந்தது. தா. இராமலிங்கத்தின் கவிதைகள். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகின்றன. அதேவேளையில் எழுத்துக் குழுவினருள் சிறப்பிடம் பெறுகின்ற ஈழத்தவரான தருமுசிவராமின் கவிதைகளும், தனிமனித உணர்வுகளுக்கு முக்கியமளி-த்திருப்பினும் வெளிப்பாட்டு ரீதியில் விதந்துரைக்கப்பட வேண்டியவை; தமிழ்க் கவிதை வரலாற்றில் புறக்கணிக்கப்பட முடியாதவை. இவ்விருவருடன் மு. பொன்னம்பலமும் இணைத்து நோக்கப்பட வேண்டியவராவர்.

மேலும், அறுபதுகளில் ஈழத்துப் புதுக்கவிதையில் தமிழ்நாட்டில் ஏற்படாத வேறுசில மாற்றங்களும், முகிழ்க்கத் தொடங்கின. கவிஞர் நுஃமான் ஊடாக அது சாத்தியமாயிற்று. முற்போக்குக் கவிஞரான நுஃமானூடாக பிரச்சாரப்பாங்கற்ற கலையழகுடனான அரசியல் கவிதைகள் தமிழ்க் கவிதையுலகினை வந்தடைந்தன. அவை, நாட்டார் பாடல் தன்மை, திரைப்-படக்காட்சி, முறைமை நாடகப்பாங்கு என்பவற்றைப் பெற்றிருந்தன. தவிர, நுஃமான் கவிதை-யுலகில் எழுபதுகளில் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க மற்றொரு மாற்றம், கவிதை வடிவத்துடன் தொடர்புடையது. ஆரம்பத்தில் மஹாகவி முதலானோரின் "மரபு" சார்ந்த வடிவத்தடத்தில் சென்ற அவர், பின்னர் புதியதொரு வடிவத்தில் எழுத முற்பட்டார். (எடு: ஹோசிமின் நினைவாக) அதுவே பின்னர் சண்முகம் சிவலிங்கம், வ. ஐ. ச. ஜெயபாலன், சிவசேகரம், சேரன் முதலானோரினால் அவரவர் ஆளுமைக்கேற்ப வலிமையும் வனப்பும் பெற்றுக் கொள்கின்றது.

எண்பதுகளில் ஈழத்துக் கவிதை வளர்ச்சி எய்திய மூன்று மாற்றங்கள் தமிழ்க்க-விதையுலகிற்கு முற்றிலும் புதியவையாகின்றன. இவற்றுளொன்று, இனஒடுக்குமுறைக்கெதிரான அரசியல் சார்ந்த எதிர்ப்புக் கவிதைகளினதும் விடுதலைப் போராட்டக்கவிதைகளினதும் தோற்றம். இத்தகைய கவிதைகள் இரு சிறப்புக்களைக் கொண்டுள்ளன. (அ) அவை, வெவ்வேறு ஊடகங்களூடாக (எ-டு: மேடைகளிலும், ஒலிப்பதிவு நாடாக்களிலும் மெல்லிசைப் பாடல்-களாகவும், கவிதா நிகழ்ச்சிகளாகவும் இடம்பெற்றமை) பொது மக்களைச் சென்றடைந்தமை.

(இரண்டொரு வருஷத்து நூற்பழக்கமுள்ள பொது ஜனங்களைச் சென்றடைய வேண்டுமென்று பாரதி சென்ற யுகத்தின் ஆரம்பத்திலே கண்ட "கனவு" யுகமுடிவில் ஈழத்துக் கவிதையூடாக ஓரளவு மெய்ப்படலாயிற்று. )

(ஆ) (குறிப்பிட்ட உள்ளடக்கம் காரணமாக) மூன்றாம் உலக நாடுகளின் கவிதை வரிசையில் இடம் பிடித்தமை.

மற்றொன்று, பெண்நிலைவாத நோக்கிலான கவிதைகளின் பிறப்பு, அதாவது, பெண்நிலை நின்று தமிழ்ப் பெண் கவிஞர்கள் தம் உணர்வுகளை தமிழிலே முதன்முதலாக வெளிப்படுத்தியமை. தமிழ்க் கவிதையுலகில் முதன்முதலாக இடம்பெறுவது ஈழத்துக் கவிதையூடாகவே தவிர இத்தகைய கவிதைகளூடாக ஈழத்துக் கவிதை உலகப் பெண் கவிஞர்களின் கவிதைப் போக்குடன் சங்கமிக்கின்றதென்பதும் கவனிக்கத் தக்கது.

பிறிதொன்று, புகலிடத் தமிழ்க் கவிதைகளின் வரவு. இங்கிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா, முதலான நாடுகளில் வாழ்கின்ற தமிழ்க் கவிஞர்களின் படைப்புகள் தரும் அனுபவம் தமிழ் வாசகர்களுக்கு முற்றிலும் புதியதே. அத்துடன் அவர்களின் புகலிட அனுபவ வெளிப்பாடுகள் பிறநாடுகள் சார்ந்த புகலிட மக்களின் குரலாய் அமைந்துள்ளன. அவ்விடத்தில் ஈழத்துக் கவிஞரின் புகலிடக் கவிதைகள் மூன்றாம் உலக நாடுகளின் கவிதை வரிசையில் இடம் பிடித்துள்ளன. எடுத்துக் காட்டாக, புகலிடக் கவிஞரான நிருபாவின் கவிதையொன்றின் ஒரு பகுதி பின்வருமாறு:

**"அம்மா**
**நாங்கள் ஏன் அகதிகளானோம்**
**என் தாய் நாடு எங்கே?**
**என் தாய் மொழி எது?**
**நாங்கள் ஏன்**
**கறுப்பர்களாயிருக்கிறோம்?**
**அவர்களால் ஏன்**
**ஒதுக்கப்படுகிறோம்?**
**துருக்கித் தோழி ஏன் எரிக்கப்பட்டாள்?"**

தவிர, இன்னொரு ஈழத்துக் கவிஞரான சோலைக்கிளி நவீன கவிதை வளர்ச்சிப் போக்கிலே ஏற்படுத்திய மாற்றமும் விதந்துரைக்கற்பாலது, தமிழ்க் கவிதையுலகு இதுவரை கண்டு கொள்ளாதது. சமகாலப் பிரச்சினைகளை சமூக மாற்றங்களை அஃறிணைப் பொருட்களூடாகப் பார்ப்பதும், முற்றிலும் புதிய முறையில் அதனை வெளிப்படுத்துவதுமே அதுவாகும். எடுத்துக் காட்டாக "படைபோன பிறகு கண்ட என் அலரிமரமாமி" என்ற கவிதையின் ஒருபகுதி பின்வருமாறு :

**"மாமி**
**என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?**
**நான்தான்**
**வெயில் மங்கி நிலா விதைக்க இருள்**
**வானம் உமிழும் நேரம்**
**ஊர் இருந்து பறந்து வந்து**
**இந்தப் பெருங் கொப்புள் குந்தியிருக்க**
**தினம் வரும் குருவி.**

நீங்கள் என்னைக் கக்கத்தில் இடுக்கி
இருப்பது போல இருக்கும்.
உங்கள் கொப்புக்குள் இருந்தால் நான்
பார்ப்போருக்கு
மாமி, ஆமி வந்து உங்களைத் தமது
படைவளவுள் சிறைப்படுத்த
அறுந்தது நமது தொடர்பு
ஆரம்பத்தில்
காற்றில் இரண்டொரு கடிதம்
முக்கேட்டு
வேரில்
சப்பாத்துக் காலால் உதைக்கிறான் என்று
சொல்லி
அழுததெல்லாம்
பின் காற்றும் இறந்தது.
நம் காற்றும் எழுதி வாசிக்கும் எழுத்துக்களும்
மறந்தன
மாமி என்னைத் தெரிகிறதா உங்களுக்கு ?"

சோலைக்கிளியின் மேற்கூறிய கவிதைப் பண்பு குறுகிய காலத்துள் வெவ்வேறு பரிணாமங்களைப் பெற்று வந்துள்ளது நினைவுகூரத்தக்கது. அவற்றை முழுமையாகத் தர ஏற்ற இடம் இதுவன்று.

ஆக, மஹாகவி தொடக்கம் சோலைக்கிளி வரையிலான ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி, தமிழ் இலக்கியப்பரப்பில் பெற்றுள்ள இடம் கவனிப்பிற்குரியது; விரிவான ஆய்வுக்குரியது என்பது இதுவரை கோடிகாட்டியதிலிருந்து புலப்படும் என்று கருதுகின்றேன். தமிழ்நாட்டு விமர்சன-ரொருவரது கூற்றுடன் இக்கட்டுரையை முடிப்பது பொருத்தமானது:

"இதுவரை தமிழ்நாட்டின் சமூகச் சார்புள்ள புதுக்கவிதைகள் தரமுள்ளவையாக உருப் பெறவில்லை. இனிவரும் தமிழ்க் கவிதை ஈழத்துக் கவிதைகளின் மேற்கண்ட இயல்புகளைச் செரித்துக் கொண்டால் மிக நல்லது".

*பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் சில பழைய மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. உலகத்தில் தோன்றிய பல மொழிகள் இறந்து விட்டன. சில வழக்கிழந்து போய் விட்டன. ஆங்கிலம், பிரெஞ்சு, மொழிகள் தோன்றுவதற்கு முன்னே தோன்றி வளரும், வாழும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. பழைய மொழிகளில் இன்றும் வாழும் மொழிகளாக கிரேக்கம், ஹிப்று, சீனம், அரபு, பேர்சியம் முதலானவை உள்ளன. சுமேரியம், எகிப்தியம், ஹிற்றிற் போன்றவை இறந்து போன மொழிகள். இலத்தீன் ரோமன் கத்தோலிக்கத்திலும், சமஸ்கிருதம் வேதத்திலும் பயன்படுத்தப்பட்டாலும் வழக்கிழந்த மொழிகளாகவே கருதப்படுகின்றன. இருபத்தி மூன்று திராவிட மொழிகளில் தமிழ் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கும் முக்கியமானவை. இவற்றிலே தமிழ் உலகில் அதிகம் அறியப்பட்ட மொழியாக திகழ்கிறது.*

# பொருளாதார அபிவிருத்தியிலிருந்து மானிட அபிவிருத்தியை நோக்கி

எம். ஐ. பஸீஹா, விரிவுரையாளர், புவியியற்றுறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

அபிவிருத்தி என்ற பதத்தின் கருப்பொருளானது காலத்திற்குக் காலம் வேறுபட்டு வந்துள்ளதனை அதன் வரலாற்றை நோக்கும் பொழுது அறிந்து கொள்ளலாம். இரண்டாம் உலக மகா யுத்தத்தினை அடுத்து வந்த காலப் பகுதிகளில் உலக நாடுகள் யாவும் போரிலிருந்து மீட்சி பெற்றுத் தத்தம் நாடுகளை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லத் துடித்துக் கொண்டிருந்தன. இக்காலப்பகுதியில் "அபிவிருத்தி" என்ற பதம் சமூக மற்றும், பிரதேச வேறுபாடுகளின்றி உலகெங்கிலும் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. எனினும் பெரும்பாலான நாடுகள் இதன் உண்மையான அர்த்தத்தினைப் புரிந்து கொண்டிருக்கவில்லை. குறிப்பாக வளர்முக நாடுகளுள் பெரும்பாலானவை அக்கால விருத்தியடைந்த நாடுகள் பின்பற்றிய அபிவிருத்தி உபாயங்களை தமது நாடுகளின் அபிவிருத்தி கருதி கண் மூடித்தனமாகப் பின்பற்றின. இதனால் இவை அபிவிருத்தியின் உண்மையான இலக்கினை எய்தத் தவறின.

பொதுவாக நோக்கில், இரண்டாம் உலக யுத்தத்தினை அடுத்து வந்த தசாப்தத்தில் அபிவிருத்திக்கான வரைவிலக்கணங்கள் பெரும்பாலும் கைத்தொழில் நாடுகளையும் அவற்றின் பொருளாதார வளர்ச்சியையுமே தழுவியதாக அமைந்திருந்தன. இதேநேரம், 1950 களில் இருந்து பெரும்பாலான ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் அடையத் தொடங்கின. இவ்வாறு சுதந்திரம் பெற்ற நாடுகளின் சமூக நிலைமைகள் மோசமாகக் காணப்படவும் அந்நாடுகள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்தன. இந்நிலைமைகளுக்கு அப்பிரதேசங்களில் காணப்பட்ட குறைவிருத்தி நிலைமைகளே காரணம் என சர்வதேச மட்டத்தில் காரணங்கள் கூறப்பட்டன. அத்துடன் இக்குறைவிருத்தி நிலைமைகளில் இருந்து மீட்சி பெற்று, அபிவிருத்தி என்ற இலக்கினை அடைய இந்நாடுகள் உற்பத்தி, நுகர்வு என்பனவற்றில் ஒரு சிறந்த நிலையினை எய்த வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. சுருங்கக்கூறின் இக்காலகட்டத்தில், பொருளாதார வளர்ச்சி என்பதே அபிவிருத்தியின் கருப்பொருளாகக் கருதப்பட்டது. அபிவிருத்தியை அளவிட பொருளாதாரக் குறிகாட்டிகள் உலகெங்கிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. எனினும், இக்குறிகாட்டிகள் காலப்போக்கில் பல சிக்கல்களை ஏற்படுத்தின. உதாரணமாக, ஒரு நாட்டின் தேசிய வருமானம் அந்நாட்டின் சகல பிரிவினரிடையேயும் எவ்வாறு பங்கிடப்பட்டுள்ளது என்பதனைத் தலா வருமானம் என்ற அபிவிருத்தி அளவீட்டுக்குறிகாட்டி காட்டவில்லை. மேலும் உலக ரீதியான சில புள்ளி விபரங்களின் அடிப்படைகள், சமூக ரீதியாகவும், பொருளாதாரத் துறை ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் வேறுபட்டுக் காணப்பட்டன. மேலும் இது நாடுகளுக்கிடையில் அபிவிருத்தி நிலைமைகளை ஒப்பிடுவதில் சிக்கல்களை ஏற்படுத்தின.

இந்நிலைமைகள் 1960 களில் பொருளியலாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால் அபிவிருத்தி என்பதுடன் மறுபங்கீடு என்ற விடயமும் இணைத்து நோக்கப்படல் வேண்டும் என்பதைப் பொருளியலாளர்கள் உணர்ந்தனர். இதன் விளைவாக காலப் போக்கில் அபிவிருத்தி என்பதன் வரைவிலக்கணமும் சிறு மாற்றத்திற்குள்ளானது. அதாவது பொருளாதார அபிவிருத்தி என்பது, நிச்சயமாக சமூகத்தின் சகல தரப்பினரிடையேயும் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வபிவிருத்தியானது, சமூகத்தின் சகல பிரஜைகளதும் சமூக நலனையும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துவதாகவும் அமைந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது 1980களில் அபிவிருத்தியின் கருப்பொருள் கண்ட முக்கியமான மாற்றமாகும்.

1980களின் இறுதியிலிருந்து அபிவிருத்தியின் கருப்பொருள் மனித நலன், மேம்பாடு என்பவற்றைச் சார்ந்ததாகக் காணப்பட்டது. குறிப்பாக அமார்த்தியா சென், போல் ஸ்ரீற்றன், மஹ்பூபுல் ஹக் போன்றவர்கள் அபிவிருத்தியின் மானிடப் பரிமாணங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம் அதன் கருப்பொருளில் 1990களில் அதி கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இவர்கள் அபிவிருத்தியின் இலக்கானது எப்பொழுதுமே மனித நலனாக இருத்தல் வேண்டும் என்பதில் கூடிய அக்கறை காட்டினார்கள். இந்த வகையில் அவர்கள் அதிகரித்த வருமானத்தினையும், பொருளாதார வளர்ச்சியினையும் அபிவிருத்தியின் இறுதி இலக்காகவன்றி, அபிவிருத்திக்கான முன்நிலைமைகள் அல்லது அடித்தளமாகவே கருதினர்.

உலக நாடுகளுள் பெரும்பாலானவை ஜனநாயகப்பாதையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருந்தபோது, குறிப்பாக மக்களை மையமாகக் கொண்ட அபிவிருத்தி மாதிரிகளை உலக நாடுகள் வேண்டி நின்ற சந்தர்ப்பத்தில், இத்தகைய பொருளியலாளர்களின் கருத்துக்கள் அபிவிருத்தியில் ஆர்வம் கொண்ட மக்களையும், அரசுகளையும் உலக நிறுவனங்களையும் பாதித்தன. இந்த வகையில் பிரபல பொருளியலாளரும், UNDPயின் விஷேட ஆலோசகரும், முன்னால் பாகிஸ்தானிய நிதி திட்டமிடல் அமைச்சருமான (1982-1988) காலம் சென்ற மஹ்பூபுல் ஹக் (1934-1998) என்பவரின் முயற்சியானது அபிவிருத்தியின் மானிடப் பரிமாணத்தைப் பொறுத்தவரை ஒரு மைல் கல்லாக அமைந்தது எனலாம்.

இவரினாலேயே 1990ல் முதன்முதலில் மானிட அபிவிருத்தி அறிக்கை தயாரிக்கப்பட்டது. அத்துடன் 1990-1995 வரையான மானிட அபிவிருத்தி அறிக்கைகளைத் தயாரிப்பதில் இவரே பொறுப்பாக இருந்து செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வறிக்கைகள் மானிட அபிவிருத்தியின் தாற்பரியத்தை விபரிப்பனவாகக் காணப்பட்டன. அதே வேளை, மானிட அபிவிருத்தி எனும் போது அது மனிதனின் தெரிவுகளை விரிவாக்குதல் என்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதனை இவ்வறிக்கைகள் தெளிவாகக் காட்டின. இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் யாதெனில், அபிவிருத்தியின் பொருளாதார அடிப்படையிலான வரைவிலக்கணங்கள், மனிதனின் தெரிவுகளில் ஒன்றான வருமானத்தினை மாத்திரமே முக்கியப்படுத்திக் காட்டியது. எனினும், மானிட அபிவிருத்தி என்ற விடயத்தலைப்பின் கீழ் உருவான வரைவிலக்கணங்கள், மனிதர்களின் தெரிவு எனும் போது அது வருமானத்தினை மாத்திரமன்றி, பல தரப்பட்ட மனிதத் தேவைகளையும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும் என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டின.

இத்தேவைகள் இன, மத, சமூக கலாச்சார, அரசியல், பொருளாதார, புவியியல் அடிப்படைகளில் தனிப்பட்ட நபர்களிடையேயும், நாட்டுக்கு நாடும், பிரதேசத்திற்குப் பிரதேசமும் வேறுபடலாம். அதாவது தேவைகள், தெரிவுகள் என்பவற்றைத் தொடர்புடைய மக்களே தீர்மானித்தல் வேண்டும். இந்த வகையில் அபிவிருத்தி தொடர்பான புதிய எண்ணக் கருவானது,

மக்கள் பங்களிப்புடன் கூடிய அபிவிருத்தி என்ற அடிப்படையில் மக்களின் சுதந்திரத் தெரிவுகளுக்கு வழி வகுத்தது.

மேலும், மானிட அபிவிருத்தி அதன் பரிமாணங்களில் சமத்துவம், நிலைத்திருக்கக்கூடிய தன்மை, உற்பத்தித்திறன், மற்றும் மக்களைச் சக்தி மிக்கவர்களாக மாற்றுதல் போன்ற விடயங்களுக்கு அதி உயர் முக்கியத்துவம் கொடுக்கின்றது. சமத்துவம் என்பதால், சமூகத்தில் காணப்படும் வாய்ப்புக்களை சகல தரப்பினராலும் அணுகக்கூடிய வாய்ப்பினை வழங்குதல் என்பது குறிக்கப்படுகின்றது. குறிப்பாக, பெண்கள், சிறுவர்கள் மற்றும் முதியோர்களுக்கு சமூகத்தில் சம வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்ற விடயம் இங்கு அழுத்திக் கூறப்படுகின்றது. அது போன்று நிலைத்திருக்கக்கூடிய தன்மை என்பதிலிருந்து, தற்பொழுதைய சந்ததியினர் அனுபவிக்கும் வாய்ப்புக்களையும் வசதிகளையும் எதிர்கால சந்ததியினரும் அனுபவிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. உற்பத்தித்திறன் என்ற விடயம், மானிட முதலீடுகளை அதிகரிப்பதனையும், அதனை உருவாக்கக்கூடிய பெரும்பாகப் பொருளாதார சூழலினை ஏற்படுத்துவதையும் குறிக்கின்றது. அடுத்து. மக்களைச் சக்தி மிக்கவர்களாக மாற்றுதல் என்பது மானிட அபிவிருத்தியைப் பொறுத்தவரை மிக முக்கியமானதொருவிடயமாகக் காணப்படுகின்றது. இதன் மூலம் மக்களின் தெரிவுகளை உறுதிப்படுத்தும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் என்ற விடயம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் மக்களைச் சக்தி மிக்கவர்களாக மாற்றும் பொழுது, அவர்கள் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களாக மாறுகிறார்கள். இதன் மூலம் தமது அபிவிருத்தி தேவைகளை மக்கள் தாமே தீர்மானிக்கிறார்கள். இது மக்களின் தெரிவுச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறு, அபிவிருத்தியின் வரைவிலக்கணங்கள், பொருளாதார அடிப்படையிலான வரைவிலக்கணங்களிலிருந்து மானிட அடிப்படையிலான வரைவிலக்கணங்களுக்கு மாறிய பொழுது, நாடுகள் பலவும் தமது அபிவிருத்தித் திட்டங்களிலும், கொள்கைகளிலும் மானிடப்பரிமாணங்களை உள்ளடக்கத் தொடங்கின. அபிவிருத்தியில் ஆர்வமுள்ள சர்வதேச நிறுவனங்களும் இன்று மானிட அபிவிருத்தியினைத் தத்தம் உத்திகள் மூலமும் கொள்கைகள் மூலமும் ஊக்குவித்து வருகின்றன. எவ்வாறாயினும் அபிவிருத்தியின் வரைவிலக்கணங்களுள் மானிடத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வரைவிலக்கணம் அபிவிருத்திக் கல்வியின் வரலாற்றில் ஏற்பட்ட முக்கியமானதொரு திருப்பமாகக் கருதப்படல் வேண்டும்.

வன்னி நாய்ச்சிமார் மான்மியப் பாடலில், ஆண்வேடம் பூண்டு அன்னியர்களுக்கு எதிராக போர்புரிந்த வீரப் பெண்கள் எழுவர் பற்றி சொல்லப்படுகின்றது. இதில் அறுவர் வன்னி நாச்சிமாரும், ஒருவர் பணிப்பெண் பொன்னிச்சியும் என்பதுகுறிப்பிடத்தக்கது.

# தோழி நீ வாழி

செல்வி. இரா. சர்மிளாதேவி, உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை.

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுவது அகநானூறு ஆகும். அகத்திணை பற்றிக் கூறும் இந்நூலின் செய்யுள்கள் யாவும் பாத்திரங்களின் கூற்றாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். அகத்திணையில் கூற்று நிகழ்த்துவோராகப் பின்வருவோரைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அதன் படி, களவியலில் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவகையினரும் கற்பியலில் பாணன், கூத்தன், விறலி,, பரத்தை, அறிஞர், கண்டோர் ஆகிய அறுவரும் மொத்தம் பன்னிருவரும் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றார். இப்பன்னிருவருள்ளும் தோழி ஈடிணையற்ற சிறப்பினைப் பெற்று விளங்குகின்றாள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதனை, அகநானூற்றுச் செய்யுள்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குவோம்.

அகத்திணையில் தலைவன், தலைவிக்கு நிகரான இடத்தினைப் பெற்றுத்திகழும் தோழி பற்றித் தெளிவாகக் கூறுகின்றார், தொல்காப்பியர். அதாவது,

'தோழி தானே செவிலி மகளே'

என்கின்றார். இதன் பொருள் தலைவியின் தோழியாக இருப்பவள், செவிலியின் மகளேயாவாள் என்பதாகும். தோழி என்பவள் செவிலியின் மகளாக இருந்தால் மட்டும் போதாது. அவள் சூழ்தற்கும், உசாத்துணையாதற்கும் வல்லவளாதலும் வேண்டும் என்கின்றார். இதனை,

'சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே'

என்ற சூத்திரத்தின் மூலம் விளங்க வைக்கின்றார், தொல்காப்பியர்.

தோழி யார்? எப்படிப்பட்டவர் தோழியாகவிருக்கத் தகுதியுள்ளவள், என்பதைக் கூறிய தொல்காப்பியர், அவள் கூற்று நிகழ்த்தும் சந்தர்ப்பங்களையும் கூறத்தவறவில்லை. அவ்வகையில் தோழியானவள், பின்வரும் சந்தர்ப்பங்களில் கூற்று நிகழ்த்துவாள்.

'தலைவரும் விழும் நிலையெடுத் துரைப்பினும்
போகற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்

தாய்நிலை நோக்கித் தலைபெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சு கழழ்ந்தோனை
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு
என்றிவ்வை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன'

அதாவது, தலைவன் தலைவியை விட்டுப் பிரியுமிடத்துத் தலைவிக்குப் பின்வரும் வருத்தத்தை எடுத்துக் கூறுதலும், "தலைவியையும் நின்னுடன் அழைத்துக் கொண்டு போவாயாக" என்று தலைவனிடத்துக் கூறலும், தலைவியைத் தலைவனுடன் அனுப்பிக் கூறுதலும், தலைமகள் தங்கள் சுற்றத்தை விட்டு நீங்குவதால் தனக்கு நேரும் நோயிடத்துக் கூறுதலும், உண்மைக்கும் பொய்க்கும் இடமான தலைவனைக் குறித்தும் தலைவியின் தாயினுடைய நிலைமையினை அறிந்தும் தலைவியை அனுப்பாது மீண்டும் இருக்கச் செய்யுமிடத்தும், தலைவனின் பிரிவைப் பொறுக்கலாற்றாது வருந்திய தலைவியை "வருந்தாது இருப்பாயாக" வென்று தலைவன் கூறிய சொற்களைக் கூறி வற்புறுத்துமிடத்தும் தோழிக்குரிய கூற்று நிகழும் என்கின்றார், தொல்காப்பியர்.

இவ்விடத்தில் ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டியது, ஆகும். அதாவது, தோழி கூற்றுப்பாடல் என்று துறை வகுத்தோரால் குறிக்கப்பட்டிருப்பினும், தலைவி கூற்றிற்கும் பொருந்தும் பாடல்கள் பல அகநானூற்றில் உள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாடலின் கருத்து, தலைவியின் இயல்பு முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு தோழி கூற்று நிகழ்த்தும் பாடல்களை இனங்காண முடியும். அவ்வாறு, தோழி கூற்றுப்பாடல்களை இனங்கண்டு படிக்கும் போது, அதன் சுவை மட்டுமன்றி, இடம், பொருள் அறிந்து மிகவும் புத்தி சாதுரியத்துடன் பேசும் தோழியின் மதிநுட்பமும் எம்மைக் கவரும் என்பதில் சந்தேகமில்லை. அவ்வகையில், அகநானூற்றுச் செய்யுள்கள் வாயிலாகத் தோழியின் சிறப்புக்களை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிஞ்சித் திணையிலே ஒரு தலைவன் தனது தலைவியைச் சந்திக்க வருகின்றான். அவனை இடைமறித்த தோழி, தலைவி, இந் செறிக்கப்பட்ட (இல்லத்திலே காவல் வைத்தல்) செய்தியைக் கூறி, தலைவியை விரைவாகத் திருமணம் செய்யும்படி வேண்டுகின்றாள்.

"வெறுத்த ஏவர், வெய்புரை பணைத்தோள்,
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு
இவளும், இனையள் ஆயின், தந்தை
அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்
கங்குல் வருதலும் உரியை; பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன;
நெடுவெண் திங்களும் ஊர் கொண்டன்றே!"

அதாவது இங்கு, தோழியின் முக்கிய நோக்கம் தலைவன், தலைவியரின் திருமணத்தை வலியுறுத்தலாகும். அதனை நேரடியாகச் சொல்லாமல், தலைவி தலைவன் மீது கொண்ட அளவற்ற காதலை எடுத்துக் கூறி, பின்பு அவளது தந்தை அவளைக் (தலைவியை) காவல் வைத்ததையும் கூறி, பகலில் சந்திக்க முடியாவிட்டால் இரவில் தலைவியைத் தலைவன் சந்திக்க வரக்கூடும் என்பதை உணர்ந்த அவள், இரவுக்குறியின் அபாயத்தையும் எடுத்துக்கூறி, "நெடு வெண் திங்களும் ஊர் கொண்டன்றே" என்று இறுதியாகக் கூறுவதன் மூலம், இது திருமணத்துக்கு உரிய காலம் என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றாள். தோழி என்ற பதம் பல்வேறு அர்த்தங்களைக் குறித்து நிற்கும் இக்கால கட்டத்தில், தமது தோழியின் - அதாவது தலைவியின் - துன்பத்தை நீக்கவும், அவளுக்கு ஏற்படும் அலரைத் தடுக்கவும் பாடுபடும் அகநானூற்றுத் தோழி போற்றுதலுக்குரியவளாகின்றாள்.

புணர்தல் ஒழுக்கத்தைக் கொண்ட குறிஞ்சி நிலத்திலே தலைவன், தலைவியின் திருமணம் குறித்துப் பாடுபடும் தோழி, முல்லை நிலத்திலே யாது செய்கின்றாள்? ஒருவனுக்கு ஒருத்தி என்ற உன்னதப் பண்பைப் பெற்று விளங்கும் முல்லை நிலத்திலே இவளது பணி என்னவாக இருக்கும்? வாருங்கள் காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லையின் எல்லைப் புறத்தே சற்றே எட்டிப் பார்ப்போம். அதோ, தலைவனை நினைத்து உருகிக் கொண்டிருக்கின்றாள் ஒரு தலைவி. அங்கே வருகின்ற தோழி, பருவங் காட்டித் தலைவிக்கு ஆறுதல் கூறுகின்றாள்.

**"கருவி வானம் கதழுறை சிதறிக்**
**கார்செய் தன்றெ, கவின்பெறு கானகம்**
**குரங்குகளைப் பொலிந்த கொய்சுவற் புரவி,**
**நரம்பு ஆர்த்தன்ன வாங்குவள்பு அரிய,**
**பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாதுண் பறவை பேதுறல் அஞ்சி,**
**மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன் "**

இங்கு தலைவியை ஆறுதல் படுத்த விழையும் தோழி முதலில், "கார்காலம் வந்து விட்டது. ஆகவே, உன் கணவன் வரும் காலமும் வந்து விட்டது" என்பதை உணர்த்துகின்றாள். அத்துடன், "தலைவன் உன்னைத் தவிக்கவிட மாட்டான்" என்பதனை, என்ன அழகாகக் கூறுகின்றாள் பாருங்கள். "நின் தலைவன் தான் வரும் வழியில் தேனையுண்ணும் வண்டினங்கள் பேதுற்று மயங்குமோவென அஞ்சித் தன் தேர்மணிகளின் நாவை ஒலியாமற் கட்டுபவன். அப்படிப்பட்ட நின் தலைவன் உன்னை வாட விட மாட்டான்" என்கின்றாள்.

பரத்தையர் ஒழுக்கத்திற்குப் பட்டுக்கம்பளம் விரித்த நிலப்பகுதி, மருதம், ஒரு வேளை, பரத்தையரை நாடித் தலைவன் சென்றுவிட, வீட்டிலே வாடி இருக்கின்றாள். தலைவி, துயருற்றாரிலும் பார்க்க, அவருக்கு வேண்டியோரே அதிகம் துயருறுவர் என்பதற்கேற்பத் தலைவியின் நிலை கண்டு தோழியும் துன்புறுகின்றாள். இவ்வேளையில், வீடு திரும்பி வருகின்றான், தலைவன். அவனை வாயிலில் மறித்த தோழி,

**'பெரிய நாண்இலை மன்ற பொரிஎனப்**
**புன்குஅவிழ் அகன்துறைப் பொலிய, ஒன்றுதல்,**
**நறுமலர்க் காண்வரும் குறும்பல் கூந்தல்,**
**மாழை நோக்கின், காழ் இயன் வனமுலை,**
**எஃகுடை எழில் நலத்து ஒருத்தியொடு நெருநை**
**வைகுபுனல் அயர்ந்தனை என்ப"**

என இழித்தும், பழித்தும் கூறுகின்றாள். "பரத்தையர் வீடு சென்று வரும் உனக்கு வெட்கமில்லையா?" என்று கேட்பதோடு மட்டுமல்லாமல், "நீ பரத்தையுடன் கூடி மகிழ்ந்ததை ஊரினரும் பார்த்துக் கூறினர்" என்று கூறி, ஊரில் அவனுக்கு ஏற்பட்ட அவமானத்தையும் கூறுகின்றாள். முக நக நட்புக் கொள்ளாது, தவறு செய்யும் தலைவனுக்கு அவனது தவறுகளை எடுத்துக் கூறி, அவனை நல்வழிப்படுத்த முயலும் இவளல்லவோ தோழி! .

அடுத்து, நெய்தல் நிலத்தோழியின் பக்கம் எம் பார்வையைத் திருப்புவோம். ஒரு நாள் கானற் சோலையிலே தம்முடைய தலைவியோடு உரையாடிக் கொண்டிருக்கின்றாள், நெய்தல் நிலத்தோழி ஒருத்தி. அவ்வேளையில் அங்கு வந்த தலைவன் சற்றே மறைந்திருந்து இவர்களது உரையாடலை அவதானிக்கின்றான். இதனை அறிந்த தோழி, தலைவிக்குக் கூறுவது போலத் தலைவனுக்கு உரைக்கின்றாள்.

"இவ்வூர்,
கொடிது அறி பெண்டிர் சொற்கொண்டு, அன்னை
கடி கொண்டனளே - தோழி; - பெருந்துறை,
எல்லையும் இரவும் என்னாது கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவு மணல் கொட்கும் ஓர்தேர் உண்டு எனவே!"

இங்கு, "தலைவன் தலைவியின் காதலை அவர் கூறுதல் ஒன்றினையே அறிந்த கொடிய பெண்கள் அறிந்து கொண்டனர். அதனை, நம் அன்னையிடம் கூறியும் விட்டனர். அன்னையும் அதனை நம்பி, வீட்டில் காவலை அதிகப்படுத்தி விட்டாளே. இனி, நாம் என் செய்வோம்?" என்று கேட்கின்றாள். இதன் மூலம் தலைவன் தலைவியின் காதல் ஊருக்கு வெட்ட வெளிச்சமாகி விட்டதைத் தலைவனுக்கு எடுத்துக் கூறி, அவனைத் திருமணத்துக்குத் தூண்டுகின்றாள். இங்கு தலைவியை விடவும் தலைவியின் திருமணத்தில் தோழி அதிக அக்கறை காட்டுவதை உணரமுடிகிறது.

முல்லையும் குறிஞ்சியும் முறைமையுள் திரிந்து, நல்லயல்பிழந்து, நடுங்கு துயருறுத்துப் பாலை என்றொரு படிமம் கொள்ளும் வளம் இன்றி, வரட்சி பொருந்திக் காணப்படும் இந்நிலத்தில் வாழ்ந்தோர் வழிப்பறி செய்தும், கொள்ளையடித்தும், பிறரின் பொருட்களைச் சூறையாடியுமே தமது வயிற்றுப்பாட்டுக்கு வழி செய்தனர். வேலைக்குச் சென்ற கணவன் வீடு திரும்பி வரும்வரை காத்திருக்கும் தலைவியருக்கு மத்தியில், வேலைக்குச் சென்ற கணவன் உயிருடன் திரும்ப வேண்டுமே (இவ்வம்சம் நெய்தல் நிலத்திற்கும் பொருந்தும்) என்று எதிர்பார்த்திருக்கும் இந்நிலத்துத் தலைவியர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். வேதனையும் சோதனையும் மிகுந்து காணப்படும் இந்நிலத்துத் தலைவியருக்குப் பெரிதும் ஆறுதல் அளிப்பது தோழியின் ஆறுதல் வார்த்தைகளே. பாலைநிலத் தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுவது போன்ற ஏராளமான பாடல்களை அகநானூற்றிலே காணமுடியும். உதாரணத்திற்கு ஒரு பாடலின் சில அடிகளை இங்கே நோக்குவோம்.

'மரம் செல மிதித்தமா அல்போலப்
புன்தலை மடப்பிடி உணீஇயர், அம்குழை,
நெடுநிலை யாசும் ஒற்றி, நனைகவுள்
படிநிமிறு கடியும் களிறே'

இங்கு, தலைவன் பிரிந்து சென்றதனால் தலைவி கலங்கினாள். அவளுக்கு ஆறுதல் கூறவிழைந்த தோழி "மெல்லிய தலையினையுடைய இளைய தன் பிடியானது அழகிய தளிர்களை உண்ணுமாறு, களிறானது யாமரத்தின் உயர்ந்த நிலையினையுடைய கிளைகளை வளைத்துத் தந்து. மதத்தால் நனைந்ததன் கன்னத்திலே படியும் வண்டுகளையும் ஒட்டிக் கொண்டிருக்கும் காட்டிலே இவ்வாறான காட்சிகளைக் காணும் தலைவன் உன் நினைவு மீதூரப் பெற்று விரைவிலேயே நின்னிடம் வந்து சேருவான்" என்று கூறுகின்றாள். தலைவியின் துயர் கண்டு, தானும் துயருற்று தலைவியின் துயர் துடைக்கத் தோழி பாடும் இவ்வாறான பாடல்களைப் படிக்கும் போது வள்ளுவரின்

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்'

என்ற குறளடிகள் ஞாபகத்துக்கு வருகின்றன. இது தவிர, திருக்குறள், நாலடியார் முதலான நூல்கள் நட்புப் பற்றிச் சிறப்பாகப் பாடுவதற்கு அகநானூறு முதலான அகத்திணை நூல்களில் வரும் தோழியின் பாத்திரப்படைப்பும் ஒரு காரணமாக இருந்திருக்குமோவென்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு பார்க்கின்றபோது, தலைவனிடம் தலைவியின் திருமணம் குறித்து வலியுறுத்துதல், தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வராத பட்சத்தில் பல்வேறு வகையிலும் தலைவிக்கு ஆறுதல் கூறுதல், தலைவியின் நிலையை எடுத்துக் கூறித் தலைவனின் பிரிவைத் தடுத்தல், தலைவனிடம் நேரடியாகக் கூற முடியாத விடயங்களை மறைமுகமாகவோ, தலைவிக்குக் கூறுவது போலவோ கூறுதல், தலைவனின் குறைகளை இடித்துரைத்தல், தலைவியின் காதலைப் பெற்றோருக்குக் கூறி அறத்தொடு நிற்றல், தேவையான விடத்துத் தலைவன் தலைவியைப் பாராட்டுதல், பரத்தையரை நாடிச் செல்லும் கணவனை நல்வழிப்படுத்துதல் முதலான இன்னோரன்ன செயல்கள் மூலம் வெறுமனே தோழியாக மட்டும் இல்லாது தோழியானவள் தலைவியாகவும், தாயாகவும் தாதியாகவும், மந்திரியாகவும், நல்லாசானாகவும் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

மேலும், தலைவன், தலைவி, செவிலி முதலானோர் தோழியை நம்பிக்கைக்குரியவளாகக் கருதித் தமது உள்ளக் குமுறலல்களை வெளியிடுவதைப் பல்வேறு பாடல்களிலும் காணலாம். உதாரணமாகத் தலைவி தோழியிடம் சொல்வது போன்ற பல பாடல்கள் அகநானூற்றிலே உள்ளன. (உதாரணம் 23, 26, 31, 37, 40, 45, 46 முதலான பாடல்கள்). இது தவிர, தலைவியும் தோழியும் தலைவனை "நம் தலைவன்" என்று சுட்டுவதும், தோழி என ஒருவரை ஒருவர் வேறுபாடின்றி விளிப்பதும் அவர்களிடையே உள்ள தூய்மையான அன்பினையும், நெருக்கத்தையும் காட்டுகின்றது.

அகநானூற்றினைப் பொறுத்தவரையில் தோழியின் பங்கு இம்மட்டோடு நின்று விடவில்லை. அகநானூற்றுச் செய்யுள்களை மெருகூட்டுவதிலும் அவள் முக்கிய பங்கு வகிக்கின்றாள். தலைவியை பொறுத்தவரையில் ஓரிடத்திலேயே இருப்பவள் தலைவனைக் கண்டவுடன் காதல் கொண்டு, அவன் நினைவில் வாடுபவள், வாழ்பவள். ஆகவே, அவளது வட்டமும் குறுகியதாகவே இருக்கும். ஆனால், தோழி அவ்வாறல்ல, புத்திக்கூர்மை மிக்கவள். இடத்துக்கு ஏற்ப, சந்தர்ப்பத்துக்கு ஏற்பப் பேசக் கூடியவள். நேரடியாகக் கூறமுடியாத விடயங்களைத் தம் திறமையால் மறைமுகமாக உள்ளுறை உவமையைப் பயன்படுத்திக் கூறக்கூடியவள். உரிப்பொருளை (ஒழுக்கம்) நோக்கியதாகவே இவளது பாடலின் மையக்கருத்து அமைந்த போதும், அதனை மேலும் மெருகூட்டும் வகையில் அவளால் பயன்படுத்தப்படும் முதல்பொருளும் (நிலமும் பொழுதும்) கருப் பொருளும் (பின்னணிக்காட்சிகள்) அமைந்து காணப்படும். தோழியின் புத்திக் கூர்மையையும், பரந்த அறிவினையும் இப்பகுதிகள் எடுத்தியம்புவதைக் காணமுடியும்.

தொகுத்து நோக்குகின்றபோது, அகநானூற்றுத் தோழியானவள் அகநானூற்றில் இடம் பெற்றுள்ள ஏனைய பாத்திரங்களுடன் ஒப்பிடுமிடத்துத் தன் அறிவாலும், செயலாலும், தனித்தும், சிறந்தும் விளங்குகின்றாள் என்ற முடிவுக்கு வர முடிகின்றது. அத்தோடு, நல்லவற்றைப் படைப்பதிலும், தீயவற்றை அழிப்பதிலும், தலைவன், தலைவியைக் காப்பதிலும், நேரும் சிறு தவறையும் அடுத்தவள் அறியாமல் மறைப்பதிலும், தலைவியின் காதலை நயமாகப் பெற்றோரிடம் எடுத்துக் கூறி அவர்களின் திருமண வாழ்க்கைக்கு வழிசமைத்து உதவுவதிலும் யாருக்கும் நிகரற்றவளாக விளங்குகின்றாள். தோழி என்ற பாத்திரத்துக்குச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் இந்த அகநானூற்றுத் தோழியானவள் சகலராலும் போற்றிப் புகழப்படக்கூடியவள். பின்பற்றக் கூடியவள். என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# துளிர்க்கிறது ஓர் உறவு

வல்லிபுரம் சுகந்தன், 3ம் வருடம், பொறியியல் பீடம்

'காதலிப்பது என்பது எவ்வளவு பெருமையான விஷயம், அதைவிடக் காதலிக்கப்படுவது இன்னும் சிறப்பான விஷயம்".

நானும் காதலிக்கின்றேனா?

இந்தக் கேள்வி கடந்த சில நாட்களாக என் மண்டையைப் போட்டுக் குடைந்து கொண்டிருக்கிறது. நான் காதலிக்கப்படுகின்றேனா? என்பது கூட எனக்கு முக்கியமாகப் படவில்லை. நான் "ஜோதி"யைக் காதலிக்கின்றேனா? இல்லையா? என்பதே இப்போது எனக்கு அவசரமாகத் தெரிய வேண்டியிருக்கிறது.

எத்தனை நாட்களுக்கு என்று தான் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வது? அதிலும் இன்று தலையில் ஈரம் சுவறச் சுவறத் தலையைக் கூடத் துவட்டாமல் தலையணையும் நனைய கட்டிலில் உறங்குவதாய்ப் பாசாங்கு பண்ணும் என்னைப் பார்க்க எனக்கே பரிதாபமாயிருக்கிறது. சற்றே புரண்டு படுக்கின்றேன். பக்கத்துக் கட்டிலில் மாறன் ஙே! என்று சாவதானமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. எல்லாம் இவனால் தான் வந்தது. நல்ல பெடியன், ஒருத்தருக்கும் மற்றாக்களின்ர கதையொண்டுஞ் சொல்லிறதில்ல. தானும் தன்பாடுமாய் இருக்கிறவன் எண்டு, என்ர மனசில அரிச்சுக் கொண்டிருந்த விசயத்தை இவனிட்டச் சொல்லப் போய், இண்டைக்கு நான் ஜோதியக் காதலிக்கிறன் எண்டு சொல்லி எல்லாப் பெடியளோடையுஞ் சேர்ந்து என்ன bucket பண்ணிப் போட்டான். இப்ப என்னடாண்டா இந்தப் பூனையும் பால் குடிக்குமோ எண்டது மாதிரிச் சிங்கன் நடந்தது ஒண்டும் தெரியாதது போல நல்ல நித்திரையடிக்கிறார்.

ஆளின்ர நித்திரையைக் குழப்புவமோ? சீச்சீ வேண்டாம். பிறகு நாளைக்கு இத இன்னும் பெரிசாச் சோடிச்சுச் சொல்லி என்னை அறுத்துப் போடுவாங்கள். அதோட என்னிலயும் பிழை தான் கண்டியளோ! பூனைகளெண்டாப் பாலைக் குடிக்காமப் பின்ன பச்சைத் தண்ணியையே குடிக்குங்கள். கம்பஸ் பெடியளெண்டா, அதிலயும் இஞ்ச பெராவில சும்மா காய்ஞ்சு கொண்டு கிடக்கிறவங்கள் இந்த விஷயங்களில் சும்மா இருப்பாங்களோ! வெறுவாய் மெல்லுறவங்களுக்கு அவல் போல நான் அம்பிட்டிட்டன்.

இதெல்லாம் கிடக்கட்டும். எனக்கு இப்ப நான் ஜோதியைக் காதலிக்கிறேனா? இல்லையா? எண்டு தெரிய வேணும். நீங்களே சொல்லுங்கோ? ஜோதி என்ர "குறூப்மேற்" அதால எனக்கு மற்றப் பொம்பிளைப் பிள்ளைகளிலும் பார்க்க அவளோட பழக வேண்டிய சந்தர்ப்பம் அதிகம் தானே! முந்தியெண்டா பெட்டைகளைக் கண்டா பேயைக் கண்ட மாதிரி பத்தடி தள்ளித் தான் நிக்கிறனான். ஜோதி குறூப்மேற்றாவ வந்த பிறகு தான் நான் பெட்டைகளோட கொஞ்ச-மெண்டாலும் கதைக்க ஆ நீங்க சொல்லிறது விளங்குது, அது தான் வாளி வைக்கப் பழகினான். பழகினான் எண்டு சொல்லிறதிலும் பார்க்க துணிஞ்சனான் எண்டு சொல்லாம். ஏனென்டா முந்திப், பெட்டையளோட கதைக்கிறதெண்டா எனக்குக் கைகாலெல்லாம் தந்தியடிக்கும். இப்பையும் சிலவேளையில அப்பிடி இருக்கிறது. அவ்வளவு பயமும் கூச்சமும் இருக்கிறதால தான் நானும் ஜோதியைத் தவிர மற்றப் பெட்டையளோட இப்பயும் பெரிசாக் கதைக்கிறேல்ல. அதோட இவளுக்கு கம்பஸ் வரமுதலே 'லவ்வர்" இருந்ததாலயோ அல்லது என்னிலும் பார்க்க வயசு கூட எண்டதாலயோ என்னவோ மற்றப் பெடியளுக்கு அவையின்ர "குறூப்மேற்" சை வைச்சுக் கடிக்கிற போல எனக்கு ஒருத்தரும் நக்கலடிக்கிறேல்ல. அதால எனக்கு "சைக்கோலொஜிக்கல் பீலிங்" வரவும் வாய்ப்பில்லை. அப்பிடி வந்திருந்தாலும் "ஓஷோ" வின்ர புத்தகங்கள வாசிச்சிரு-க்கிறதாலே அதிலயிருந்து எப்பயோ விடுபட்டிருப்பன்.

அதோட அவளும் கொஞ்சம் வித்தியாசமான ஆள். பாருங்கோ. பாடசம்பந்தமான விடயங்களை மட்டும் தான் என்னோட கதைப்பாள். தேவையில்லாத விஷயங்கள் ஒண்டும் அலம்பிறதில்ல.

பிறகென்னெண்டு இப்பிடி வந்ததெண்டு கேக்கிறீங்களா? சொல்லுறன். அதைச் சொன்னாத்தானே உங்களுக்கெண்டாலும் இதுக்கு விடை தெரிஞ்சுதெண்டா எனக்குச் சொல்லுவீங்கள்.

நாலு மாசத்திற்கு முதல் ஜோதியின்ர "லவ்"வரை யாழ்ப்பாணத்தில வைச்சு ஆமி பிடிச்சுப் போட்டுது. மனித உரிமைகள் ஆணைக்குழுவோ?, என்னவோ? ஏதோ ஒண்டுக்குள்ளால போய் விசாரிச்சா, தாங்க அப்பிடி ஒருத்தரையும் கைது செய்யேல்ல எண்டு வழக்கமாச் சொல்லுறது போல ஆமி சொல்லிப் போட்டுதாம். அதில இருந்து அவளின்ர முகத்தப் பாக்க வேணுமே.

எப்பவும் ஒரே சோகம். முந்தியெண்டா எந்த நேரமும் சிரிச்சுக் கொண்டிருக்காட்டியும் அண்டைக்குப் பூத்த ரோசாப் பூப்போல புன்சிரிப்போட இருந்த முகம் அதுக்குப் பிறகு ஒருக்கா எண்டாலும் சந்தோஷத்தால விகசித்ததை நான் பார்த்ததில்லை. அது எனக்கும் சரியான கவலையாப் போயிற்றுது. அவளின்ர சோகத்தப் போக்க வேணும். அவளைக் கவலைப் படவிடக் கூடாது. முந்தி மாதிரி எப்பவும் அந்தப் புன்னகையோட இருக்க வேணும். அதுக்கு என்னால என்ன செய்யேலுமோ அதையெல்லாம் செய்ய வேணுமெண்டு என்ர மனசுக்குள்ள ஏதோ ஒண்டு இருந்து சொல்லிக் கொண்டிருக்கு.

இதுக்கு அவள் மற்றப் பெடியளோட கதைக்கிறதிலும் என்னோட தான் அதிகமா- அதுவும் பாடசம்பந்தமாக மட்டும் தான் எண்டாலும், கதைக்கிறது எண்டதாலயும், நானும் மற்றப் பெட்டையளிலும் விட இவளோட தான் கூடப் பழகிறனான் எண்டதாலயும் அப்பிடி நினைக்கிறனா?

"எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று..... ஏதோ.... அது ஏதோ அவளிடம் இருக்கிறதா....?"

இல்லாட்டி உண்மையாகவே நான் அவள "லவ்" பண்ணத் தொடங்கீற்றனா? அப்பிடி-யெண்டா, கதைகளில வாறமாதிரி சுஜாதா எழுதின "ஏன்? எதற்கு? எப்படி? எண்ட புத்தகத்தில் இருக்கிற மாதிரி ஜோதியைக் கண்ட உடனே எனக்குள்ள ஓமோன்களின் அட்டகாசம் ஒண்டும்

நடக்கிறதில்லையே. "லவ்" பண்ணிறவைக்கு லவ்வரக் கண்ட உடனே மனம் இறக்கை கட்டிப் பறக்கும். இருதயம் இடம்மாறித் துடிக்கும் எண்டு பாட்டுகளில வாறமாதிரி எனக்கு ஒண்டும் நடக்கிறதில்லையே.

இதைத் தான் மாறனிட்டைச் சொன்னனான். அவன் இப்பிடிக் கதை கட்டி எல்லாப் பெடியளிட்டையும் சொல்லி என்னை இந்த நிலைக்கு கொண்டு வருவான் எண்டு நான் கனவிலயும் நினைக்கேல்ல. அப்பிடியிருந்தும் தண்ணியக் கொண்டு வந்து தலையில ஊத்தேக்குள்ள நான் சொன்னனான். "மச்சான் அவளுக்கு என்னை விட வயசு கூட" எண்டு. அதுக்கு ஒண்டு சொல்லுது "ஏன் உன்ர டெண்டுல்காரும் தன்னிலும் விட 4 வயசு கூடின அஞ்சலியத் தானே லவ் பண்ணிக் கட்டினவர்" எண்டு அப்பப் பாருங்கோவன் என்ர நிலைமையை.

சரி, இதெல்லாத்தையும் விடுவம். இப்ப எனக்கு, நான் ஜோதிய "லவ்'" பண்ணிறனா? இல்லையா? எண்டு தெரிய வேணும். என்ன? திரும்பத் திரும்ப ஒரே கேள்வியைக் கேட்டு அறுத்துக் கொண்டிருக்கிறாய், உதே இப்ப முக்கியம்? எண்டுறீங்களா?

என்ன செய்யிறது, எனக்கு நித்திரையும் வருகுதில்லையே! உங்கா, காதக்குடுத்து வடிவாக் கேளுங்க! இரவு மூண்டரை நாவலப்பிட்டி ரெயில் போற சத்தம் கேக்குதல்லா, அப்ப உங்களுக்கு விளங்கும் தானே நித்திர வராம நான் படுகிற பாடு.

ஒருவேளை இது ஓமோன்களின் அட்டகாசத்தால வாற காதல் இல்லாம வைரமுத்துவின்ர கவிதைகளில வாற மாதிரி 40 வயதுக்கு பிறகு வாற காதலா இருக்குமோ? அடியடா புறப்படலையில எண்டானாம். எனக்கு இன்னும் 24 வயது கூட ஆகேல்ல. அதுக்குள்ள 40 வயதுக் காதலோ?

அப்ப, பாலகுமாரனின்ர நாவல்களில வாற மாதிரி உடலிச்சைகளுக்கு அப்பால் உளத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற, மனசும் மனசும் ஒன்றையொன்று நன்கு அறிந்து மனதால் இணைகின்ற காதலாக இருக்குமோ? அப்பிடியெண்டாலும் அவளின்ர மனதைப் பற்றியோ அல்லது அவளின்ர விருப்பு வெறுப்புகளைப் பற்றியோ எனக்கு ஒண்டுமே தெரியாதே! அப்ப இது என்னவாயிருக்கும்? ........

"என்ன இது? என்ன இது? என் மனசு என்னை விட்டு தூரம் நின்று பார்க்கிறதே........"

ஓ உங்களுக்கும் விளங்கேல்லயா? நீங்க கொட்டாவி விடுகிறது எனக்கு விளங்குது . "எள்ளு எண்ணெய்க்குக் காயுது. எலிப்புழுக்கை ஏன் காயவேணும்? நீங்க போய் நித்திரையைக் கொள்ளுங்கோ. நான் இருந்து யோசிக்கிறேன். எனக்குத் தானே நித்திர வரப் போறேல்ல. இது என்னவாயிருக்கும்.....?

"இதற்குப் பெயர் தான் காதலா...., "

சீச்சீ

அப்பிடியொண்டும் இருக்காது. எனக்காவது காதலாவது,? இதென்ன கதையா? படமா?

ஒருவேளை இப்பிடி இருக்குமோ? ஏதோ ஒரு உளவியல் புத்தகத்தில படிச்ச ஞாபகம். சின்ன வயசிலயே தாயை இழந்த ஆம்பிளையள் தங்களிலும் வயசு கூடின பொம்பிளையளத்தான் கல்யாணம் கட்ட விரும்புவினமாம். அப்ப எனக்கு ஜோதி மேல என்ர அடிமனசிலே காதல் இருந்து இப்ப அவளின்ர லவ்வர் இல்லையெண்ட உடனே அதுதான் விஸ்வரூபம் எடுத்து மனதை ஆட்டிப் படைக்குதோ?

அதோட மற்றப் பெடியங்கள் சொல்லுறவங்கள். "ஜோதி" பெரிசா வடிவெண்டு இல்லை" எண்டு. ஆனா எனக்கு அவளைப் பாக்க நல்ல வடிவான ஆளாத்தான் தெரியுது. "தான் விரும்பிற பெண் தான் எந்த ஒரு ஆணுக்கும் உலகிலேயே வடிவான பெண்ணாகத் தெரியும்" எண்டும் அந்த உளவியல் புத்தகத்தில இருந்தது. அப்பிடியெண்டால்.... ..

இது காதலா....? இதுதான் காதலா....? இதுவும் காதலா.....? இதுவே காதலா?
மனம் ஏதோவொன்று நினைக்க

தினம் தூங்காமலே தவிக்க
என்ன பேர் சொல்லி நான் அழைக்க.....?

***********

காலை நேரம். றேடியோவில் சுப்ரபாதம் கேட்கிறது. பனிக்குளிருக்கு படுக்கையை விட்டு எழும்ப மனம் வருகுதில்லை. அருகே திரும்பிப் பார்க்கிறேன். தெரியும் சின்னக்கா எப்பையோ எழும்பியிருப்பாவெண்டு. அவா தானே ஒவ்வொரு நாளும் விடிய எழும்பிக் குளிச்சிற்றுச் சாமிகும்பிட்டுட்டு சுப்ரபாதத்த றேடியோவில போட்டிட்டு ரீ போட்டுக் கொண்டு வந்து என்னை எழுப்பிறவா.

அக்கா ரீ கொண்டு வாறது தெரியிது. நான் நித்திர போல நடிக்கிறேன். அக்கா வந்து ரீ யை மேசையிலே வைச்சிற்று எனக்குப் பக்கத்துல வந்து என்னைத் தூக்கிறா.

"தம்பி அச்சாப் பிள்ளையில்லே, எழும்புங்கோவன். இண்டைக்கு நேசறியில என்ர குட்டிக்கு "ருவிங்கிள் ருவிங்கிள் லிட்டில் ஸ்டார்..... இன்ர மிச்சம் சொல்லித் தாறதெண்டு பிள்ளையின்ர ரீச்சர் சொன்னவால்லே. இப்ப எழும்பினாத் தானே வெளிக்கிட்டுச் சாப்பிட்டிட்டு நேரத்தோட நேசறிக்குப் போகலாம்"

அக்காவின் இனிமையான இப்பூபாளத்தில் நான் என் நடிப்பை மறந்து "நான் அப்பவே எழும்பித்தேனே" என்று கூறிச் சிரிக்க என்னைத் தூக்கிக் கொஞ்சியவாறே முகம் கழுவக் கூட்டிச் செல்கிறா.

சின்னக்கா பிறந்தபோது அவவின் அம்மா இறந்து விட எட்டு வருடங்களின் பின் அப்பாவின் ரெண்டாந் தாரமான என்னுடைய அம்மாவிற்கு நான் பிறந்தேன். சின்னக்காவிற்கும் எனக்கும் அப்பிடி என்ன பொருத்தமோ தெரியவில்லை இருவருமே பிறந்தவுடன் "தாயைத் தின்னி" கள் ஆகி விட்டோம். அதனாலோ என்னவோ சின்னக்காவிற்கு என்னில கொள்ளைப் பிரியம். நிலத்தில நடக்கவே விடமாட்டா.

முகம் கழுவுவதற்கு என்னை நிலத்தில் இறக்கி விடுகிறா. திடீரென நேசறிக் குழந்தையாக இருந்த நான் மீசை முளைத்த வாலிபனாய் மாறுகிறேன். சின்னக்காவின் முகத்தைப் பார்க்கிறேன். அக்காவின் முகத்தில் ஒரே சோகம். அண்ணாவை விமானக் குண்டு வீச்சில் இழந்த துக்கம் என நினைக்கிறேன்.

சடாரென ஏதோ ஞாபகம் வர அக்காவின் கையை இறுகப் பற்றுகிறேன். உடனேயே நான் 16-17 வயது இளைஞனாய் அரும்பு மீசையுடன் உருமாற அக்காவின் கையை இறுகப் பற்றியவாறே "சின்னக்கா! இவ்வளவு நாளும் என்ன விட்டிட்டு நீ எங்க போனனீ? ஏன் என்ன விட்டிட்டுப் போனனீ?" என்று கெஞ்சியவாறே கேட்கிறேன். அக்கா எங்கே போனாள். எதற்காகப் போனாள் என்பதும் அப்படி அவள் போனது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல ஒடுக்கப்பட்ட தமிழின விடிவிற்கு அது

அவசியம் என்பதும் மனத்திற்குத் தெரிந்தாலும் பாச உணர்வில் கேட்கத் தோன்றியது.

"இல்லையப்பன் நான் உன்ன விட்டிட்டு ஒரு இடமும் போகேல்ல. நான் எப்பையும் என்ர குட்டியோட தான் இருக்கிறேன்". "இல்லையக்கா எனக்கு எல்லாம் தெரியும். உன்னோட இருந்த சுமதி அக்கா வந்து உன்னைப் பற்றி எல்லாம் சொன்னவா. உன்ர துணிச்சலைப் பற்றிக் கேக்கேக்குள்ள எனக்கே புல்லரிச்சுது. உடம்பில குண்டுகளோட போய் நீ வெடிக்கேக்குள்ள என்னையும் நினைச்சிருப்பியே! என்னிலும் விட உனக்கு தேசம் பெரிசு எண்டு எனக்குத் தெரியும். அப்பிடித்தான் இருக்க வேணுமெண்டும் தெரியும். ஆனாலும் ..... ஆனாலும்...... உன்ரை இந்தக் குட்டிய உன்ர மனசில ஒரு சின்ன இடத்தில .... ஒரு ஓரத்தில எண்டாலும் நினைச்சிருப்பதானே அக்கா?"

நாக்குழறற கண்கள் கண்ணீர் பெருக்க அக்காவைப் பார்த்துக் கேட்கிறேன்.

"அப்பிடி இல்லையப்பன். நான் இப்பையும் உன்னோட தான் இருக்கிறேன். குஞ்சு. என்னை நீ வடிவாப் பாரன்".

இருபத்திமூன்று வயது வாலிபனாய் நான் உருமாறி அக்காவை உற்றுப் பார்க்கிறேன். அக்காவின் முகம் மங்கலாகி புகை மூட்டமாய் மாறி பின்பு புகை விலகி சிறிது சிறிதாய்..... வெளிச்சம் வர ...... மின்னலாய் அதிர்ந்தேன்.

ஜோதி!

ஜோதி, அக்காவா?

ஜோதி அக்கா, ஜோதியக்கா வாய் தன்னையறியாமல் உச்சரிக்க மனதினுள் ஏதோ பாரம் கழன்று விழுவதாய் உணர, உடலெங்கும் மழை துமித்தது போல நீர்த்துளிகள்.

"என்ன மச்சான்! இரவு முழுக்க ஜோதியோட கனவில டுயட் ஆடினது காணாதெண்டு விடிஞ்சாப் பிறகுமே? கெதியா எழும்படாப்பா "லெக்சர்ஸ்" இற்கு நேரம் போயிற்றுது. நீ இனி ரெண்டாவதுக்குத் தான் வரலாம். நான் இப்பவே போனாத்தான் முதலாவது லெக்சரிற்கு பின்னுக் கெண்டாலும் இருக்கலாம். அதோட இண்டைக்கு ரெண்டாவது லெக்சரில, ராத்திரி கனவில நீ டுயட் ஆடினதைப் பற்றி நோட்டீஸ் எழுதி விட வேணுமெல்லே"

சொல்லி விட்டு மாறன் செல்ல. அவனுடைய வார்த்தைகளை அலட்சியப்படுத்தி விட்டு உற்சாகமாய் எழுந்து குளியலறைக்கு விரைந்தேன்.

சின்னக்காவை sorry ஜோதி அக்காவைக் காணவேண்டுமென்ற ஆவலில் விரைவாய்க் குளித்துவிட்டு Time Tableஐ வந்து பார்க்கிறேன்.

அட! இண்டைக்கு வெள்ளிக்கிழமை. முதலாம் பாடத்திற்குப் பிறகு lab தான். இண்டைக்கு எனக்கு ஒரு practicalஉம் இல்லையே. மாறனுக்கும் இல்லையெண்டு தான் நினைக்கிறேன். ஜோதி அக்காவும் சிலவேளை வந்திற்றுப் போயிருப்பா. ச்சீ! இஞ்ச நடந்தத அவா கேள்விப்பட்டிருந்-தாண்டா என்னைப் பற்றி என்ன நினைக்கிறாவோ? குழம்பிப் போயிருந்த நான் தெளிஞ்சிற்றேன். ஆனா அவா எப்படி எடுத்துக் கொள்ளுறாவோ.....?

"முறையுள்ள காதலை மூடி வைக்கக்கூடாது
.....தங்கக்கிளி பறந்த பின்பு தாடி வைக்கக் கூடாது...." பாடியவாறே வந்த மாறன்

"டேய் மச்சான் ! உனக்கு விஷயம் தெரியுமே? தெரிஞ்சுதெண்டா மலையில் ஏறிக் குதிச்சுச் செத்துப் போயிருவியடா. உன்ர லவ்வுக்கும் எல்லே வில்லன் வந்தாச்சு!

"ச்சே! படிக்கிற படிப்புக்கும் வயசுக்குமேத்த கதையா கதைக்கிறான்?" மனதிற்குள் திட்டினாலும் அமைதியாய் இருக்கிறேன்.

"உண்மையடா! நேற்று அனுராதபுரம் நீதிமன்றத்தில வைச்சு யாழ்ப்பாணத்தில் பிடிச்ச ஆக்களில கொஞ்ச பேர விட்டவங்களெல்லே! அதில ஜோதியின்ர லவ்வரும் ஒரு ஆளாம். அவன் இண்டைக்கு கொழும்புக்குப் போறதாமெண்டு "மெசேஜ்" வந்து ஜோதியும் காலமையே கொழும்புக்குப் போய்ற்றாளாம்....

மாறன் தொடர்ந்தான். சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிவதென்று கேள்விப் பட்டதை இப்போது தான் அனுபவத்தில் உணர்கிறேன். ஆம்! என்றோ பட்டுப்போய் விட்டதாய் இருந்த உறவொன்று இனி புதிதாய்த் துளிர்ப்பதில் தடையேதும் இருக்கப் போவதில்லையே!

**(யாவும் கற்பனை)**

**இணையத்தில் தமிழ் இலக்கியங்கள்**

புத்தக கடைகளிலும், ஏனைய இடங்களிலும் கிடைக்காத சங்கத்தமிழ் இலக்கியங்களை நீங்கள் http://www.tamil.net/projectmadurai./pmcord.html என்ற முகவரியில் நீங்கள் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்.

**இணைய வலையில் கிடைக்கும் நூல்கள்**

திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, துரை, திருவாசகம், திருமந்திரம், திவ்விய பிரபந்தம்

**இணைய வலைக்காக தயாராகிக் கொண்டிருக்கும் நூல்கள்**

திருமந்திரம், பாரதியார் படைப்புக்கள்.

இணையத்தில் தமிழ் மொழியின் ஆக்கங்களை வெளிப்படுத்த காரணமாயிருக்கும் தளங்களில் http://www.intamm.cp, என்ற தளம் முக்கிய பங்கு வகிக்கிறது. அனைவரிற்கும் பயன்படக்கூடிய வகைகளில் பதினெட்டு சஞ்சிகைகள் இதில் இடம் பெற்றுள்ளன. "தேடல்", "நூலகம்", "இலவச மின் அஞ்சல்" வர்த்தக வாய்ப்புகள் போன்ற பலவிடயங்களை இதில் உள்ளடக்கியுள்ளது.

# "கனகம்மாள் காத்திருக்கிறாள்"

க. மயூரதி, விலங்கு மருத்துவபீடம், இறுதி வருடம்

"பாட்டீ, இண்டைக்கெண்டாலும் வாங்கித் தா'' என்று பாட்டியின் இடுப்பிலிருந் தவாறு அருகிலிருந்த சாப்பாட்டுக் கடையில் போத்தல்களில் அடுக்கி வைத்திருந்த இனிப்பு க்களின் பக்கம் கையை நீட்டும் சிறுமியைச் சமாதானப்படுத்தியபடி தன் கையிலிருந்த துணிப்பையையும், இறுக்கியபடி, மணி அடிக்கும் முன் சிறுமியைப் பாடசாலையில் சேர்க்கும் அவசரத்தில் நடக்கும் கனகம் எனப்படும் கனகம்மாள் சுமார் அறுபத்தைந்து தொடக்கம் எழுபது வரை வயது மதிக்கக்கூடிய முதிய பெண்மணி எலும்பைப் போர்த்திய தோலிற்குப் பாது காப்பாக அணிந்திருந்த சேலைக்கும், சட்டைக்கும் என்றும் நிறத்திலோ, தரத்திலோ தொடர்பி ருந்ததில்லை. சேலையின் நிறம் மாறிய போதும் என்றுமே அதில் கிழியலின்றி இருந்ததில்லை. ஒட்டிய முகத்தின் இடுங்கிய கண்களிலே என்றும் நிலையாக சோகமிடங் கொண்டிருந்தாலும் அவள் பேச்சில் என்றும் சோகம் காட்டியதில்லை.

என்னைக் கண்டதும் அவள் முகத்தில் தோன்றிய புன்னகையிலிருந்து அவள் என்னை அடையாளங் கண்டதை உணர்ந்தேன். ''பிள்ளை எப்ப வந்தனி?'' என்ற கேள்விக்கு விடை சொல்லும் முன் அவள் என்னைக் கடந்து சில அடிகள் தன் வெற்றுக்கால்களை வைத்திருந்தாள். ஏதோ வேலையாக வெளியே வந்த அம்மா ''யார் போறது கனகமே? அவவை இந்த நேரம் பிடிக்கவே ஏலாது. காளி கோயில் பூசை தொடங்க முதல் அவ செய்து முடிக்க ஆயிரம் வேலை கிடக்கும். கொதிக்கிற வெய்யிலில அவ கோயிலால வெறுங்காலோட உந்தத்தார் ரோட்டில போகேக்க பாவமா இருக்கும். அவவின்ர வேண்டுதல்கள் நிறைவேறும் மட்டும் காலில செருப்புப் போட மாட்டாவாம். ஆனாலும் பாவம் ஏதோ காளியாச்சியின்ர அருளில போன கிழமை அவவுக்கும் எங்கையோ ஒரு துண்டு காணி குடுத்திருக்கினமாம். நேற்று கோயிலில கண்டு சொன்னவ'' என்று எனக்குத் தேவையான தகவல்களையும் மேலதிகத் தகவல்களையும் அள்ளி வீசிவிட்ட திருப்தியில் அம்மா வீட்டினுள் சென்றார்.

அம்மாவின் தகவல்களில் அந்தக் 'காணித்துண்டு' பற்றிய தகவல் எனக்கு ஏதோ ஒரு விதத்தில் திருப்தியாக இருந்தது. ஏனெனில் அம்மா மூலம் கனகத்தின் வீட்டு நிலவரம் ஓரளவு அறிந்திருந்தேன். அந்த மூத்த பெண்மணியின் களைக்காத காத்திருப்புகள் என்னை ஆச்சரி யப்படுத்தியதுண்டு. இன்றும் உழைக்கத் தயங்காத மெல்லிய அந்த உடல் கூட்டின் உயிரை உலுக்கிய சம்பவங்கள் அவள் உறுதியைக் குலைக்க முயன்றதில்லைப் போலும்.

மீன் பிடிக்கச் சென்ற போது வீசிய புயலில் சிக்கிக் காணாது போன கணவனின் உடல் கிடைக்காததை மட்டும் வைத்து அவர் உயிருடன் திரும்ப வருவார் எனக் காத்திருக்கும் கனகம்,

விறகு வெட்டக் காடு சென்று, சுற்றி வளைப்பில் சிக்கித் திக்கின்றித் தொலைந்த மகன் திரும்புவான் என வாசல் நோக்கும் கனகம்.

காணாமல் போன கணவன் உயிருடன் இருக்கிறானா இல்லையா என்று விடை காண முடியாது கையில் குழந்தையுடன் தன்னை ஏக்கத்துடன் எதிர் நோக்கும் மருமகளைச் சமாதானப் படுத்த நல்லதொரு முடிவை எதிர் நோக்கும் கனகம்,

அன்றாடம் காளிகோயிலில் அதிகப் பிரசாதம் எஞ்சாதா என ஏங்கும் கனகம்,

அரசு வழங்கும் காணிகளில் ஒரு சிறு துண்டேனும் தனக்குக் கிடைக்குமென்று சில வருடமாகக் காத்திருக்கும் கனகம்.

இப்படி ஒரு உருவினுள்ளுள்ள பல காத்திருப்புகளில் ஒன்றாதல் காணியுருவில் நிறைவே றுவதை அறியின் மனம் நிம்மதியுறுவதில் ஆச்சரியமில்லை.

என்றும் எமக்காகக் காலம் காத்திருப்பதில்லை. நேற்றையின் நாளை இன்றான போது விடியலில் ஏதோ ஓர் உந்துதலில் கனகம்மாளின் காணி பற்றி மேலதிக தகவலைப் பெற அவவிற்காக வாசலில் காத்திருக்கத் தோன்றியது. மதிலருகே கட்டியிருந்த குப்பைத் தொட்டியில் கால் பதித்து, சுவரோடு ஒட்டியிருந்த தேமா மரக்கொப்பினைக் கரம்பிடித்து, தேமா இலைக் கூட்டமிடையே தெருவால் போகும் ''நலம்விரும்பிகளிற்குத்'' தெரியாதவாறு தலை மறைத்து, அண்ணரின் முறைப்பினைப் புறக்கணித்துத் தெருமுனையில் திரும்பப் போகும் கனகத்திற்குக் காத்திருந்தேன். ஒடிந்த உருவாக இடுப்பில் துணி மூட்டையுடன் சந்தியில் மடிந்த கனகம்மாளை வரவேற்கக் குப்பைத் தொட்டியிலிருந்து குதித்துக் கதவைத் திறந்து காவல் நின்றேன். (இன்று அவவை மறித்துப் பேசும் உறுதியில்) ஆனால் இன்று நான் பேச்சைத் தொடங்க முன்பே அவவாக பிள்ளை அம்மா நிக்கிறாவே? என்று ஆரம்பித்தாள். நான் அம்மாவைக் கூப்பிட்டு விட்ட பின்பும் அந்தச் சூழலை விட்டு நகர விரும்பாது 'திடீர்' வேலைகளை உருவாக்கி உரையாடலில் செவி கொடுத்தேன். அம்மாவுடன் கதைத்ததை வைத்து காணிப்பதிவிற்கு ஆயிரம் ரூபா பணம் தேவையென்றும், அதைக் கடனாக அன்னை யிடம் கேட்டதையும் ஊகித்துக் கொண்டேன். (என் அன்னையின் நண்பிகள் ஒரு தனி ரகம். எல்லோரும் பொதுவாகப் பொக்கை வாய்கள், பேச்சு வராத இளம் பிஞ்சுகள், பல்லும் போன பழசுகளும் இதில் அடக்கம். சில நாட்களில் வேண்டாத வேதனைகள் இந் நண்பிகளால் வர, எனது அன்னை சிற்றன்னையிடம் பேச்சு வாங்கிக் கட்டியதும் உண்டு) வழமைபோல் அன்னையின் இரங்கல் முன்வைப்பிற்கு உடன்பட்டு அவ்வருடம் அப்பாவின் ஞாபகார்த் தமாகக் கோயிலிற்குப் பூசைக்காகக் கட்ட வைத்திருந்த பணத்தை இனாமாகக் கனகம்மாவிடம் கையளிக்கலாம் என வீட்டில் நடந்த அவசரகாலக் கூட்டத்தையடுத்து தீர்மானிக்கப்பட்டு அதுவே செயலும் ஆக்கப்பட்டது.

அடுத்து வந்த நான்கு நாட்களும் நான் கனகம்மாவைப் பற்றி நினைக்க நேரமின்றிப் பொழுதை அவசரமாக்கிய பின் ஐந்தாம் நாள் காலைப் பத்திரிகையில் வந்த காணி பெற்றோர் பட்டியலில் அவவின் பெயரில்லாததைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். அதையடுத்து மறுநாள் அவவைச் சந்திக்கத் தீர்மானித்தேன். அதனிடையே அவவிலிருந்த அனுதாபம் கோபமாக மாறியதைச் சொல்ல வேண்டியதில்லை. கனகம் எம்மை பணத்திற்காக ஏமாற்றியது போல் உணர்ந்து கொதித்தேன். மறுநாள் காலை காவல் நின்று அவவைப் பிடித்த போது

களவாடிச் சென்ற கள்ளனைப் பிடித்த திருப்தியை அடைந்தேன். என் ஆத்திரத்தை அடக்கியபடி அவவின் பெயர் பத்திரிகையில் வராததன் காரணத்தை விசாரித்த போது கனகம்மாளிடமிருந்து முதலில் வந்த சிரிப்பில் இருந்த உணர்ச்சி எனக்குப் புரிபடவேயில்லை. நான் திகைத்து நின்ற போது ''பிள்ளை என்ன செய்யிறது எல்லாம் அமைஞ்சிருக்க வேணும். காணி பதிஞ்ச பிறகு சொல்லீனம் காணிகளுக்கிடையில் பொதுப்பாதை போட இருபதாயிரம் மட்டில ஒவ்வொருத் தரும் காசு கட்ட வேணுமாம். உந்தளவு காசுக்கு நான் எங்க போறது. உவ்வளவு இருக்கு மெண்டால் அது என்ர ஆயுளுக்குக் காணுமல்லே. நான் நேராப் போய் பெரியவரிட்டைக் கதைச்சனான். அவர் சொல்லுறார் அப்பிடியெண்டால் அம்மா நீ ஒரு வருசம் காத்திரு, வேற எங்கையும் தூரமா காணி குடுக்கேக்க உன்ர பெயரையும் அந்த துண்டில போட்டு விடுறன். இந்த இடம் வேணுமெண்டால் கட்டாயம் உவ்வளவு பணம் கட்டத்தான் வேணுமெண்டு. என்ன மகள், இன்னும் ஒரு வருசம் தானே கண்ணை மூடித்திறக்கப் போயிடும். எனக்குப் பழகிப் போட்டுது. எப்பிடியும் தருவினம் மகள் காளியாச்சி கைவிடமாட்டா பாரன். பின்ன வரட்டே அம்மாட்ட சொல்லு என்ன?'' என்று சொல்லி நகர முற்பட்டாள்.

எனக்கு என்னை நொந்து கொள்ளக் கூட நேரமின்றி ''கொஞ்சம் பொறுங்கோ'' எனச் சொல்லி வீதியைக் கடந்து எதிர்ச் சாப்பாட்டுக் கடையை அடைந்து கைநிறைய இனிப்புகளைக் கடனாக வாங்கிக் கனகம்மாளின் பேர்த்தியின் புத்தகப் பையில் போட்டேன். என்னால் முடிந்தது இதுதான். கனகம்மாளின் தேவை என் சக்திக்கு அப்பாற்பட்டது. ஏதோ சில நாட்களாதல் கனகம்மாவை அச் சிறுமியின் தொந்தரவிலிருந்து தப்ப வைத்த திருப்தியில் நான் நிமிர்ந்த போது கனகம்மா வழமைபோல் என்னிலிருந்து பல அடிகள் தள்ளிப் போயிருந்தாள். தன் வெற்றுக் கால்களால் கடவுளே இன்னும் எத்தனை கனகம்மாக்கள் இப்படிக் காத்திருக் கிறார்களோ?

### சிங்களத் திரையுலகை சிறக்க வைத்த தமிழ்ப்பெண்

சுமார் ஐம்பது சிங்களப் படங்களில் கதாநாயகியாக, முக்கிய பாத்திரமாக நடித்தும் பல பாடல்களையும் பாடியும் புகழ்பெற்ற ருக்மணி தேவி ஒரு தமிழ்ப்பெண் என அறியும் போது ஆச்சரியப்படுவீர்கள். இவர் ஈழத்துத் திரைப்படமான "நான் உங்கள் தோழன்" என்ற படத்தில் தாயார் பாத்திரத்திலும் அற்புதமாக நடித்துள்ளார் என்பது குறிப்பித்தக்கது. புகழ்பெற்ற இந்த கலைஞர் கார் விபத்தொன்றில் மரணமடைந்தது வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும்.

****

இலங்கைத் திரையுலக முன்னோடிகளில் ஒருவர் S.N.கனகரெத்தினம். இலங்கையின் முதலாவது தமிழ்த் திரைப்படம் "சமுதாயம்". இப்படத்தில் பதினெட்டு வயதுடைய ஒருவர் கதாநாயகனாக நடித்தார். அவர்தான் S. N. கனகரெத்தினம். 1975 இல் வெளியான "புதியகாற்று", "நான் உங்கள் தோழன்" போன்ற படங்களிலும் நடித்துள்ளார். மேலும் இவர் இந்தியப்படமான "தெய்வம் தந்த வீடு" என்ற படத்திலும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக் கலைஞர் 1993ம் ஆண்டளவில் காலமானார்.

# விடிவுக்காய் பல்கலையில்....

இ. ஜனந்தன், 2ம் வருடம், பொறியியல் பீடம்.

கண்ணுக்குள் தோன்றிய நிலவொன்று
கைகளில் வந்துவிடாதா என்ற
ஏக்கத்தில் இன்றைய நாட்கள் கழிகின்றன
கழிகின்ற நாட்களில் கரியாகிப் போகின்ற
நிஜவாழ்வு மட்டுமல்ல - உயிரோடு
ஒன்றாகி உணர்வுடன் கலந்துவிட்ட
ஈழத்து உடமை கலைக்களஞ்சியமுமே.

நிலவைப் பெண் என்பர்
பெண்ணை நிலவென்பர்
ஆனால் அன்றைய கற்பனைகள்
இன்று பொய்த்து விட்ட - தமிழ்
இனத்தின் விடிவுக்காய் ஏங்கும்
மனிதத்தின் உணர்வுகளின் விடிவே
அந்த நிலவு
நினைவுகள் முற்றி கனவுகள்
கலைந்து போன
மனத்தின் ஆழத்தில் தெரிந்த
அந்த நிஜங்களின் உருவத்திலே
உருவாகிய உணர்வுகளை மட்டும்
வெளிப்படுத்தும் நிலையில் தமிழ்
இருக்கின்ற போதிலும் - கல்லினுள்
கசியும் ஈரத்தைப் போன்று!

பொலியும் மலைகளில் பொங்கும் அருவியும்
புலர்கின்ற காலையில் உயிர் வாங்கும்
குளிரிலும்
பூரிப்பாய்ப் பூத்திருக்கும் பூக்களின்
வதனத்திலும்
தமிழ் மொழிக்கே தொடர்பற்ற
மொட்டை ஊராம் பேராதனையில்
இனிக்க இனிக்க இன்முகம் கொண்டு
படர்கின்ற கொடியாய் படுபாடு பட்டு
இன்றல்ல நேற்றல்ல
இன்னமும் படர்ந்து விரிந்து
தமிழ் வளர்க்கும் தமிழ்ச்சங்கமிது.

பல்கலைப் பணியிலே விரிகின்ற
பாங்குகளில் ஈழத்தின் காவியத்தை
கடைந்தெடுத்து காட்டுகின்றது
காட்டப்படும் காவியத்தில்
கவி சொல்லும் காவியரே!
நிலை முற்றம் நின்று நீறாகிப் போனாலும்
கலை முற்றம் தமிழுக்கு காவியம் பாடிட
உறுதி கொண்டீர் வரலாற்றில்
வளர்கின்ற தமிழிலே வாழுகின்ற காவியங்கள்
வரப்போகும் விடிவுக்கு வழிகாட்டி
ஒளியூட்டட்டும்.

# அதர்மத்தில் ஓர் ஆய்வு

R. சண்முகப்பிரியா, விஞ்ஞானபீடம் (தற்காலிக உதவி விரிவுரையாளர்)

மனிதன் நிலைக்க மனிதாபிமானமே மருந்தென்று.
மதங்களை மலரச்செய்தது மண்ணுலகன்று
வேதத்தை விளக்க வேண்டியவனே, வேற்றுமை விதைவிதைத்து,
பிரிவுக்காய் பிரசாரம் செய்யும் பிரபஞ்சமானது இன்று.
சித்தார்த்தனாய் சிதையாமல் புத்தனாய் போதித்தது போரிடவா?

அன்பை ஆயுதமாக்கி கருணையைக் காவலரனாக்கி
பெண்மையை ஆண்டவன் அன்று
ஆயுதத்தால் அரணமைத்து துப்பாக்கிகளைத் தூண்களாக்கி,
அதர்மக்கொடி நாட்டி அரசாளத்துடிப்பவள் இன்று (அன்று)
பொறுமையின் இலக்கணம், இன்று போர்முனையில்
உயிரைக்குடித்து உதிரத்தை துப்பாக்கியால் துப்புகிறாள்.
மொத்தத்தில் இனத்தை சுமப்பவள் இன்று பிணத்தை சுமக்கிறாள்.

ஒற்றுமையை உதடுகளால் மட்டும் உச்சரித்து
வேற்றுமை வேர்களை ஆழ்நெஞ்சில் படரவிட்டு
விஷவிருட்சத்தை வெளித்தெரியாமல் வளரவிட்டு
அரியணையை அலங்கரிக்கும் ஆட்சிகள் அதிகமின்று.
தவித்துவந்த பசுவுக்காய் தனையனை அழித்த தரணியிலே
புத்திரனின் புதைகுழியில் புல்முளைத்த பின்னும்
காவல்நிலையங்களில் காத்திருக்கும் அன்னையரின் அவலமின்று.

ஆசையில் ஒருயுத்தம், ஆணவத்தால் அது நித்தம்
உரிமைக்காய் ஒருயுத்தம், உறவாடும் அது நித்தம்
எல்லைக்காய் ஒன்று, அதன் தொல்லை தொலைவதென்று?
யுத்தம் முத்தமிட, முன்னுரையுண்டு முடிவுரையன்று.
அறிவு வளர்ச்சியின் அளவீடாய், அணுகுண்டின் அழிவுகள்
ஒரு அறிவின் ஆக்கத்தில் மறு உயிரின் மரணமா?

சமத்துவம் பெற்று சரிநிகராய் சாதித்தாலும்
கலியாணக் கட்டணம் கன்னிக்கு மட்டுந்தான்
கனவுகளுக்கு ஏற்பவா கணவன், கையிருப்புக்கு ஏற்பத்தான்.
இலட்சியங்களுக்கு ஏற்பவா கணவன், இலட்சங்களுக்கு ஏற்பத்தான்.
அன்னிய இனத்தின் அநியாயத்தை அழிக்கத் துடிக்கிறோம்
வரதட்சணை கேட்டு பெண்ணை வதைப்பதை வரவேற்கிறோம்.
அன்னிய இனம் செய்தால் அநியாயம் தன்னினம் செய்வதில் தாட்சண்யமா?

பாசியாய் படரும் பதவி ஆசையில்
ஊசி முனைக்குள்ளும் ஊடுருவும் ஊழல்கள்.
சதிக்கும் சரசத்திற்கும் சமயத்தை போர்வையாக்கி
காவித்துணியை களங்கப்படுத்தும் கயவர்கள்
சமரசம் பேசவே சமரைத் தூண்டிக் கொண்டு
ஆயுதத்தை அந்தரங்கமாய் அனுப்பும் அயோக்கியர்கள்
உண்மையில் உலகம் உயர்ந்துவிட்டது அறிவிலா?அதர்மத்திலா?

தொட்டுவிட்டது சிகரந்தான் படியாக்கியிருப்பது பாவங்களைத்தான்
கடந்துவிட்டது காலத்தோடு காருண்யத்தையும்தான்.
சகோதரத்தையும் சகிப்புத்தன்மையையும் சமாதியாக்கிவிட்டு,
அண்ட வெளியில் தேடுகிறோம் அமைதியை
சர்வாதிகாரத்தை உனக்குள் உறையவிட்டு
சவங்களுக்கிடையே ஏன் சமாதானத்தை தேடுகிறாய்
கடவுளாய் வாழ கனவு காண்கிறாய், மனிதனாய் வாழ மறந்துவிட்டு,
மருத்துவ ஆய்வுகளால் மருந்தொன்று கண்டுபிடி
இனவெறியை இல்லாமல் செய்ய கருணையைக் கரையாமல் காப்பாற்ற
இல்லாவிடில் இனிவரும் நூற்றாண்டுகள் இழந்துவிடும் மனித இனத்தை.

வரப்போகும் நூற்றாண்டை வசந்தமாய் வரவேற்க
வெட்டி எறி விருட்சமாகிவிட்ட விரோதங்களை
வெளிச்சத்திற்கு வரும் அதனுள் மறைந்துபோன மனிதாபிமானம்
அதை அன்பால் அபிஷேகம் செய்து, அறத்தால் அலங்கரித்து வை.
புத்தாயிரத்திற்கு புதிதாய் பரிசளிக்கலாம்

**"நகைச்சுவை"**

'ஒரு முறை கூடச் சிரிக்காமல் கழிந்த நாளே வீணாகக் கழிந்த நாளாகும்' என்கிறார், சாம்போர்ட் என்பவர். சிரிப்பிற்கு நேரம் ஒதுக்குங்கள். அது ஆத்மாவின் இனிய சங்கீதம் என்கிறார் இன்னொருவர்.

# விழுமியம் விழிக்கட்டும்

என். சுதன், 3ம் வருடம், பொறியியற் பீடம்

புண்ணிய பூமியதில்
ஒரு காலம்
விழுமியங்கள் விளைந்தன
இன்று.....
அவை சிதைய விழைவதேனோ?
மனிதம் மடிகிறது
மனம் மாற எவருமிலர்.
செக்கிழுக்கும் மாட்டிற்கோ
பொதியேற்றப் பலருளர்
காலம் அப்படி....
கலிகாலம்.

சொறி நாய்க்கும்
சோரம் போனவளுக்கும்
சோப்பிட்டுக் குளிப்பாட்டி
"ஷோகேஸில்" வைத்தால்.....
பார்ப்பதற்கோ பட்டாளம்.
ஏன்?
பயனற்றதையே செய்து
பழகிப்போன உலகில்
சொந்தமாய்ச் சிந்திக்க
சொற்ப நேரமும்
கிடையாதா?

சப்பாத்து போட்டவுடன்
செருக்கு
எக்கச்சக்கமாய் தலைக்கேறி
கொம்பொன்று முளைத்தாற் போல்,
நெஞ்சு
புடைத்து, நிமிர்த்தி
கட்டப்பொம்மன் சிரிப்பு.
அடுப்பங்கரையில்
அகப்பையைக் கண்டாற் கூட
நெஞ்சுக்குள் ரயிலோடும்
சுயகௌரவமிங்கே
சுழியில் போன துரும்பு.

ஆடையிற் சிக்கனம்.
ஆடுதசைக்கும் மேலாகக்
காற்றாடும்.
குதிக்கு ஓரடியில்
முட்டுக் கொடுத்து
விழப்போகும் பாவனையில்
அங்குலமே அடிவைத்து
அணிகாட்டும்
பெண்டிர்
நொண்டிக் குதிரைக்கு
சேணம் கட்டினாற் போல்
சொன்னால்.... எகிறுவர்
நவயுக நாகரிகமாம்.

அங்கங்கு பரவலாக
ஓட்டுப் போட்டவற்றை
ஆவலாய்
இழுத்துக் கொழுவி

தலைமுடியை
எழுமாறாய்க்
கடித்துக் குதறிவிட்டு
மீசைதாடியை
குற்றுயிராய்த்
தவிக்க வைக்கும்
கண்ராவிக்
கோலத்திலே
குலக் கொழுந்துகள்.
கேட்டால்,
அதுவும் ஒரு
வடிவு தானே - பதில்.

நாக்கிழுக்க அலையும்
நாதியற்றோருக்கு
புறங்கையை
தெளிவாகக் காட்டி
நாக்கில்
கடமையை
மெலிதாகத்
தடவிக் கொண்டு
மாதந் தவறினும்
மறக்காமல்
படி வாங்கும்
படித்தவர்கள்.
படித்து அவர்கள் என்ன?
காசிருக்கும் கைக்கு
கற்பூரம்
காட்டுகிறார்கள்

போதும்..... மனிதா!
இனியாவது
நாசியால் சுவாசித்து
மானுடத்தை
வாழ வை.
விழுமியம் விழிப்பதற்கு
பதில் சொல்.
ஏனெனில்
அது
விழித்தெழ வேண்டும்.

## ஈழத்தமிழ் வரலாற்று நூல்கள்

யாழ்ப்பாண நாட்டின் வரலாறு பற்றிய கதைகளை கூறும் நோக்குடன் எழுந்த நூல்களும் வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை என்ற மூன்றுமே தற்போது ஆராய்ச்சியாளர்களிற்கு கிடைக்கப் பெறுகின்றன. முத்துராச கவிராசர் என்பவர் கைலாய மாலை என்ற நூலை எழுதினார். இது ஈழத்தின் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்கூற்றில் பாண்டியப் படையெடுப்புக்களோடு தொடர்புடையது. வைபவ மாலை என்ற நூலை எழுதியவர் மயில்வாகனப் புலவர் வையாபடல் என்ற நூல் வையாபுரி என்ற புலவரால் எழுதப்பட்டது. இது தமிழ் நாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்து அடாங்காப்பற்று என வழங்கிய வன்னியை அடக்கி அங்கு அதிகாரம் பெற்ற வன்னியரின் வரலாற்றைக் குறிக்கிறது.

நன்றி : - ஈழத்தமிழ் வரலாற்று நூல்கள் - எஸ். பத்மநாதன்.

# அம்மா

சி. தெ. ஞானக்குமரன், முதலாம் வருடம், பொறியியற்பீடம்.

தன்னுயிர் தந்து
என்னுயிர் வளர்த்தவள்
தன்னுடல் நொந்து
எனைப் பெற்றெடுத்தவள்

உதரத்தில் பாதியை
எனக்காகத் தந்தவள்
உதிரத்தின் முழுமையும்
எனக்காக ஈந்தவள்

நான் தடுக்கி விழுகையில்
துடிதுடித்து அழுதவள்
நான் சிரித்து வருகையில்
அணைத்தெடுத்து முகர்ந்தவள்

எனை வளர்த்தாளாக்க
தேய்பிறையாய் ஆனவள்
தனை உருக்கி நெய்யாக்கி
எனக் கொளியைத் தந்தவள்

சுட்டுவிரல் பிடித்தெனக்கு
"அ" கற்றுக் கொடுத்தவள் - நான்
கட்டுகிற கவிவரியை
மிக மலர்ந்து ரசிப்பவள்

உன்னன்பு போதுமம்மா
உலகை நான் வென்றுவிட
உன்பாதம் வேண்டுமம்மா
என் கண்ணில் ஒற்றிவிட

கண்கண்ட ஒரு தெய்வம்
நீதானே என்னம்மா
கண்ணிமையாய் எனைக்காத்து
வளர்த்தெடுத்த பொன்னம்மா

உன் மடிமீது கண்ணயர்ந்து
நான் தூங்க வேண்டுமம்மா
உன் விரல் மீது கைபிடித்து
நடைபயில வேண்டுமம்மா.

சோலையிலே நிலவு காட்டி
சோறூட்டி வளர்த்தவளே
காலையிலே துயிலெழுப்பி
குளிப்பாட்டிச் சிரித்தவளே
நீ
உன்னுயிர் தந்து
என்னுயிர் வளர்த்தவள்
உன்னுடல் நொந்து
எனைப் பெற்றெடுத்தவள்.

# நான் விற்கப்படுகின்றேன்

வல்லிபுரம் சுகந்தன், 3ம் வருடம், பொறியியல்பீடம்

நான் விற்பனைக்காய்
இருக்கிறேன்!
ஆச்சரியப் படுகிறீர்களா?
சத்தியமாய்ச் சொல்கிறேன்
சீதனச் சந்தையில்
சிறந்ததொரு பண்டமாய்....
நான் விற்பனைக்காய்
வைக்கப்பட்டிருக்கிறேன்.

என் உணர்வுகள்
எப்போதோ
மொத்தமாய் விற்பனை
செய்யப்பட்டாயிற்று
கழித்து விடப்பட்ட
எஞ்சிய சில
நினைவுகளுடன்
நுகர்வோரு(ளு)க்காய்க்
காத்திருக்கிறேன்.

அதிக விலையில்லை
'இஞ்சினியர்' மாப்பிள்ளை
என்பதால் ஒரு
இருபத்தைந்து லட்சம்
மது மாந்த மறுக்கும்
மனதுடன் இருப்பதால்
மற்றுமோர் பத்து லட்சம்
மனதிற்கினிய மாதுவை
மறப்பதற்காய்
மேலுமோர் ஐந்து லட்சம்
புகைப் பிடித்துக் கறுத்துப்
போகாத உதடுகட்காய்
இன்னுமோர் பத்து லட்சம்
வேறென்ன?
வீடு, கார் எல்லாம்
வழமையாய்
வழங்குவது தானே!;

என் அழகு,
என் கம்பீரம்,...
என் குணம்
பழகும் இனிய சுபாவம்.......
ச்சே!
எது எதற்கு
விலை என்கின்ற
விவஸ்தையே
இல்லை என்கிறீர்களா?
அதுவும் சரிதான்
வேண்டுமானால்
போனஸாய்ப்
போகட்டும்.

நான் விற்கப் படப்
போகின்றவள்
நல்ல குணமுடையவளாம்
குணத்தைக் கொண்டு போய்க்
குப்பையில் போடட்டாம்
அஞ்சுகம் மாதிரி

அழகானவளாம் -
கொஞ்சம் விலையைக்
குறைக்க யோசிக்கலாமாம்
ஆபிரிக்க கண்டத்து
அழகி போன்றவளாம்-
அப்படியா?
ஐந்து லட்சம்
அதிகம் தந்தால்
'அட்ஜஸ்ட்' பண்ணிக்கலாமாம்

சீதன அரக்கனை
அழித்தொழித்து
ஆண்களிடமிருந்தான
அடிமைச் சங்கிலியை (?)த்
தகர்த்தெறியப் போவதாய்
ஆர்ப்பரிக்கும்
பெண்ணிய வாதிகளே!

இங்கே நான் , ஒரு ஆண்
விற்கப் படுகிறேன்

எனக்குள்ளும், ஒரு தலையாய்க்
காமன் கணை எய்து
காதல் நரம்புகளின்
தொழிற்பாட்டைத்
தொடக்கி வைத்த
காதலியின் நினைவுகளை,
காதலின் உணர்வுகளை
காற்றினிலே கரைத்து விட்டு,
என் ஆசைகளை
அபிலாசைகளை
அனலினிலே
தகித்து விட்டு,
பத்தரை மாற்றுத்
தங்கமாய்- ஒரு
பத்தினியிடம்
விற்பதற்காய்ப்
பத்திரமாய்
வைக்கப்பட்டிருக்கிறேன்.

எல்லாம் சரி,
நான் விற்கப்படுவது
எதற்காய்த் தெரியுமா?

என் கூடப் பிறந்த
சகோதரிகட்கு
மாப்பிள்ளைகள்
வாங்குவதற்காய்.

என் அன்னை
என்னை விற்கிறாள்-
என் மனைவியாய்
அமையப் போகிறவளுக்கு

ஆம்!
இங்கே நான்
விற்கப் படுகிறேன்
நங்கை ஒருத்தியால்
மங்கை ஒருத்திக்கு
மரணித்துப் போன
மன உணர்வுகளுடன்

வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களில் பலர் உளப்பாங்கிலே உணர்வின் பிரதி-பலிப்பிலே, சிந்தனையின் வெளிப்பாட்டிலே செய்முறையின் நெறிகளிலே இன்னும் ஈழத்தமிழர்களாகவே உள்ளனர். ஆனால் குழந்தைகளோ மிக வேககதியிலே வெளிநாட்டவர் போலவே மாறிவிடுகின்றனர். அது அவர்கள் குற்றமல்ல. வாழும் சூழலின் பாதிப்பு அவர்கள் உள்ளத்தில், உணர்வில், பாவனையில் பதிந்து போகிறது. இது பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையே பாரதூரமான கலாச்சார இடைவெளி-யினை ஏற்படுத்துகிறது.

# சினேகம்....

யோ. அன்ரனி. 3ம் வருடம் , விவ. மருத்துவ பீடம்

எழுந்த நிலவில்
கறை கண்டேன்

மூடிய ஜன்னலில்
மோதி வழிந்தது
சூரிய வெள்ளம்

தூக்கம் கலைந்ததாய்த்
திரும்பிப் படுத்தேன்.
நிழல் கவிந்த
நாட்களில்
வெய்யிலுக்கஞ்சி
மழைத்தழுவலில்
குடையைத்தேடி

சந்தோஷ ஒளியில்
எங்கேனும்

சோகம்
உள்ளதாய் நம்பி

இப்படி
இருப்புணர்வின்றிக்
கடந்தன நாட்கள்

அந்த நாளில்
உன்னுடன்
கழிக்கக்கிடைத்த
கணங்களில் மட்டும்

தேடலுமின்றி
எதையும் உறுதிசெய்யும்
ஆவலுமின்றி
சுகமாய் அமிழ்ந்தேன்
உறவில்

எவரையாவது உயர்வாகச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட்டால், நாமே உயர்ந்துவிட்ட மாதிரி ஒரு நினைப்பு ஏற்படுகின்றது.

- ப்யூடார்க்.

# மிலேனியம் மிகுந்துரைக்காதோ

கோமதி கிருஷ்ணசாமி, இறுதிவருடம், விலங்கு மருத்துவ பீடம்.

**கொ**ஞ்சிக் குலவியிருந்த வீட்டை துறந்து
கூட இருந்த சுற்றத்தை துறந்து
பிறந்து தவழ்ந்த மண்ணை விட்டு
பிடிகொடுத்து வாழ்ந்த தொழிலை விட்டு
வாழ்ந்து வரும் வறிய உள்ளங்களிற்கு
வந்துதித்த புத்தாயிரம் வாழ்த்தொலி
இயம்பாதோ?

மனதிற் கட்டிய பல மனக்கோட்டைகள்
மணற் கோபுரங்களாய் பொசுங்கி அழிய
துள்ளி திரிந்து சிறகடித்த காலம்
துவண்டு வறண்டு வாடி வதங்கி நிற்க
இன்னல்கள் பலநோக்கி இளைத்த
இதயங்களிற்கு
புதிதாய் பூக்கும் புத்தாயிரம் புத்தொளி
புகட்டாதோ?

ஆணவம் ஓங்கி அதிகாரம் மேலோங்கி
அராஜகம் பொங்கி அசுரத்தனம் தலைதூக்கி
அமைதி உருக்குலைந்து நியாயம்
நிர்கதியாகி
ஆட்சி என்னும் பெயரில் அநீதி அரும்பெடுக்க
அமைதியாய் அடிபணிந்து வாழும்
மறத்தமிழனுக்கு
மிதந்து வரும் மிலேனியம் மீட்சி வழங்காதோ.?

வயதுக்கேற்ற வாழ்வு வந்துதிக்கா தென
வாடி வதங்கி நிற்கும் வஞ்சியர் மனதிலும்
பல துறைகளில் படித்து பட்டம் பெற்று
பல படிகள் ஏறி பதவியற்று அலையும்
இளம் சமுதாயத்தினது இருளினைப் போக்க
சுழன்று வரும் புத்தாயிரம் சுடரொளி
வழங்காதோ?

இருபதாம் நூற்றாண்டின் இறுதிமூச்சில்
இன்னல்கள் எதிர்நோக்கி இணைந்த
இதயங்களின்
எதிர்கால வாழ்வு இன்ப ஒளியாய் திகழ
வசந்தத்தை பரப்பி வாழ்த்தொலி இயம்ப
அரும்பென மலர்ந்து அண்மிக்கும் மிலேனியம்
அட்சதை சொரிந்து ஆசீர்வாதம்
வழங்காதோ?

# எல்லோருக்கும் நல்லவனாக .......

அ. அலங்கேஸ்வரன், 2ம் வருடம், பொறியியற் பீடம்

உலகுக்கு உயிர்கொடுக்கும்
உதயசூரியனும்
உச்சிக்கு வந்துவிட்டால்
சிலர் பாதங்களை
சுட்டெரிக்கத்தான் செய்கின்றது.

பால் நிறைந்த கிண்ணமென்பார்
பைங்கொடியாள் வதனமென்பார்
பழுக்கக் காய்ச்சிய தங்கமென்பார்
பார் போற்றும் கவிஞரெல்லாம்
பாடிய நிலவில் கூட
பார் ஒரு மறு உண்டு.

பருவ காலத்தே வந்து
பயிர்செழிக்கப்
பெய்யும் மழை
வேண்டா நாளில் வந்து
விளைச்சலைக் கெடுப்பதில்லையா?

பொறுமையின் எல்லை
பூமியே என்பார்கள்
இந்த பூமியில் கூட
பூகம்பமும் எரிமலையும்
இருக்கத்தானே செய்கின்றது.

உயிர்மூச்சாக
உலவும் காற்று
புயலாக மாறி எங்கள்
உயிரையே எடுக்கவில்லையா?

இவையெல்லாம் ஏன்.
காலமெல்லாம் நான்
கையெடுக்கும்
கடவுள் கூட என்னை
கைவிட்ட நாட்கள் இல்லையா?

இயற்கையே இப்படி
இடைக்கிடை மாறி
இடைஞ்சல் செய்யும்போது
ஆக, அற்பப்பிறவி
நான் மட்டும் எப்படி
எல்லோருக்கும்
நல்லவனாக......

# நெஞ்சு பொறுக்குதில்லையே !

நா. மணிமேகலா, 3ம் ஆண்டு, விவசாய பீடம்

பஞ்சணை மெத்தையில்
துஞ்சிடும் நம்மவர்,
அஞ்சுதல் இன்றியே புரியும்
வஞ்சகச் செயல் கண்டு
நெஞ்சு பொறுக்குதில்லையே!

நிலைகெட்ட மனிதனை - அன்றே
தலை தெறிக்க வைத்த பாரதி
இன்றிருந்தால்
நெஞ்சு பொறுக்காது
நெருப்பைக் கரம் பிடித்திருப்பான்!

மானுடத்தைக் கடைந்தெடுத்து
கவி சமைத்த அவன் பேனா
கண்ணீர் சிந்தியது - இன்று
அநாதையாய்ப் போனது

கொஞ்சிப் பேசி வஞ்சம் தீர்க்கும்
நஞ்சு நிறைந்த நல் அவனியில்
பஞ்சமாகிப் போன நீதியின் நிலைகண்டு
நெஞ்சு பொறுக்குதில்லையே!

அரிச்சந்திரர்களின் அரியாசனம்
திருடப்பட்டதால் பதவியிழந்த
உண்மைவரிகள் உறங்கும் நிலைகண்டு
நெஞ்சு பொறுக்குதில்லையே!

முகவரியைத் தொலைத்த பொய்முகங்கள்
முகாரி பாடும் நாடக மேடையில்
முத்திரை பதிக்கும் முகமூடிகளைக் கண்டு
நெஞ்சு பொறுக்குதில்லையே!

புல்லாகிப் புழுவாகிப் பின் மிருகமாகி
இவ்வுலகில் கருவாகி உருவான மனிதன்
மிருகமாய் மருவித் தடம்மாறும் நிலைகாண
நெஞ்சு பொறுக்குதில்லையே!

மனிதம் என்னும் புனிதத்தை
மரணிக்க வைத்த மனிதன்
அந்தகாரப் பாதையில்
அந்தகனாய்ப் போகும் நிலைகாண
நெஞ்சு பொறுக்குதில்லையே!

மூலை முடுக்குகளில் முடங்கிப் போன
மனிதாபி மானங்கள் - பின்னணிபாட
வேஷதாரிகளின் நடிப்புகள்
அரங்கேறும் நிலை காண
நெஞ்சு பொறுக்குதில்லையே!

தேவர்களின் வேத மொழிகள்
தரணிக்கு வந்த பாதையில்
தடம் மாறிப் போனதால்
விடம் கொண்ட மனிதர்களைக் காண
நெஞ்சு பொறுக்குதில்லையே!

கண்ணிரண்டும் விற்றுக் காட்சிவாங்கும்
போலி வாழ்க்கையில் - நியாயங்கள்
துகிலுரிந்து போன நிர்வாண நிலைகாண
நெஞ்சு பொறுக்குதில்லையே!

முன்னேறும் பாதையில் முள்ளை வைத்து
படிக்கற்களைத் தடைக்கற்களாக்கும்
பொறாமைப் பேய் பிடித்த - ஈரமில்லா
இதயங்களின் ஈன நிலை காண
நெஞ்சு பொறுக்குதில்லையே!

துருப்பிடித்த சமூகத்தைத் துடைத்து விட
துடித்த பேனா ஒட்டு மொத்தமாய்
ஒடிக்கப்பட்டதால் - வடுப்பட்ட
நெஞ்சு பொறுக்குதில்லையே!

# பிரிவு

கவிப்பிரியன், பொறியியல்பீடம்

தனிமையைக் கலைக்க
எனது அறைக்குத்
துணையாக, நான் -
நேற்றுவரை எனக்கு
துணையாகவிருந்த
உனது நினைப்புடன்

மறந்துதான் போனது
உனக்கு,
என்னைப்போலவே
நீயுமிருப்பாய்,
சேர்ந்தேயிருப்போமென
சொன்னது எல்லாம்.

உறைபனியாய்
இருந்த நட்பு
உளுத்துப்போனது- நேற்றைய
அந்த சிகப்பு இருட்டினால்தான்

யாருக்குத் தெரியும்
பேய்ப்பருந்தொன்று
குருவிக்கூட்டை
கலைக்குமென்று

இன்றைய பகலில்தான்
புரிந்து கொள்ள முடிந்தது
உன் ரணமாக்கப்பட்ட

முகம் மிகவும் மோசமானதென்றும்
அறைந்து போன இருட்டு
தொலைத்தது நட்பையும்
உன் முகத்தையும் என்றும்

உன்னவர்கள் கூட
(இதுகூட அவர்கள்தான் பிரித்தது)
முகம் பார்க்காத திரும்பல்களுடனும்
நோக்கும்போது முறைத்தல்களுடனும்
முகச்சுளிப்புகளுடனும்.

நினைவுப்பசு மட்டும்
இன்னும்
கடந்துபோன
பசுமைகளையெல்லாம்
மேய்ந்துகொண்டுதானிருக்கிறது


நானென்ன செய்வதற்கு?.....
என்னிடம் இருப்பதுவும்,
மிச்சம் இருப்பதுவும்
கடந்துபோய் அறுந்துபோன
நம் விருட்சவிழுதுகளின்
நினைவுகளும்
நடப்பதை
பார்க்க மட்டுமே
வெளிச்சமும்!

**ஈழத் தமிழரின் ஒரு நூற்றாண்டு கால வரலாறு**
**(1899 - 2000) மைக்ரோ பிலிமாக்கப்படுகின்றன.**

*திரு, திருமதி குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களால் கடந்த 45 வருடங்களாகத் திரட்டப்பட்ட சேகரிப்புக்கள் நுண்படச் சுருள் களாக்கப்படுகின்றன. வருங்காலத் தலைமுறையினருக்காக, இலங் கையிலும் தமிழ் வழங்கும் நாடுகளிலும் பேணிப் பாதுகாக்கப்பட வுள்ள இப்படச் சுருள் தொகுப்புகளில் 1899ம் ஆண்டிலிருந்து 2000 ஆண்டு வரையிலான ஆங்கில, தமிழ்ப் பத்திரிகை நறுக்குகள் மற்றும்* **Ceylon Patriot** *(1864) ஈழகேசரி (1930), சுதந்திரன்,* **Saturday Review,** *திசை, சரிநிகர், தினமுரசு,* **Lanka Guardian,** *கேசரி, புதிய கண்ணோட் டம், புலம்பெயர் நாட்டு ஏடுகள், சஞ்சிகைகள், 8000க்கு மேற்பட்ட பல்துறைக் கடட்டுரைகள், சிரித்திரன் காட்டூன்கள் (2000 வரை) உள்ளூர் சஞ்சிகைகள், ஏடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பணிக்கு உதவ விரும்புவோர் தொடர்புகொள்க :*

**128/ Hettiya Watte, Mulgampola, Kandy**
**Tel : 08-233547**

# சமகால பிரச்சினைகளும்
# தேடல்களும்



அட்டைப்பட விவரணம்

# இயந்திர மனிதனின் இதயத்திலிருந்து.......

சூசைப்பிள்ளை லோகேஸ்வரன், விஞ்ஞான பீடம் - 2ம் வருடம்.

என் வயது நூறைக் கடந்திருந்த போதும் அவர்கள் என் இளம் பராயத்தைப் பற்றிக் கூட இன்னும் அறியாமல் இருக்கின்றார்கள். அவர்களின் நாளாந்த நடைமுறைகள் எனக்குப் புதியதாகவும், என்னை மிகவும் திடுக்கிடவும் வைக்கின்றன. அவர்கள் பொருட்டு நான் மிக்க வேதனையடைகின்றேன். மனிதன் கோள்விட்டுக் கோள் பாயும் நிலையை எய்தி நீண்ட காலமாகிவிட்டன. ஆனால், இங்கு அவர்கள் அருகாமையில் உள்ள தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல பாஸ் (Pass) பெறமுடியாதவர்களாக பரிதவிக்கின்றார்கள். மரநிழலைத்தம் வதிவிடமாக்கி, அடைமழையில் தாய் தன்னைத் தன் குழந்தைக்குக் குடையாக்கி, அகதி முகாம்களைத் தம் பிறப்பிடமாக்கி வாழும் பரிதாபம்! இந்த நவீன யுகத்தில் கூட தம் கால்களையே நீண்ட பிரயாண ஊடகமாக நம்பி வாழும் நிலை. ஒரு தசாப்தகாலத்திற்கும் மேலாக பாதம் படாத பாதைகள், இருண்டு கிடக்கும் கிராமங்கள், தோண்டப்பட்ட மனிதப்புதைகுழிகள், ஆங்காங்கே, இடிந்து, படிந்து, பாழடைந்த கோயில்கள், கூடங்கள், மண்ணின் மைந்தர்களின் துயிலிடங்கள். இங்கு பட்டினிச் சாவு இயற்கை மரணமாகிவிட்ட நிலை. குண்டு முழக்கங்களில் கூட அயர்ந்து தூங்கும் வரண்ட மனநிலை. வேட்டுச் சத்தங்களைப் பசியில் கதறியழும் தன் பிள்ளைக்குத் தாலாட்டுத் தாளமாக்கும் தாய்மார். ஆண்டவன் காப்பான் என்று ஆறிய அகதிகளைக் கைவிட்ட ஆலயங்கள். என்ன வாழ்க்கையடா? ஏன் அவர்கள் இந்நிலையில் இன்றும் வாழ்கின்றார்கள்?

அதி உன்னதமான ஆக்கங்களுக்கு என்னைப் பயன்படுத்தி வரும் அதேவேளை, மனிதன் அகோரமான அழிவுகளுக்கும் என்னைக் காரணகர்த்தாவாக்குகின்றான். இங்கும் இதே நிலைதான்! பாவம், பரிதாபம்! அவர்கள் என்ன செய்வார்கள்? இல்லை நான்தான் என்ன செய்வேன்? என்னைத் தவறாகக் கையாளும் இதயமுள்ள மனிதர்கள் எனத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளும், இரக்கமற்றவர் இருக்கும்வரை இப்பாரினில்! இயற்கையை ஆராய்ந்து, அறிந்து என்னை வளர்த்துவரும் மனிதர்கள் அவர்களை அறிய மறந்ததேன்? இவர்கள் யாவரும் நீண்ட காலமாக இழந்த எதையோ தேடுகின்றனர் என்பது மட்டும் உண்மை. இவர்களின் தேடல்கள் தான் என்ன?"தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசி இருக்கும். தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசி இருக்கும்" என்ற பாடல் வரிகள் இவர்களுக்கும் பொருந்துமா?

பிரபஞ்சத்தின் செயற்பாட்டுக் கொள்கைகளை முற்றுமறிந்த விஞ்ஞானி ஒருவர் தன்னைப் பற்றி முற்றிலும் அறியமுடியவில்லையாம் என எண்ணிக் கவலைப்படுவதை நான் பலமுறை பார்த்து அதிசயப்படுவதுண்டு. மன உருக்களாலும், கொள்கைகளாலும் (Mental Pictures and Concepts) ஆராய்ச்சிகளாலும் வரையறுக்க முடியாது போன உள் உணர்வுகளின் மூலம் (Origin of inner feelings) விளக்கிட முடியாத தத்துவப்பொருளாய் தொக்கு நிற்கின்றன.

> சமாதானத்தை-
> யடைய இங்கு
> யுத்தமே ஒரு
> தனித்துவமான
> கருவி

மனிதனின் உன்னதமான உணர்வுகளின் பெறுமதி மதியாத கூட்டம் ஒருபுறம். மனிதனின் இயற்கை உணர்வுகளையும், செயற்பாடுகளையும் இனம், மொழி, பாரம்பரியம் என்ற விலங்குகளால் சிறையிட்டு மனிதம் பேண மறந்த கூட்டம் மறுபுறம். இவற்றின் மத்தியில் தூணிலும் இருக்கும், துரும்பிலும் இருக்கும் பரம்பொருளை அடையவென இடப்பட்ட வரம்புகளும், கட்டப்பட்ட நீண்ட உயர்ந்த கட்டிடங்களும் அர்த்தமும், அக அழகும் இழந்து போகும் அந்தகாரம் இன்னொருபுறம். இக்கட்டத்தில் எனது தகவல் தளத்தில் (Data base) இருந்து ஒரு பொருத்தமான கடந்தகால நிகழ்வு ஒன்று எனது ஞாபகத்திற்கு வருகின்றது. ஒருநாள் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் சீடர்கள் அவரை நாடி, "சுவாமிகளே எங்களுக்கு கடவுள் என்றால் யார்? அவர் எங்கிருக்கின்றார்? அவரை வரைவிலக்கணப்படுத்தலாமா?" என வினாவினர். சுவாமிகளோ தனக்கு வந்த சோதனையை முற்றும் உணர்ந்தவராக சிறிது நேரம் மௌனம் காத்துவிட்டுப் பொறுமையோடு பேசினார். "சகோதரர்களே! உங்கள் கேள்விக்குத் தகுந்த விடையளிக்க எனது சிறிய கேள்வியொன்றுக்கு நீங்கள் பதில் தர வேண்டும்" என வேண்டித் தொடர்ந்தார். "பக்தர்களே சக்தியையும் (Energy), அதன் மூலத்தையும் (Source of energy) உங்களால் வரையறுக்க முடியுமா?" என்றார். சீடர்களோ ஒருவரையொருவர் பார்த்துவிட்டுத் தலைகுனிந்து நின்றனர். அடிகளாரோ அமைதியாகக் கூறினார். நாளாந்த வாழ்க்கையில் நீங்கள் சக்தியினைப் பல்வேறு வடிவங்களில் (Different forms of energy) உணர்ந்து, பார்த்துத் தொட்டுப் பயன்படுத்தி வருகின்றீர்கள். ஆனால், உங்களால் அதை வரையறுக்க முடியவில்லை. அப்படியாயின் உங்களைப் போன்றவர்களால் அரிதாக உணரப்படுகின்ற, கட்புலனாகாத கடவுளை (Invisible God) எப்படி வரையறுக்கலாம்? என்றார்.

தமது கொள்கையில் வரையறையற்ற மனிதர்கள் பலர் மனிதம் என்ற முறையை (Religion of Humanity) மறந்து, அதை விலங்கிட்டு, அதற்குரிய கடவுளை வரையறுக்க முற்படுகின்றனர்.

இங்கு பாருங்கள் இந்தச் சிறுவனின் பரிதாப நிலையை! இவனைப் பெற்றுப் பாலூட்டிச் சீராட்டிய தாய் கொடிய யுத்தத்திற்கு இரையாகிய நிலையில்,

அறிவூட்டிய தன் தந்தையைப் பிரிந்து,
அன்பு காட்டிய சோதரியைக் காமுகர்களிடம் இழந்து,
கூடிவிளையாடிய சோதரனைக் காணாமல் தேடி,
கால் ஒன்றை இழந்து, உடலும் ஊனமாகி,
அழியாச் செல்வம் கல்வியது எட்டாக் கனியாகச்
செய்வதறியாது தவிக்கின்றான்.

இயேசு பிரான் கூறியிருந்தார் எவன் ஒருவன் சிறுவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றானோ, அவன் ஏந்திரக் கல்லைத் தனது கழுத்தில் கட்டி ஆழமான கடலில் குதிப்பது அவனுக்கு நலம் என்று. அவ்வாறாயின் இச்சிறுவனின் வளர்ச்சிக்குத் தடையானவர் யார்? இவனின் ஊமையான உள் உணர்வுகளின் கோஷங்களும், புலம்பல்களும், யாரால் செவிமடுக்கப்படும், அவன் எங்கு

செல்வான்? இந்த யுத்தப்பாரினில்? சாந்தியளிக்கும் சமாதானம் இவனை அணுகுமா? இல்லை, இவன்தான் அதைத்தேடுவானா? சமாதானத்தையடைய இங்கு யுத்தமே ஒரு தனித்துவமான கருவி என்றால், அவன் எவ்வாறு அதைத் தேடுவான்? பிசாசின் ஒரு உன்னதமான கண்டு பிடிப்புத்தான் யுத்தம். (The greatest invention of the devil is war!)

ஒருமுறை பாடசாலைக் கண்காணிப்பாளர் (School Inspector) வகுப்பறை ஒன்றினுள் நுழையும்போது மாணவர்கள் போடும் சத்தமும், கூச்சலும் அவரை மிகவும் விசனப்படுத்தியது. அவர் வகுப்பாசிரியரிடம் எனது வருகையை மாணவர்கள் அறிந்தும் கூட ஏன் இப்படியாக முறைகேடாகச் சத்தமிடுகின்றனர் என எரிந்தார். பதட்டமடையாத ஆசிரியர் அவர்கள் சத்தமிடவில்லை. அவர்கள் அமைதியின் நன்மைத்தனத்தனத்தைப் பற்றிக் (Benifits of Silence) கலந்துரையாடுகின்றனர் என்றார். இதைக்கேட்ட கண்காணிப்பாளர் விரக்தியுற்றவராக வெளியேறினார். ஆம், எங்கும் பேச்சளவில் மட்டும் வர்ணிக்கப்படும் சமாதானம், அதைத் தேடுபவர்களுக்குக் கானல் நீராக அமைதியை, சமாாதானத்தை அடைய முதலில் என்ன தேவை என்பதை உணர்ந்து கொள்ள முடியாத நிலை நீண்டு செல்கின்றது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யத் தடையான காரணகர்த்தாக்கள் யார்? சம்பந்தப்பட்ட முகமூடித் தலையாட்டிகள் யார்? இந்த "யார்?" என்பவர்கள் யார்? என்ற கேள்விக்கு விடையாக அமைவது இந்த உலகின் மனித வர்க்கமே! "மனித வர்க்கம்" என்ற பதத்தை பகுக்காது மாறாகப் பாரின் ஒவ்வொரு தனிமனிதனும் இந்நிலைக்குப் பொறுப்பானவன் என்பதே தகும்.

எம் மனிதனும் தன் வாழ்க்கை என்னும் பாதையில் கடக்கும் ஒவ்வொரு பகுதியிலும் தனது சுயநலன் பேணாத பொறுப்புக்களை உணர்ந்து இயலுமானவரை தனது கிட்டிய சூழலில் சகோதரத்துவத்தை வளர்த்து அதை நிறைவடையச் செய்ய வேண்டும். இதுதான் மனித நேயத்தினதும், அது தம் சமாதானத்தினதும் முதலும் மூலமும் ஆகும். இந்நிலையை எய்திய ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் வெற்றி பெற்றவனாகத் திகழ்கிறான். அவனது கொடிய பகைவனும் அவனுக்கு நண்பனாவான். அவன் எங்கும் வரவேற்கப்படுவான். நம்பிக்கைக்குப் பாத்திரமாவான், அவனது உணர்வுகள் மதிக்கப்படும்.

இவற்றையடைந்து மனிதம் காக்கும் மாமனிதனாக, இவன் என்னை எவ்வகையில் கையாளப் போகின்றான்? இச் சமூகத்தில் ஒரு வெற்றி பெற்ற மனிதனாக நான் திகழ எனக்கு கை கொடுப்பானா? இன்று கைவிடப்பட்டுக் கலங்கும் இச்சிறுவர்களின் ஊனமுற்ற சமூகத்தின் தேடல்களை நோக்கி, அவர்கள் வழிகாட்டும் பாதையில் வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்லும் நான், நாளையும் இப்பணிக்கே அழைக்கப்படுவேனா?

கலையிழந்து கட்டுண்டு கலங்கும் எந்தவொரு சமுதாயமும் பாரினில் மீண்டும் மீட்கப்பட வேண்டும்.

சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும்.
மனிதம் எங்கும் மதிக்கப்பட்டுப் பூஜிக்கப்பட வேண்டும்.
கல்வியைத் தேடிப் பெற்று அதைப் பெறாதோர்க்கு நிறைவாக வழங்க வேண்டும்.
மனித சுதந்திரத்தை, சிந்தனையை சிறையிலிடாத கலை, கலாசாரம்,
உயிர்பெற்று விருது பெற வேண்டும்.
மனிதம் காப்பவனே மனிதன், இல்லையேல் அவன் சடம்!

# தமிழ்த் தகவற் துறை பற்றிய சில தகவல்கள்

சி. சிவசேகரம்

**1999**ம் ஆண்டு இளங்கதிருக்கு நானெழுதிய கட்டுரைக்கு ஏற்பட்ட விபத்தின் பின்னும் இளங்கதிருக்கு நான் ஒரு கட்டுரையை எழுதுகிறேன் என்றால் மனித இனத்தின் மீது இன்னமும் நான் மிகுந்த நம்பிக்கை உடையவன் என்பது தான் அதன் பொருள் என்று வைத்துக்கொள்ளுங்கள். என்றாலும் அந்த விபத்துத் தொடர்பான சில விடயங்கள் நம் எல்லோரதும் கவனத்துக்குரியன. கட்டுரையின் கையெழுத்துப் பிரதியின் இரண்டு பக்கங்கள் முன்பின்னாக மாறித் தட்டெழுதப்பட்டதைச் சஞ்சிகை ஆசிரியரோ கணனிப் பிரதியைப் பிழைதிருத்தியவரோ கவனிக்கவில்லை என்பது ஒன்று. அத் தவறின் விளைவாக கட்டுரைப் போக்கிலும் இரண்டு வாக்கியங்களின் அமைப்பிலும் உள்ள குளறுபடிகளும் அபத்தமான ஒரு கூற்றுக் கூடக் கட்டுரையை வாசித்தாகச் சொன்ன எவருக்கும் தென்படவில்லை. பிழை சுட்டிக்காட்டப்பட்ட பின்பும் சஞ்சிகை ஆசிரியரோ சஞ்சிகை சம்பந்தப்பட்டோரோ அதை ஒரு பொருட்டாகக் கருதியதாகவும் தெரியவில்லை.

மேற்குறிப்பிட்டவாறான அனுபவம் எனக்கு அதற்கு முன்னரோ பின்னரோ நிகழ வில்லை என்று நான் கூறமுடியாது. பலருக்கும் இனியும் நிகழாது என்றும் எண்ண இடமில்லை. வேறு யாருக்கும் நெடுங்காலமாக அவ்வாறு நிகழ்ந்து வந்துள்ளது என்பதும் அதை நாம் மிகுந்த அசட்டையுடன் சகித்துக் கொள்ளப் பழகிவிட்டோம் என்பதுமே நம்பகமான உண்மைகள். அதை ஊக்குவிக்கும் மனோபாவம் தமிழ் அறிவுத்துறையை நீண்ட காலமாகவே பீடித்துள்ள ஒன்று என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. தகவல்களின் செம்மை பற்றிய அக்கறையின்மை தமிழ்ச் சமுதாயத்தின் சிந்தனை வளர்ச்சிக்கு ஒரு தடைக்கல்லாகவே தொடர்ந்தும் இருக்கும் என்ற அச்சத்தின் விளைவாக, இங்கு அதுபற்றிச் சிறிது எழுதுகிறேன். அதற்கான தீர்வு எந்த ஒருவர் கையிலும் இல்லை. மறுபுறம், ஒரு சமூகம் என்ற வகையில் நாம் செய்யக்கூடியவை மிகவும் உள்ளன. தமிழிற் தகவல்களை வழங்குவதில் உள்ள குறைபாடுகளின் சில அம்சங்களை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறேன். இவற்றுக்குப் பின்னாலுள்ள அடிப்படையான பிரச் சினைகள் பற்றி நாம் ஆழச் சிந்திக்க வேண்டும் என்பது எனது விருப்பம். அவ்வாறான சிந்தனை நமது கல்வித்துறை, தகவற்துறை, படைப்பிலக்கியம், திறனாய்வு போன்ற பல தளங்களிலும் நல்ல மாற்றங்களைக் கொண்டுவரும் என்பது என் எதிர்பார்ப்பு.

பொதுவாக, ஈழத்திலும் தமிழகத்திலும் அரசாங்கத்தினரால் வெளியிடப்படும் நூல்களிற்

தகவல்களின் செம்மை பற்றியும் கருத்துக்கள் தெளிவுடன் கூறப்படுவது பற்றியும் மிகுந்த கவனம் காட்டப்படுகிறது. அவ்வாறே பல தன்னார்வ முயற்சிகளிலும் போற்றத்தக்க செய்நேர்த்தியை நாம் காணமுடியும். வழுக்கள் எப்போதுமே நேர்வதில்லை என்று எவருங் கூற முடியாதெனினும் அவை சுட்டிக்காட்டப்படும் போது திருத்தப்படுகின்றன என்பது முக்கிய மானது. அதே வேளை, நமது கல்வித்துறை பெருமளவுக்குச் சீரழிந்துள்ளது என்பதும் தமிழ் மூலம் உயர்கல்வி பற்றி முப்பது வருடங்கட்கு முன்பிருந்த உற்சாகமும் நம்பிக்கையும் மிகவும் தளர்ந்துள்ளன என்பதும் முக்கியமானவை.

கல்வியின் முக்கிய நோக்கம் பட்டம் பெறுவதும் உத்தியோகம் பெறுவதும் உயர் பதவியும் பொருள் ஈட்டுவதுமே என்பது நாம் காணும் உண்மையான நிலை. கல்வி அறிவு என்பதன் பெறுமானம் குறுகிய தனிப்பட்ட தேவைகட்குள் முடங்கிப் போவதே இங்கு தீங்கானது. கல்வியும் மருத்துவமும் இன்று வணிகப் பொருட்களாகி விட்டன. கலைகளும் ஆன்மிகமுங் கூட இன்று அப்பட்டமான வணிகப் பொருட்களாகி விட்டன. இது முதலாளி த்துவ சமூக வளர்ச்சியின் தவிர்க்க முடியாத விளைவு. இதற்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பதிற் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். எனினும் வணிக நோக்கின் ஆதிக்கமே மிகுந்து ள்ளது என்பது பற்றிக் கருத்து வேறுபாடு இராது. 1977 இன் பிறகு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் அப் போக்கை மிகவும் ஊக்குவித்துள்ளது. இன்று அது 'உலகமயமாதல்', 'திறந்த பொருளாதாரம்', 'புதிய உலக அமைப்பு' என்ற போர்வைகளின் கீழ் மேலும் மும்முரமாகத் தொடர்கிறது.

திறந்த பொருளாதாரமோ உலகமயமாதலோ, புதிய உலக அமைப்போ நமது பார்வை யை விரிவுபடுத்தியுள்ளதாகவோ அறிவைக் கூர்மைப்படுத்தியுள்ளதாகவோ எனக்குத் தோன்றவில்லை. முன்னை விட அதிகளவிற் தகவல்கள் நம்மை வந்தடைகின்றன. ஆயினும் தகவல்கள் எவ்வளவு செம்மையாக நமக்கு வழங்கப்படுகின்றன என்பதும் அவற்றிடையே உள்ள உறவு பற்றிய புரிந்துணர்வு எவ்வளவு என்பதும் கவனத்துக்குரியன. விஞ்ஞானத் தகவல்கள் கூடச் சினிமா 'கிசுகிசு' செய்திகளின் பரபரப்புத் தன்மையுடனும் பின்னவற்றுடன் ஒப்பிடத்தக்க செம்மையுடனுமே நமது செய்தி ஏடுகளிற் தரப்படுகின்றன. அயல் விவகாரங்கள் நமக்கு வழங்கப்படும் போது ஊர்களதும் மனிதரதும் பேர்கள் கைக்கு வந்தபடி எழுதப் படுகின்றன. தமிழ் எழுத்துமுறையின் குறைபாடுகள் ஒருபுறம் இருக்கத் தமிழ் எழுத்து முறையின் ஆற்றலுக்குட்பட்ட செம்மையையும் நம்மாற் காண முடிவதில்லை. பத்திரிகைத் துறையை ஒத்த, அல்லது அதினும் ஒருபடி மோசமான நிலைமையையே நாம் ஒலிபரப்பு ஒளிபரப்புத் துறைகளில் அவதானிக்க முடிகிறது. நம் அரசாங்க ஒலிபரப்பு ஒளிபரப்புத் நிறுவனங்களில் உள்ளவர்களைத் தவிர்த்தால் தமிழில் அறிவிப்பாளராகப் பணியாற்று வதற்கான குறைந்தபட்சத் தகுதி தமிழில் ஒழுங்காகப் பேசத் தெரியாமை என்றே தோன்று கின்றது.

தமிழ்ப்பேச்சும் எழுத்தும் வணிகக் கலைகளால், குறிப்பாகத் தமிழ்ச் சினிமாவாலும், தொலைக்காட்சியாலும் மிகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. சமூக வழக்கில் உள்ள 'இயல்பான' பேச்சுமுறை பொழுதுபோக்கு ஊடகங்களூடு வலிந்து திணிக்கப்படும் போலித் தனமான பேச்சுமுறைக்குப் பலியாவதை நாம் அடையாளங்காண்பதிற் சிரமம் இராது. (தமிழ்ப் பொழுது போக்கு ஊடகங்கள் மூலமாக நம்மை வந்தடையும் சமூகச் சீரழிவுச் சிந்தனைகள் பற்றி இங்கு நான் கூறமுற்படவில்லை) இந்தப் பகட்டான மொழி உள்ளடக்கத்தின் வறுமையையும் பல சமயங்களில் வெறுமையையுமே மூடி நிற்கிறது.

பொழுது போக்கு என்ற பேரில் நமது மொழியும் பண்பாடும் சீரழிவுக்கு உள்ளாகும் அதேவேளை, செய்தி, ஆய்வு என்ற பேர்களில் நமது சிந்தனையை முடக்குகின்ற காரியங்களே

பரவலாக ஊக்குவிக்கப்படுகின்றன. நமது செய்தி ஊடகங்களில் உள்நாட்டுச் செய்திகளாயினும் உலகச் செய்திகளாயினும் ஒருதலைப்பட்சமாகவே வழங்கப்படுவது வழமையாகிவிட்டது. தமக்கு உடன்பாடற்ற தகவல்களை, வழங்கும் போது அவற்றின் மீது தமது சொந்தக் கருத்தை ஏற்றிக் கூறுவது செய்தியாளர்களிடையே பரவலான வழக்காகி வருகிறது. உலக நிகழ்வுகள் பற்றிய அறிவும் பார்வையும் குறைந்த செய்தியாளர்கள் மேலாதிக்க நிறுவனங்களிடமிருந்து வரும் தகவல்களை எந்தவிதமான ஆய்வோ விசாரணையோ இல்லாது வெளியிடுவது நாம் கா ணக்கூடிய ஒன்று. குறிப்பான சில பிரச்சினைகளை நான் இங்கு தொட்டுக்காட்டலாம். வடக்கின் போர் நிலவரம், இந்தியாவின் அணுஆயுதப் பரிசோதனைகள், காஷ்மீர் விடுதலைப் போராட்டம் போன்றவற்றின் தமிழ்ச் செய்தி ஏடுகளின் நடத்தையில் ஒரு பக்கச்சார்பு ஒருபுறமிருக்க ஒன்றுக்கொன்று முரண்பாடான நிலைப்பாடுகளையும் நம்மாற் தவறவிட இயலாது. சமயங்களின் சார்பான ஒழுக்க விழுமியங்களும் ஆபாசமான தோற்றங்களிற் பெண்களது படங்களும் ஒரே ஏட்டில் வருவதைக் காணக்கூடிய ஒரு பின்னணியில் இந்த விதமான முரண்பாடுகளை நாம் எதிர்பார்க்காமலிருக்க இயலாது. மிகவும் கீழ்த்தரமான விடயங்களை எல்லாம் வாசகர்களது ரசனை மீது, சுமத்திவிட்டு, மக்களின் வாசிப்பின் தரத்தையும் ரசனையையும் மேலும் கீழிறக்கி வியாபாரம் நடத்துவதே இன்று நமது பொழுதுபோக்கு ஊடகங்களிலும் செய்தி ஊடகங்களிலும் ஏற்கப்பட்ட நடைமுறையாகி விட்டது.

**இன்று தமிழ்த்தேசியவாதம் மொழிப்பற்றுச் சார்ந்த ஒன்றாக இல்லை.**

இன்று தமிழ்ச் செய்தியின் தரம் எவ்வளவு கீழிறங்கி விட்டது என்பதை நமது நாளேடுகளின் ஆசிரியர்கள் உணர்கிறார்களோ என்பதே ஐயத்திற்குரியதாகி விட்டது. அண்மையில் பத்திரிகைக் கலை பற்றி ஒரு பட்டறை நடத்தத் தமிழகத்தின் பிரபல ஏடான தினத்தந்தியைச் சேர்ந்த ஒருவர் அழைக்கப்பட்ட செய்தியை வாசித்த போது நமது தரத்தை எவ்வளவுதூரம் கீழிறக்க முடியுமோ அவ்வளவு தூரம் கீழிறக்குவது என்ற உறுதியுடன் சில தமிழ்ப் பத்திரிகை நிறுவனங்கள் செயற்படுகின்றன என்றே தோன்றியது.

தமிழ்ச் செய்தி ஏடுகளின் குறைபாடுகள் பற்றி ஈழத்துத் தமிழ்ச் செய்தி ஏடுகளின் ஆசிரிய பீடங்களில் உள்ளவர்களிடம் பேசி இருக்கிறேன். அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகள் பற்றி அறியவோ உரிய நடவடிக்கை எடுக்கவோ அவர்கட்கு அக்கறை இல்லை என்றே தெரிகிறது. மக்களைக் கவர்வதற்கான மலிவான உபாயங்கள் எவையெவையெல்லாம் உள்ளனவோ அவை பற்றிய அக்கறையே அவர்களிடம் உள்ளது. நமது சமூகத்தின் சீரழிவு அதன் ஒவ்வொரு துறையையும் தீண்டியுள்ளது. அரசியலை எல்லாருமே குறைகூறுகிறார்கள். அரசியல்வாதிகளை ஏளனம் செய்யும் பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் முதலில் தங்களுடைய சொந்த நடத்தைகளை விமர்சிப்பது பயனுள்ளது என்பது என் எண்ணம்.

தமிழ்த் தகவல், எழுத்துத் துறைகள் எப்போதுமே இந்த விதமாக இருந்ததாகக் கூற அவற்றில் வீரியமும் எழுச்சியும் இருந்த ஒரு காலம் இருந்தது. தாய்மொழிக் கல்வி மீது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இருந்த ஒரு காலம் இருந்தது. தமிழ்ப் பற்று என்பதைத் தமிழரின் வாழ்வோடு நெருக்கமாக நோக்கிய காலமும் அதுவே. இன்று தமிழ்த்தேசியவாதம் மொழிப் பற்றுச் சார்ந்த ஒன்றாக இல்லை. அதில் மொழியின் (இடம்) சடங்குத் தன்மை மிகுந்த ஒன்றாக உள்ளதே ஒழியத் தமிழ் மக்களின் மேம்பாட்டுடன் நெருக்கமாக இணைந்ததும் அதற்கு மிகவும் அவசியமானதுமான ஒன்றாக இல்லை.

தமிழருக்குச் சிங்களம் (அல்லது இந்தி) இல்லாது போயின் நமக்கு போதுமானது.

அதற்காக ஆங்கிலத்தின் நிரந்தர ஆதிக்கத்தை நாம் ஏற்கத் தயாராக இருக்கிறோம். தமிழ்க் கல்வி பற்றியும் தமிழ் மூலம் தகவல்கள் பற்றியும் நம்மிடையே எடுக்கப்படும் முயற்சிகள் சமகால உலகையும் நவீனவறிவியலையும் தொழில் நுட்பத்தையும் தமிழ் மூலம் தமிழுக்கு வழங்கும் நோக்கில் அமைவதாகத் தெரியவில்லை.

தமிழைக் கணனி யுகத்தின் மையத்துக்கே கொண்டுவருவதும் தமிழ் மூலம் கணனியை இயக்குவதும் பற்றிய பிரகடனங்கள் தமிழினதும் தமிழரதும் இன்றைய உண்மையான நிலையைக் கணிப்பில் எடுப்பன அல்ல. தமிழ் மீதான அக்கறையை நாம் நமக்குப் பரிச்சயமான சில துறைகட்குள் முடக்கிக் கொண்டுள்ளோம். தமிழரின் சிந்தனையை விரிவுபடுத்துவது பற்றிய அக்கறை நமக்கில்லை. சுயலாபமும் விளம்பரமும் தேடும் ஆய்வறிவாளர்களால் தமிழினமோ தமிழரோ உயர்வுக்கு வழிகாட்ட இயலாது.

தமிழ் நவீன உலகுக்கும் 'தகவல்யுகத்துக்கும்' முகங் கொடுக்கக் கூடிய ஒரு மொழியாக வளர வேண்டுமாயின் அதைக் கணனிக்குப் பொருத்தமானவகையில் வளர்ப்பதை விட முக்கியமான காரியங்கள் நம்முன் உள்ளன. தமிழின் அறிவுத் தரம் உயர வேண்டும். மனித அறிவைப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அளவிடுவதன் பொருத்தமின்மை பற்றி நான் விரிவுபடுத்த அவசியமில்லை. பாடசாலை பல்கலைக்கழக வகுப்பறைகட்கும் வெளியே தான் நமது அறிவின் பெரும்பகுதி பெறப்படுகிறது. நம் உலக அறிவை வளர்ப்பதிற் செய்தி ஊடகங்களின் பங்கு பெரியது. அவை பற்றிய திறந்த விவாதங்களின் பங்கு பெரியது. புதுமை, நவீனத்துவம் என்று மார்தட்டிக் கொண்டுவரும் பொம்மலாட்டங்களாகினதை விடத் தெளிவான சிந்தனையின் பங்கு பெரியது. செய்நேர்த்தியின் பங்கு பெரியது. எல்லாவற்றினும் மேலாக எதையும் கேள்விக்குட்படுத்தும் நேர்மையான விமர்சன மனோபாவத்தின் பங்கு பெரியது. இன்று நமது கல்விமுறையோ தகவற் துறைகளோ அதை ஊக்குவிக்கத் தக்கன வற்றைச் செய்யவில்லை என்பது வருத்தத்துக்குரிய உண்மை.

பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பைப் பெற்ற மாணவர்கள் தமிழ்ச் சமூகத்தைப் பீடித் துள்ள சிந்தனைத் தேக்கத்தை உடைப்பதில் மிகவும் பெரிய பங்காற்ற முடியும். தீர்வுகளாக எவற்றையும் முன்வைப்பதை விட உங்கள் அக்கறைகளை விரிவுபடுத்துங்கள் எவரையும் எதையும் கேள்விக்குட்படுத்தவும் விமர்சிக்கவும் ஒருபோதும் தயங்காதீர்கள் என்று கேட்டுக் கொள்வதே இவ்விடத்துப் பொருந்துவதும் போதுமானதாகும்.

**கார்ட்டூன்**

*தமிழ் மொழிப் பத்திரிகையில் முதன் முதல் கார்ட்டூனை வெளியிட்டவர் மகாகவி பாரதியார். கார்ட்டூனைக் கருத்துப் படமெனலாம். 'மணிமேகலை' என்ற காப்பியத்தில் 'புனையா ஓவியம்' என இது விதிக்கப்படுகிறது. ஆதி காலத்து குகை மனிதன் முதன்முதல் வரையத் தொடங்கியது கார்ட்டூன் வடிவில் தான். நமது பண்டைய கோவில்களில் பூத கணங்கள், யாளி, இறைவர்களின் வாகனங்கள் என்பனவும் கார்ட்டூன் வடிவங்களாகவே அமைக்கப்பெற்றுள்ளன. பக்கம் பக்கமாக எழுத வேண்டிய ஒரு செய்தியை கார்ட்டூனில் மிக இலகுவாக எடுத்துக் காட்டி விடலாம். ஒரு நாட்டின் ஆட்சியையே மாற்றியமைக்கும் வல்லமை கேலிச் சித்தரங்களாகிய கார்ட்டூன்களுக்கு உண்டு.*

# நம் தமிழர் வாழ்வும் - தமிழ் சினிமாவும்

தி. மகேஸ்வரராஜா, இறுதிவருடம், பொறியியல் பீடம்

இன்றய தமிழ் பேசும் சமூகம், எந்த நாட்டில் இருந்தால் என்ன, எப்படித்தான் இருந்தால் என்ன, அதனுடன் இரண்டறக் கலந்த ஒரு விடயம் தமிழ் சினிமா. தகவல் தொழில்நுட்பத்தின் உச்சக்கட்டத்திலிருக்கும் இன்றைய யுகம் விஞ்ஞான வளர்ச்சிகள் யாவும் டிதாலைத்தொடர்பளின் சுருக்கத்தையும், அவற்றின் விரைவுத்தன்மையையும், அதனை சமூகத்தின் சகல தரப்பினருக்கும் எடுத்துச் செல்லக்கூடிய விதத்திலுமேயே அதன் வளர்ச்சி அமைந்தும், இன்னும் அதன் உச்சப்பணனை அடையும் வகையிலும் சென்று கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தல் இதனை சிந்தித்தல் பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு இருந்த எமது சமுதாய் வளர்ச்சிக்கும், இன்றைய சமுதாய வளர்ச்சிக்கும் இடையில் பலத்த வேறுபாடு இருக்கின்றது. அதாவது வளர்ச்சி மாற்ற வீத்தின் விரைவு மிகவும் அதிகமானதாகும். சினிமாவின் பன்முகத்தன்மையும் தகவல் தொழில் நுட்பத்தையே இஅடிப்படையாகக் கொண்டிருப்பதனால் சினிமாவிலும் வளர்ச்சி ஏற்படும். அந்த வகையில் இன்றைய தமிழ் சினிமாவினால் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களைப் பற்றி சற்று சிந்திப்போம்.

தமிழ் சினிமா என எடுத்துக் கொண்டால் அதன் வரலாறு ஏறக்குறைய எழுபத்தைந்து வருடங்களையே கொண்டிருக்கின்றது. இந்த எழுபத்தைந்து வருடத்திற்குள் இது சமுதாயத்தின் மேல் எடுத்துக் கொண்ட பங்கோ, மிகவும் முக்கியமானது. ஆரம்பத்தில் ஊமைப்படங்கள், பின் பேசும் படங்கள் வந்தபின் ராஜாராணிக் கதைகள் என காவியப் படங்களும், அதற்குப் பின் மெல்ல மெல்ல சமுதாயப் படங்கள் என்றும் அதன் வளர்ச்சி ஆரம்பித்து, இன்று சமுதாயத்தின் ஒவ்வொரு தரப்புப் பிரச்சினைகளையும் ஆராயும் அளவுக்கு அதன் வளர்ச்சி, கதை சொல்லும் விதம் அமைந்திருக்கின்றது. ஆரம்பத்தில் சினிமா எஎன்பது, இறுக்கமான வாழ்வியல் கஷ்டங்களுக்கும், வேலைச் சுமைகளுக்கும் இடையில் இருந்த மனிதனுக்கு, ஒரு பொழுது போக்கு சாதனமாகவும், கஷ்ரமான அவனது சிந்தனைகளில் இருந்து அவனைத் தத்தெடுத்து ஒரு சந்தோஷமான கற்பனா உலகத்தில் அவனுக்கு ஒரு விடுதலையையும் கொடுத்ததனால் அதனை இவன் விரும்பத் தொடங்கி, பின் அதனை அவன் தவிர்க்க முடியாமல் போய் இன்று இதற்கு நம் சமுதாயம் அடிமையாகி விட்ட நிலையில் இருக்கின்றோம். இந்த நிலயில் இதன் வளர்ச்சிப் பாதையில் பேசும் படங்கள் தொடங்கி விட்ட நிலையில், இசைப் பாடல்களுக்கு பெரும்பாலும் முக்கியத்துவம் இருந்தது. காவியக் கதைகளை எடுத்து தமிழ் வளர்த்து அதன்

மூலம் தமிழ் நாட்டில் திராவிடக் கட்சிகள் தம் அரசியலையும் வளர்த்தன. இதில் அரசியல் தவிர, தமிழுக்கும் அதன் இலக்கியச் செழுமைக்கும் வளர்ச்சியை ஏற்படுத்தியதோடு அமையாது, படிப்பறிவில்லாத பாமரருக்குடம் நம் மொழியின் பெருமையை எடுத்துச் சொல்லக் கூடியதாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. அத்தோடு நல்ல கலைஞர்களையும் கவிஞர்களையும் இசை வலல்லுனர்களையும் உருவாக்கிய தன்மை இந்த சினிமாவிற்கு உண்டு.

இவ்வாறு வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருந்த சினிமா மெல்ல மெல்ல சமுதாயப் பிரச்சினைகளில் தன் பார்வையைச் செலுத்தி, நடைமுறைச் சமுதாயத்திலிருந்து கதைக் கருவினை எடுத்து பிரச்சினைகளைச் சொல்லி அதற்கான தீர்வுகளையும் முன் வைத்துக் கொண்டது. சினிமாவில் கூறப்படும் கருத்துக்கள் சரியோ தவறோ அவை மக்களை சென்றடைந்தன. மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. காரணம் சினிமாவின் கவர்ச்சியும், அது பரந்துபட்ட நிலையில் சமூகத்தின் எல்லாத் தரப்பு மட்டத்தினராலும் இரசனையுடன் இரசிக்கப்பட்டதுமாகும். சினிமாவில் நடிகர்களுக்கு முக்கியத்துவம் வந்து, தனிமனித ஹீரோயிஷம் உருவாக்கப்பட்டது. கற்பனையில் பார்த்த ஹீரோ நிஜத்திலும் அவ்வாறானவர் எனும் மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டது. அதை மக்களே உருவாக்கி அவர்களே ஏற்றுக் கொண்டார்கள். கதைக்காக கதாநாயகர்கள் இல்லாமல், கதாநாயகர்களுக்காக கதைகள் உருவாக்கப்பட்டன. மூட நம்பிக்கைகளும், பழமை வாதங்களும் முன்னெடுக்கப்பட்டன. மொத்தத்தில் "கலை" வியாபாரம் ஆகியது. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாய் சினிமாவின் வளர்ச்சியின் தாக்கம் தமிழ் சமுதாயத்தை பாதித்தது.

> இன்று நம் நாட்டில் உருவான, உருவாகிக் கொண்டிருக்கின்ற அத்தனை வானொலித் தமிழ் தனியார் சேவைகளும் சினிமாப் பாடல்களை நம்பியே இருக்கின்றன.

இன்று நம் ஈழத்தமிழரைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களோடு ஒப்பிடுகையில் அவர்களுக்கும் எமக்கும் பேசும் மொழியிலும், அடிப்படையான சில வாழ்க்கை முறைகளில் மட்டும் தான் ஒற்றுமை இருக்கின்றதே தவிர, அவர்களுக்கும் எமக்குமான அரசியல், சமுதாயப் பண்பாட்டு பிரச்சினைகள் வெவ்வேறானவையும், ஏன் ஒரு வகையில் ஒன்றுக்கொன்று முரணானவையும் என்று கூடச் சொல்லலாம். நம் இடம்பெயர்வுகளும், புலம் பெயர்வுகளும், யுத்த அழுத்தங்களும் அங்குள்ள வர்களுக்குத் தெரியப் போவதில்லை. நிம்மதியின்மையும், நம் மொழி, பண்பாடு, தேசம் என்ற எமது தனி மனித உரிமைகளை இழந்த நிலையில், மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றிற்கே அல்லல்பட்டு, அதே வேளையில், ஓர் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு உட்பட்டு, அதை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் வாழ்கின்ற மக்களைக் கொண்டவர்களாக நம் தேசத்தில் ஒரு பகுதியினரும், இவற்றைத் தாண்டி, இவற்றிலிருந்து விடுதலையையும் நிம்மதியையும் வேண்டி பிறதேசங்களுக்கு புலம்பெயர்ந்து சென்று அத்தேசத்தின் சமூக, பண்பாட்டு கலாசார முறைகளோடு இணைந்தும், இணைய முடியாமலும் என்று ஈழத்தமிழர் அல்லல்பட்டு அவதியுற்று நிற்கின்றனர். இச்சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், வாழ்க்கைப் போராட்டங்கள், எவற்றையாவது நாம் பார்க்கும் எந்த தமிழ் சினிமாவது எடுத்துக் காட்டுகிறதா? இல்லை. அதைத் தான் எங்கேயாவது அடிக் கோடிட்டாவது சொல்கின்றனவா? எல்லாவற்றிற்கும் விடை பூச்சியமே. எமது தேசத்தின், இனத்தின் பிரச்சினைகளின் தேடல்களும், தீர்வுகளும்

எங்கோ இருக்க இவை எங்கோ இருக்கின்றன. எந்தவொரு சமூகத்தினதும் கலை, இலக்கிய வெளிப்பாடுகள், அந்தந்த சமூகங்களின் பிரச்சினைகளை படம்பிடித்துக் காட்டு-கின்றனவாகவும், அவற்றிற்கான தீர்வுகளாகவும் இருக்க வேண்டும். அவையே அம்மக்களுக்கு பயன் பாடானதாகவும், இவர்களை முன்னெடுத்துச் செல்வதற்கான உறுதுணைகளாகவும் இருக்கும்.

சரி இவற்றை எல்லாம் தாண்டி, இக்காலப் படங்களின் கதைகளின் கருத்துக்கள், அச்சமூகத்தினரின் (தமிழ் நாட்டினரின்) யதார்த்த வாழ்வைச் சித்திரிக்கின்றதா என்றால் அதுவும் இல்லை.

வெறும் நடைமுறைச் சாத்தியமற்ற கற்பனை வாதங்களும், காதல் என்ற போர்வையில் கவர்ச்சியாட்டங்களும் மறைந்து போய்க் கொண்டிருக்கின்ற நிலப்பிரபுத்துவ சாதிய அடிப்படையிலான சமூக அமைப்புக் கதைகளின் மூலம் அவற்றை மீண்டும் மக்கள் மத்தியில் புகுத்தலும், பெண்ணடிமை வாதமும் பிரமாண்டம் என்ற வகையில் பித்தலாட்டங்களாக தமிழ் சினிமா நல்லதொரு வியாபார மார்க்கமாக போய்க் கொண்டிருக்கின்றது.

ஒரு பாடலோடு ஹீரோ முன்னேறிப் பெரிய பணக்காரனாவது சினிமாவில் சாத்தியமாகலாம். நடைமுறையில் அது எவ்வளவு கடினமானது என்று அனுபவித்தவர்களுக்குத் தெரியும். "பூர்ஷ்வா" கொள்கைகளும், காதல் போன்ற மென்மையான உணர்வுகளை மலினப்படுத்தி அவை சித்திரிக்கும் விதங்களினால் அதை சிறுமையாக்கியும், மொத்தத்தில் ஒரு சில பண முதலைகளை உருவாக்கி உலகத்தையே சோம்பேறியாக்க முனைகின்றார்கள்.

இவற்றிற்கு மத்தியில் விரல் விட்டு எண்ணக் கூடிய சில நல்ல படங்களும் வரத்தான் செய்கின்றன. வாழ்வின் பிரச்சினைகளை யதார்த்தமாகக் கூறும் தன்மையும் நல்லதொரு இரசிகனை திருப்திப் படுத்தும் கதையமைப்பும், இரசனைத் தன்மையுள்ளதாகவும் உலகத்-தரத்தினுடன் ஒப்பு நோக்கக் கூடிய விதத்தில் சில படங்களை ஒரு சில நல்ல இயக்குனர்களும் எடுக்கத்தான் செய்கின்றார்கள்.

இப்பொழுது எம் பிரச்சினைக்கு வருவோம். சினிமாவின் பன்முகத்தன்மை எனும் பொழுது அது ஆக்கிரமித்த பிரதேசங்கள், சினிமாக் கொட்டகைகள், தொலைக்காட்சி சேவைகள், வீடியோ சாதனங்கள், வானொலிச் சேவைகளில் பாடல்கள், திரை விமர்சனங்கள், இன்று தற்பொழுது கணணியில் CDக்கள் என்றும், உலக வலைப் பின்னலுடன் இணைந்த இணையத் தளங்கள், பத்திரிகைகள் என்றும் இவை, இன்று எம்மவரின் அத்தனை பொழுது போக்கு சாதனங்களையும் ஆக்கிரமித்ததோடு அல்லாமல் நம்மை அவற்றிற்கு அடிபணியவும் வைத்துக் கொண்டன. இன்று நம் நாட்டில் உருவான, உருவாகிக் கொண்டிருக்கின்ற அத்தனை வானொலித் தமிழ் தனியார் சேவைகளும் சினிமாப் பாடல்களை நம்பியே இருக்கின்றன. நேரடித் தொலைத்தொடர்பு என்று மக்களை வசப்படுத்தி ஏமாற்றி வெறும் அரட்டைகளும், சினிமாக் கேள்வி பதிலுமாக எந்தவிதமான பிரயோசனமற்ற பித்தலாட்ட நிகழ்ச்சிகளுமாக எமது காலமும் நேரமும் கடத்தப்படுகின்றன. இல்லைக் களவாடப்படுகின்றன. சாதாரண மனிதனை சிந்திக்க விடாது, அவனின் உணர்வுகளை கட்டிப்போட்டு சிந்தனைத் தன்மையை மழுங்கடிக்கின்றன. "வாசிப்பதினால், மனிதன் பூரணமடைகின்றான்" என்று சொல்வார்கள். இன்று வாசிப்புப் பழக்கம் என்பது மிகவும் அரிதான காரியமாகிவிட்டது. மொத்தத்தில் எமது சிந்தனா வளர்ச்சிளைத் தூண்டாத தகவல் தொழில்நுட்ப ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு நாம் ஆட்பட்டு இருக்கின்றோம்.

இவை எல்லாவற்றையும் தாண்டி, வெளிநாட்டில் புலம் பெயர்ந்து இருக்கின்ற எம்மவரின் பிரதான பொழுது போக்குச் சாதனமாக தமிழக சினிமா இருக்கின்றது. காரணம் அதனுடன் போட்டி போட்டுக் கொண்டு எம்மவருக்கு மாற்று ரீதியான கலையுணர்வைக் கொடுக்கக்கூடிய

எந்தவொரு கலைவடிவமும் எம்மிடம் இல்லை. இருப்பதையும் ஏற்றுக் கொள்ளும் அளவில் எம்வர்களும் இல்லை. அண்மையில் நடந்த ஆராய்ச்சி ஒன்றின் முடிவின்படி இந்த நூற்றாண்டின் இறுதியில் அழிந்து போகக் கூடிய மொழிகளில் ஒன்றாக தமிழும் இருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளார்கள். இன்று இது நம்புவதற்கு கடினமாக இருந்தாலும், இது நடக்காது என்று அடித்துக் கூறமுடியாத நிலையிலேயே நாம் இருக்கின்றோம். ஏனெனில் தமிழ் நாட்டில் தனியார் தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் தமிழ் அறிவிப்பாளர்களின் தமிழ் உச்சரிப்பும் திறமையும் எவ்வளவு தூரம் தரம் வாய்ந்தது என்று இங்குள்ள தொலைக்காட்சிச் சேவைகளூடாக அவர்களின் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது எமக்கு நன்கு தெரிகின்றது. அதைவிட இன்னும் அபாயகரமானதாய் இங்குள்ள தொலைக்காட்சி, வானொலிச் சேவைகளும் அவர்களைப் பின்பற்றி தமது நிகழ்வுகளை தொகுத்து வழங்குதல், எமது நிலைமையை இன்னும் மோசமாக்குகின்றது. தமிழ் நாட்டில் உள்ள தனியார் தொலைக்காட்சி நிகழ்வுகள் அத்தனையும் பெரும்பாலும் சினிமாவுடன் சம்பந்தப்பட்டவையாகவே இருக்கின்றன. நீண்ட அங்கங்களைக் கொண்ட நாடகங்கள் என்ற பெயரில் கதையைத் தவற விட்டு விட்டு காட்சியை நீட்டி பார்வையாளரின் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு இவை வந்துள்ளன. மந்திர-மாய ஆவிக் கதைகளும், மலினப்படுத்தப்பட்ட நகைச்சுவைத் தொடர்களும், சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும். பெண்ணடிமை வாதத்தை இன்னும் நிலை நிறுத்தத் தக்க கதையமைப்புகளும் என்று, எங்கள் மொழியும், வளமும், நேரமும் எங்கோ செல்கின்றது. நாமும் அதை தெரிந்தோ தெரியாமலோ பின்பற்றுகின்றோம். இரசிக்கின்றோம்.

முன்னைய காலங்கள் போலல்லாது ஒரு தமிழ்ப்படம் தமிழ்நாட்டில் வெளியாகும் அதே நேரத்தில் உலகம் பூராவும் தமிழர் செறிந்து வாழும் இடங்களில் வெவ்வேறு வடிவங்களில் வெளியாகின்றது. வெளிநாட்டில் உள்ள நம்மவரின் வீடுகளில் சினிமா சம்பந்தப்பட்ட படப் பாடல் வீடியோ, ஓடியோ. CD சாதனங்களோடு ஒப்படுகையில் தமிழ் புத்தகங்களின் எண்ணிக்கையும், அவற்றிற்காக செலவழிக்கப்படும் செலவினங்களும் மிகக்குறைவாகவே இருக்கும் என நான் நினைக்கின்றேன். அப்படிச் செலவிட்டு வாங்கிய புத்தகங்களும் தரமானவையா? என்பதும் ஒரு கேள்விக்கு உரிய விடயமாகும். இன்று எத்தனையோ இணையத்தளங்கள் தமிழ்சினிமாவைப் பற்றியும், நடிகர்களைப் பற்றியும் செய்திகள் கூறுவதற்காக உருவாக்கப்பட்டு, உலக வலைப் பின்னலிலும் அது தனது ஆக்கிரமிப்பை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டில் பிறந்து வாழும் எம் இளைய சமூகம் எம் நாட்டைப் பற்றிய, பண்பாட்டைப் பற்றிய அவரவர் மனங்களில் உள்ள கற்பனை அடித்தளம், சினிமாவில் காண்பிக்கப்படும் காட்சிகளை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கப் போகிறது. உண்மையில் எம் நாட்டில் நாம் வாழ்ந்த வாழ்வும், வாழ்க்கை முறைகளும், சமூக அமைப்பும் எந்தவொரு தமிழ்ப்படத்திலும் சித்திரிக்கப்படவில்லை. மொத்தத்தில் வெகுளித்தனமான நடைமுறைச்சாத்தியமற்ற நம்பகத்தன்மையற்ற காட்சிகளே நம்மிளையவருக்கு அடித்தளமாக இருந்தால் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும். "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்" என்பது மாறி சினிமாப் பழக்கமாகி விடும்.

முடிவாக இன்றைய நிலையில், சினிமா என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. ஆகவே, அது தரும் வெளிக்கொணர்வுகளில், நல்லதை எடுத்து தீயதை விடுத்து உணர, பக்குவப்பட்டவர்களுக்கு இயலும். எல்லோராலும், இதனை நடைமுறைப்படுத்தல் கடினம். எனவே, இதற்கான மாற்று வழிகளை, பொழுது போக்கு அம்சங்களை நாம் மாற்றியமைக்க வேண்டும். உலகத்தின் முன்னேற்றத்தோடு நாமும் முன்னேறும் அதேவேளையில் எம் தனித்தன்மையையும், பண்பாட்டையும் பேணிக் காப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இங்கிலாந்து அருகில் பிரான்ஸ் இருந்தாலும், பிரெஞ்சுக்காரர்கள் தம்மொழியிலும், பண்பாட்டிலும் தனித்தன்மையைப் பேணிக் காக்கக்கூடிய அளவுக்கு அவர்களிடம், வளமும், தொழில் நுட்ப அறிவுகளும், தம்மொழி

மீதான பற்றுதலும் இருக்கின்றன. இவ்வாறே ஜப்பானும், இப்படி எத்தனையோ நாடுகளைச் சொல்லலாம். எம்மிடம் அதேயளவு தொழில்நுட்ப அறிவுக்கு ஆங்கில மொழியை நம்பியிருப்பினும், எம் தனித்தன்மையை நாம் விட்டுக்கொடுக்க முடியாது. உண்மையான புரிந்துணர்வும், எதிர்கால எம் சந்ததியைப் பற்றிய அக்கறையும், எம்மிடம் இருக்குமானால் எமது உணர்வுகளில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும். "திக்கெட்டும் சென்று கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று பாரதி கூறியது போல் திக்கெட்டும் உள்ள எம் தமிழர் தம் தாய்மொழி உணர்வும், தமிழ்ப்பற்றுதலும் உள்ளவர்களாக வாழ்ந்தாலே போதும். உலகத்தில் தமிழ்மொழி தலை நிமிர்ந்து நிற்க அதுவே வழிவகுக்கும்.

## பௌத்தர்கள் என்றால் சிங்களவர் என்ற தப்பான கருத்து

பௌத்தம் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தது காஞ்சிபுரத்தில் இருந்த தமிழ் புத்த துறவிகள் பாளி மொழியிலேயே நல்ல தேர்ச்சி பெற்று காஞ்சிபுரத்தில் இருந்து மதுரை ஊடாக இலங்கை வந்தார்கள். இவ்வாறு பௌத்த மதத்தைப் பரப்ப அனுப்பப்பட்ட துறவிகளில் புத்தமிற்றா, புத்தகோசா, புத்ததாற்றா, போதி தர்மா, தர்மபால என்பவர்கள் தமிழர்கள். இலங்கையில் மூத்தசிவனிற்கும் மாந்தை இளவரசிக்கும் பிறந்த இரண்டாவது மகனே தேவநம்பிய தீசன். இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பிய தேவநம்பியதீசன் ஒரு தமிழரசன். இவன் அண்ணனான் மகாநாகனின் பேரப் பிள்ளையே துட்டகைமுனு. இவன் ஒரு நாகன் என பௌத்த சிங்கள அறிஞர் ஈ.ரி கன்னங்கரா கூறுகிறார்.

நன்றி :
பூ. ம. செல்லத்துரை, தினக்குரல்.

## இலங்கைத் தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள்

1955ம் ஆண்டுப் பகுதியில் 'புதுமைப்பிரியை பத்மாசோமகாந்தன்', றேமகள் என்ற புனைபெயர் கொண்ட வன்னி நாயகி ராமலிங்கம், பா. பாலேஸ்வரி, பவானி ஆழ்வாப்பிள்ளை, சாந்தினி போன்றோர் சிறு கதைகளைப் படைத்து வந்தார்கள். இவர்களைத் தொடர்ந்து பூரணி, நயிமா சித்திக், யாழ் நங்கை, கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, மண்டூர் ஆசோகா போன்றோர் தமிழ் இலக்கியத்துறைக்கு வளம் சேர்த்தார்கள். இவர்களுள் ஆணாதிக்கத்திற்கு எதிராக துணிவாக பெண்ணியல் வாதத்தை முன் வைத்தவர்களில் கோகிலா மகேந்திரன் முக்கியமானவர். கவிதைத் துறையில் அன்னலட்சுமி இராஜதுரை வெளியிட்ட 'இரு பக்கங்கள்' என்ற கவிதைத் தொகுதி சமகால நிகழ்வுகளை சிறப்பாக வெளிப்படுத்துகிறது. இதே போல மலையகப் பெண் எழுத்தாளர்கள் சுகந்தி வெள்ளையக்கவுண்டர், நளாயினி சுப்பையா, பாலரஞ்சனி, சர்மா, ரோகினி முத்தையா பேபி ராணி இம்மானுவேல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வெளி நாடுகளில் வாழுகின்ற இலங்கைப் பெண்களும் அக்கால கட்டத்தில் தங்கள் பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை. இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அருண் விஜயராணி, கோசல்யா சொர்ணலிங்கம், தேவா உட்படச் சிலர் தமது பரந்துபட்ட உலக அறிவின் நோக்கோடு தமிழ் இலக்கியத்திற்கு புதிதான பல அனுபவங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள்.

# பெண்களுக்கு எதிரான வன்முறையும் "பாலியல் வல்லுறவும்"

**M. M. . Mufeetha B. A. (Hons) Philosophy. Pe. Lecturer University of Peradeniya.**

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இன்று அதிகரித்து வருவது கவலை தரும் ஒன்றாகும். ஆங்காங்கு இடம்பெற்று வந்த இந்தக் குற்றங்கள் வெறும் சம்பவங்களாகப் பேசப்பட்டு காலப் போக்கில் மறந்து விடப்படுகின்றன.

கடத்தல், பாலியல் வல்லுறவு, பாலியல் இம்சை, கொலை, விபச்சாரம், நிர்வாணப்படப்பிடிப்பு, கர்ப்ப சிதைவு போன்ற வன்முறைகள் ஏற்படுகின்றன. பல்வேறு சமூக, பொருளாதாரம் மற்றும் சில காரணங்களினால் குற்றச் செயல்கள் பெருகி வருகின்றன. வீட்டுக்குள்ளேயும் அடி, உதை, கொலை, கணவனால் அவளது துணையாக உள்ள ஆண் மகனால் ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்து வருவது மனித உரிமை மீறல்களேயாகும்.

பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் எனும் விடயம் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட்டப்படும் சமகால நாடுகளிலும், அதி முக்கியத்துவம் பெறும் தவிர்க்க முடியாத அம்சமாகி விட்டது. சர்வதேச குடும்ப ஆண்டாக ஐ. நா. பிரகடனம் செய்த 1994 இல் "வன்செயல் அற்ற குடும்பங்களை உருவாக்குவதற்கான உத்திகள்" எனும் தலைப்பில் உலகளாவிய மட்டத்திலான கருத்தரங்கு ஒன்று நியூயோர்க் யுனிசெப் இல்லத்தில் நடைபெற்றது.

இலங்கையில் திருமணமான பெண்கள் மத்தியில் நிகழ்த்தப்பட்ட ஆய்வில் இலங்கையில் மணமான பெண்களில் 60% வீதமானோர் குடும்ப வன்முறைக்கு ஆளாவதாக தெரிவித்துள்ளனர். "குடும்ப வன்முறைக்கான காரணங்களை கண்டறியும் ஆய்வு ஒன்று தரும் முடிவின் படி அதிகமான வீட்டு வேலைகள், நிதி நிலைமைகள், குழந்தைகளோடு தொடர்பான விடயங்கள், கூட்டுக் குடும்ப நிலைமைகள், பாலியல் மற்றும் மனோ ரீதியான காரணங்கள் குடும்ப வன்முறைக்கு காரணமாகின்றன என அண்மையில் வெளியான செய்தி தெரிவிக்கின்றது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் ஆபாச போஸ்டர்கள் என்பனவும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஓட்டல்களில் நடைபெறும் "காபரே", "ஸ்ரிப்ரீஸ்'" நடனங்கள் மற்றும் இன்றைய "மசாஜ்" கிளினிக்குகள் முதலாளித்துவத்தால் சிருஷ்டிக்கப்பட்ட புதிய வகைப் பாலியல் சுரண்டல்களாகும். வறுமையிலும் கஷ்டங்களினாலும் தொழில் தேடி அலையும் பெண்களை தொழில் தருவதாகக் கூறி அவர்களை விபச்சார நிலையங்களில் தள்ளப்படும் அவல நிலையை இன்று நாடுகளில் காணக்கூடியதாக உள்ளது.

அதிக பணம் சம்பாதிக்கும் நோக்கம் கொண்ட முதலாளித்துவம், பெண்களை பண்ட விற்பனைக்கு விளம்பரமாக்கியது. கதைகள் நாவல்கள் ஆகியவற்றைக் கவர்ச்சிப் பெண்களின் படங்களுடன் வெளியிடுகின்றது. திரைப்படங்களில் காதல் - ஆபாச நடனம் கொண்ட காட்சிகளில் சகிக்க முடியாத அளவுக்கு ஆடைக்குறைப்பு செய்து பணத்தை சம்பாதித்து வருகின்றது. இந்த வகையில் "மனிதன் ஒரு பண்டமல்ல" என்ற கருத்து தற்காலத்திலே உலகின் கிளர்ச்சிக் குரலாகும். மனிதன் பண்டமாக்கப்படுவதன் கேடுகள் பற்றி கார்ல் மார்க்ஸ் தனது அந்நியமாதல் கோட்பாட்டில் விளக்கியுள்ளார்.

பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளுள் இன்று தலைவிரித்தாடுவது பாலியல் வல்லுறவாகும்.

இன்று எமது நாட்டில் பாலியல் வன்முறைகள் (Sexual Violence) பாலியல் வல்லுறவு (Rape) பெண்களை எந்தளவுக்கு பாதிக்கின்றது என்பதே எம் அனைவர் முன்னும் விஸ்வரூபம் பெற்றுள்ள கேள்வியாகும்.

அடிப்படை மனித உரிமைகளை புறக்கணித்து, பகுத்தறியக் கூடிய மானுடத் தன்மைக்கு புறம்பாக மனிதன் இன்று தான் பெற்றுள்ள அறிவியல் - விஞ்ஞான தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்கு ஒவ்வாத வகையில் கட்டு மீறிய விலங்கியலுணர்வை வெளிப்படுத்தும் போதுதான் தவறு விளங்குகின்றது.

கற்பு என்பது பெண்களின் உன்னத உயர்பண்பாகவும், உயிரைப் போலவே கவனத்துடன் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகவும் இருந்து வருகின்றது. கற்பு இழந்தவள் சமூகத்தில் சகல அந்தஸ்தும் இழந்தவளாகின்றாள். பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட ஒருவர் திருமணம் செய்வது கூட மாபெரும் சவாலாகவே எமது சமூகத்தில் உள்ளது. இதனால் அவர்கள் தங்கள் துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து கொண்டு வாழ்க்கையை நடத்திச் செல்கிறார்கள்.

பாலியல் வல்லுறவுக்கு சிறந்த உதாரணமாக எமது நாட்டில் இடம் பெற்ற கிருஷாந்தியின் கொலை வழக்கைக் கூறலாம். 1996ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் திகதி யாழ்ப்பாணத்தில் குறித்த பாடசாலையொன்றில் தனது உயர் தரப் பரீட்சை முடிந்து வரும் வழியில் இராணுவ வீரர்களால் வழிமறிக்கப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு இறுதியில் கொலை செய்யப்பட்டுள்ளார். இவரைத் தேடிச் சென்ற தாய், சகோதரன், அயலவர்கள் உட்பட அனைவரும் கொலை செய்யப்பட்டுள்ள அவல நிலை நாம் அனைவரும் அறிந்ததே. யாழ்ப்பாணத்தில் 7 வயது சிறுமியை 70 வயது முதியவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய செய்தி பத்திரிகைகளில் வெளியாயின. மிக அண்மையில் பிரசவத்திற்காக தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிறகு வீட்டில் இருந்த 18 வயது மகளை தகப்பன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய செய்தி பத்திரிகையில் வெளியாகியுள்ளது. வீட்டில் தன் சகோதரனாலேயே சகோதரி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட செய்தி. இது மட்டுமல்ல எமது அயல் நாடான இந்தியாவில் இருந்து திருமணம் முடித்து தன் கணவனோடு சந்தோஷமாக பொழுதை கழிக்க வந்த ரீட்டாவுக்கு ஏற்பட்ட அவல நிலை நாம் அனைவரும் அறிநத செய்தியே. இத்தகைய கொடூரமான செயல்கள் பெண்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதோடு பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகவும் உள்ளன.

மேலும் பெண்கள் போர் சூழ்நிலைகளினால் அகதிகளாக்கப்படும் போதும் பலாத்கார பாலியல் உறவுகளிலிருந்து தப்புவதில்லை. அகதிகளாக இடம் பெயரும் பெண்களுக்கு ஆதரவற்ற நிலை காணப்படுவதனால் இவர்கள் இவ்வாறான தாக்குதலுக்கு

> பாலியல் வல்லுறவுக்கு சிறந்த உதாரணமாக எமது நாட்டில் இடம் பெற்ற கிருஷாந்தியின் கொலை வழக்கைக் கூறலாம்.

இலகுவில் உள்ளாகின்றனர். போர்ச்சூழ்நிலையும் பாலியல் வல்லுறுவு அதிகரிப்பதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. எமது நாட்டில் தாம் பெற்ற மகளை கற்பழித்த தந்தைமார், சகோதரிகளை பாலியல் ரீதியில் கெடுத்த சகோதரன்மார், தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்கு உழைக்கப் போன பின் வீட்டில் இருக்கும் பருவப் பெண்களோடு தகாத உறவு வைத்துக் கொள்ளும் நெருங்கிய உறவினர்களான சித்தப்பா, மாமா போன்றவர்களின் கதைகள் பத்திரிகைகளில் நாளாந்தம் வருகின்றன. இதற்கு மாறாக தொழில் செய்ய புறப்பட்ட பெண்கள் மீது தொழில் கொள்வோரால்' பாலியல் துஷ்பிரயோகம் துன்புறுத்தல்களுக்குள்ளாக்கப்படுதல் பற்றியும் வரும் செய்திகளையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

பெரும்பாலான பெண்கள் பாதிப்புக்குள்ளானாலும் அதை வெளிப்படுத்துவதால் தம் பெயர் கெட்டுவிடும் என நினைத்து அத்தாக்கத்தை பெரும் சிரமப்பட்டு மறைத்துக் கொள்கின்றனர். இதுவே குற்றம் புரிபவர்களுக்கு சாதகமான அம்சமாகி விடுகின்றது. ஆயினும் சில சம்பவங்கள் எப்படியோ தெரிய வந்து சில நாட்களுக்கு அவை சுவாரஷ்யமாகப் பேசப்பட்டுப் பின் அப்படியே மறைக்கப்படுகின்றன.

1997ம் ஆண்டு செப்டம்பர் 25ம் திகதி தென்னாபிரிக்காவின் தலைநகரில் இடம்பெற்ற கருத்தரங்கில் பெண்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, இன, நிற, வேற்றுமை, உள்நாட்டு போர்கள் உலகை இன்று அச்சறுத்தும் வறுமை என்பவற்றால் ஏற்படுகின்ற பாதிப்புக்களும் இவைகளால் பெண்களின் வாழ்வில் ஏற்படுகின்ற அவலங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. உலகிலேயே யுத்த சூழ்நிலை காரணமாக பாலியல் வல்லுறவுக்கு உள்ளான பெண்களில் பெரும்பான்மையினர் தென்னாபிரிக்கப் பெண்களாகும் என அறியப்பட்டுள்ளது.

கணவனை இழந்து வாழும் பெண் அடிக்கடி வன்முறைக்கும் பாலியல் வல்லுறவுக்கும் இலக்காக்கப்படுகிறாள். ஆணுடனான திருமணமொன்றின் மூலமாக பாதுகாக்கப்படாத ஒரு பெண் எப்போதும் சமூகத்தின் பாதிப்புக்குள்ளாகக் கூடிய உறுப்பினராகவே உள்ளார். சமூக நடவடிக்கைகளிலிருந்தும், சமூகத்தின் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாபவர்களாகவும் உள்ளனர். இன்று சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள பெண்கள் வேலைத்தளங்களிற்குப் போகும் போதும் வரும் போதும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருவது சாதாரண விடயமாக உள்ளது. குடும்பத்தினரும் சமூகத்தினரும் பாதுகாப்பிற்கு வெளியே வேலை செய்வதும் வாழ்வதும் ஆண்களின் வன்முறை நடத்தைக்குப் பலியாகும் ஆபத்தைக் கொண்டதாக் இன்று மாறிவிட்டது.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரிப்பதனால் கருச்சிதைவுகள் சமூகத்தில் அதிகரித்துக் கொண்டு செல்வதை மறுக்க முடியாது. இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளிலும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் கருச்சிதைவு என்பது ஒரு பரவலான பிரச்சினையாக இருந்து வருகின்றது. நவீன விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புகளுக்கு முன்னாகவே மூலிகைகளாலும், கை மருந்துகளாலும் இன்னும் பல முறைகளைப் பயன்படுத்தியும் கருச்சிதைவு நடத்தப்பட்டது. இந்த இருபதாம் நூற்றாண்டிலும், எங்கும் பரவலாக கருச்சிதைவு ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றது.

பிரான்சிலிருந்து வெளிவரும் சமர் சஞ்சிகை கருச்சிதைவு சம்பந்தமான தனது கொள்கையை எந்த விதமான யதார்த்தமான ஆய்வுகளும் இல்லாமல் முடிவாக கருச்சிதைவை கொலை என்று முத்திரை குத்தி விளக்கமளிக்கின்றது.

இலங்கையில் கருச்சிதைவு செய்வது சட்ட விரோதமான செயலாகும். இலங்கையில் நாள் தோறும் சுமார் 500 சட்டவிரோதமான கருச்சிதைவுகள் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். கருச்சிதைவு பெண்களின் அடிப்படை உரிமையை மீறுவதனாலும், பெண்மை

சிதைக்கப்படுவதனாலும், ஏற்படும் தீய விளைவாகும். எனவேதான் இது போன்ற பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் குறைக்கப்படும் பட்சத்தில் கருச்சிதைவு சமூகத்திலிருந்து நீக்கப்படலாம்.

அடுத்து எமது நாட்டில் இடம் பெறும் மற்றுமொரு தீய செயல்தான் சிறுவர்- சிறுமியர் பாலியல் இம்சைக்கு உட்படுத்தப்படுதல். எமது நாட்டிற்கு விஜயம் செய்யும் உல்லாசப் பயணிகளால் சிறுவர் சிறுமியர் உடல் உள, வன்முறைகளுக்கும், பாலியல் ரீதியான வன்முறைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள். இவற்றைப் பற்றிய அறிவும் புரிந்துணர்வும், சமுதாயத்திற்கு அவசியம். இதில் சமூகத்தவர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். சிறுவர் - சிறுமியர் வீடுகளில் வேலைக்கு அனுப்பப்படுவதனால் அவ்வீட்டு எஜமானனாலோ அல்லது உறவினர்களாலோ அவர்கள் பாலியல் இம்சைக்குட்படுத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் உளவியல் ரீதியில் தொடர்கின்றது. எனவே தான் சிறுவர் சிறுமியர் இத்தகைய இம்சைக்கு உட்படுத்தப்படுவதன் காரணங்களை ஆராய்ந்து இவை தவிர்க்கப்பட வேண்டும். வெறும் பேச்சளவிலோ, எழுத்தளவிலோ நின்று விடாமல் செயல் முறையில் தீர்மானங்களைத் தொடர வேண்டும். உல்லாசப் பயணிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது பற்றிய திட்டவட்டமான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஜெனீவாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழு உலக பெண்களுக்கெதிரான வன்செயல் குறித்த விசேட அறிக்கையில் பெண்ணியப் பிரச்சினைகளாக பாலியல் வல்லுறவு, மனைவியை கணவன் அடித்து கொடுமை செய்வது, கற்பழிப்பு, பெண்களுக்கு எதிராக நடைபெறும் செயல்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இதன்படி இவ் ஆணைக்குழு பாலியல் வல்லுறவை பெண்ணியப் பிரச்சினைகளில் முதன்மையாகக் கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவேதான் இன்று பெண்கள் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினையான இப்பாலியல் வல்லுறவு பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றன. இத்தகைய பாலியல் வல்லுறவில் ஈடுபட்டவர்கள் சமூகத்தில் இனங்காட்டப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அப்போது தான் இது போன்ற மிருகத்தனமான செயல்களிலிருந்து பெண்கள் விடுதலை பெற முடியும். இவர்களின் விடுதலையோடு தான் சமூகமும் விடுதலை பெற முடியும்.

புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே தமிழை வளர்ப்பதற்காக பல நிறுவனங்கள் மேலை நாடுகளில் இயங்குகின்றன. எனினும் இந்த நிறுவனங்களில் கூட நிருவாகம் கருத்துப் பரிமாற்றம் என்பன ஆங்கில மொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. சில நிறுவனங்களால் வானொலி, மற்றும் சஞ்சிகைகள் என்பன இளைய தலைமுறையிடையே பிரபலமற்றதாகவும் இருக்கின்றன. சில நாடுகளில் நிறுவப்பட்ட தமிழ் பாடசாலைகளில் தமிழ்ப் பாடங்களை ஆங்கில அட்சரங்களைக் கொண்டு எழுதி வைத்துப் படிப்பதும் அறியப்பட்டுள்ளது. அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பின்படி 18 வயதிற்குட்பட்டவர்களில் 80 சதவீதமானவர்களும் 18 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவர்களில் 50 சதவீதமானவர்களும் தமிழறிவு அற்றவர்களாக இருப்பது அறியப்பட்டுள்ளது. தமிழைப் படிப்பதால் லாபம் ஏதுமில்லை என்ற நிலைப்பாடும் தமிழைப் பேசுவது வெட்கத்திற்குரியது என்ற மன நிலையும் அதற்கு காரணங்களாக இருக்கின்றன.

# பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகள் - ஒரு பகுப்பாய்வு

பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா, தலைவர் அரசறிவியல்துறை

**அறிமுகம்**

இலங்கையின் இன முரண்பாட்டிற்கு பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதானத் தீர்வு காணும் நோக்கில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்த ஆலோசனைகளின் உள்ளடக்கம் பலவிதங்களில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை தமிழ் மக்களின் நியாய பூர்வமான அபிலாசைகளை உள்ளடக்கியுள்ளனவா? என்பது அவற்றுள் மிக முக்கியமானதாகும். ஆகவே அதில் அடங்கியுள்ள பிரதான அம்சங்களைக் காண்போம். இவ்வரசியல் யாப்புச் சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகளின் முதலாவது அத்தியாயம் அரசும் இறைமையும் மக்களும் பற்றியதாகும். இவ்வத்தியாயத்தின் முதலாம் உறுப்புரை "இலங்கை இறைமை கொண்ட ஒரு சுதந்திரக் குடியரசாகும் என்பதுடன் இலங்கைக் குடியரசு என அறியப்படுதலும் வேண்டும். இலங்கைக் குடியரசு கலைக்கப்பட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாகவிருத்தல் வேண்டும்" என்று குறிப்பிடுகிறது இவ்வுறுப்புரை முதன்முதலாக இலங்கை ஒரு ஒற்றையாட்சி அரசு அல்ல என்றும் பல் பிராந்தியங்களின் ஒன்றியம் என்றும் குறிப்பிடுவது சுட்டிக்காட்டத்தக்கதாகும். மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களை பிராந்தியங்களோடு பகிர்வதற்கு இது உதவியாக அமையும். அப்படி சமஷ்டி ஆட்சியை நோக்கிய முதற்படியாக அமைய வாய்ப்புண்டு. இவ்வத்தியாயத்தின் இரண்டாம் அத்தியாயம் பௌத்த மதம் பற்றியதாகும். இவ்வத்தியாயத்தின் முதலாம் உறுப்புரை "இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத் தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு அதற்கிணங்க அனைத்து மக்களுக்கும் மதங்களுக்கும் போதிய பாதுகாப்பை அளிக்கும் அதேவேளையில் 15ஆம் உறுப்புரையின் (1) ஆம் (3)ஆம் பந்திகளினால் வழங்கப்படும் உரிமையையும் சுதந்திரங்களையும் ஒவ்வொருவருக்கும் உறுதி செய்து பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்".

மேற்சொன்ன உறுப்புரை தனியொரு மதத்திற்கு முக்கியத்துவம் வழங்குவது குறைபாடாகும். பல மதங்களைப் பின்பற்றுவோர் வாழும் இலங்கையில் ஒரு மத சார்பற்ற அரசே பொருத்தமானதாக அமையும் எனலாம்.

இவ்வாலோசனைகளின் மூன்றாம் அத்தியாயம் அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் பற்றி எடுத்துரைக்கின்றது. இதன்கீழ் உறுப்புரை என்று ஒவ்வொரு ஆளும் உயிர்

வாழ்வதற்கான உரிமை பற்றிக் குறிப்பிட்ட உறுப்புரை இரண்டு சித்திரவதைக்கு அல்லது இழிவான நடத்தைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரத்தை வழங்குகின்றது. 11ஆம் 12ஆம் உறுப்புரைகள் சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்பதனையும் நடமாடும் சுதந்திரம் வதிவிட சுதந்திரம் என்பவற்றை வழங்குகின்றது உறுப்புரைகள் 14, 15, 16, 17 என்பன சிந்தனை, கருத்து வெளியீடுகள், பேச்சு ஒன்று கூடும் சுதந்திரங்களை வழங்குகின்றன. இவற்றுக்கும் மேலாக 21, 22, 23 என்பன ஆதனம், சிறு பிள்ளைகளின் விசேட உரிமைகள், வலுக்கட்டாயமாக வேலைக்கமர்த்துவதற்கெதிரான சுதந்திரங்களை வழங்குகின்றன.

அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரை முன்னைய அரசியல் யாப்புகளை விட இவ்வாலோசனைகள் பரந்தளவினதான உரிமைகளை வழங்கியுள்ளமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாலோசனைகளின் நாலாம் அத்தியாயம் மொழி பற்றியதாகும். இவ்வத்தியாயத்தின் 32ம் உறுப்புரை "குடியரசின் அரச கரும மொழிகள் சிங்களமும் தமிழும் ஆதல் வேண்டும்" என்கிறது. 33ஆம் அத்தோடு 35 (1) சிங்களமும் தமிழும் குடியரசு முழுவதற்குமான இருவகை மொழிகளாக வேண்டும்" என்று கூற 39(1) சட்ட வாக்கங்கள் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆக்கப்பட வேண்டும் என்கிறது. 1978ஆம் ஆண்டின் குடியரசு யாப்பின் 13ஆம் திருத்தம் ஏற்கனவே சிங்களத்தையும் தமிழையும் உத்தியோக மொழியாக்கியிருந்தன. இருந்தாலும் அது ஒரு திருத்தமே.

இப்போது இவ்'வாலோசனைகள் (யாப்பு) தமிழுக்கு உத்தியோக மொழி தேசிய மொழி அந்தஸ்து இரண்டையும் வழங்க இருக்கின்றது.

இவ் ஆலோசனைகளின் ஐந்தாவது அத்தியாயம் பிரஜா உரிமை பற்றியதாகும். உறுப்புரை 52 (1) இலங்கைப் பிரஜை அந்தஸ்து என அறியப்படும் பிரஜாவுரிமை அந்தஸ்து ஒன்று இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. அதேவேளை 52 (2) ஆள் ஒருவர் வம்சாவளி உரிமை மூலம் அல்லது பிரஜா உரிமை பற்றிய சட்டத்திற்கிணங்கப் பதிவு செய்வதன் பயனாக அல்லது ஏதேனும் சட்டத்தின் நடைமுறையின் பயனாகப் பிரஜா உரிமைக்கு உரித்துடையவராக வந்திருந்தால் அவ்வாள் எல்லா நோக்கங்களுக்காகவும், இலங்கைப் பிரஜை என்றே கொள்ளப்படுதல் வேண்டும். 52(6) (அ) வின்படி அரசியலமைப்புத் தொடங்கும் போது 1964 அக்டோபர் மாதம் 30ம் திகதியிலிருந்து குடியரசின் நிரந்தர வதிவுள்ளவராக இருந்து வருகின்றவரும் அத்துடன் ஏதேனும் நாட்டின் பிரஜை ஒருவருமாக இல்லாதவருமான ஒவ்வொரு ஆளும், அத்துடன் 1964 அக்டோபர் 30ம் திகதியன்று குடியரசின் நிரந்தரமான வதிவுள்ளராகவும் அத் திகதியன்று ஏதேனும் நாட்டின் பிரஜை ஒருவராக இல்லாதிருந்தவருமாகிய எவரேனும் ஆளின் பிற் சந்ததியாக இருக்கின்ற குடியரசின் நிரந்தர வதிவுள்ளவரும் அரசியலமைப்புத் தொடங்கும் போது ஏதேனும் நாட்டின் பிரஜையாக இல்லாதவருமாகிய ஒவ்வொரு ஆளும் அரசியலமைப்புத் தொடங்கும் திகதியிலிருந்து இலங்கைப் பிரஜையின் அந்தஸ்தைப் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 1988ம் ஆண்டின் 39ம் இலக்க நாடற்ற ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்குதல் சட்டத்தின் பிரிவுகளுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும். மேற் சொன்ன உறுப்புரைகள் இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை முன்வைத்துள்ளன. அதாவது 1964 அக்டோபர் 30ம் திகதி இந்நாட்டில் வாழ்ந்த எல்லோருக்கும் அவர்களின் பிற் சந்ததியினருக்கும் இலங்கைப் பிரஜை அந்தஸ்தினை வழங்குகின்றன.

இவ்வாலோசனைகளின் ஆறாம் அத்தியாயம் அரச கொள்கை பற்றிய நெறிமுறைக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும் பற்றியதாகும். அதன் கீழ் உறுப்புரை 53(1) அரசானது இலங்கையர் சமூகத்தின் பன்முகமானதும் பல்லினமானதுமான இணைப்பினை அங்கீகரித்து இலங்கை மக்களின் எல்லாப் பிரிவினர்களுக்கிடையேயும் ஒத்துழைப்பையும் பரஸ்பர விசுவாசத்தையும் நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் ஊக்குவிப்பதன் மூலம் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

ஏழாம் அத்தியாயம் மத்திய நிறைவேற்றுத்துறை அதாவது குடியரசின் ஜனாதிபதி பற்றி எடுத்துரைக்கின்றது. இதன் கீழ் 56(1) இலங்கைக் குடியரசுக்கு ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் பிரதம அமைச்சரின் மதியுரையின் மேல் செயற்படுதல் வேண்டும் எனக் குறிப்பிட்டதன் மூலம் 1978ஆம் ஆண்டு யாப்பு அறிமுகம் செய்த நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறை நீக்கப்பட இருக்கின்றது என்பது தெரிகின்றது. ஏனெனில் தற்போதைய ஜனாதிபதி யாரிடமும் ஆலோசனை கேட்க வேண்டிய அவசியமில்லை. அத்தோடு ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறையிலும் மாற்றங்கள் செய்யப் பட இருக்கிறது. தற்போது ஜனாதிபதி தனிமாற்று வாக்குமுறையில் இலங்கை மக்களால் தெரிவு செய்யப்படுகிறார். ஆனால் புதிய ஆலோசனைகளின் படி பாராளுமன்ற முழு எண்ணிக்கையினரான (சமூகமளிக்காதோர் உட்பட) அரைவாசிக்குக் குறையாதோர் தகைமையுள்ள பிரஜை ஒருவருக்கு சாதகமாக வாக்களிப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எட்டாம் அத்தியாயம் ஜனாதிபதியும் அமைச்சரவை பற்றியும் எடுத்துரைக்கிறது. இவ்வத்தியாயத்தின்படி பிரதம அமைச்சரின் ஆலோசனையின்படி அல்லது குறிப்பிட்ட விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனைப்படியே எப்போதும் செயற்பட வேண்டும். ஆகவே ஜனாதிபதி ஒரு பெயரளவு நிர்வாகி என்ற நிலையிலே செயலாற்றுவார் போலத் தெரிகின்றது. வேறு விதமாகச் சொன்னால் இவ்வாலோசனைகளின் படி பிரதம மந்திரியே நிர்வாக அதிகாரமுடையவராக இருப்பார்.

ஒன்பதாம் அத்தியாயம் மத்திய சட்ட மன்றமான பாராளுமன்றம் பற்றியது அதன்படி ஆறுவருடங்களுக்குப் பதவியிலிருக்கும் 225 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைக்கப்படும். பத்தாம் அத்தியாயம் பாராளுமன்றத்தின் நடவடிக்கை முறை தத்துவங்கள் பற்றியும், பதினோராவது அத்தியாயம் அரசியல் யாப்பினைத் திருத்தும் முறை பற்றியும் எடுத்துரைக்கின்றது. பன்னிரண்டாம் அத்தியாயம் மக்கள் தீர்ப்பு பற்றி எடுத்துரைக்க, பதின்மூன்றாம் அத்தியாயம் வாக்குரிமையும் தேர்தல்களும் பற்றி எடுத்துரைக்கின்றது. இது தேருநர் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய தகைமைகள், பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகைமை, தேர்தல் ஆணைக்குழு, வரையறை ஆணைக்குழுவைத் தாபித்தல், தேர்தல் மாவட்டங்கள், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்பன பற்றி விரிவாக விளக்குகின்றன. பதினாலாம் அத்தியாயம் அரசியலமைப்புப் பேரவை பற்றிக் குறிப்பிடுகிறது. இவ்வாலோசனைகள் முன் வைக்கும் புதிய அம்சங்களில் ஒன்று இதுவாகும். இதன்படி பின்வருவோரைக் கொண்டிருக்கும் அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும்.

அ) சபாநாயகர்
ஆ) பிரதம அமைச்சர்
இ) எதிர்க்கட்சித் தலைவர்
ஈ) முதலமைச்சர்கள் கூட்டவையின் தவிசாளர்
உ) பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்

குறித்த சில ஆணைக்குழுக்களதும் பகிரங்க குழுக்களதும் உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரிலேயே தெரிவு செய்யப்பட வேண்டும்.

உதாரணமாக

அ. தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு
ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாந்துரைகளை புலனாய்வு செய்வதற்கான நிரந்தர ஆணைக்குழு
இ. அரச கரும மொழிகள் ஆணைக்குழு

இவ்வாலோசனைகளின் பதினைந்தாம் அத்தியாயம் பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கல் பற்றியதாகும். இவ்விடயம் பற்றி ஏற்கனவே பல ஆய்வுகள் வெளிவந்துள்ளமையால் அது பற்றி இங்கு மதிப்பீடு செய்வது அவசியமற்றது. ஆனால் அப்பகுதி பல குறைபாடுகள் உடையது எனப் பலராலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் அது தனியாக ஆராயப் பட வேண்டிய ஒன்றாகும்.

**முடிவுரை**

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் யாப்பு ஆலோசனைகளின் உள்ளடக்கத்தைப் பார்க்கும் போது இலங்கைப் பிராந்தியங்களின் ஒன்றியமாக இருத்தல் வேண்டும் என்ற அம்சம் தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோக மொழி அந்தஸ்து குடியுரிமை சம்பந்தமாக 1960ஆம் ஆண்டு 30ம் திகதியினை மையப்படுத்தி அனைவருக்கும் குடியுரிமை வழங்க ஆலோசனை முன் வைத்திருப்பது, அதிகாரங்களைப் பரவலாக்க ஆலோசனைகள் முன்வைத்துள்ளமை என்பன தமிழ் மக்களின் பிரச்சினைகள் சிலவற்றுக்கு தீர்வு காணும் நோக்கில் முன் வைக்கப்பட்டவையாகும். மற்றவை, உதாரணமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க இருப்பது அரசியல் அமைப்புப் பேரவை என்பன. இன முரண்பாட்டோடு சம்பந்தப்படாதவை. ஆகவே இவ்வாலோசனைகள் இலங்கைத் தமிழ் மக்களின் நியாபூர்வமான அபிலாசைகளைத் திருப்திப்படுத்துமா என்ற கேள்விக்கு விடை காண்பதனால் இல்லை என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது. ஏனெனில் இந்திய மத்தியஸ்தின் கீழ் இலங்கை அரசாங்கத்துக்கும் இலங்கைத் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் பூட்டான் தலை நகரான திம்புவில் நடந்த பேச்சு வார்த்தைகளின் போது தமிழ் மிதவாத தீவிரவாத அமைப்புகளின் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு முன்வைத்த நான்கு அடிப்படைத் தத்துவங்கள் பின்வருமாறு :

1) இலங்கைத் தமிழர்கள் தனியான தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல்.
2) அங்கிகரிக்கப்பட்ட தமிழர் தாயகத்தை அங்கீகரித்தலும் அதன் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கு உத்தரவாதம் வழங்குதலும்.
3) மேற்சொன்னவற்றின் அடிப்படையில் தமிழ் தேசத்தின் மாற்றமுடியாத சுய நிர்ணய உரிமையை அங்கிகரித்தல்.
4) இலங்கையை தமது நாடாகக் கொண்டும் தமிழர்களின் முழுமையான குடியுரிமை மற்றைய அடிப்படை உரிமைகளை அங்கிகரித்தல்.

இந்நான்கு அடிப்படைத் தத்துவங்களும் மேற்சொன்ன ஆலோசனைகளில் உள்ளடக்கப்படவில்லை.

# வீரம் செறிந்த வன்னியில் தேடல்கள்

யோகநாதன் திலீபன், விடுகை வருடம், பொறியியல் பீடம்.

*வெட்டி நாறி மலையை, வெட்டி நாறி விகாரையாக மாற்ற யாரோ அண்மையில் முயற்சி செய்திருந்தனர்.*

**வ**ன்னி என்றதும் எம் இதயக் கதவுகளைத் தட்டித் திறப்பது வீரம். ஒல்லாந்தர் கோட்டைகளை வென்று, வாட்கொடி ஏற்றி, எந்த ஏகாதிபத்தியத்திற்கும் அடிபணியாது பீரங்கிகளுக்கெதிராக வாட்களை ஏந்திப் போராடி வீர மரணமடைந்த மாவீரன் பண்டாரவன்னியனின் வீரம், அவன் தன் மறைவைக் கேட்டு நஞ்சை உண்டு மடிந்த காதலி குருவிச்சி நாச்சியின் வீரம், அறுவர் சேர்ந்து ஆண்ட வன்னி வளநாட்டை அவர்கள் அறுவரும் தமிழ் நாட்டிற்கு தலயாத்திரை சென்றபோது, கைப்பற்றப் போர் தொடுத்த அரசனிற்கு எதிராக அவ் அறுவர் துணைவியரும் பணிப்பெண் ஒருவருமாக எழுவரும் ஆண்வேடமிட்டு போர்க்கோலம் பூண்டு களம் சென்று சமராடிய வீரம் என்பது போன்ற வரலாறுகளைக் கொண்டிருக்கும் வன்னி மண் தன்னகத்தே பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்ட வரலாற்றைச் சொல்லக்கூடிய பல பொக்கிஷங்களையும் கொண்டுள்ளது என்பது யாவருக்கும் தெரிந்திருக்க நியாயம் இல்லை. எனவே யாவரும் அவற்றைத்தெரிந்து கொள்வதன் மூலம் இனிவரும் காலங்களில் பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்ட வரலாறுகள் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற அவாவிலேயே இக் கட்டுரையை எழுத விழைந்துள்ளேன். வன்னி மண்ணில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் கண்ணி வெடிகளும் தோட்டாக்களுமே பதில் சொல்லிக் கொண்டிருக்கும். இன்றைய நிலையில் இக் கட்டுரை தேவையான என நீங்கள் கேட்கலாம். இன்றைய சூழ்நிலையில் இத்தகைய ஆய்வுகள் சாத்தியப்படாத ஒன்றாக உள்ள போதிலும் இனிவரும் காலங்களில் அது சாத்தியப்படலாம். அப்படியான ஒரு சூழ்நிலை உருவாகும் போது அவ்வரலாறுகளை வெளிக் கொண்டு வர விளையும் சமகால புத்திஜீவிகளிற்கு முன்பு கண்டறியப்பட்ட சில் தகவல்களைக் கடத்துவதே எனது நோக்கமாகும். இதில் வரும் எந்தத் தகவலும் என்னால் கண்டறியப்பட்டவை அல்ல. இதை உனது சொந்தக் கட்டுரை என்பதை விட பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்த, பல்வேறு ஆசிரியர்களினதும், தொல்பொருள் ஆய்வாளர்களினதும் கட்டுரைகளின் தொகுப்பு என்று சொல்வதே சரியாக இருக்கும்.

வன்னி மண் இன்று வடபுலத்தே ஆனையிறவையும் தென்புலத்தே அனுராதபுரத்தையும் கிழக்கு மேற்குத் திசைகளில் இந்து சமுத்திரத்தையும் எல்லைகளாகக் கொண்ட நிலப் பரப்பாகச் (வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள்) சுருங்கி விட்ட போதிலும், முன்பொரு காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் கண்டிக்கும் இடையே உள்ள நாடு வன்னி

வள நாடு என வழங்கப்பட்டது. கிழக்கே திருகோணமலை, மட்டக்களப்பு, கொட்டியாரம், யால பாலுகமும் மேற்கேயுள்ள புத்தளம் முதலியனவும் முற்காலத்தில் வன்னி நாட்டைச் சேர்ந்திருந்தன. பின்னர் டச்சுக்காரர் காலத்தில் வன்னியின் தெற்கு எல்லையாக அரிப்பு ஆறும், காலு ஆறும் இருந்தன. இப்படியாக, வளம் கொழித்து விளங்கிய வன்னி நாடு இன்று தன் பெரும் பகுதியை காடுகளுக்குள் தொலைத்து விட்டு, சோகங்களையே சொந்தமாக்கிக் கொண்டுள்ளது. பட்டினிச் சாவுகளும் அங்கு பாதம் பதிக்கத் தொடங்கி விட்டன. ஆனால் ஈழத்தின் உணவுக் களஞ்சியம் எனப் போற்றப்படும் செந்நெற் களனியாக விளங்கிய வன்னி மண் மீண்டும் செழிக்க வேண்டும்.

முதற்கண் வன்னி என்ற பெயர் வந்ததற்கான காரணத்தை நோக்கி அப்பாற் செல்வது சிறப்பாக இருக்கும் என நினைக்கிறேன். வன்னி என்றால் நெருப்பு எவனும் பொருள் தமிழ் இலக்கியங்களில் வழங்கி வருகிறது. எனவே வன்னியர்கள் அக்கினி குலத்தின் வழிவந்தவர்கள் என்ற கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கது. அந்த வன்னியர்கள் வாழ்ந்த, வாழ்கின்ற மண் வன்னி என்றழைக்கப்பட்டது.

எவருக்கும் அடங்கிப் போகாத குணமும் இரத்தத்தில் ஊறிய வீரமும் கொண்ட வன்னியர்கள் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தனர் என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக உள்ளபோதிலும் அவர்கள் குடியேறிய காலம் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எது எப்படியிருப்பினும் இலங்கையில் வன்னியர் வரலாறு கி. பி. 436ம் ஆண்டிலேயே ஆரம்பமாவதாகக் கொள்ளலாம். "மனுநீதிகண்ட சோழன் மகன் குளக்கோட்ட மகாராசா சாலிவாகன சகாப்தம் 358ஆம் வருஷத்தில் (கி. பி. 436) யாத்திரையின் பொருட்டு இலங்கைக்கு வந்து கோணேசர் ஆலயத்தைப் புனரமைத்தான். பின்னர் ஆலயப் பணிவிடைகளுக்கும் கோணேசர் லிங்கத்திற்குப் பூசை செய்வதற்கும் ஏற்படும் செலவுகளுக்காக ஏழு நாடுகளையும் தோப்புக்களையும் ஏற்படுத்தி அவைகளில் பயிரிட்டு வருமானஞ் செலுத்துமாறு வன்னியர்களை அழைத்து குடியிருத்தினான்" (யாழ்ப்பாண வைபவமாலை, கோணேசர் கல்வெட்டு) இவர்கள் பரம்பரையினரே வன்னியர் ஆவர் . இதுவே வன்னியரின் முதலாவது குடியேற்றத்தைக் குறிக்கிறது என்று கொள்ளுதல் பொருந்தும். இதைவிட இராஜராஜசோழன் (985 - 1016) இலங்கை மீது படையெடுத்தபோது அவர்கள் படையில் வன்னியர்கள் இருந்ததாக ஆதாரபூர்வமான குறிப்புக்கள் சோழர்காலக் கல்வெட்டுக்களில் வருகின்றன. வையா பாடல் வன்னியர் குடியேற்றம் பற்றி வேறோர் கதையையும் கூறுகிறது. இலங்கை மன்னன் செயதுங்கவீரவரராசசிங்கன் மதுரை மன்னன் மகள் சாமதுதியை மணஞ் செய்த போது மதுரை மன்னன் தனது மகளுடன் அறுபது வாட்படை வன்னியர்களை இலங்கைக்கு அனுப்பினான் என்றும், அவர்களிற்கு வரராசசிங்கன் அடங்காப்பற்றை பரிசாகக் கொடுத்தான் என்றுமது கூறுகிறது. இக்கதைகள் வன்னியர்களின் தொடர்ச்சியான குடியேற்றங்களைக் குறிப்பதாகக் கருத இடமுண்டு. இனி, வடக்கே யாழ்ப்பாண மன்னர்க்கோ தெற்கே அனுராதபுர மன்னர்க்கோ பின் வந்த ஐரோப்பிய ஆட்சியாளர்களிற்கோ அடிபணியாது வாழ்ந்த குறுநில மன்னர்களான வன்னியர் தம் குடியிருப்புக்கள் பற்றிக் கிடைத்த தொல்லியல் சான்றுகளைப் பார்ப்போம். முதற்கண், முத்தரையன் கட்டு (இன்று முத்தையன் கட்டாக மருவி விட்டது) முன்பொரு காலத்தில் இராசதானியாக விளங்கியதா என்பதற்கு விடைகாண முனைந்த இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர். கே. இந்திரபால தலைமையிலான குழுவினர் 1973ம் ஆண்டளவில் ஆராய்ச்சி மூலம் பெற்றுக் கொண்ட தொல்பொருள் சான்றுகள் பற்றிப் பார்ப்போம்.


டாக்டர். கே. இந்திரபால, முள்ளியவளை ஆசிரியர் சி. கன்னையன், வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) க. கனகையா, மாமுலையைச் சேர்ந்த க. தவராசா ஊஞ்சாற் கட்டியைச் சேர்ந்த சி. கணேசபிள்ளை, கோரமொட்டையைச் சேர்ந்த க. ஜெயக்கொடி ஆகியோரைக் கொண்ட

குழுவினர், நெடுங்கேணி, பட்டாடை பிரிந்த குளம், கோரமோட்டை, வெடுக்கு நாறி மலை, வெடிவிச்ச கல்லு, முத்தரையன் கட்டு ஆகிய இடங்களில் அடர் காடுகளுக்கு மத்தியில் மறைந்திருக்கும் சாசனங்கள், கட்டிட அழிபாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்தனர். நெடுங்கேணியில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சாசனம் ஒன்று ஆராயப்பட்டது. வெடிவிச்ச கல்லிலே பாறை ஒன்றில் பொறிக்கப்பட்டிருக்கும் கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த சாசனம் ஒன்றும் ஆராயப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் முற்பட்ட சாசனங்கள் வெடுக்கு நாறி மலையிலுள்ள குகைகளில் காணப்பட்டன. இவை இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளிற்கு முற்பட்டவை. இக்குகைகளில் மூன்று கல்வெட்டுக்களும் காணப்பட்டன. முத்தரையன் கட்டிலே கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டது." எனவும் கூறும் டாக்டர். இந்திரபால தாம் முத்தரையன் கட்டுக் காட்டில் கண்ட அரண்மனையைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

"முத்தரையன் கட்டிலே ஆராயப்பட்ட கட்டிட அழிபாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும், வியப்பூட்டுவனவாகவும், காணப்பட்டன. அது ஒரு பெரிய அரண்மனை கருங்கற்களினாலான உயரமான சுற்று மதிலையும் அதனைச் சுற்றி ஆழமான அகழியையும் கொண்ட விசாலமான அரண்மனையாக அது காணப்பட்டது. அரண்மனை மத்தியில் நல்ல நிலையிலுள்ள சீராகச் செதுக்கப்பட்ட வாசல்கள் கதவுகள் காணப்பட்டன. அத்துடன் மன்னர்கள் பயன்படுத்திய பெரிய கல்லாசனம் ஒன்றும் உடையாது பேணப்பட்டு இருக்கின்றது".

இந்த அழிபாடுகளை நோக்குமிடத்து முத்தரையன் கட்டு ஒரு காலத்தில் ஓர் இராசதானியாக விளங்கியிருக்க வேண்டும் என்று கூறக் கூடியதாக உள்ளது. எனினும் அதன் பிறகு இது சம்பந்தமாக செய்திகள் எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. நாட்டுப் பிரச்சினை காரணமாக அவ்வாராய்ச்சிகள் தடைப்பட்டிருக்கலாம். இனி, வெட்டு நாறி மலையில் ஆராய்ச்சியை மேற்கொண்ட விஇ துருவசங்கரி எனும் ஆராய்ச்சியாளர், எழுதியுள்ளதைப் பார்ப்போம். அவர் அதை ஓர் நேரடி விபரிப்பாகத் தந்துள்ளார். அதனை சில சுருக்கங்களுடன் தருகிறேன்.

"பெரிய கல்லுருண்டைகள், அதனிடையே படிகள் போன்று இயற்கையாக அமைந்த அமைப்புக்கள் அதன் உதவியுடன் எட்டுப் பத்து அடிகள் ஏறியிருப்போம். எம் முன்னே மூன்று பெரிய பாரிய செவ்வக அமைப்புடைய கற்குற்றிகள், அவற்றில் இரண்டு உயர்ந்து ஒன்றிற்கொன்று சமாந்தரமாகவும், குறுகியது இவ்விரண்டையும் தொடுத்தாற் போல் குறுக்கே செங்குத்தாக இருந்தது. அம்மாதிரியான பாரிய கற்கள் அவ்வட்டாரத்தில் எவ்விடத்திலும் இல்லை. குறுக்கே கிடந்த கல் கிட்டத்தட்ட 40 அடி அகலமும். 20 அடி உயரமும் இருக்கும். அக்கல்லு வழமையாக படம் எடுக்கும் நாகத்தின் தலையைப் போல் குடையப் பெற்று மழையின் போது வடிந்து வரும் நீர் எங்கே குகைக்குள் போய்விடுமோ என்ற அச்சத்தின் நிமித்தம் குகை வாசலைச் சுற்றி விளிம்பு அமைக்கப்பட்டிருந்தது. குகை வாசலில் ஏதோ புரியாத எழுத்துக்கள், இவை எல்லாவற்றையும் புகைப்படம் எடுத்துக் கொண்டு என்னுடைய குறிப்பேட்டில் எழுத்துக்களின் மாதிரியை பதிவு செய்து கொண்டேன். பின் நீண்ட ஒரு தடியினால் குகைச் சுவர் வழியாக அதன் அடியைக் கிண்டினேன். கூட வந்த எல்லோரும் அதிசயித்தனர். அங்கே சலசலவென நீரின் சத்தம். திரும்பத் திரும்ப சோதித்துப் பார்த்தேன். அது நீரினால் நனைந்திருந்தது. இப்போது புரிந்தது அது மழை நீரைச் சேமிப்பதற்கான அமைப்பு என்று. கல்லில் விழும் மழைத்துளிகள் படமெடுத்த



பாம்பின் அமைப்பின் மூலம் சேர்க்கப்பட்டு வடிந்து கீழே உள்ள நீர்த்தொட்டியில் சேமிக்கப்படுகிறது. அப்படியாயின் முன்பு கூறியது என்ன? விளிம்பு அமைக்கப்பட்டு நீர் உள்ளே வடியாமல் அமைக்கப்பட்டது. எப்படியாக முடியும்? ரொம்ப நல்ல கேள்வி. நீங்களும் என்னுடன் சேர்ந்து உசாராகிவிட்டீர்கள். பாறை செவ்வகவடிவம் அதன் மேற்பரப்பில் தூசு முதலியன அடைவதற்கு சாத்தியம் உண்டு. அங்கே சில தாவரங்கள் கூட முளைத்திருக்கின்றன. அதனைப் பின்னர் ஆராய்வோம். அப்படியாயின் பாறை உச்சியில் விழும் நீர் வடியும் போது மண், சருகுகள் போன்றவற்றை அள்ளி சேமிப்பறைக்குள் கொண்டு வந்து சேர்த்து விடுமல்லவா, இதைத் தடுப்பதற்கு செங்குத்தாக அன்றேல் கிட்டத்தட்ட செங்குத்தாக அதாவது தூசுகள். குப்பைகள் சேராத இடத்தில் விழும் மழைநீர் மட்டுமே சேமிக்கப்படுகிறது. நில நீர் இல்லாத இடங்களில், ஆறு, குளங்கள் இல்லாத இடங்களில் குடிநீரைச் சேமிக்கும் பழக்கம் இலங்கை ஆதிக் குடிகளிடம் இருந்திருக்கிறது என்பதில் எள்ளளவிலும் ஐயமில்லை. பின், பாறையைச் சுற்றி வந்தோம் படமெடுக்கும் நாகத்தின் தலையமைப்பைக் கொண்ட குகையின் பின்புறத்தே பற்றுவாரிகள் விடக்கூடிய தரைமேலே ஒரு பக்கம் திறந்த மண்டபம். பக்கவாட்டில் இருந்த ஒன்றுக்கொன்று சமாந்தரமாகக் கிடக்கும் செவ்வகப் பாறைகள் உள்ளே வளைந்து ஒன்றையொன்று முட்டத்துடித்துக் கொண்டிருந்தன. மண்டபத்தினுள் இருந்து மேலே அண்ணாந்து பார்த்தால் ஒன்று, ஒன்றரையடி அகலத்தில் அறுபது அடி நீளத்தில் இரு சமாந்தரக் கோடுகளின் வழியாக நீல வானம் தெரிந்தது. அப்போது மழை சற்று பலமாகப் பெய்யத் தொடங்கியிருந்தது. இருப்பினும் எங்கள் மேனியில் ஒரு துளி கூட நீர் படவில்லை. ஆனால் மழைநீர், வளைந்த கற்பாறைகளின் சுவர் வழியாக வழிந்து மண்டபத்தின் தரையை அடைந்தது. எல்லாம் ஒரே விந்தையாக இருந்தது. மண்டபத்தின் மூடிய பகுதியில் தான் மூன்றாவது பாரிய கல் அடைத்துக் கொண்டிருந்தது. அதன் மத்தியில் இருந்து சற்று வலது கைப்புறமாக இரண்டரை அடி விட்டத்தில் சீரற்ற உருவில் வழி ஒன்று இருந்தது. அதனூடே எட்டிப் பார்த்தேன். அங்கு இருட்டு நிரம்பியிருந்தது. நீண்ட தடியை அவ்வழியினூடாக விட்டு உள்ளே சகல திசைகளிலும் அசைத்துப் பார்த்தேன். உள்ளே எல்லாத் திசைகளிலும் பத்து அடிக்கும் மேலாகவே குகையின் விஸ்தீரணம் இருந்தது. குகை தரைமட்டத்திற்கு கீழே குத்தென திறந்து கிடந்தது. தோழர் ஒருவர் உள்ளே இறங்கி பரீட்சிப்பதற்கு ஆயத்தமானார். ஆனால் நான் அவரைத் தடுத்து விட்டேன். எங்களிடம் டோர்ச் லைட்டோ, ஏன் கேவலம் ஒரு தீப்பந்தமோ இருக்கவில்லை. இப்படியான குகைக்குள் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகமாக இருக்கும். அது உயிராபத்தை விளைவிக்கக் கூடியது. எவ்வித தற்காப்பு வழிகளும் இல்லாமல் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அறிவற்ற செயலாகும்.

மண்டபத்திற்கு வெளியே சிறிய கற்களால் ஓட்டுச் சல்லிகளாலும் ஆன சிறிய மேடை அதை ஓரிரு காட்டு மரங்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தன. அதில் குரங்குக் கூட்டங்கள் தாவி விளையாடிக் கொண்டிருந்தன. கீழே கரடி எச்சங்கள் மூக்கை அரித்தது. ஆதிகால மட்பாண்டத் துண்டுகள் அங்கும் இங்குமாக வெளியே தலை நீட்டிக் கொண்டிருந்தன. அவற்றைக் குழப்பவோ அன்றேல் கிண்டி எடுக்கவோ நான் விரும்பவில்லை. தகுந்த முறையில் புதைபொருளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற முடிவோடு அவ்விடத்தை விட்டு அகன்று, மீண்டும் குகையின் முன்பக்கம் வந்து ஆராய்ந்தோம். குகையின் இடப்புறத்தில் அதாவது இரண்டு பாறைகள் சந்திக்கும் இடத்தில் இருந்த இடைவெளியில் சிக்கிக் கிடந்த மண்ணில் முளைத்து சிறு மரமாக காட்சியளித்துக் கொண்டிருந்தது ஆலமரமொன்று. அதன் வேர்கள் கல்லின் இடுக்கின் ஊடாக தரையை எட்டிப் பிடிக்க துடித்துக் கொண்டிருந்தது. அதனைப் பிடித்து ஏறி நாம் எல்லோரும் பாறையின் உச்சியினை அடைந்தோம். அங்கே ஒரு பீடம், அப்பீடத்தின் வெடிப்புகளில் ஓர் இரு நாகதாளி மரங்கள் ஆளவு உயரத்திற்கு வளர்ந்திருந்தன. அங்கே ஓர் பத்தடி உயரமுள்ள கற்றூண் நிலைக்குத்தாக இருந்தது. இத்தூணானது எதோடும் பொருத்தப்படாமல் சுதந்திரமாக

இருந்தது. அத்தூணில் எந்த விதமான குறியீடுகளும் காணப்படாத போதிலும், அவை எகிப்திய நாட்டில் காணப்படும் கற்றூண்களை ஒத்திருந்தன. இது மட்டுமல்ல அங்கே யாரோ விகாரை கட்ட எடுத்த முயற்சியை பறை சாற்று முகமாக அண்மையில் குவிக்கப்பட்ட சிறு கற்களும் சலித்த மணல் குவியலும் விகாரையின் கோபுரத்திற்கு தேவையான வட்டக் கற்களும் கிடந்தன.

ஆத்திரம் மீறிக் கொண்டு வந்தது. வெட்டி நாறி மலையை, வெட்டி நாறி விகாரையாக மாற்ற யாரோ அண்மையில் முயற்சி செய்திருந்தனர். அவ்வளவு தூரம் மதவெறி இலங்கையரை ஆட்டிப் படைக்கிறதா?

வெட்டி நாறி மலையின் மூன்று பாறைகளும் மனிதனின் படைப்பல்ல! இயற்கையாய் அமைந்தனவே. வடக்கு சமதரையின் முடிவில் இப்படியான கனக்குற்றி வடிவில் கற்பாறைகள் உண்டு (மகா இலுப்பள்ளம்) இப்படி இயற்கையாக அமைந்த கோடிக்கணக்கான ஆண்டுகள் வயதுடைய இடங்கள் எப்படி பௌத்த சின்னமாக முடியும்? இயற்கையான அவ்விடத்தை ஆதிக் குடிகள், தமது இருப்பிடமாக்கிக் கொண்டார்கள். அங்கு எவ்வித மத வழிபாட்டுக்குரிய சின்னங்கள் கூட இல்லை. அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகளின் தெய்வமாகப் பகலில் தெரியும் சூரியன் விளங்கியிருக்கலாம்" (சூரியனுக்கு கோவில் கட்டி வழிபடும் வழக்கம் மிக அரிதாகவே பழங்குடிகளிடம் இருந்து வந்திருக்கின்றது என்பதற்கு போதிய ஆதாரங்கள் உண்டு). என மேலும் கட்டுரையை யாழ்ப்பாண தொல்பொருள்கள் நோக்கி நகர்த்திச் செல்கிறார் ஆசிரியர். ஆனாலும் எனது கட்டுரைத் தலையங்கத்திற்கு உட்பட்டு இத்துடன் அவர் கட்டுரையை நிறுத்திக் கொள்கிறேன்.

அடுத்து வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நெடுங்கேணியிலுள்ள வெடிவைத்த கல்லு (வெடிவிச்ச கல்லு) என்னும் விவசாயக் குடிமக்கள் வாழ்கின்ற புராதன கிராமத்தில் உள்ள ஆதி முத்துமாரியம்மன் ஆலயத்தின் பாழ்ங்கிணறு ஒன்றை ஆழமாக்க முற்பட்ட போது, 1980ம் ஆண்டளவில் பெரும் பிரியத்தனத்தின் பின் வெளியே எடுக்கப்பட்ட இரண்டடி நீளமும் ஒன்றேமுக்கால் அடி அகலமும் உள்ள கல் உள்ளடக்கிய ஒரு அடி உயரமான முத்து-மாரியம்மனின் பாதவிம்பம் பதிந்த, இயந்திரம் பொதித்த பாதார விம்பம் மேலும் ஒரு வரலாறு சொல்லக் கூடிய தரும் பொருளாகத் திகழ்கிறது. இது வன்னியர் ஆட்சிக் காலத்தில் சிறப்புடன் மிளிர்ந்த ஆலயத்தினதாகும். இச்சிலை அவ்வாலயத்திலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இவை யாவும் அறியப்பட்ட தொல்பொருட்களே இவற்றை விடவும் வேறும் வரலாற்றுச் சான்றுகளாக விளங்கக் கூடிய தொல்பொருட்கள் வன்னி மண்ணில் இருக்கலாம். அவை யாவும் சமாதானம் ஏற்படும் ஒரு நாளில் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். அவை மூலம் எமது வரலாற்றுப் பாதைகளிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

**உசாத்துணை**


1. "வன்னி வீரர், நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு நினைவு மலர், வே. சுப்பிரமணியம் B. A. (Hons) - ஜனவரி - 1974.
2. இது என் மண்ணின் கதை
   வன்னிப் பிரதேசத்தில் புதிர் நிறைந்த புராதனச் சின்னங்கள் "வெட்டி நாறி மலை"
   வீ. துருவசங்கரி. M.Sc. Eng. Agro. M. Phil. Agric - சக்தி - கனமா - 02.02.1994
3. "வன்னிப்பகுதியில் பழம் சாசனங்கள், அரண்மனை ஆகியவை கண்டுபிடிப்பு!" தினகரன் 29-04-1973.
4. வீரகேசரி
   வவுனியா நிருபர். ஆர். என். எஸ் மணி - 5. 10.1980.

# நேர்காணல்

## பேராசிரியர் S. இரட்னஜீவன் கூலுடனான ஒரு நேர்காணல்

**21**ம் நூற்றாண்டின் மலர்வோடு நாம் தகவல் யுகத்தினுள் காலடி பதித்திருக்கின்றோம். பூகோளக் கிராமத்தின் உருவாக்கத்தை நோக்கி தகவல் தொழில்நுட்ப புரட்சி பயணிக்கிறது. இது பற்றிய சில தகவல்களை உங்களுடன் பகிர்வதற்காய் நாம் நேர்கண்ட பேராசிரியர் S. ரட்ணஜீவன் (H). கூல் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட கணனி விஞ்ஞானத்துறைத் தலைவராவர். இலண்டன் பல்கலைக்கழகத்தின் D Sc பட்டம் பெற்ற இவர் மூன்று பொறியியல் சார் நூல்களையும் இரண்டு சமூகம் சார் நூல்களையும் இதுவரையில் எழுதியுள்ளார். இவருடனான எமது நேர்காணல் வருமாறு :

கே. : தகவல் தொழில் நுட்ப புரட்சி - அதன் சமூகம் மீதான தாக்கங்கள் பற்றி சற்று கூறுங்கள்

ப : கணணி, உலக தகவல் வலைப் பின்னல் என்பவை இன்று சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க பகுதியினரால் பாவிக்கப்படக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதன் மூலம் நாடுகள் எல்லைகள் என்கிற தடைகளையெல்லாம் தாண்டி எந்தவிடயம் குறித்த தகவல்களையும் எளிதில் விரைவாக பெறக்கூடியதாயுள்ளது. இதன் மூலம் விரைவாக விவேகமாக கூடியளவு காரியங்களை சாதிக்க முடியும். சுருங்கக் கூறின் சமுதாய மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் சிறந்த முறையில் உதவ வல்லதாகும்.

கே : சமுதாய மேம்பாடு என்கிற போது கலாச்சாரம் என்பது பிரித்துப் பார்க்கப்பட முடியாத ஒன்று. எம் மீதான மேலைத்தேய கலாச்சார திணிப்பிற்கு தகவல் யுகம் வழிகோலவில்லையா?

ப : கலாச்சாரம் என்பது அடிப்படையில் மனப்பாங்கு சம்பந்தப்பட்ட ஒரு விடயம். எமக்கு பயன்படவல்ல, உதவுகின்ற நல்ல விடயங்களை மட்டுமே பின்பற்றுகின்ற உறுதியான மனப்பாங்குடைய, எதனையும் முன்யோசனையுடன் செய்கின்ற ஓர் சமூகமாக எம்மை நாம் வளர்த்துக் கொண்டால் கலாச்சாரத் திணிப்பு என்பது சாத்தியமற்றதாகும். வேட்டி கட்டுவதிலும் காற்சட்டை அணிவது வசதியானால்

காற்சட்டை அணியலாம். ஆனால் வேட்டி கட்டுகின்றவரை மடையன் என்கிற மாதிரி பார்க்கின்ற நோக்கு பிழையானது. எல்லாம் எங்கள் கைகளில் தான் உள்ளது எனக் கூற முடியும்.

கே : சிறுவயதிலிருந்தே கணணிகளின் பாவனை என்பது மாணவ சமூகத்தின் சிந்திக்கும் வேகத்தை பாதிக்கும் என்பது பற்றி....

ப : "வேகம்" என்பது ஓர் குறிப்பிட்ட வேலையை குறுகிய நேரத்தில் செய்து விட்டு மிஞ்சுகின்ற நேரத்தில் நித்திரை கொள்ளல் அல்ல. மிஞ்சுகின்ற நேரத்தை இன்னொரு வேலைக்கு அல்லது புதிய சிந்தனைக்குப் பயன்படுத்த வேண்டும். இந்த மனோபாவம் மாணவரிடையே ஊட்டப்பட வேண்டும். இதன் மூலம் வேகம், மிக்க, புதியன சாதிக்க வேண்டும் எனும் நோக்குள்ள ஒரு சமுதாயம் உருவாகும்.

கே : தகவல் தொழில்நுட்ப புரட்சி உண்மையில் உலகக் கிராமத்தை நோக்கி போகின்றதா? அன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் புதியதோர் இடைவெளியை உருவாக்குகின்றதா?

ப : உலகமயமாதல் என்பது முழுமையானதாக அமையாவிட்டாலும் சாத்தியமானதே என நம்புகிறேன். அநேகமாக எல்லா தொழில் நுட்ப புரட்சிகளும் மேற்குலகிலேயே இடம்பெறுகின்றன. இவை கீழைத்தேய நாடுகளை அடைகின்ற வேகம் குறைவாகவே காணப்படுகின்றது. ஆயினும் இந்தியா போன்ற நாடுகளின் இத்துறையிலான பங்களிப்பு கணிசமானது. எமது அறிவுலகம் விழிப்புடன் செயற்பட்டு புதிய மாற்றங்களை விரைவில் உள்வாங்குகின்ற தொடர்பாடல் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இதன் மூலம் இடைவெளியை சுருக்க முடியும்.

கே : எமது அயல்நாடான இந்தியா இத்துறையில் பெரும் முன்னேற்றத்தை அடைந்திருக்கின்ற வேளையில் நாம் பின் நிற்கின்றோம். ஏன்?

ப : தேவைகளே வளர்ச்சியின் அடிப்படை. எத்துறையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற உள்ளூர் சந்தை பெரியளவில் காணப்பட வேண்டும். இந்தியாவின் தேசிய தேவைகளுக்கான முயற்சியின் மூலம் இந்தியர்கள் அடைந்த சிறப்புத் தேர்ச்சியே அவர்களைச் சந்தையை நோக்கி எடுத்துச் சென்றது.

விஞ்ஞான தொழில்நுட்ப அறிவையும் தகவல்களையும் மையமாகக் கொண்ட இந்நூற்றாண்டிற்கு ஏற்ற வகையில் கல்வி முறையில் மாற்றங்கள் தேவை. கல்வி முறையானது "கற்பதற்கு கற்றலாகிய திறனை" (Learning to Learn) பெறக்கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் நாமும் இத்துறையில் போட்டி போட வல்லவர்களை உருவாக்க முடியும்.

தெளிவான அரசியல் கொள்கைககளும், வளர்ச்சிக்காய் உருவாக்கப்பட்ட அமைப்புக்களின் சீரான நடவடிக்கைகளும் வளர்ச்சியில் பாதிப்பு செலுத்துகின்ற காரணிகள். உதாரணமாக CINTEC இன் பிழையான திட்டமிடலால் 1.2 பில்லியன் ரூபாய் பணம் Y2K பிரச்சினைக்காய் செலவழிக்கப்பட்டது. இந்தப் பணத்திற்கு இரண்டு பொறியியற் பீடங்களை கட்டியிருக்க முடியும்.

கே : வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கணணி மென்பொருளைத் தயாரிக்க இலங்கையில் பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவை பற்றி.....

ப : உழைப்புச் சுரண்டல்.... உண்டு தான். எனினும் வேலையற்றவர்களுக்கு வேலை அளிக்கவும், புதியவர்களை இத்துறையில் ஊக்குவிக்கவும், இத்துறையில் எம்மவவர்கள் சிறப்புத் தேர்ச்சி பெறவும் இந்த நிறுவனங்கள் வழிசமைத்திருக்கின்றன எனலாம்.

கே : மூலை முடுக்கெல்லாம் முளைக்கும் தனியார் கணணி பயிற்சி நிறுவனங்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்?

இது மிகப் பெரிய வியாபாரமாக மாறிக் கொண்டு வருகின்றது. கணணி பற்றிய முழுமையான அறிவில்லாதவர்கள் பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சமூகத்திலும் இது குறித்த விழிப்புணர்வு இன்மையால் இப்படியான வியாபாரிகள் வாழ்கிறார்கள். ஊடகத்துறையினரும் கல்வியியலாளரும் இது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும். முறையற்ற முறையில் இயங்குகின்ற நிறுவனங்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஒழுங்கான நிறுவனங்களும் பணக்காரர்களால் மட்டுமே அடையப்படக் கூடியதாய் உள்ளது. இதனால் சமூகத்தின் ஒரு மட்டம் அறிவைப் பெறுகின்ற வேளையில், இன்னோர் மட்டம் அதைப் பற்றி அறியாமலேயே இருக்கின்றது. இது ஓர் சிக்கலான தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

கே : பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கின்ற வேளையில் புதிய பல்கலைக்கழகங்களின் உருவாக்கம் பற்றிய உங்கள் கருத்து என்ன?

ப : வேலை இல்லை என்பதற்காய் இளைய தலைமுறையின் ஒரு பகுதியின் உயர்கல்வி பெறுகின்ற உரிமையை நசுக்க முடியாது. பல்கலைக்கழகத்தில் பாடத்துறைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வேலைவாய்ப்பைத் தரக்கூடிய பல்வேறு துறைகள் பல்கலைக்கழகங்களில் புகுத்தப்படல் வேண்டும். பட்டதாரிகளின் தராதரங்களுக்கு ஏற்ற வேலைகள் கிடைக்காவிடினும், அவர்களுக்கு என்ன வேலை கிடைக்கிறதோ அதை அவர்கள் புதிய அணுகுமுறையுடன் கையாள்வார்கள். 1948இல் இஸ்ரேல் திரும்பிய யூதர்களில், PhD செய்தவர்கள் கூட ஆடு மேய்த்தார்கள். சிந்தனைத் திறன் மிக்க தர்க்க ரீதியாக ஆய்வு செய்யத்தக்க, புதிதாக ஒன்றைக் கற்கக்கூடிய ஆற்றலுள்ள பிரஜைகளின் உருவாக்கம் என்றுமே அபிவிருத்திக்கான பங்களிப்பாகும்.

தொகுப்பு : கு. சிவசுதன்

இளங்கதிர் சார்பில் உரையாடியவர்கள்
கு. சிவசுதன், து. சத்தியன், வ. சுகந்தன்.

மாற்றங்களுக்கான சாத்தியம் எல்லையற்றது.
கட்டுக்கடங்காத சக்தி - பரந்த சிந்தனை
ஒவ்வொரு உள்ளத்தினுள்ளேயும் உண்டு சலிக்கா உழைப்பொன்றே வேண்டும்.
தகவல் யுகத்தோடு சாமாந்தரமாய் பயணிக்க......

பேட்டி

# வவுனியா அகதிமுகாம்

சமாதானம் என்பதன் அர்த்தத்தை வார்த்தை அளவிலும், போரின் நிதர்சனங்களை ஒவ்வொரு கணப்பொழுதிலும் உணர்ந்து வாழும் காலத்தின் கட்டாயத்தால் அவற்றுள் அமிழ்ந்து வாழும் சில பகுதி மக்களின் ஒருமித்த மனக்கிடக்கைகள் இவை :

அவர்கள்
சின்னத்தம்பனை
வேலங்குளம்
மடுக்குளம்
கோயில் பேட்டை
செங்கல்படை
கல்மடு

போன்ற ஊர்களைச் சேர்ந்தவர்கள். இன்று பூவரசங் குளத்தின் தாலிக்குளப்பகுதியில் கண்ணீரின் கடைசிச் சொட்டைக் கண்களிலும், வேதனைகளின் முகங்களை அகங்களிலும்சுமப்பவர்கள். இத் தூயவர்களின் பெயர்கள் எம்மால் ஞாபகம் கொள்ளமுடியாதிருக்கலாம். ஆனால் அவர்கள் உள்ளத்தின் உரைகளோ ஒரு போதும் மறந்து வாடமுடியாதிருக்கிறது.

"இடம்பெயர்ந்து வந்த மக்களின் நிலைமை இப்போது எப்படி இருக்கிறது, இங்குள்ள மக்களை வேறு பிரதேசங்களுக்கு போய்வர அனுமதிக்கிறார்களா?" என்றவாறு "பொறுப்பான" அவரிடம் கேட்கப்பட்ட போது.....

"அவர்கள் இங்கே வரும் போதுள்ள நிலைமையைவிட இப்போது கொஞ்சம் பரவாயில்லை. அவர்கள் இருப்பதற்கு "Set" கள் போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவர்களுக்கு உணவு, உறையுள் பிரச்சினைகளை விட செய்வதற்கு ஒரு வேலையில்லாத பிரச்சினையே பெரிதாக இருக்கிறது. அதைவிட தமது சொந்தப் பிரதேசங்களில் இல்லாத ஏக்கமும் அவர்களுள் இருக்கிறது. "சேவலங்கா", "போரூட்" போன்ற உதவி நிறுவனங்களின் உதவிகள் உள்ளதனால் அவ்வளவு பெரிய பிரச்சினைகள் இல்லை. வவுனியா, பூவரசங்குளம் எங்கேயும் இவர்கள் போய்வரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் வவுனியாவிற்கு வெளியே தான் போக முடியாது". என்கிறார் அவர். வேறு ஒருவர் தனது ஊரின் இடப்பெயர்வு பற்றி குறிப்பிட்டபோது.........

"எமது ஊரில் எம்மை அப்போதுதான் மீளக் குடியமர்த்தினார்கள். இரண்டு மாதங்களிலேயே எம்மை அங்கிருந்து இடம்பெயரச் செய்து விட்டார்கள். இங்கே வந்து மழை, வெயில்களில் பல சிக்கல்பட்டு ஏதோ இருக்கிறோம். ராணுவம் இல்லாது போனால் எமது ஊரில் சென்று இருப்பதற்கு மிகவும் ஆவலாகவும், ஆயத்தமாகவும் இருக்கிறோம். எங்களுக்கு இங்கிருப்பதைவிட எமது ஊரில் இருப்பது எவ்வளவோ மேல். இங்கே யாரோ ஒருவரின் கையை எதிர்பார்த்திருக்க வேண்டும். ஊரில் என்றால் நாங்களே பாடுபட்டு உழைத்து சீவிக்க முடியும். இங்கே அந்தச் சுதந்திரம் இல்லை" என்றவாறு தனது ஆதங்கங்களை வெளிப்படுத்தினார்.

குடும்பத்தின் தாய் ஒருவரிடம் "பல ஊர்களில் இருந்து வந்த பலர் ஒன்றாக இருக்கிறார்கள் இங்கே அதன் காரணமாக பண்பாடு... கலாச்சாரம்...." என சற்றே இழுத்து வினவிய வினாவை முடிப்பதற்கு முன்பே அத்தாய்-

"இல்லை அப்படி எதுவும் விரும்பத்தகாதவைகள் நடந்து விடுவதில்லை என்றாலும் நாங்கள் எங்களுடைய ஊர்களுக்குத் தான் போக வேண்டும். அங்கே போனால் தான் "நல்லாய்" இருக்கப் பார்க்கலாம். இப்படியே கூலியைச் செய்து கொண்டு எப்படி இருப்பது".

"சீவியம் எப்படிப் போகிறது" என கேட்டபோது ஒரு குடும்பத்தலைவர் சொன்னார்: "இங்கு தரப்படுகிற நிவாரணத்தோடு அன்றாடம் கூலிக்குப் போய் வந்தால் தான் சீவிக்க முடியும்" என்று

ஒரு குடும்பப் பெண் தன் உள்ளக்குமுறல்களை இப்படிக் கொட்டுகிறார்.

"இங்கே ஒரு வசதியுமே இல்லை. பிள்ளைகளுக்கு ஒழுங்கான படிப்பில்லை. குளிக்கிறதுக்கு ஒரு கிணறில்லை. மலசல கூட வசதிகூட இல்லை. மிகவும் சரியான கஸ்டம். கொஞ்சப் பேருக்குத்தான் கிடுகு கொடுத்திருக்கிறார்கள். பலருக்கு கொடுக்கவில்லை. நாங்கள் இன்னொரு வீட்டில் தான் வந்திருக்கிறோம். இன்னும் நிறையச் சனங்கள் அக்கம்பக்கம் ஊர்களில் தங்களுக்கு தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் வீடுகளில் இருக்கிறார்கள். கிடுகுகள், கொடுக்கும் நாளன்று நிறையப்பேர் வருவார்கள். இங்கே ஒன்றுமே இல்லை. நாங்கள் மருந்தெடுப்பதாக இருந்தாலும் சரி, சின்னக் குழந்தைகளுக்கு தடுப்பூசி ஒன்று போடுவதாக இருந்தாலும் சரி, யாராவது ஒருவருக்கு வயிற்றோட்டமாக இருந்தாலும் சரி இங்கே உடனே எதுவுமே செய்ய முடியாது. வவுனியாவுக்கோ, பூவரசங்குளத்துக்கோ தான் போக வேண்டும்.

அதே குடும்பப்பெண் தாம் இடம்பெயர்ந்து ஓடி வந்த நாளை நினைவு படுத்துகிறார்.

கையிலே வைத்திருந்த சோற்றுத்தட்ட போட்டு விட்டு, கட்டின உடுப்போட புறப்பட்டம். வண்டில் ஒன்றில் தான் வந்தோம். அதில் கூட பொருட்களை எடுத்து வருகிற அளவுக்கு அவகாசம் எங்களுக்குமத் தரப்படவில்லை. பல பொருட்களை அவசரத்தில் எடுத்து வெளியே வீசிவிட்டுத் தான் வந்தோம். அன்றைக்கு வீதி முழுவதும் ஒரே சாமான் மயம். அதையெல்லாம் விட்டிட்டு வந்து சேர்ந்தது தான்.

அவர்களிடம் பாடசாலை, படிப்புகள் பற்றிக் கேட்கப்பட்ட போது .......

படிக்கிறதுக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் கிட்ட பாடசாலைகள் இல்லை. பாடசாலை போவதென்றால் வவுனியாவுக்கு அல்லது பூவரசங்குளத்துக்குத்தான் போக வேண்டும். அதற்கு சைக்கிள் வேண்டும். இங்கிருந்து நடந்து போக முடியுமா? போவதற்கிடையில் பாடசாலை தொடங்கிவிடும். ஆனால் இங்கு யாருமே சைக்கிள் ஒன்று வாங்குகின்ற நிலைமையில் இல்லை. சைக்கிள் கூட வாங்கமுடியாத நிலைமை எங்களுக்கு.

ஒன்பதாம் ஆண்டில் படிக்கும் பள்ளிச் சிறுமி ஒருத்தி, "ஆங்கிலம் நடப்பதில்லை. புத்தகம் நாலுதான் தந்தார்கள். கொப்பிகள் இல்லை" என்கிறாள்.

இவர்களுள் "நவரட்ணம் - வத்சலா" போன்று பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானவர்கள், தெரிவாகக் கூடியவர்கள் பலர் இருக்கலாம். ஆனால், போர் மேகங்கள் விலகி சமாதானப் பொழுது புலருகின்றவரை இந்தச் சூரியன்கள் எல்லாம் பிரகாசிக்க மட்டுமல்ல சுதந்திரமாய் சுவாசிக்கக்கூட முடியாதவர்களாகவே இருக்க வேண்டியிருக்கிறது.

*இளங்கதிர் சார்பில் பேட்டி கண்டவர் :*
ம. அமுதராஜ், பொறியியற் பீடம், இறுதி வருடம்

*தொகுப்பு :*
சி. தெ. ஞானக்குமரன், முதலாம் வருடம், பொறியியற் பீடம்

**மு**ன்னாளில் தமிழ்மொழி தென்கிழக்கு ஆசியப்பிரதேசங்களிலே அந்தஸ்தும் செல்வாக்கும் பெற்று வெகுவாக பரவியிருந்திருக்கிறது. அந்த நாடுகளின் வரலாற்றை ஊன்றிக் கவனிப்பதாலும், தமிழ் மொழியிலும் தமிழ் எழுத்திலும் பொறிக்கப்பெற்ற சாசனங்கள் ஆங்காங்கே சிற்சில இடங்களில் கிடைப்பதாலும் இது தெளிவாகும்.

வரலாற்று ஆசிரியர்கள், தமிழ்நாட்டு நாங்கூரின் தலைவன் தாய்லாந்து பிரதேசத்தில் தான் எழுப்பித்த குளத்தை பற்றிய விபரத்தை தெரிவிக்கிறது' என்கிறார்கள்.

**13ம்** நூற்றாண்டிறுதியில் யாழ்ப்பாணத்தில் இறங்கிய மார்க்கோபோலோ என்ற வென்ஸ்' வர்த்தகம், 14ம் நூற்றாண்டில் வந்திறங்கிய கிறிஸ்தவ மத குருவும் யாழ்ப்பாணத்து மன்னனின் செல்வத்தையும் உதாரகுணத்தையும் வியந்து போற்றியுள்ளனர். 'இபின் பத்துதா' என்ற முஸ்லிம் பிரயாணியும் 'மரிக் னோலி' என்ற கத்தோலிக்க பெரியாரும் யாழ்ப்பாணத்து மன்னனால் உபசரிக்கப்பட்டனர். தென் இலங்கையில் கோட்டே என்னும் ஜெயவர்த்தனபுரத்தை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகு தமிழ் நாகரிகம்நிறைந்தவனாய்த் தன் ஒரேயொரு பெண்ணுக்கு 'உலகுடைய தேவி' என்று பெயர் வைத்ததோடு அவளை தமிழ் நாட்டிலேயே திருமணம் செய்து வைத்தான்.

# சகோதர இன மக்களுடனான ஒரு நேர்காணல்

(பதவியா அகதிகள் முகாம்)

*இருதரப்பினரும் மோதிக் கொள்வதில் குண்டு எங்கள் மீது தான் விழுகின்றது. யுத்தம் விரைவாக முடிவதையே விரும்புகின்றோம். எங்களுக்கு எங்கள் வாழ்க்கை வேண்டும். எல்லோருடனும் சமாதானமாக வாழவே நாங்களும் விரும்புகிறோம்.*

கே : நீங்கள் எந்த நிலைமையில் இங்கு வந்தீர்கள் என்று கூறமுடியுமா?

ப : 99.11.97 அன்று ஆண்கள் எல்லோரும் கூலி வேலைக்குப் போயிருந்தோம். பகல் 12 மணியளவில் யுத்தம் நடைபெறுகிறது, தாக்கிக் கொண்டு வருகிறார்கள் என்று செய்தி வந்தது. உடனடியாக ஊர் திரும்பினோம். அங்கிருந்து பெரும்பாலானோர் தங்களிடம் இருந்த சிறிய டிரக்டர்கள், சைக்கிள்கள் போன்றவற்றில் மக்களை ஏற்றிக்கொண்டு இங்கு வந்தார்கள். மீண்டும் ஒருநாள் ஊர் பக்கம் சென்றோம். அங்கு இன்னும் யுத்தம் நடைபெறுகின்றது. அருகில் மொனரா போன்ற கிராமங்களில் மக்கள் இருக்கிறார்கள்.

கே : பழையபடி உங்களால் ஊருக்குச் செல்ல முடியுமா?

ப : ஆண்கள் மட்டும் செல்ல முடியும். அதுவும் குழந்தைகள், சிறு பிள்ளைகள் இல்லாத ஆண்கள் அங்கு போய் இருக்கலாம். ஆனால் எங்களுக்குக் குழந்தைகள் இருக்கின்றனர்.

கே : இந்த இடத்தில் வாழ்க்கை நிலைமை எப்படியுள்ளது. உணவுவசதி, தண்ணீர் வசதி, என்பன போதுமானதாக இருக்கின்றதா?

ப : நிவாரண உதவிகள் சாதாரண அளவில் கிடைக்கிறது. கிட்டத்தட்ட 1260/- கிடைக்கிறது. அத்துடன் நாங்கள் கூலி வேலைகளுக்குச் சென்று இயன்ற வரை சமாளிக்கிறோம். "யதாவகுன"வில் கூலிவேலைக்கு கடந்த 12 வருடங்களாகச் செல்கிறோம். தற்போது தான் ஒரு தொழில் தொடங்க எண்ணியிருந்தேன் கைகூடியிருந்தால் இனி கூலிவேலை செய்ய வேண்டிய தேவை இருந்திருக்காது. இப்போது நான் சேர்த்து வைத்த சொத்துக்கள் அனைத்துமே வீணாகிப் போய்விட்டன.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

கே : நீங்கள் இங்கு வந்து எவ்வளவு காலம் ?

ப : இந்த முகாமுக்கு வந்து 6 மாதமாகிறது. "யதாவகுன"வில் 11 வருடமாக இருந்தோம்.

கே : இந்த முகாமில் என்னவிதமான குறைபாடுகள் இருக்கின்றன?

ப : குறைகள் என்றால் நிறைய இருக்கிறது. இப்போது எங்களுக்கு கிடைப்பது உணவும், உண்டு குடித்து இருக்க இடமும் மட்டும்தான். எந்த ஒரு மூலதனமோ, வாழ்க்கைக்குத் தேவையான எதுவுமோ எங்களுக்கு இல்லை. நாங்கள் இப்போது மனிதர்கள் என்ற வகையில் உழைத்து உண்டு குளம், குட்டைகளில் குளித்து, துவைத்துக் கொண்டு வாழ்கின்றோம்.

மலசலகூட வசதிகள் போதுமானதாக இல்லை. காலைக்கடன்களை முடிப்பதற்கு வெளியிடங்களுக்கு செல்ல வேண்டியிருக்கிறது.

**ஒரு இல்லத்தரசி பதிலளிக்கிறார்**

கே : இங்குள்ள பிரச்சினைகளில் உங்களை மிகவும் பாதிப்பது எது?

ப : வேறு என்ன பொருளாதாரம் தான். கிழமைக்கு ஒரு முறை தான் நிவாரண உதவி கிடைக்கிறது. ஐந்தாறு பிள்ளைகள் உள்ள குடும்பத்திற்கு இது போதுமானதாக இல்லை. அதனால் வேறிடங்களில் வேலை செய்து தான் சமாளிக்கிறோம். அதை வைத்துத்தான் பிள்ளைகளையும் படிப்பிக்க வேண்டியுள்ளது. அவர்களுடைய சீருடைகள், மற்றும் தேவைகள் என்பவற்றிற்கு போதியளவு பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறோம்.

கே : வெளியிடங்களில் இருந்து உதவிகள் கிடைக்கின்றதா?

ப : ஆம் மாதத்திற்கு ஒரு தடவை என்ற ரீதியில் வந்து உதவுவார்கள்.

**ஓர் பாடசாலை மாணவன் :**

கே : எந்தப் பாடசாலைக்குச் செல்கிறீர்கள் தம்பி?

ப : வெலிஓயாவில் உள்ள பாடசாலைக்கு

கே : க.பொ.த (சா/த) பரீட்சை எங்கே எழுதினீர்கள்

அங்குதான் செய்தேன் பரீட்சை நிலையம் அங்குதான் அமைத்திருந்தனர். ஆனால் இப்போது போகமுடியாது.

கே : அங்கு கல்வி பயின்ற சிறுவயது மாணவர்களின் நிலைமை என்ன?

ப : அவர்களை வேறு பாடசாலைகளில் இணைத்துள்ளனர். அவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாததால் கல்விப்பணிப்பாளரின் கடிதத்தின் உதவியுடன் வேறு பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர் (தற்காலிகமாக). அத்துடன் பன்சலைகளிலும் படிக்கச் செல்கின்றனர். புத்தகம் உடை என்பன கூடசில மாணவர்களிடம் இல்லை.

கே : இங்கு புலிகளால் பிரச்சினை இல்லையா? இராணுவம் பாதுகாப்புக்கு உள்ளதா?

ப : ஆரம்பத்தில் சண்டை நடக்கும் போது ஷெல்கள் வந்து விழுந்தன. அவ்வளவு தான். இராணுவப் பாதுகாப்பு என்று பெரிதாக ஒன்றுமில்லை. ஒரேயொரு சென்றி பொயின்ட் தான் இருக்கிறது.

**இளம் தாய் :**

கே : இந்தக் குழந்தைக்கு என்ன வயது ?

ப : 22 நாட்கள் ஊரில் இருக்கும் போது பிறந்தார்.

கே : உணவு வசதிகள் போதுமானதாக உள்ளதா?

ப : நிவாரண உதவிகள் கிடைக்கிறது. அவரும், அண்ணாவும் கூலி வேலைக்குப் போகின்றனர். அண்ணா முன்னர் வயல் வேலை செய்தார். நல்ல விளைச்சல் இருந்தது. இப்போது ஒன்றுமே இல்லாமல் கூலி வேலைக்குப் போகிறார்.

**ஒரு நடுத்தர வயது மாதுவின் பதில்கள் :**

கே : நீங்கள் இங்கு வந்து எவ்வளவு காலம்?

ப : 6 மாதங்களிற்கு அதிகம்.

கே : உங்கள் சொந்த ஊர் நிலைமை எப்படி?

ப : தொடர்ந்து கலவரமாயுள்ளது. குண்டுகள் தலைக்கு மேல் வந்து விழுகின்றன. நாம் என்ன கலவரமாயிருந்தாலும் ஊரிலிருந்து வந்திருக்க மாட்டோம். ஷெல்லுக்குப் பயந்து தான் இங்கு வந்தோம். இங்கு வந்து சொத்தின்றி சுகமின்றி பிள்ளைகளுக்கு படிப்பிக்கவும் முடியாமல் மிகவும் சிரமமாய் உள்ளது.

கே : இங்கு உங்களுக்கு உள்ள பிரச்சினைகள் என்ன?

ப : தண்ணீர் வசதி இல்லை. மலசலகூட வசதி போதாது. உறங்க இடம் போதாது. பிள்ளைகளுக்கு படிப்பும் இல்லை. என்பது தான் மிகவும் வருத்தமாய் உள்ளது. கடைசி மகனுக்கு பாடசாலையில் பாடம் நடப்பதுமில்லை. பாடசாலையும் 2 மைல் தொலைவில் உள்ளது.

கே : இங்கு குடிநீர் போதியளவு கிடைக்கிறதா?

ப : நீரென்றால் கொண்டு வந்து தருவார்கள். கடைசியாக 4-5 நாட்களுக்கு முன் வந்தனர். இனி எப்போது வருவார்களோ, மழையும் பெய்வதில்லை. நிலத்தைப் பாருங்கள். காய்ந்து போயுள்ளது.

கே : மீண்டும் வீடு செல்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப : ஆம் விரைவாக வீடு செல்ல ஆசைதான். ஆயினும் எப்படி இன்னும் பிரச்சினை ஓயவில்லையே. எப்போது முடியும். எப்போது வீடு செல்வது என்று எந்த நாளும் ஏங்கிக் கொண்டே இருக்கின்றோம். அங்குள்ள எல்லாம் அழிந்து விடுமோ என்று பயமாயுள்ளது. குண்டுகள் எங்கிருந்து வரும் இங்கிருந்தும் ஓட வேண்டுமே என்று பயமாயுள்ளது.

கே : ராணுவம் என்ன சொல்கிறது?

ப : அவர்களும் ஒன்றும் கூறமுடியாமல் இருக்கின்றனர். அவர்களுக்கும் வாழ ஆசை இருக்கும் தானே.

கே : யுத்தம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப : இருதரப்பினரும் மோதிக் கொள்வதில் குண்டு எங்கள் மீது தான் விழுகின்றது. யுத்தம் விரைவாக முடிவதையே விரும்புகின்றோம். எங்களுக்கு எங்கள் வாழ்க்கை வேண்டும். எல்லோருடனும் சமாதானமாக வாழவே நாங்களும் விரும்புகிறோம்.

**ஓர் இல்லத்தரசி :**

கே : இங்கு வந்த பின் நீங்கள் வீடு சென்றீர்களா?

ப : ஆம் அங்கு ஒரு தரம் சென்ற போது வீட்டிலிருந்த நிறைய பொருட்களைக் காணவில்லை. களவு போய் விட்டன. யாரென்று தெரியவில்லை. வெளியாட்கள் தான் எடுத்திருக்க வேண்டும்.

கே : என்னென்ன பொருட்களைக் காணவில்லை?

ப : கொஞ்சம் வீட்டுபகரணங்கள், புத்தகங்கள், உடைகள், உணவுப் பொருட்கள் என்பவையுடன் விவசாயம் செய்து சேகரித்து வைத்திருந்த நெல்லில் ஒரு பகுதியையும் காணவில்லை. அத்துடன் இங்கு வந்த பின் எல்லா நிலங்களையும் கைவிட்டாயிற்று.

கே : தந்தை என்ன செய்கிறார்?

ப : மீன் பிடித்தொழில் செய்கிறார். ஊரில் மாற்றவர்கள் கூலி வேலை செய்கின்றனர். இப்போது ஊரிலிருந்தால் விவசாயம் செய்யலாம்.

கே : விவசாயம் செய்த நிலங்களின் நிலைமை என்ன?

ப : அங்கு செல்ல முடியாது. புலிகள் இருக்கின்றார்கள். ஊருக்குச் செல்ல முடியாது.

கே : இராணுவம் என்ன சொல்கிறது?

ப : அவர்கள் நிறைய பேர் இறந்தும் காயமடைந்தும் உள்ளதால் ஆட்கள் போதா-தென்று கூறுகின்றனர்.

கே : மீண்டும் ஊர் திரும்ப வசதி செய்து தருவார்களா?

ப : ஆம். அவர்கள் வரத்தான் சொல்கின்றனர். பயமில்லை என்று. ஆனால் மேலால் வரும் குண்டுகளிடமிருந்து தப்ப வேண்டுமே! இருசாராரும் எந்நாளும் ஆட்டில-ரிகளும் ஷெல்களும் அனுப்புவதால் பயம் தானே.

**இன்னுமொரு குடும்பப் பெண்:**

கே : பிள்ளைகள் படிக்கின்றார்களா?

ப : ஆம் அவரைத்தான் (மகனைக் காட்டுகின்றார்) மிகவும் எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம். ஊரிலிருந்த போது திறமையாக படிப்பார். இங்கு வந்து 2-3 மாதம் சும்மா தான் இருந்தார். இம்முறை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை செய்ய உள்ளார். ஊர் பாடசாலையிலும் பாடசாலை விடுகைப் பத்திரம் (School Leaving Certificate) தரவில்லை. வேறு ஊருக்கு சென்று விடுவோமென்று தற்போது

பராக்கிரமபுர பாடசாலைக்குச் செல்கிறார். ஆகஸ்டில் பரீட்சை நடைபெறவுள்ளது.

கே : எப்படிப் படிப்பிக்கிறார்களா?

ப : அதுதான் பெரிய பிரச்சினையாய் உள்ளது. ஆசிரியர்கள் உள்ளனர். பணம் தான் இல்லை. டியூசன் வகுப்புகள் உள்ளன. ஆனால் கட்டணங்கள் அதிகம். அத்துடன் புத்தகங்களும் விலை அதிகம்.

கே : இங்கு 20-25 வயதுடையவர்கள் என்ன செய்கிறார்கள்?

ப : அனேகமானோர் ஊர்காவல் படையினராய் உள்ளனர். அவர்கள் இப்போது இங்கு இல்லை.

கே : மகன் செல்லும் பாடசாலை எவ்வளவு தூரம்?

ப : பஸ்ஸில் 7 ரூபாய் 50 சத தூரம். அதாவது 5 மைல் இருக்கும். தினமும் அதிகாலையிலேயே புறப்பட வேண்டும். மீண்டும் ஏழு மணிக்குத்தான் திரும்புவார். 5 1/2 மணிக்கு வகுப்பு முடியும். அங்கிருந்து வரும் போது கொழும்பு பஸ்ஸில் தான் வரவேண்டும். வேறு வாகனமில்லை.

கே : அப்படியென்றால் சிறுவர்களின் நிலைமை?

ப : அவர்கள் எல்லோரும் அருகிலுள்ள பன்சலையில் படிக்கின்றனர். இவர் தான் பராக்கிரமபுர செல்வார்.

கே : வீட்டில் படிப்பது எப்படி?

ப : கஷ்டம் தான். மின்சார வசதியில்லை. குப்பிலாம்பு தான் உதவி. அத்தோடு பயண களைப்பில் படிப்பதும் கடினம். சென்று வந்து முகம் கழுவி விளக்கு வைக்கும் போது எட்டு ஒன்பது மணியாகிவிடும். திரும்பி 5 மணிக்கு எழும்பவும் வேண்டுமே.

கே : கூலி வேலை செய்பவர்களின் நிலைமை என்ன?

அவர்களுக்கு வேலை ஒருசில காலங்களில் மட்டுமே கிடைக்கும். விவசாயம் செய்யும் போது தான் வேலை கிடைக்கும். மற்ற காலங்களில் கடைகளில் வேலைக்குப் போவார்கள். அதுவும் எளிதில் கிடைப்பதில்லை.

**இன்னுமொரு குடும்பஸ்தர் :**

கே : இங்கு எத்தனை பேர் உள்ளனர் ?

ப : 75 குடும்பங்கள் உள்ளன.


கே : இந்தப் பகுதிக்கு எப்போது வந்தீர்கள்?

ப : 83-84ல் அதற்கு முன் ஹங்குரங்கொடவில் இருந்தோம். 83இல் திம்புலாகல பிக்கு, ஹிங்குராங்கொடவில் இடமில்லாதவர்களுக்கு இடம் தருவதாகக் கூறி ஒவ்வொருவருக்கும் சிறிய சிறிய நிலப்பகுதிகள் தந்து இங்கே அனுப்பினார். தந்தை தான் அதைப் பெற்று இங்கு வந்தார். இங்குள்ள எல்லோரும் அப்படித்தான் வந்தனர்.

*பேட்டியாளர் :* ம. அமுதராஜ் (பொறியியற் பீடம், இறுதி வருடம்)
*தொகுப்பு :* தே. சுரேந்திரன் (பொறியியற் பீடம், முதலாம் வருடம்)

# நான் உலகை விரும்பியது
# நேற்று... இன்று.... ஆனால் நாளை?

இ. ஜனந்தன், 2ம் வருடம், பொறியியற் பீடம்



மனதில் தோன்றும் உன்னத நினைவுகளை
குட்டி குட்டிச்சுவராக்குகின்ற
கலியுகத்தின் காலத்தின் கோலத்தால்
பாதிக்கப்பட்டு பல கூறுபட்டு போயுள்ள -
உலகத்தை
மீண்டும் உருண்டையாக்கும் போரில்
தோற்றுப் போயுள்ள மனிதத்தின் பார்வைக்கு
எட்டாத தொலைவில் தெரிகின்ற
பூர்வீகத்தின் நிஜங்கள் - என்றும்
புரியாத புதிராகவே உள்ளது

# சாகடிக்கப்பட்ட கனவுகள்

கோ. நந்தன்.

இப்பவெல்லாம் நான் நானாக இல்லை ஏனோ தெரியவில்லை. ஒன்றுமே என்னைப் பாதிப்பதில்லை. "எனக்கு ஒன்றுமே ஆவதில்லை" உணர்வுத் தூண்டல்களை ஒழுங்கு படுத்தும் உள்ளக அமைப்பு தொழில் மறுப்பு போராட்டம் செய்கிறதோ அன்றி உணர்வு ஏற்பு மேட்டில் விழுந்த கணத்தாக்கங்களால் அதற்கு மேல் உணர்வற்ற கவசப்படை தோன்றிவிட்டதோ தெரியவில்லை. இதைத்தான் கூர்ப்பியல் என்கிறார்களா? என்னவோ? ஆனாலும், ஆழமாக இருதயத்தைக் கீறிக்கிழித்த வடுக்கள் இப்பவும் தமது ஜீரணமற்ற வலியை அடக்கமான முறையில் வெளிப்படுத்தவே செய்கின்றன. இவற்றையெல்லாம் வெளியில் சொல்லத் தயக்கம். "இது உளவியல் பிரச்சினைதான்" என்று என்னையும் என் உணர்வுகள் சென்ற இடத்திற்கு அனுப்பி விடுவார்களோ என்ற தயக்கந்தான் இப்போது. நான்தான் நானாக இல்லை. பிறகு நானே இல்லையென்று ஆகிவிடுமோ என்ற பீதி. ஆனாலும் ஒரு தெளிவு இருக்கு. யார் என்னை எங்கு அனுப்புவது? அப்படியானால் எல்லோரும் சரியான இடத்தில்தான் இருக்கிறார்கள் என்றாகிவிடும். மனிதம் தொலைக்கடிக்கப்பட்ட நிலையில் அன்பு என்று அந்த மென்மையான பாசச் சங்கிலியை அணிவது இக்கால நாகரிகத்துடன் இசையவில்லை என்று தூர எறிந்து விட்டு பகடு என்னும் விஷமத்தை அணிந்துள்ளனர். இதுதான் நாகரீகமாம். மண்டையைப் பிளக்கும் உச்சி வெயிலெறிக்கும் இந்நாட்டில் coat, tie. shoe எல்லாம் இறுக்க அணிந்து வியர்வையில் நனைந்து ஓர் இக்கட்டான நிலையில் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். என் சௌகரியத்திற்கு, எமது காலநிலைக்கு, உடல் அமைப்பிற்கு ஏற்றவாறு இருக்கும் உடை அணிந்தால் என்னைச் சீண்டி இதயத்தை இரணப்படுத்துகிறார்கள்.

இப்படியே எல்லாவற்றையும் அடுக்கிக் கொண்டு போனால் அதற்குத் தனிப்பதிப்பே வெளியிடலாம். ஆபரணங்களில் பதிக்கப்பட்ட கற்கள் போல் சத்தமில்லாமல் எதை நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் தழும்பு தந்துவிட்டுச் சென்ற அந்த நினைவுகளுள் சிலவற்றை மீட்டுவோம்.

"கற்கிற வயதில் காலையில் மனனம் செய்தால் மனப்பாடமாகிவிடும்" என்பது என் வாழ்க்கையில் ஊர்ஜிதமாகியிருந்தது. அதிகாலையில் நாங்கள் வழமைபோல் விழிக்க வைக்கப்பட்டதும் கால்கள் நம்மையறியாமலே தெருவிற்கு வந்துவிடும். அன்றைய பொழுதில் எந்த ஊரார் எந்த ஊராரிடம் அழையா விருந்தாளிகளாக இந்தளவு ஆடம்பரமான வான

வேடிக்கைகளுடன் அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்பதை அறிய காலம் காலமாக பலர் வருவார் பலர் போவார். எம் ஊருக்கு இதனால் உள்ளூர்ப் பிரச்சினைகளுக்குக் குறைவேயில்லை. எமது பொழுது போக்கில் இதுவும் ஒன்றாகி விட்டது.

சீனியரின்ர பெட்டையை யாரோ தீவான் சாய்த்துக் கொண்டு போய் விட்டானாம். "வந்தான் வரத்தான்களை உரிய இடத்தில் வைக்க வேண்டும் இல்லாட்டி ஊர்க் கௌரவம் இடம் பெயர்ந்து விடும்" இது ஊர்ப் பெரியவர்கள் அடிக்கடி தமது பெருந்தன்மையை எடுத்தியம்பும் சுலோகங்கள். அப்போதெல்லாம் எனக்கு பலத்த சந்தேகம், நாமெல்லாம் தீவில் இருப்பதாகவே வாத்தியார் சொன்னார். ஆனால், இவர்களோ..... ஆண்டு மூன்றிலிருந்து ஆண்டு எட்டு வரை முதன்நிலை மாணவனாக இருந்து வந்த நான் இதன் பிறகு நடுநிலைக்கு தள்ளப்பட்டமையால் எனக்கும் தாத்தாமார் சொல்வதில் நியாயம் இருப்பது போலவே தோன்றியது. எனது ஊர் தனது எல்லைகளாக பல அழகிய ஊர்களை கொண்டிருந்தது. ஆனால், இப்போது அதுவே ஓர் எல்லையாக வந்ததில் வியப்புக்குப் பதில் வேதனைதானிருந்தது. "2000ம் ஆண்டுக்கு முன் யாவர்க்கும் புகலிடம்" என்ற சுலோகம் எனது ஊருக்கும் அன்று பொருந்திக் கொண்டது. அதிலிருந்த பொருளடக்கம் அன்றுதான் எனக்கு புரிந்து கொண்டது. மிலேனியத்தில் எம்மவர்கள் ஒருவரும் தமது வசிப்பிடங்களில் இருக்க முடியாது யாவரும் இடம்பெயர்ந்து வேறு புகலிடம் தேட வேண்டி வரும் என்பதில் எவ்வளவு உண்மை இருந்தது என்று அன்றுதான் உறைத்தது.

> ஏனோ அன்று
> கடலின் உவர்ப்பு
> அதிகமாக இருந்தது.
> எம்மவரது
> கண்ணீராலாக்கும்.

மதவடிப் பெடியள் கொஞ்சம் குழப்பக்காரர்கள்தான். காளியம்மன் கோவில் தீர்த்தத்திற்கு நம்மூர் கன்னிகளுக்கு தீர்த்த அபிஷேகம் செய்தமைக்கு அவர்களது அகதி முகாமிற்கு தீ வைத்து விட்டார்கள். சொந்த நாட்டிலே ஒருவரை அகதியாக்கிவிட்ட சாதனையை ஏன்தானோ தெரியவில்லை. கின்னஸ் இல் பதிய மறந்து விட்டார்கள். என்ன மாயமோ தெரியவில்லை. எமது இந்நிலையை மாற்ற நாம் என்ன செய்ய இயலும் என்பதை சிந்திக்க மறுக்கும் எங்களுக்கு கன்னியர்க்கு என்னவெல்லாம் ஷேட்டை செய்யலாம் என்பதை சொல்லிக் கொடுக்காமலே புரிந்து கொண்டு செயற்பட முடிகிறது என்பதை நாம் முகாமில் இருந்த போது என்னால் உணர முடிந்தது. தனித்தனி விலாசத்துடன் விஸ்தீரமான நிலத்தில் வசதியாக இருந்த நாங்கள் பொது விலாசத்துக்கு குறுகிய நிலப்பரப்பில் சாக்கில் அடுக்கப்பட்ட கிழங்குகள் போல அடுக்கப்பட்டோம்.

வேலி உள்ள வீட்டுக்குத்தான் வரையறை உண்டு. வேலி இல்லாத எமது முகாமில் வரையறை இழந்து விட்டது, எமது நித்திரை மட்டுமல்ல விழுமியங்களும் தான். இதனிடையேயும் தொலைக்காதது ஜாதி. நாம் மூட்டையில் கட்டி வைத்தது உடமையை மட்டுமல்ல கனவுகளையும் தான். உடைந்தது எமது சொத்துக்கள் மட்டுமல்ல எமது இதயங்களும் தான். உடையிழந்து உறையுள் இழந்து உடமையிழந்து உறவிழந்து நின்றோம் தனிமரமாக.

உணர்வுகள் பருவகாலத்தில் தூண்டப்படுகின்றனவே ஒழிய பௌதிக காலத்தைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. தூர இருந்த நாங்கள் நெருங்கி இருந்ததினால் புதிய உத்வேகத்துடன் இயங்கினோம். இதன் கொடிய எச்சங்களில சில இப்பவும் தலைநகரிலும் அந்நிய தேசத்திலும் தனது கைவரிசையை காட்டிக் கொண்டிருக்கிறது. காலம் யாரைத்தான் தப்ப விட்டது. கால நீரோட்டத்தை துரத்திக் கொண்டு நாங்களும் ஓடினோம். ஊர் ஊராக ஓடி பின் கால ஓட்டத்தை ஈடுசெய்ய மாவட்ட மட்டத்தில் ஓடினோம். ஏற்கனவே செந்நிறமாக இருந்த

அந்தப் பூமி மேலும் சிவந்தது. கருமையாகியது. அந்தக் கருமையிலும் சில இரத்த அணுக்கள் தாயகத்தை ஆரத் தழுவிக் கொண்டது. மாவட்டம் விட்டு ஓடும் போது தான் பாலம் ஒன்று இருந்தும் கூட கடல் நீரேரியில் படகில் பலமுறை மறுபிறவி எடுத்துக் கொண்டோம். ஏனோ அன்று கடலின் உவர்ப்பு அதிகமாக இருந்தது. எம்மவரது கண்ணீராலாக்கும். இறுதியில் அதுவும் ஆர்ப்பரித்து தன இறுதி விடையைத் தந்து அனுப்பிவிட்டது. அந்த நீலக்கடலில் ஆங்காங்கே திலகமிட்டது போல் செந்நிறக் கோலங்களும் இருந்தது. ஏனோ தெரியவில்லை. எமது ஓட்டங்களிற்கு பரிசில்கள் தருவாரில்லை. ஆனாலும் ஆறுதல் பரிசாக நிவாரணம் கிடைத்தது. அதிலும் ஊர் விதானைக்கு எத்தனை தலையிடி. இந்த விடயத்தில் எங்களுக்கு வசதியாகி-விட்டது. மற்றய இடங்களில் எல்லோருக்கும் ஒரு விதானையாரே இருப்பார். ஆனால், போன இடம், நின்ற இடம், வந்த இடம் என்று எங்களுக்கு மட்டும் நான்கைந்து விதானையாரிருந்தார்கள். ஒவ்வொரு விதானைக்கும் ஒவ்வொரு நிவாரண அட்டை என நாலைந்து அட்டை வைத்-திருந்தோம். முந்தியெல்லாம் வீட்டில் காலைச் சாப்பாட்டிற்குப் பின் ஊர்ச் சனசமூக நிலையத்திற்குப் போவேன். அன்றைய புதினப் பத்திரிகையை பார்க்க . ஆனால் இப்பவெல்லாம் காலைச்சாப்பாட்டிற்கோ மதியச் சாப்பாட்டிற்கோ நான் இந்த ஊர்ச் சனசமூக நிலையத்திற்குச் செல்கிறேன். ஏனென்றால் எங்களது மாமா வீட்டார் அந்த வாசிகசாலையில் தான் இருக்கி-றார்கள். பெரியம்மாக்கள் ஊர்ப் பாடசாலையில் இருக்கிறார்கள். முந்திய காலத்தில் பெரியம்மாவை அவரது அப்பா பள்ளிக்கு அனுப்ப பெரிய கலவரமே நடக்கும் என அம்மா கூறுவார். ஆனால், இப்பவெல்லாம் பெரியம்மா பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வருவதில்லை. ஏனென்றால் பெரியம்மாவின் மூத்தமகன் அவர்களின் மாட்டை மேயக்கட்ட போனபோது காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டான். இந்தப் பிரச்சினையில் நீண்டு கொண்டு போனது அந்தப் பட்டியல்தான். ஆனால், ஒன்று நாம்தான் இன்று இருக்கும் மெத்தப்படித்த சமூகத்தினர். இலகுவில் வெளியாரைக் கவரக்கூடியதாகவும் பொறுப்பான நிலையிலும் இருப்பதால் பழயவையெல்லாம் மறந்து உரத்த ஒருமித்த குரலில் குரல் கொடுப்போமேயானால் இந்த உலகத்தின் எந்த மூலைக்கும் ஒலிக்கும். இல்லாவிடின் இந்த மிலேனியமில்லை எந்த மிலேனியமும் எமக்கு ஒன்றுதான். யார் அதனை எண்ணிப் பார்க்கிறார்களோ அன்றுவரை எமது அந்தப் பயணப்பாதை செப்பனிடப்படப் போவதில்லை. இன்று எமது பெற்றோர் அதனை செய்திருக்கலாமே என்று தோன்றுவது போல நாளை எமது சந்ததி சிந்திக்க மாட்டாது. தூர்த்தும். அது வரை காத்திருப்பதா? "எல்லாம் இனிதே நிறைவுறும்"

**வன்னியர்**

வன்னி என்னும் சொல் நெருப்பு என்னும் பொருளில் தமிழ் இலக்கியத்தில் பயின்று வருகிறது. வன்னியர் ஆண்டதாலேயே வன்னி என்னும் பெயர் பெற்றதாகக் கருதப்படுகின்றது.

போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் இப்பிரதேசத்தை அடிபணியச் செய்ய முடியாமற் போனதே அடங்காப்பற்று என்னும் பெயர் வரக் காரணம். ஆங்கில வரலாற்றாசிரியர் (J. P. Lewis - Manual of Vanni Districts 1985) அடங்காப்பற்றையே வன்னி எனக்குறிப்பிடுகின்றார். வன்னியர்களின் யாழ்ப்பாணம் மீதான படை எடுப்புக்கு அஞ்சியே , போர்த்துக்கேயரால் ஆனையிறவில் இரு கோட்டைகள் கட்டப்பட்டன. ஐரோப்பிய ஆட்சியாளர்களுக்குக் கடும் எதிர்ப்பைக் கொடுத்துப் பிறந்த மண்ணின் சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட வன்னியர் வரலாறு ஈழத் தமிழர் வரலாற்றில் முக்கியமான ஒரு பகுதி ஆகும்.

வே.சுப்பிரமணியம். (B. A. Hons).

# தப்புக் கணக்கு

சி. கருணாகரன், இறுதி ஆண்டு, பொறியியல் பீடம், பேராதனை



தொட்டிலையும் ஆட்டி குழந்தையையும் கிள்ளுபவர்கள் போலன்றி, குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு அதன் தூக்கம் கலையமுன்பு கதவைப் பூட்டிக் கொண்டு வெளியில் செல்ல ஆயத்தமானேன். கதவைப்பூட்டிய சத்தத்தினால் நித்திரை குழம்ப, வீரிட்டுக் கத்தினாள் ரெலிபோன் பேபி. என்னுடைய விதி, சரியான நேரத்திற்கு கொமினிக்கேசனைப் பூட்டிக் கொண்டு போக முடிவதில்லை. சிணுங்கிச் சிணுங்கி உடலைப்பழுதாக்க முதல் அவளைத்தூக்கிக் கொண்டேன். என் ஸ்பரிசம் பட்டதும் தன் அழுகையை நிறுத்திய, பேபி ரெலிஃபோனுக்கு 'ஹலோ!' சொன்னேன்.

''ஹலோ, கஸ்தூரியக்காவா.......?'' -கேட்டது ஆண் குரல்.

''கஸ்தூரியா? அப்படி ஒருத்தரும் இங்கில்லை, நீங்க யார் பேசறது?

-குரலை உயர்த்தியபடிதான் கேட்டேன்.

இந்தக்காலப் பெடியன்களைப்பற்றி எனக்குத் தெரியாதே, நேரம் போகவில்லையென்றால், டெலிஃபோன் பண்ணி பெட்டையளின்ரை தொடர்பை ஏற்படுத்தி, என்ன செய்கிறீங்க, சுகமாயிருக்கிறீங்களா..... வழிகிறதுதானே பொழுதுபோக்கு, பெட்டையளின்ரை பெயர்களையறிதவற்கு அவன்கள் பாவிக்கிற ரெக்னிக் நல்ல மூளைசாலிகள்தான்.

''நான் ஜீவா கதைக்கிறன். உது யாழ்ப்பாண டவுன் (Town) ......... கொமினிக்கேசன் தானே''

-தழுதழுத்த குரலைக்கேட்ட போது மன்னித்துக் கொள்ளுங்கோ எனச் சொல்லுறான் போல இருந்தது. அவனின் குரல் நல்லவனாக காட்டியது வம்பு கதைக்கும் வர்க்கமாகத் தெரியவில்லை.

''ஓமோம், இது திருநெல்வேலி கொமினிக்கேசன், நீங்க கேட்கிற பெயரிலே இங்கு எவரும் வரவில்லை. விலாசம் சொன்னீங்களென்றால் அவவை இங்கே வரச்சொல்லலாம்''

-கொமினிக்கேசன் பூட்ட வேண்டிய நேரம்தானென்றாலும், வருகின்ற உழைப்பை ஏன் விடுவானென்று விலாசமெழுத பேனாவைக் கையிலெடுத்தேன்.

''பரவாயில்லீங்க, உங்கிருந்து கப்பல் எப்போ புறப்படுகின்றதென அவவைக் கேட்பதற்குத்தான் எடுத்தனான்;.... நம்பர் மட்டும்தான் எழுதினவ விபரம் எழுதவில்லை, அதனால்..... உங்களைத் தொந்தரவு பண்ணி விட்டேன், Sorry ''

என்றான்

பண்பான அவனின் குரல் படித்தவன் போலக் காட்டியது.

ஒரு நாளைக்கு இப்படியான அழைப்புக்கள் எத்தனை வருகின்றன. இவற்றுக்கெல்லாம் நான் கோபிக்க முடியுமா. எனது வேலையே இதுதானே. வம்புப் பெடியளோ என எண்ணித்தான் உரத்த சத்தத்தில் கத்தினனான். உண்மைக்கும் நான்தான் மன்னிப்புச் சொல்லவேண்டும். மனதினில் எண்ணிய மறுவினாடியே அவனுடன் நல்ல தொனியில் கதைக்கத் தொடங்கினேன்.

''கப்பலா, அது இங்கேயிருந்து 20ம் திகதி புறப்படுமென பேப்பரில் போட்டிருக்கு. ஆனால் நிச்சயமாகச் சொல்லமுடியாது.''

இப்ப ஒரு கிழமையாகக், கப்பல் எப்ப வரும் என நானும் பேப்பர் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன். இன்று, நாளை என பொய்யைத்தானே போடுறான்கள்.

''திருகோணமலையிலிருந்து நாலு நாளில் புறப்படுது'' - என் மனநிலையை அறிந்தவன் போல் காதுக்குக் குளிரளித்தான்.

இன்னும் நாலுநாளில் கப்பல் வரப்போகுதெனச் சந்தோசத்துடன் கதவைப்பூட்டிவிட்டு அவசர அவசரமாக நடந்தேன்; திரும்பவும் குழந்தை எழுந்து விடுவாள் என்ற பயத்தினால்.

இந்தக் கொமினிக்கேசன் தொடங்கிய பிறகு நாம் எவ்வளவோ முன்னேறிவிட்டோம். T.V., டெக், ஃபிரிட்ஜ் என எல்லாச்சாமான்களும் வாங்கியது இந்த வருமானத்தில்தான். வந்தாலும் வந்தான்கள் கரண்ட் தந்திட்டான்கள்...... இதெல்லாம் எத்தனை நாளைக்கோ(?), எரிமலை எப்படி வெடிக்கும் , எப்போது வெடிக்குமென்று யாருக்குத் தெரியும். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும். அதிகாலையே கொமினிக்கேசனை திறந்து வைத்தேன். வழமையைவிட, உள்வரும் அழைப்புக்களைப் பெற வந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவிருந்தது. ஆனால் ரெலிபோன் பேபி தூங்கிக் கொண்டிருந்தாள். ''தூக்கமா கண்மணி துள்ளி எழு'' என முணுமுணுத்துக் கொண்டேன். நிமிடத்திற்கு 5 ரூபா வாங்கலாம். உள்வரும் அழைப்புக்கட்டணமாக 5 ரூபா வாங்குறம். சர்வதேசக்குடும்பப் பெற்றோர்கள் நிறையப்பேர் வந்திருக்கினம். எப்படியும் இன்றைக்கு நிறைய வருமானமிருக்கு. என் மனதையறிந்த பேபி குரல் கொடுத்துக் கண்திறந்தாள். செல்லமாகத் தூக்கி

''ஹலோ, குட்மோர்னிங்'' -கூறினேன்.

''ஹலோ, நான் ஜீவா கதைக்கிறன்''

-என மறுமுனை சிரித்துக் கொண்டது.

'ஜீவா கதைக்கிறார்'' என வந்திருந்தவர்களைப் பார்த்துக் கொண்டேன். எல்லோரும் மௌனமாகவிருந்ததால் திரும்ப அவனிடமே 'யாரு கதைக்கிறீங்க?'' என்றேன்

''நான்தான் ஜீவாவுங்க, நேற்று கப்பல் விடயமா உங்களுடன் கதைத்தேன், அதுக்குள்ளே மறந்திட்டீங்களா?''

> ''ஆனானப்பட்ட இராமனே,
> தன் மனைவியைச்
> சந்தேகப்பட்டிருக்கிறானென்றால்
> நாங்கள் சந்தேகப்பட்டால்
> என்ன பிழை?''........

-உரிமையுடன் கேட்டான்.

''ஒகோ, நேற்றைய ஆளா?'' -ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

''எப்ப கப்பல் உங்கிருந்து வருகுது?''

-எனக் கேட்டவனிடம் நானும் அதே கேள்வியை திருப்பிக் கேட்டேன்.

''இப்போதைக்குக் கப்பல் புறப்படாது''

-அவனிடமிருந்து இப்படியொரு செய்தி அதுவும் அதிகாலை வந்ததும் மனசெல்லாம் காய்ந்த மரம்போலாகிவிட்டது. பட்டுப்போன மரத்திற்குத் தண்ணீர் ஊற்றவேண்டுமென்று நினைத்தானோ, என்னவோ அடிக்கடி ரெலிஃபோன் பண்ணி கப்பல் விடயத்தில் தொடங்கி வீட்டு நிலைமை வரை கதைக்கின்றான். ஜீவா, இப்போ நல்ல நண்பனாகிவிட்டான். அவனுடன் கதைக்கத் தொடங்கினால் நேரம்போவதே தெரிவதில்லை. என்மனம் ஏங்கத் தொடங்கிவிட்டது. ஜீவா எடுக்க மாட்டானா? கொமினிக்கேசனில் ஆட்கள் வராதநேரத்தில் நிறைய அலட்டலாம், அது என்னவோ தெரியவில்லை, ஏதோ புரியவில்லை அவனுடன் கதைக்கின்ற போது எனக்கு மிகவும் சந்தோசமாகவும் ஆறுதலாகவும் இருக்கின்றது. இந்தக் கானல்நீர்ச் சந்தோஷம் இன்றுடன் முடியப்போகுதென்று தெரியாமல் வீட்டுக்கு வந்தபோது பேரதிர்ச்சியும் காத்திருக்குமென நான் நினைக்கவேயில்லை.

''வாங்கோப்பா, என்ன லேட், கொமினிகேசனில் நிறையச் சனமா(?)''

வரவேற்பு பலமாகவிருந்தது.

''இன்றைக்கு கப்பல் வந்ததா?''

-சந்தோசமென்றாலும் ஏதோ அதிர்ச்சியில் சந்தேகமாகக் கேட்டேன்.

''கப்பல் இப்போதைக்கு வராது, நான் ஃபிளேனில் வந்திட்டன்..... அது போகட்டும், ரெலிஃபோனில் நல்லா அலட்டுகிறீங்க; ஹலோ சொன்னதும் யாரு ஜீவாவா என்றால்.......(?) கொமினிக்கேசனை நாளையிலிருந்து நான் பார்த்துக் கொள்கிறேன், நீ வீட்டிலேயிருந்து வீட்டு வேலைகளைக் கவனி, புரியுதா?

-கண்டிப்பாகச் சொன்னவரை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் கணவர்தான் என்னுடன் ஃபோனில் வேறோர் பெயரைச் சொல்லிக் கதைத்து என்னை ஆழம் பார்க்கிறார் என்பதையறியாத மடந்தையாகிவிட்டேனோ என்ற வெட்கம் ஒருபுறம் அவரைக்கண்ட சந்தோசம் மறுபுறம், சிலையாகி நின்றேன்.

''இஞ்சரப்பா, இன்றைய காலகட்டத்தில் பெண்கள் நாட்டையாள்கிறார்கள். நீங்க

என்னவென்றால் என்னை ஹவுஸ் வைஃப் என்ற பெயரினால் ஹவுஸ் அரெஸ்ட் பண்ணு கிறீர்கள்''

-சொல்ல நினைத்தேன். ஆனால் சொல்லவில்லை. உந்தாளோடை வாதாட முடியாது. பக்கத்து வீட்டுப் பாக்கியக்கா, மாதர் சங்கத்தலைவி, பெண்களுக்கு சம உரிமைகள் தரப்பட வேண்டுமென குரல் எழுப்பிக் கொண்டிருப்பவ. அவவுடன் வாதாடிய வாய்வீரர் இவர்.

''பெண்களுக்கு சமவுரிமை கேட்கிறீங்கள். பட்டப்படிப்பு, தொழில்வாய்ப்பு, அரசியல் என எல்லாவற்றிலும் சமபங்கு வேண்டுமென்கிறீங்கள். இங்கு ஒரு ஆண் மாட்டுவண்டி சவாரி செய்து, மூட்டை தூக்கி உழைக்கும் தொழிலை பெண்கள் செய்வார்களா?

உடைகளிலும் சமவுரிமை வேண்டுமென்று சேட்டும் ஃபாண்டும் போடத் தொடங்கி விட்டியள்...... மாதர் சங்கம் மகளிர் சங்கம் என வீட்டுப்பக்கம் வந்து என் மனைவியையும் குழப்பிவிடாதேங்கோ''

பாவம் பாக்கியக்கா, இதற்குப்பின் எங்க வீட்டுப்பக்கம் வருவாவே(?) வரவேயில்லை.

''சரிங்கப்பா, நீங்கள் சொன்னதுபோல செய்கிறேன். உங்களைக் கல்யாணம் கட்டிய துக்கு...... உங்க சொல்லுக்கு எதிராக ஏதாவது செய்தனானே? என் வீட்டை விட்டு, சொந்த பந்தத்தை விட்டு உங்க நிழலாக வந்துவிட்டேன். ஹவுஸ் வைஃப் ஆகவிருந்தும் நிறைய சாதிக்கலாம்தான். ஒரு குழந்தை நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே. குழந்தைகளைச் சீராக கவனித்து நன்றாகப் படிக்க வைத்துப் பாசமழை பொழிந்து நல்ல பிள்ளைகளாக வளர்க்க வசதி ஆகவிருக்கும்.''

-மன மகிழ்வாக என் சம்மதத்தை தெரிவித்துக் கொள்ள அவரின் முகம் அப்போது மலர்ந்த தாமரை மலர் போலானது.

காத்திருந்த காற்று அந்நேரம் பார்த்து பாக்கியக்காவின் சிறப்புச் சொற்பொழிவை வான் அலையில் காவி வந்தது.

''இராமன் சீதையைச் சந்தேகப்பட்டுத் தீக்குளிக்கச் சொன்னான். அதில் அர்த்தமிருந்தது. நியாயமிருந்தது. தன்னைப்பற்றி எவர் எப்படிக் கதைத்தாலும் பரவாயில்லை. ஆனால் என் மனைவி குற்றமற்றவர், களங்கமற்றவர், பத்தினி என உலகம் கதைக்கவேண்டுமென விரும்பி த்தான் அந்தத் திருவிளையாடலைப் புரிந்தான். இராமன் கிருஸ்ணனின் அவதாரம் அவனுக்குத் தெரியாதா? அயோத்தியென்றாலும் சரி அசோகவனமென்றாலும் சரி பெண்கள் பெண்களாக விருக்க வேண்டும் என்ற மறைமுகக் கருத்தையும் நீங்கள் மறக்கவோ மறுக்கவோ கூடாது. இன்றைய ஆண்கள் கூறும் வேடிக்கை வினோத வசனம், ''ஆனானப்பட்ட இராமனே, தன் மனைவியைச் சந்தேகப்பட்டிருக்கிறானென்றால் நாங்கள் சந்தேகப்பட்டால் என்ன பிழை?''........ இவர்கள் ஒன்றைக் கவனிக்கணும், இராமன் சந்தேகப்பட்டானென்பதால் சந்தேகப்படுபவர்கள் எல்லாம் இராமனாக முடியாது. இந்த இராமன்கள் இவ்வுலகில் வாழக்கூடாது. அவர்களை பூண்டோடு ஒழிக்கவேண்டும். முதலில் அவர்கள் போட்டுள்ள தப்புக்கணக்கைத் தகர்க்க வேண்டும்......''

**(யாவும் கற்பனை)**

# அவள் கல்யாணம்

சரயு

அழகான பெண் அவள். கொஞ்சிக் கொஞ்சி பட்சமாகக் கதைக்கும் பெண். கொஞ்சம் அசடு- அவளைப் பார்த்தால் ஏமாற்ற வேண்டும் போல் மற்றவர் மனசு குறுகுறுக்கும் அளவிற்கு அசடு. இத்தனை அழகான, அசடான, பெண் தான் தனக்கு ஜோடி என்பது அவனுக்கு தீர்மானமாகத் தெரிந்திருந்தது. அது அவள் மீது அவன் வைத்திருந்த பிரியத்தினால் என்பதில் அவளுக்கு என்றுமே சந்தேகம் இருந்ததில்லை- மற்றவர்கள் சீதனமில்லாததைக் காரணமாகக் காட்டினாலும்.

அவன் காலில் கொஞ்சம் ஷெல்லுடன் சிதறிப் போனது ஒரு குறையாக இங்கு பட்டாலும், அவன் மாஜிப் புலியோ என்ற சந்தேகத்தைக் கிளப்பினாலும், அவன் வெளிநாட்டுப் பிரஜையாக அதுவே உதவுமெனப் பட்டது. அவன் குடும்பம் வீட்டை வித்து கப்பக்காசு கொடுத்து யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியபோது அவளையும் வா என்றான். "கல்யாணமாகாமல் எப்படி வருவேன்" என்று அவள் தயங்கியபோது, "இப்ப நீ வந்தால், என் குடும்பத்தில் ஒருத்தியாக கூட்டிப்போக கதைத்துப் பாக்கிறன். நீ கொழும்பிலிருந்தால் எனக்குப் பின்னால் கெதியாக வெளிநாடு வர வசதியாக இருக்கும்" என்றான்.

அசடு அவள். வெளிநாடு செல்வது அவன் சொன்ன அளவிற்கு சுலபம் என்று நம்பி விட்டாள். யாழ்ப்பாணத்தில் காசு கொடுத்து கொழும்பு வந்தது போல, கொழும்பில் காசு கொடுத்து வெளிநாடு போயிடலாம் என்று நினைத்தாள். சட்டங்களும், தர்மங்களும் நாளுக்கு நாள் மாறிய கால யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவள் அவள். காசிருந்தால் எதையும் செய்து லிடலாம் என்று அவள் நினைத்தது அசட்டுத்தனம் போல அவளுக்குத் தோன்றவில்லை.

அவளுக்கு கணவனாகிப் போனவனின் கெட்டித்தனத்தில் கொழும்பில் ஒரு வேலை கிடைத்தது. அசடானாலும் வேலையிடத்தில் நல்ல பெயர் எடுத்து, சம்பள உயர்வுகளுடன் கிடைத்த வேலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளத் தெரிந்திருந்தது.

அவனது சொந்த பந்தங்களினதும் அவளது ஒரேயொரு தூரத்து சொந்தக்கார தம்பதிகளினதும் ஆசிகளுடன், அவனுக்கும் அவளுக்கும் ரெஜிஸ்ரேஷன் முடிந்தது. அவள் கழுத்தில் தாலி ஏறாமலேயே அவன் அவளுக்கு கணவனாகிப் போன அன்று, சீதனமற்ற அவளை, அவள் உறவினர் அற்ற கல்யாணத்தில் அவன் ஏற்றுக் கொண்ட போது, அவள் உருகிப் போனாள். அந்தக் கல்யாணம், அழகான அசடான அவளை அவனுக்காகக் காத்திருக்க வைக்கும் யாகத்தின் ஆரம்பச் சடங்காக அவளுக்குத் தோன்றவில்லை.

"கனடா போகிறேன்" என்று கிளம்பினான். ஏழரை லட்சங்கள் கொடுத்தான். யாழ்ப்பாணத்தில் கொடுத்த காசை விட இது அதிகம் என்றாலும், கனடா என்ன பக்கத்திலா இருக்கு என்று அவள் நினைத்தாள். யாழ்ப்பாண வீட்டை விற்றுக் கிடைத்த அத்தனை காசையும், அவனது தாய்- தந்தை அவனில் கொட்டி அவனை வெளிநாடு அனுப்பிய போது, அது பாசம் என்று அவள் நெகிழ்ந்து போனாள்- அது முதலீடு என்று மற்றவர்கள் சொன்னாலும், கனடா போவதாகக் கட்டுநாயக்காவில் பிரிந்த அவன், லண்டனிலிருந்து போனில் கூப்பிட்டான். நாளாக, நாளாக லண்டனிலேயே இருந்து விடலாமென்றான். கல்யாணமாகாதவன் என்று அகதி அப்பிளிகேஷன் போட்டிருப்பதாகச் சொன்னான். இன்னும் இரண்டேயிரண்டு வருடங்களில் அவளும் லண்டன் வந்து விடலாமென்றான். வாழ்க்கை அவளுக்கு சொர்க்கமாகியது.

வெளிநாட்டுக் காசு அவனிடமிருந்து அவன் தாய்க்கு வந்தது. தாராளமாகவே வந்தது. அதில் அவள் பங்கை அவன் தாய் அவளுக்கு கொடுப்பதாக ஒழுங்கு. கொழும்பு வாழ்க்கை என்பதால் அவள் சம்பளம் அவளுக்குப் போதவில்லை. காசிருந்தால் செலவு யாருக்குத்தானில்லை. ஒவ்வொரு தடவையும் அவன் தாய் அவன் காசை அவள் கையில் வைத்த போது, தாலி கட்டாமலேயே அவள் கணவனாகிப் போனவன், காசாகிப் போனது போல அவளுக்குள் தோன்றும். அந்த உணர்வுகளை மூலையில் போட அசட்டானாலும் அவளுக்குத் தெரிந்திருந்தது.

தபால்காரன் கொண்டு தரும் படங்களில் வருடங்களையும் அவனையும் கொஞ்சம் கொஞ்சமாக அவள் தொலைத்துக் கொண்டிருந்தாள். தாலி கட்டாமலேயே கணவனாகி போன அவனிடத்தை, அந்தப் படங்களில் புன்னகைக்கும் அந்நியன் ஆக்கிரமிக்க முயல்வது போலொரு உணர்வு அவளுள் தலைதூக்கும். அந்த உணர்வை மனதிலோர் மூலையில் அடக்கி பூட்டி வைக்க தமிழ் பெண்ணான அவளுக்குத் தெரிந்திருந்தது.

ஆறு வருடங்களோடி விட்டன. அவன் எப்ப லண்டன் பிரஜையாகி, அவள் எப்ப அவனிடம் போவது என்று எல்லோர் மனதும் அலுத்த நிலையில் தான், அவளை எப்படியாவது லண்டனுக்கு அனுப்பி விடுமாறு அவன் தன் தாயைக் கேட்டான். வெள்ளைத் தோலானால் எட்டு லட்சம், கறுப்புத் தோலானால் எட்டரை லட்சம் என்ற பேச்சு எழுந்த போது, கறுப்பு வெள்ளை என்று பாராபட்சம் காட்டாத புலிகளின் பெருந்தன்மை அவள் நினைவில் வந்து போனது. அவள் வெள்ளைத்தோல்காரி என்பதால் அரை லட்சம் மிச்சம் என்று அவன் வீட்டார் சிலாகித்தது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. பெருமையாகவும் இருந்தது.

ஒரு முஸ்லீம் பெண்ணாக உடுத்து, ஒரு முஸ்லீம் மனிதனின் மனைவியாக அவள் லண்டன் போக ஆயத்தங்கள் நடந்தது. இந்த ஆயத்தங்கள் தாலி கட்டாமலேயே அவள் கணவனாகிப் போனவனின் சம்மதத்துடன் அவன் வீட்டினரால் செய்யப்பட்டதால், லண்டன் போகும் வழியில் அவள் வழித்துணைக்கணவன், அவளை மனைவியாகவே நடத்திவிடுவானோ என்ற பயம் அவள் மனதில் எழும்பவில்லை. புலிகளிடம் காசு கொடுத்து கொழும்பு வந்த பயணத்தை விட இது சுகமான பயணமாக இருக்குமென அவளுக்குத் தோன்றியது. கிளாலி இல்லை. ஷெல் இல்லை. நடை இல்லை. ட்ரக்டர் இல்லை. செக்போஸ்ட் இல்லை. கட்டுநாயக்காவில் விமானமேறினால் லண்டனில் இறக்கம். கள்ள வீசா, கள்ள பாஸ்போட் என்றாலும் பிரச்சினையில்லை. எட்டு லட்சம் கொடுப்பது வேறு எதுக்காம்.

இன்று பயணம், நாளை பயணம் என்று ஆயத்தமாகி ஆயத்தமாகி அவள் மனது சலித்து அவள் தாய் மனதும் சலித்த வேளையில் தான், லண்டனிலிருந்து அந்தப் பொடியனின் போன் கோல் வந்தது. அந்தப் பொடியன் அவளது ஊரில் பக்கத்து வீடு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திறமாகப் பட்டம் வாங்கியவன். அவனை எப்படியாவது லண்டனுக்கு அனுப்பிவிடுவதென்று அவன் தகப்பனார் அவனைக் கொழும்புக்குக் கூட்டி வந்திருந்தார். கையுடன்

கொண்டு வந்த பதினொன்றரை லட்சத்தை அவன் தகப்பனார் யாருக்கோ கொடுத்து அவனை வெளியே அனுப்பும் முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்த வேளையில், அவன் அடிக்கடி அவளும், அவள் தாயும் இருந்த அறைக்கு வருவான். ஒரு நாள் போனில் "அம்மா நான் இப்ப எங்கயிருந்து கதைக்கிறன் என்று சொல்லுங்'க பார்ப்பம்" என்றான். அவன். "என்ன, தம்பி லண்டனிலிருந்து கதைக்கிறீராக்கும்" என்ற அவள் தாயின் பகிடிக்கு, அவன் "எப்படியம்மா அது உங்களுக்கு அதுக்குள்ள தெரிந்தது" என்ற போது அவள் தாய் மூச்சற்றுப் போனாள்.

அதே ஏஜண்டை அவள் அம்மா தேடிச்சென்று பிடித்தபோது, அவர்கள் பதினொன்றரை லட்சத்திற்கு உண்மையான பாஸ்போர்ட்டில் அனுப்பி வைப்பதாகச் சொன்னார்கள். யாரோ ஒருத்தனை வழித்துணைக் கணவனாகக் கொண்டு செல்வதை விட இது எத்தனையோ மடங்கு மேல் என்று அவளுக்கும் அவள் தாய்க்கும் பட்டது. அவள் மனது இலேசாகி லண்டனுக்குப் பறந்தது. அவள் வெள்ளைத்தோலால் மிஞ்சவிருந்த அரை லட்சம் போவதுமில்லாமல் இன்னுமொரு மூன்று லட்சத்திற்கு துண்டு விழுவதென்பது, தாலி கட்டாமலேயே அவள் கணவனாகிப் போனவனின் குடும்பத்தினருக்கு கொஞ்சம் மனச்சங்கடத்தை தரத்தான் செய்தது, பதினொன்றரை லட்சம் உத்தரவாதம் இருந்தபடியால், அவள் பயணத்தில் ஏதும் பிரச்சினை வரலாமென இரு தரப்பினருக்கும் தோன்றவில்லை. வானில் கட்டுநாயக்கா நோக்கிச் சென்றபோது, இலங்கை மண்ணை அத்தனை இலகுவாக அவளால் உதற முடியாது என்பது அவளிற்கு தெரிந்திருக்கவில்லை.

சிஐடி தனது அறைக்கு அழைத்துச் சென்று கேள்வி கேட்டபோது, ஏஜண்ட் சொல்லித்தந்த பொய்களை கிளிப்பிள்ளை போலச் சொன்னாள். அவள் தலைமயிரை சிஐடி இறுக்கிப் பிடித்தும் அவள் கதை மாறவில்லை - அவள் அம்மா வந்து எல்லா உண்மைகளையும் சொல்லும்வரை. ஏஜண்டைப் பிடிக்கவென்று அவள் அம்மாவை தெகிவளைக்கும், அவளை நீர்கொழும்பு விளக்கமறியலுக்குமாக அனுப்பியபோது, ஏஜண்டைப் பிடித்தவுடன் அவளை வீட்டிற்கு கொண்டு போயிடலாமென்று சிஐடி சொன்னதை, அவள் அசட்டுத்தனத்தினாலும், அவள் அம்மா நப்பாசையினாலும் நம்பினார்கள். ஏஜண்ட் தன் குடும்பத்துடன் சீவிக்கும் வீட்டை அவள் அம்மா சிஐடிக்கு காட்டியும், ஏஜண்டைப் பிடிக்க முடியவில்லை. விளக்கமறியலில் அவள் வாழ்க்கை இரண்டு கிழமைகளாக ஆரம்பித்து, இரண்டு நாளாகி, தாலி கட்டாத அவள் கணவன், வரமாட்டானா என அவள் கண்களும் மனதும் அலை பாய்ந்தது.

பதினொன்றரையில் ஒரு பகுதியை யார் யாருக்கொ லஞ்சமாகக் கொடுத்து அந்தப் பிரச்சினையிலிருந்து அவளை ஒருமாதிரியாகக் கரையேற்றினார்கள். தாலி கட்டாத கணவன் தாலியுடன் லண்டனில் காத்திருந்ததால், சிஐடி, நீதிமன்றம், மறியல் - இவைகளையெல்லாம் தமிழ் பெண்ணான அவளின் லண்டன் பயணத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை.

லண்டன் விமான நிலையத்திற்கு அவள் பாதுகாப்புக் கருதி அவன் வரமாட்டான் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தும், அவள் கண்கள் விமான நிலையத்தில் அவனைத் தேடி அலைந்ததை அவளால் தடுக்க முடியவில்லை. லண்டனுக்கு அவளைக் கூட்டி வருதற்காக சட்டப்படி அவள் இரண்டாவது கணவனானவனின் வீட்டு முன்னறையில், தாலியுடன் வரவிருக்கும் முதலாவது கணவனை எதிர்பார்த்து காத்திருந்தாள்.

வீட்டருகில் காரொன்றின் வேகம் குறைவதை அவள் காதுகள் உணர்ந்தன. உடம்பு உறைந்தது. சிலையாகிப் போன அவளது அழகிய முகத்தில் உணர்விழந்து போன அந்த இரு கண்களும், கதவடியில் புன்னகைத்த அந்த முகத்தை - தபால்காரன் கொண்டு தந்த படங்களின் நாயகனின் முகத்தை - விலத்தி, அந்த முகத்தின் பின்னே படர்ந்த வெறுமையில், தாலி கட்டாமலேயே அவள் கணவனாகிப் போனவனின் முகத்தை காதலுடன் தேடின.

# இளைய தலைமுறை

வேலாயுதம் முருகதாசன், இறுதிவருடம், பொறியியல்பீடம்.

**நா**ன்.....

மேசை மணிக்கூட்டின் அலார ஒலி காதிற்குள் முள்ளாய் நுழைந்து என் தூக்கத்தை முறித்தது. அருகே கிடந்த கட்டிலைப் பார்த்தேன். காலியாக இருந்தது. இவன் இப்படித்தான் மாயாவி போல எப்ப வாறான், எப்ப போறானெண்டு தெரியாது. அங்கலாய்த்த வண்ணம் எழுந்து யன்னலை திறந்து விட்டேன். மகாவலியின் மேனியோடு உரசி குளிரை அள்ளி வந்த குறிஞ்சிக்காற்று முகத்திலறைந்தது. வெறுப்போடு யன்னலை மூடிவிட்டேன். நினைத்தது போல் இந்தக் குளிர் மனதிற்கு சந்தோஷமானதாக இருக்கவில்லை. மகாவலி நதியும் கூட இங்கே கண்ணுக்கு அழகாகத் தெரியவில்லை. முன்பெல்லாம் இங்கு வருவதற்கு முன்பு மகாவலியைப் பற்றி இருந்த கற்பனையெல்லாவற்றையும் தகர்த்தெறிந்தது அந்த கலங்கலாக ஓடிக் கொண்டிருக்கும் மண்ணிறத் தண்ணீர் "காதலியின் சம்மதம் கிடைக்கும் மட்டும் காதலில் இருக்கும் சந்தோஷம் அதற்கு பின்னர் இருப்பதில்லை" என்று யாரோ சொன்ன ஞாபகம் வந்தது. பேராதனைப் பல்கலைக்கழகம் என்பதனை பெருமையோடு உச்சரித்த உதடுகள் இப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இறுதி வருட மாணவன் என்று சொல்ல வெட்கப்படுகிறது. ஏன் இந்த மலைகளையும் பூமரங்களையும் என்னால் இரசிக்க முடியவில்லை? எதனால் என்னால் இங்கு சந்தோஷமாக படிக்க முடியவில்லை, அம்மா, அப்பாவை உறவுகளை பல வருடங்களாக பார்க்காமல் இருப்பதா, இல்லை அவளோட இனி கதைப்பதில்லை என முடிவு செய்த பிறகுதான் இப்படியா?

முதலில் நான் ஒரு மனோதத்துவ நிபுணரிடம் போக வேண்டும். சில வேளைகளில் நானும் ஒரு மன நோயாளியாக இருக்கலாம். ஏனென்றால் இங்கு படிப்பவர்களில் முக்கால்வாசிப் பேராவது ஏதாவது ஒரு வழியில் மனநோயாளிகளாகத்தான் இருக்கவேண்டும் என்பது என் முடிவு. எண்ணங்களை உதறிக் கொண்டு துவாயைத் தோளில் போட்டவாறு பாத்ரூமிற்குள் தஞ்சமானேன். பாட்டு பாடிக் கொண்டு குளிப்பது எனக்குப் பிடிக்கும்....

"சோதனை தீரவில்லை சொல்லியழ யாருமில்லை........"

"ஆர்ரா அவன்........ (தணிக்கை) இந்த நேரம் சோகப்பாட்டு பாடுறான்? " "கேவலம் பாடுறதிற்கும் இங்கை சுதந்திரமில்லையே?" குரலை உயர்த்தினேன். இங்கு நாங்கள் ஏன் இப்படி

மாறினோம். பத்தாம் வகுப்பு படிக்கும் போது நான் நினைத்துக் கொள்வேன். டொக்ரரிற்கு படிக்க வேணும் சண்டை நடக்கிற இடங்கள்ள காயப்பட்ட சனங்களிற்கு மருந்து கட்டவேணும் அவைக்கு சேவை செய்யோணுமெண்டு. ஆனால் A/L இல் அம்மாவின் அன்பென்ற ஆயுதத்தால் எனது கொள்கைகள் நிர்மூலமாக்கப்பட்டது. "அப்பன் டொக்டரிற்கு படிச்சா வாழ்க்கையில சந்தோஷமா இருக்கேலாது" அம்மாவின் வார்த்தைகள் இப்போதும் காதில் ஒலித்தன. ஆனால் நான் பொறியியல் பீடத்தில் படிச்சுக் கொண்டு சந்தோஷமில்லாம இருக்கிறன் என்ற உண்மை அவவுக்கு எப்படித் தெரியப்போகுது. எனக்கெண்டு ஒரு கொள்கையோட வாழ எத்தினை தடைகள் முதலில் அம்மா, அப்பா அடுத்து நண்பர்கள் சமூகமென விரிந்து செல்லும் வட்டம் , இந்த வட்டத்தை ஏன் என்னால் கடக்க முடியாமல் இருக்கிறது?

யோசனையோடு முகத்தைக் கழுவிக் கொண்டு கிரவுண்ட்டிற்கு புறப்பட ஆயத்தமானேன். கிறவுண்ட் நோக்கி கால்களை இயங்க விட்ட போது "ஹாய் மச்சான் எங்க போறது?....." பதுளை சிங்கள நண்பன் குமார கொச்சைத் தமிழில் கேட்டான்.

கிறவுண்டுக்கு தான்டா, நீ எங்க கேள்பிரண்ஸிட்டையா," அவனின் கொச்சை தமிழிற்கு எனது தமிழை மாற்றி பேசுவதற்கு தயாரானேன். புன்னகையைப் பதிலாய்த் தந்தான் தொடர்ந்து "அடே ஏன்டா இன்னும் கேள்பிரண்ஸை செலக்ட் பண்ணாம இருக்க?"

இவனிற்கு எதைச் சொல்வது O/L இல் படிக்கும் போது கூடவே படித்த சாந்தியின் கண்கள் ஞாபகத்திற்கு வந்தன. எனக்காக அவள் தந்த இதழ் விரியாத புன்னகைகளும் ஓரப்பார்வைகளும் எனக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாய் என்னுள்ளே புதைந்து போயிற்று. சே..... எப்படிப்பட்ட கோழை நான்? இறுதியாக அவள் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது வரை மட்டும் எனக்குத் தெரியும். இப்போது என் மீது அன்பை சுமந்த ஜீவனின் எச்சங்கள் எந்தப் புதைகுழிக்குள் இருக்கிறதோ?...... வேதனை நெஞ்செங்கும் வியாபித்தது. இதை எப்படி இவனிற்கு விளங்கப்படுத்துவது.

"நீங்க டௌறி வாங்குறதுக்காகத்தான் love பண்ணாம இருக்கிறீங்க?.....

குமாரவின் குரலைத் தொடர்ந்து அந்த உலகத்திற்கு வந்தேன். டௌறி என்றதும் எனக்கு சங்கர் அண்ணரின் ஞாபகம் வந்தது. பாஸ் அவுட் ஆகும் வரை சீதனம் வாங்குவதில்லை என்ற கொள்கையோட இருந்தவர். கலியாண வீட்டில் சொன்னது "மச்சான் சீதனம் இல்லாம கொழும்பில குடும்பமா இருக்கேலாது. வேற இடங்கள்ள வேலையும் இல்லை. இருக்கவும் ஏலாது. என்ன செய்றது." ஆனா உனக்கு ஒண்டு சொல்லுறன் வாங்குறதென்டா கனக்க வாங்கு இல்லாட்டி வாங்காம இரு. டௌறி மட்டும் இங்கை பிரச்சினை இல்லை. இங்கை படிக்கிற தமிழ் பொடியளிற்கு தான் எத்தினை பிரதேச பிரிவுகள். படிக்கிற தமிழ் பொடியளிற்கு மூன்று சங்கம் வேணுமென்டா? ஐஞ்சாறு தமிழ்க்கட்சியள் இருக்கிறதில ஒரு பிழையுமில்லை தானே? சும்மா சத்தம் போடுறதில பிரயோசனம் இல்லை.

"ஓம் மச்சான் டௌறி ஒரு நீசன் தான்" சொல்லிவிட்டு அவனிடமிருந்து விடை பெற்றேன். வூஸ் கன்ரீனிற்குள் நுழைந்தேன். தலைக்குள் ஏதோ செய்தது ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் பொருத்திக் கொண்டேன். அதற்கு உயிர் கொடுத்து புகையினை உள்ளிழுத்து நிமிர்ந்தேன் தூரத்தில் கணேஷ் வந்து கொண்டிருந்தான்.

"கணேஷ்"

"என்னடா?"

"மண்டைக்கை ஒரே விறைப்பாகக் கிடக்கு" கொஞ்சநாளாய் படிக்கேலாமல் கிடக்கு"

"அதுக்கு?"

"இன்றைக்கு இரவு எடுத்துக் கொண்டு வாறியே?"

"அடிச்சாப் போச்சு நான் பத்து மணிக்கு சாமானோட வாறன்"

கையினை உயர்த்தி கட்டை விரலை நீட்டி வெற்றி போலக் காட்டினான். ஒரு தற்காலிக நிம்மதிக்கும் வெற்றிக்கும் இரவில் இடம் இருக்கிறது.

• • • • • • • • • • • • • • • • • •

அவள்......

பாங்கொக்கின் தரைகளை முத்தமிட்ட எயார் லங்கா விமானத்தின் வயிற்றுப் பகுதியில் இருந்து நீட்டிய படிகளில் மூன்றாவது ஆளாய் வெளிப்பட்டாள். கவிதா. நீல நிற டெனிம் இன் காற்சட்டைக்கும் சிவப்பு கலர் ரீ சேட்டிற்கும் தன் உடலை அடைக்கலம் கொடுத்திருந்தாள். கண்களை மறைத்த முட்டை வடிவ குளிர் கண்ணாடி சகிதமாக அவளைப் பார்க்கும் யாருமே அவள் ஒரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண் என ஒத்துக் கொள்ள மாட்டார்கள். தனக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி பயணிகள் தரிப்பிடத்தை அடைந்த அவள் தன்னை அழைத்துப் போக வரும் முன்பின் அறியாதவனிற்காக காத்திருக்கத் தொடங்கினாள். உள்ளிருக்கும் பயத்தை மறைப்பதற்காகவும், விமான நிலைய காவல் அதிகாரிகளின் உறுத்தல் பார்வையினை தவிர்ப்பதற்காகவும் உதடுகளில் சிறிதாய் புன்னகையினை தவழ விட்டாள். முன்பெல்லாம் இரவு ஏழுமணிக்கே பக்கத்தில் இருக்கும் சித்தியின் வீட்டிற்கு தனியே போகப் பயந்து தம்பியைத் துணைக்கு அழைத்துச் செல்பவள் இன்று கொழும்பிலிருந்து லண்டன் வரை ஒரு தனிப்பயணம், முன்பு ஊரிலிருந்து புறப்பட்ட அமுதா மனநோயாளியாகி இலங்கைக்கு வந்ததையும் கூடவே இடைவழியில் காணாமல் போன காயத்திரியின் கதையும் அவளை வெகுவாக சங்கடப்படுத்தின. காளியாச்சி நீ தான் காப்பாற்ற வேணும் மனதுள் ஊர்க் காளியம்மனை வேண்டிக் கொண்டாள். பயப்பிடாத பிள்ளை இந்த ஏஜென்சி நல்ல பொடியன் கனபேரை இப்பிடி அனுப்பியிருக்கிறான். தூரத்து முறையில் சொந்தமும் கூட" அப்பா சொன்னது அவளிற்கு சிறிது தெம்பைக் கொடுத்தது.

சிறிது நேரத்தில் அவளை அழைத்துப் போவதற்காக புதியவன் ஒருவன் அங்கு வந்திருந்தான். நீர் இஞ்சை பத்துப் பன்னிரண்டு நாள் நிற்க வேண்டி வரும் அதுக்குப்பிறகு மொஸ்கோ போய் லண்டனிற்கு போகலாம். இங்க இருக்கு மட்டும் நாங்க சொல்ற படி நடந்தா ஒரு பிரச்சினையும் இல்லை. மௌனமாக தலையாட்டினாள் கவிதா.

வெகுவிரைவில் பாங்கொக்கின் நிழலான காரியங்கள் நடைபெறும் இடமொன்றில் அவள் தங்க வைக்கப்பட்டாள். அவளைப் போலவே அந்த அறையில் இன்னும் மூன்று பெண்கள் இருந்தனர். புதிதாக வந்த அவளை பரிதாபமாக பார்த்தனர். அவர்களுடைய வெளிறிய முகங்களும் விரக்தியான பார்வைகளும் அறையில் ஒரு இக்கட்டான சூழ்நிலையினை ஏற்படுத்தியிருந்தன. அவர்களுடன் பேச முற்பட்டாள். நீங்க எந்த இடம்? .....

"காரைநகர் " அவர்களுள் ஒருத்தி பதில் சொன்னாள்

எங்கை போறியள்?

"கனடா"

உங்களிற்கு எப்ப பிளைட்?

தெரியல்லை. இன்னும் இரண்டு மூண்டு நாள்ள அனுப்புவம் எண்டு சொன்னாங்கள். நீங்க எங்கை போறியள்?

"லண்டனிற்கு "

என் புறப்போஸ்டா?

"ஓம்"

"உங்களிற்குத் தெரிஞ்சவரா?"

"இல்ல அப்பா தான் பேசி நிச்சயமாக்கினவர்" அவர்களின் சம்பாஷணையிலிருந்து விலகி இருந்தவர்களில் ஒருத்தி திடீரென அழத் தொடங்கினாள்.

"அவ ஏன் இப்படி அழுறா?" கவிதா துயரத்துடன் கேட்டாள்.

அவர்கள் எவருமே பதில் சொல்லவில்லை. ஒருவரையொருவர் வேதனையோடு பார்த்துக் கொண்டார்கள். மறுநாள் மாலையில் கவிதாவை ஏஜென்சிக்காரர்கள் எங்கோ அழைத்துச் சென்றார்கள். அடுத்த நாள் விடியல் பொழுதில் அவள் மீளவும் பழைய இடத்திற்கு கொண்டு வரப்பட்டாள். அன்று முழுதும் கவிதாவும் அழுதவண்ணம் இருந்தாள். அறையில் இருந்த மற்றவர்களும் ஏன் என்று கேட்கவில்லை. இறுதியாக அவள் லண்டன் போய்ச் சேர்ந்தாள் உயிரோடு மட்டும்....

ஆறேழு மாதங்களின் பின்னர் கவிதாவின் தந்தை பொன்னையர் தனது மகளின் கல்யாணப் படங்களை மற்றவர்களிற்குக் காட்டி பெருமைப்பட்டுக் கொண்டார்.

• • • • • • • • • • • • • • • • • • •

## அவனோடு......

வேகமாய் வந்த சைக்கிளை சர்ரென்ற ஓசையுடன் நிலத்தில் அரைவட்டம் வரைந்து ஓய்வுக்குக் கொண்டு வந்தான் ரகு.

"என்ன மச்சான் வேளைக்கு வந்திட்டியே?"

"இல்லை இப்பதான்ரா கொஞ்ச நேரத்திற்கு முந்தி வந்தனான்"

ஊர் வைரவ கோயிலின் அருகே இருந்த பெரிய ஆலமரத்தின் கீழ் இருக்கும் அந்தச் சின்னமடம் திருவிழாக்காலங்களில் தண்ணீர்ப் பந்தலாகவும் ஏனைய நாட்களில் எங்களின் பொழுது போக்கு இடமாகவும் விவாத மேடையாகவும் இருந்து தொடர்ந்து கடல்வரை விரித்துப் போட்டிருக்கும் வயல் வெளியினைத் தழுவி வரும் காற்றின் உப்புக்கரிப்பு எனக்கு பிடித்தமான ஒன்று. நண்பர்கள் இல்லாத நேரத்தில் ஆலமரக் கிளைகளில் தாவித் திரியும் அணில்களையும், மஞ்சள் சொண்டுகளை மரத்தோடு உரசி தலைகளை அங்கும் இங்கும் ஆட்டி தங்களிற்குள்ளே பேசிக் கொள்ளும் மைனாக்களையும் பார்த்துக் கொண்டிருப்பது எப்போதும் சந்தோஷம் தரும் சங்கதி.

"மச்சான் வாழ்க்கை வெறுக்குது" தொடர்ந்து வந்த நண்பன் குரல் என்னைக் கலைத்துப் போட்டது.

"ஏன்டா உனக்கென்ன நடந்தது?"

இரண்டு வருடங்களின் பின்னர் 'பாண்ட் வாத்திய அணிவகுப்போடு நாங்கள் சைக்கிள் ஓடித் திரிந்த வீதியில் ரகுவின் இறுதியாத்திரை இடம் பெற்றது.

"அப்பாவும் அம்மாவும் தங்கச்சியோட கனடாவுக்கு போன பிறகு இஞ்ச தனியா இருக்க விசராக்கிடக்கு"

"உன்ர தனிமைப் பிரச்சினைக்கு ஒரே ஒரு வழிதான் இருக்குது"

"டேய் பொடி வைக்காம விளக்கமாச் சொல்லு"

"ஒரு நல்ல பெட்டையை லவ் பண்ணத் தொடங்கிவிட்டியென்டால் எந்தப் பிரச்சினை இராது"

"நல்ல பெட்டையோ".... "அதை எப்படிக் கண்டு பிடிக்கிறது? "

"ஏன் நீ கவிதாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

ரகு முகத்தில் மெல்லிய நாணப் புன்னகையினை ஓடவிட்டான். எனது பலமான பிரச்சாரத்தால் ரகுவின் மனதிற்குள் கவிதா மெல்ல இடம் பிடித்துக் கொண்டாள். அடுத்த கணங்களில் காதலை எப்படி தொடங்குவது என இருவரும் திட்டமிடத் தொடங்கினோம்.

"டேய் ரகு ஒரு இரண்டு மாசம் அவளிற்கு பின்னால போய்வா, பார்க்கிற நேரங்கள்ள சிரி ஆனா கதைக்காதே"

"ஏன்டாப்பா கதைக்கக்கூடாது"

"இந்த விஷயங்கள்ள நான் தான் உனக்கு குரு நான் சொல்றபடி செய்"

"இது எங்கை போய் முடியப் போகுதோ......" அங்கலாய்த்தான் ரகு.

முதலாவது கட்டமாக, ரகு தனது பணியை திறம்படச் செய்து முடித்தான். இரண்டாவது கட்டமாக ரகுவின் கடிதத்தோடு நான் கவிதா வீட்டில் களமிறங்கினேன்.

"என்ன தம்பி அத்தி பூத்தாற்போல இஞ்சால் பக்கம்" மாமி அன்பாக விசாரித்தாள்.

"அதொண்டும் இல்லை மாமி. கவிதாட்டை ஒரு புத்தகம் வாங்கிக் கொண்டு போகலா-மெண்டு வந்தனான்.

"உள்ளதான் இருக்கிறாள் போய்க் கேளன் தம்பி"

உள்ளே போனேன் கவிதா நெற்றிக்கு கை கொடுத்து ஏதோ புத்தகமொன்றில் ஆழ்ந்திருந்தாள்.

"கவிதா" என்றேன் மெதுவாக.

இடையோடு உறவாடும் பின்னல்களை தள்ளி அனாயசமாகத் திரும்பியவள் என்னப் பார்த்து திகைத்தாள்.

"என்னவேணும்" வியப்பு குரலில் தொனித்தது.

• • • • • • • • • • • • • • • • • • • • • •

"உங்களோட ஒன்றைப் பற்றி கதைக்கோனும் என்றவாறு ரகுவின் கடிதத்தை எடுத்தேன்.

"உன்ர பொடியன் என்ன புறோக்கர் வேலையே பார்த்தக் கொண்டிருக்கிறான்" அவனை உந்த காவாலிப் பொடியளோட சேர விடாதே" வீடதிரக் கத்தி விட்டு கவிதாவின் தந்தை பொன்னையர் போய் விட்டார். கவிதா நிலைமையினைச் சிக்கலாக்கியிருந்தாள்.

"தம்பி நீ உந்த ரகுவோட சேர வேண்டாம். அவன் படிப்பை விட்டுப் போட்டு காவாலி மாதிரி திரியிறான்" அம்மா தன் பங்குக்கு கத்தினாள்.

"அம்மா தேவையில்லாமல் கதைக்காத'"

"என்னடா தேவையில்லாமல் கதைக்கிறது நீ சும்மா இருந்த பெட்டைக்கு ஏன் கடிதம் கொண்டே குடுத்தனி இப்ப உழைச்சு குடும்பம் பாப்பியளே அதுக்குள்ள வெளிக்கிட்டிட்டியள்"

எனக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"நேய் இனிமே இப்பிடி கதைச்சாயென்டா என்னை ஒரு நாளும் உன்ர கண்ணால காண மாட்டாய்"

எனது பலமான சக்தி வாய்ந்த தாக்குதலால் அம்மா மௌனமாகிப் போனாள். இதன் பிறகு ரகுவில் மாற்றம் தெரிந்தது. நடந்த பிரச்சினைகளை அறிந்த பின் அவன் என்னிடமிருந்து விலக எத்தனித்தான். நாளடைவில் நாட்டின் பிரச்சினை காரணமாக எமது ஊரை அண்டிய புறங்களில் ஷெல் தாக்குதல்கள் அதிகரித்தன. தாவி வரும் தொடர் ஷெல்களால் நாங்கள் கோவிலடியில் அரட்டையடிப்பது பொழுது போக்குவது எல்லாமே நின்று விட்டது. ஒரு முறை ஆலமரத்தடியில் விழுந்த ஷெல்லால் ஆலமரத்தில் ஓடித்திரிந்த அணில்களும், மைனாக்களும் இறந்து போய்க் கிடந்தன. வர வர ஷெல் தாக்குதல்கள் அதிகரித்த வண்ணமே இருந்தன. இப்போது ரகு என்னுடன் அரட்டையடிக்க வருவதில்லை. காயப்பட்ட சனங்களுக்கு உதவி செய்வது இறந்து போனவர்களின் இறுதிக் காரியங்களை கவனிப்பது என அலைந்து திரிந்தான். ஒரு முறை இருவரும் சைக்கிளில் போன போது ஒரு கிழவன் அவனைக் கும்பிட்டு "ராசா அன்டைக்கு நீ என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்காட்டி நான் இப்ப உயிரோட இருக்க மாட்டேன்" என்று சொன்ன போது ரகுவைப் பார்த்து பெருமைப்பட்டுக் கொண்டேன். ஒரு நாள் மாலையில் வீடு வந்தவன் "மச்சான் நான் போகப் போகிறேன், எல்லோரும் சாகப் போறாங்கள் ஆனால் நான் கொஞ்சம் வேளைக்கு என்டாலும் என்ர சாவில் ஒரு அர்த்தம் இருக்கும்

"டேய் விசர் வேலை பார்க்காத கொப்பா கொம்மாவ எண்ணிப்பார். அவையள் உன்னை எப்பிடியும் கனடாவுக்கு கூப்பிடுவினம்"

சிரித்து விட்டு விலகிப் போனான் ரகு. அதன் பிறகு அவன் சிரிப்பை நான் காணவேயில்லை.

இரண்டு வருடங்களின் பின்னர் "பாண்ட் வாத்திய அணிவகுப்போடு நாங்கள் சைக்கிள் ஓடித் திரிந்த வீதியில் ரகுவின் இறுதியாத்திரை இடம் பெற்றது. என்னால் ஏனோ அழ முடியவில்லை. கவிதா மட்டும் தொடர்ச்சியாக அழுது கொண்டிருந்தாள். அவளுடைய அழுகையொலியும் கண்ணீர்த்துளிகளும் எனக்கு புதிதாய் ஒரு சேதியைச் சொல்லின. மனதுள் சொல்லிக் கொண்டேன். "கவிதா நீ மிகத் தாமதம் என்று"

சிறிது காலத்தில் நான் பேராதனை வளாகம் நோக்கியும் கவிதா தனக்காக நிச்சயிக்கப்பட்ட ஒருவனிற்காகவும் ஊரிலிருந்து பயணமானோம்.

சிறுகதை

# "முடிவில் ஓர் ஆரம்பம்"

றெங்கநாதன் - வைகுந்தன், இறுதியாண்டு, பொறியியல் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

கண்டி நகரம் புத்தாண்டையொட்டி மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. எங்கும் ஒரே ஜனத்திரள்; பேரம் பேசும் வியாபாரிகளின் சத்தம் வானைப் பிளந்தது. புத்தாண்டை தமது குடும்பத்தினருடன் கழிப்பதற்காக எல்லோரும் தத்தமது சொந்த ஊர்களுக்கு ஆசையுடன் திரும்பிக் கொண்டிருந்தார்கள். இதற்கு எமது கம்பஸ் மாணவர்களும் விதிவிலக்கல்ல. என்னைப் போல ஒரு சிலர் மட்டும் கடைசியில் வெளிக்கிடக் காத்து இருந்தோம்.

''அய் தாம கிய நா? கெதற யன்னத்த? இது என்னுடன் படிக்கும் சிநேகிதன் ஒருவனின் கேள்வி. ''மம கெட்ட யனவா''

''கொடாக் கட்டிய பிளேன் எக்க புக் கறலா கியா நே? ஒயாட்ட கொழும்பு யன்ன கமதி நா. மே இந்தழ பாடம்த கறன்னே?

இவனைப் போன்றவர்களுக்கு எப்படி எமது நிலை விளங்கப் போகிறது. யாழ்ப் பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்து கொழும்பு நகரத்தில் அகதியாக நரக வாழ்க்கை புரியும் எம்மைத் தெரிந்து கொள்ள நியாயம் இல்லை. முந்தி நாங்களும் அவர்களைப் போல் புத்தாண்டு கொண்டாடினவர்கள்தான். கால ஓட்டம் எனும் வெள்ளத்தில் சிக்கி வாழ்க்கையை பறி கொடுத்துவிட்டோம். இனியும் எம்மண்ணில் அவ்வாறு கொண்டாட்டங்களை நிம்மதியாகக் கொண்டாட முடியுமா என்பது கேள்விக்குறி. ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பார்கள். எத்தனை தை தான் பிறந்து விட்டது. இவற்றில் எல்லாம் இப்போது நம்பிக்கை இல்லை. முந்தி வருடப்பிறப்பென்றால் மாமா, சித்தப்பா, பெரியம்மா என்று ஒவ்வொரு வீட்டை போவதும், அவர்கள் வருவதும் காணாதவர்களை கண்ட மாதிரி ஒரு குதூகலம்.

இன்னும் என் ஞாபகத்தில் இருந்து நீங்காமல் இருப்பது எமது பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா. எவ்வளவு என் வயது வட்டங்களுடன் கோயிலில் எமக்கெமக்கென்ற அம்மன்மாரை நாம் தரிசிக்க விழைவதும், அவளின் கடைக்கண் பார்வை கிடைப்பதும்; சொல்லில் அடங்காது. இவை எல்லாம் கனவுகளாகிப் போக நாம் வீடுகள், பொருள், பண்டங்கள் ஏன் மூதாதையர் தேடிய சொத்துக்களைக் கூட விட்டுவிட்டு உயிர் தப்பினால் போதும் என ஓடோடி வந்து அந்நிய மண்ணில் வாழத் தொடங்கினோம்.

இந்நிலையிலும் கூட அப்பாவின் மன உறுதி என் மனதை நெக்குருக வைத்தது. ''தம்பி போன மாதிரி நீயும் போயிடாதே; உன்னை நான் எப்படியும் படிப்பிப்பன்'' என்று கங்கணம் கட்டி நின்றார். எவ்வளவு நெருக்கங்கள் எப்பக்கத்தில் இருந்து வந்தாலும் கல்விக்கு எம் மண் கொடுக்கும் முன்னுரிமை, மரியாதை தான், எம்மை தலை குனிய வைக்காமல் இன்றும் காக்கிறது. அம்மாவும் ஒரு படி கூட குறைந்தவ அல்ல. எமது சமுதாயம் தாலிக்கு கொடுக்கும் மரியாதை எவ்வளவு என்று சொல்லத் தேவையில்லை ''நான் தாலியை மஞ்சள் கயிற்றில் கோத்து போடுறன். கொடியை வித்து தம்பியைப் படிப்பியுங்கோ'' என்றார். என் படிப்பை விட அக்காவை கரை சேர்க்க வேணும் என்பதுதான் எனது முதல் ஆதங்கமாக இருந்தது. எம்மண்ணில் பிறந்து வளர்ந்து அங்கு போய் ஆடம்பர வாழ்வுக்கு அடிமையாகி, இவனை கட்டுவது என்றால் இவ்வளவு சீதனம் வை'' என்று பேரம் பேசும் எம் மக்களை நினைக்கத் தான் ஆத்திரமாக இருக்கிறது.

**நான் மீண்டும் என்ர மண்ணுக்கு போகப் போகிறேன். எத்தனையோ பேர் எனக்காக காத்து இருப்பார்கள்''**

நான் எத்தனை முறை சொல்லியும் அப்பா கேட்பதாயில்லை. ''எனக்கு இந்த எஞ்சினியர் படிப்பு படிக்காட்டியும் பரவாயில்லை; என்னை வெளியில் அனுப்புங்கோ உழைத்து அனுப்புகிறேன்'' என்றேன். அவர் வேலை தேடி அலைந்தார். கடைசியில் மாத்தறையில் வேலையிருக்குது என்று வந்து சேர்ந்தார். ''உயிரோடு விளையாடப் போகிறீர்களா? பேசாமல் இருங்கள்'' என்றேன். அவர் அசைவதாக இல்லை. ''எமக்கு எங்கு தான் ஆபத்து இல்லை. சாவது என்றால் ஒருநாள் தானே'' என்று நியாயம் கூறி அம்மாவுடன் கிளம்பினார்.

கொழும்பில் நாம் போனால் நிற்பது அப்பாவின் நண்பர் ஒருவரின் வீட்டில்தான். அதுவும் பிளட்ஸ் என்றால் சொல்லவும் வேண்டுமா? எப்படி இட வசதி இருக்கும்? இதனால் தான் நான் கொழும்பில் ஒன்றிரண்டு நாள் அப்பா அம்மாவுடன் நின்றுவிட்டு, நான் கண்டிக்கு வந்து விட அப்பா தன் கடமைக்கா க மீண்டும் மாத்தறைக்கு செல்வது வழமை. புதுவருடம் என்றாலும் எமக்கு இப்போது ஒரு வார இறுதி விடுமுறை மாதிரித்தான். அப்பாவின் நண்பரும் எம்மண்ணில் பிறந்து வளர்ந்தவர் தான். அவர்களின் மகள், ஆ..... தேவதை தான். நாம் சின்னவர்களாக இருக்கும் போது முத்தைவெளி மைதானத்தில் மண்ணால் வீடு கட்டி விளையாடினது கூட என் ஞாபகத்தில் இன்னும் பசுமையாக இருக்கிறது. அவளிற்கு நான் கொடுக்கும் முக்கியத்துவமோ, அக்கறையோ அவள் பற்றிய சம்பவங்களை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கிறது. இது எல்லாம் அவளின் கன்னிப் பருவத்திற்கு முந்தியவை. அவள் பெரியவளாகியதும் எம்மை நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை. அதிலும் அவள் ஒரு வடிவைக் காண்பிப்பாள்

''நாற்குணமு நாற்படையா வைப்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா தவரன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு''

என்ற நளவெண்பாவின் அடியை எனக்கு உணர்த்தி நின்றது. மகளின் அந்த சம்பவத்திற்கு பிறகு, இப்படி வேறு பிள்ளைகளுக்கும் நடக்கக்கூடாது என்று அவர்கள் மூன்று பிள்ளைகளுடனும் அங்கிருந்து வெளிக்கிட்டு விட்டார்கள்.

வெள்ளிக்கிழமையை எதிர்பார்த்து காத்து இருந்து கொழும்புக்கு அம்மா அப்பாவை இன்று கனநாட்களின் பின் காணலாம் என்ற எதிர்பார்ப்புடன் வெளிக்கிட்டேன். பல எதிர்பார்ப்புகள், சிந்தனைகள் எல்லாம் பல திசையிலும் கிளை பரப்பி நின்றது. என்னை

யறியாமலே தேவையில்லாத கற்பனை எல்லாம் ஓடிக் கொண்டு இருந்தது. எனக்கு ஏமாற்றம் தான் கிடைத்தது. அப்பாவும் அம்மாவும் சொன்ன மாதிரி இன்னும் மாத்தறையிலிருந்து வந்து சேரவில்லை. எனக்கு கண்ணெல்லாம் இருட்டிக் கொண்டு வந்தது. நாளை வரலாம் என காத்து இருந்தேன். நாளை, நாளை என்று புத்தாண்டும் வந்துவிட்டது. அப்பாவின் நண்பர் தனக்கு தெரிந்தவர்கள் மூலமாக தகவல் அறிந்து வந்தார். 'அப்பா, அம்மா வெள்ளியே புறப்பட்டு விட்டினமாம்'' என்றார். என் மண்டையில் யாரோ ஒருவர் சம்மட்டியால் தாக்கிய மாதிரி ஓர் உணர்வு. அழுகை என்னை மீறி பீறிட்டு வந்தது; என்னால் நிற்பாட்ட முடியாமல் இருந்தது. 'எனக்கு என்ர அம்மா, அப்பா வேண்டும்; சின்னக் குழந்தை மாதிரி அழத் தொடங்கி விட்டேன். நண்பர், அவரின் மனைவி எல்லோரும் வந்து 'தம்பி அழாதைங்கோ எல்லாம் விபரமாக அறிவோம்' என்றார்கள். அவர்களின் தேற்றல் என்னை சமாதானப்படுத்துவதாக இல்லை. ஏன் அவர்களின் மகள் கூட வந்து 'நாங்கள் எல்லோரும் உங்களுக்கு கிட்ட இருக்கிறம் தானே; ஏன் பயப்பிட்டு அழுகிறீர்கள்! என்றாள். எனக்கு இவர்கள் ஒருவரின் வார்த்தைகளும் அமைதிப் படுத்துவதாக இல்லை.

எத்தனையோ பேர்கள் காணாமல் போய் விட்டார்கள்; அதில் இவர்களும் இணைந்து விட்டார்களா? நான் இனி எந்தப் பிறப்பில் இவர்களைக் காண்பேன்? சற்று, சற்றாக என் அடிமனதில் ஒரு உணர்ச்சி, உத்வேகம்; மனதில் சற்றுக் கடினம்; ஏன் அந்நேரத்தில் என் தம்பிக்கு இருந்த சிந்தனை எனக்கு இல்லாமல் போய் விட்டது. நானும் தம்பியும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் தானே. என் இரத்தமும் அவன் உடம்பில் ஓடிய இரத்தமும் ஒன்று தானே. நான் எவ்வளவு சுயநலக்காரன். என் குடும்பத்துக்கு ஒரு பாதிப்பு வரும் போது தானே சிந்திக்கிறேன். எம் இனத்தை என் குடும்பம் போல் தம்பி நேசித்தமாதிரி நேசிக்கவில்லை. தம்பியைப் போல எத்தனை அண்ணன்மார்கள், தம்பிமார்கள், அக்கா தங்கைமார்கள் எல்லாம் ஏன் அப்படிப் போனார்கள்? படிப்பில் குறைந்தவர்களா? படிக்க வசதியில்லாதவர்களா? தனக்கு என ஒரு கடமை இருக்கிறது என்பதை உணர்ந்தவர்கள்.

நான் கண்ணைத் துடைத்துக் கொண்டு எழும்பினேன். எல்லோர் மனதிலும் ஒரு வியப்பு! என்ன சொல்லப் போகிறேன் என்ற எதிர்பார்ப்பு!? ''அங்கிள், அன்ரி, நான் மீண்டும் என்ர மண்ணுக்கு போகப் போகிறேன். எத்தனையோ பேர் எனக்காக காத்து இருப்பார்கள்''

முடிவாகக் கூறினேன். ஆனால் முடிவல்ல இது ஆரம்பம்.

### அறிஞர் கு. பெரியதம்பியின் வேண்டுகோள்

'ழகர ஒலி வேறெந்தப் பாஷைக்குங் கிடையாத தமிழ்ப் பாஷைக்கே சிறப்பாக உரிய ஒலி அத்துடன் ஒரு இனிமையான ஒலியுமாகும். அப்படிப்பட்ட ழகர ஒலி இனிமையை தன்னகத்தே கொண்ட 'யாழ்ப்பாணம்' என்ற சொல்லை உச்சரிக்க முடியாத ஆங்கிலேயன் 'யவ்னா' (Jaffna) என ஆக்கிக் கொண்டான். மொழிகளுக்குரியவர்களே 'யவ்னா' என்று இயம்பி யாழ்ப்பாணத்தின் இனிமையை தனித்தன்மையை இல்லாது செய்வது தமிழுக்குச் செய்யும் மன்னிக்க முடியாத குற்றம் என்றே கூற வேண்டும். தமிழரின் தனித்தன்மை மிக்க சொற்களின் போலிகளை தமிழிற் கலந்து வழங்குவதையும் நிறுத்திவிடுவதே நல்லது.

# தாய்

றொசான் ச. றாகல், மூன்றாம் வருடம், பொறியியல் பீடம்

தாயே!
உனது பாதங்களோ.....
இந்து மாகடலின் ஓரத்தில்,
சிரசோ....
பாக்கு நீரிணையின் படுக்கையில்,
இரு கரங்களும்
பெருங்கடல்களின் தழுவலில்.....

இப்படி நீ
ஈரம் சூழ இருந்தும்
உன் வயிற்றில் மட்டும்
அந்தத் தீ
எப்படி
எரிந்து கொண்டிருக்கிறது.

வெப்பம் தீர்க்க
வந்த நதியும்
வடக்கே செல்ல
வழியில்லை என்கிறது!

அன்று
போராடாமல் பெற்ற
சுதந்திரம்
இன்று
போராடியும் கிடையாது
போலுள்ளது!

இங்கு
எல்லாவற்றிற்கும்
விலையேற்றம்!
மனித உயிர்கள் மட்டும்
இலவசமாக
விற்கப்படுகின்றன!

இளைஞர்களே!
வாருங்கள்
தென்றலை மட்டும்
வந்து போகச் சொல்வோம்!
நம்
வீட்டு முற்றங்களில்
புயல்களைக்
கட்டி வைப்போம்!
ஒன்றாக இணைந்து நாம்
உத்தரவிட்டால்
காற்றும் நமக்கு
கட்டுப் படாதோ?

நேற்றைய பொழுது
அவர்களிடமிருந்தது!
இன்றைய பொழுது
இவர்களிடம் இருக்கிறது!
நாளைய பொழுதாவது
நம்மிடம் வரட்டும்!

ஈழமென்னும்
சீதை
அசோக வனத்தில்
அமர்ந்து தவிக்கிறாள்!
நாம் அனுப்பி வைத்த
அனுமான்களில் சிலர்
இராவண புரியை விட்டு
அவளது
இதயத்திற்கு தீ
இட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

# இதய இராகம்!

கருணாகரன், பொறியியல் பீடம், நான்காம் வருடம்

செம்மணி!
உன் மண்ணில்
பலாத்காரம் செய்யப்பட்ட
தமிழ்ப்பெண்களின்
கற்பு.

உன் மண்ணில்
செத்து மடிந்தவர்களின்
இரத்தக்கறையின்
சிவப்பு.

உன் மண்ணில்
தமிழர்களின்
அபகரிக்கப்பட்ட
உடைமை

உன் மண்ணில்
காணாமற் போனோரின்
கண்டறிய முடியாத
எலும்புக்கூடுகள்

நரமாமிச பட்சிகளே
தப்புக்கணக்கு
போட்டு
விடாதீர்கள்

நீங்கள்;
இனத்தின் பெயரால்
பயங்கரவாதத்தின் பெயரால்
புதைத்து விட்டிருப்பது
புதைந்து விடாது.

நீங்கள்
புதைக்க வில்லை
விதைத்து வைத்துள்ளீர்கள்
வினை(தை) யை.

காலம் கனியும்
வித்துக்கள் முளைக்கும்
முளைத்தவை முற்றும்
முஷ்டியை உயர்த்தும்

எப்படியும்
எரிமலை வெடிக்கும்
எப்படி வெடிக்கும்
எக்காளமா(??)

எக்காளம் போடும்
சாப்பாட்டுக் கூட்டமே
கூப்பாடு போட்டு
குற்றுயிராய் துடிக்காதீர்......

காற்றுக்கும் கை முளைக்கும்
இத்தேசத்தினிலே
கல்லறையும் கருத்தரிக்கும்
இம்மண்ணினிலே

காற்றாக வருவார்கள்
புயலாக வருவார்கள்
கடல் அலையாக வருவார்கள்
இடி மின்னலாய் வருவார்கள்

ஏய், தூரதேசங்களே!,
ஒன்றை மட்டும்
புரிந்து
கொள்ளுங்கள்.

எம்பிலிப்பிட்டிய
எலும்புக்கூடுகள்
சூரியகந்தைப் புதைகுழிகள்
பிரசவித்த பாவ பூமியில்தான்
செம்மணிப் புதைகுழியும்

எங்கே
உங்கள் கண்கள்- உங்கள்
கண்களில் என்ன
மங்கலா?

உங்களிடம்
இருப்பது
கண்கள் அல்ல
புண்கள்

இங்கு
காணாமற் போனோரின்
பெற்றோரைப் பாருங்கள்
உறவினரைப் பாருங்கள்

அவர்கள் சிந்தும் கண்ணீர்
உங்கள் கண்களை நனைக்கவில்லையா?
அவர்கள் கதறும் கதறல்கள்
உங்கள் காதில் விழவில்லையா?

நம் பெண்கள்
நன் மகளிர் ஆக வாழமுடியவில்லை
நல் மனைவி ஆக வாழமுடியவில்லை
நன் மாணவி ஆக வாழமுடியவில்லை

ஐயகோ!,
நாங்கள்
வாழ்வதற்குத்தான்
யாசகம்
கேட்கிறோம்

நீங்கள்
எங்கள் சுகத்தை
பறிக்கத்தான்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்

போதும்
இந்தப் பேயாட்டம்
இங்கு வேண்டாம் - இனி
கொடும் போராட்டம்

# தேடல்

வ. ஜெயரூபன், இறுதிவருடம், கலைப்பீடம்

**சா**வினில் சரித்திரம் படைத்தாயிற்று
எங்கள் நாடு
சாவினில் சரித்திரம் படைத்தாயிற்று

மணக்கோலக் கற்பனைகள் மறைய,
மறுகணமே
பிணக்கோலம் கண்ட பூமியில்
ஒரு புலன் விசாரணை
"எங்கொளித்து விட்டது சமாதானம்? "

துள்ளித் திரியும் பருவத்தில் துடுக்கடக்கி,
வாழ்வை
கிள்ளி எறியும் போரின்
கிடுக்கிப் பிடியில்
எங்கள் "மூச்சுக் குழல்"

அது,
முனகியபடி கேட்கிறது
"சமாதானக் காற்று
எங்கேனும் சஞ்சரிக்கிறதா?"
என்று
ஆகாய விமான இரைச்சல்
யுத்த அரக்கனின்
ஏளனச் சிரிப்பு,
"இல்லாத அமைதியை
இவர்கள் தேடுகிறார்களே!" என்று

பாதாளம் நோக்கிப் போகிற பாரில்,
ஆதாரம் இல்லாமல் அவதிப்படுகிற
எங்கள் நாட்டினது உலர்ந்த வாய்ககு
சமாதானமே!
ஆகாரமாய் "அமைதி" கொடுப்பாயா?

# காதல் கூடுதல்

கவிஞர் சு. வில்வரெத்தினம்.

**கா**தலைப் பாடுவேன்
பூட்டவிழ்கின்ற காதலைப் பாடுவேன்
பூமிதன் வாசல் திறந்து
புதுமணம் கிளர்த்துகின்ற
காதலைப் பாடுவேன்
உயிர் மெய்க் காதலைப் பாடுவேன்

சூரியன் இன்னொளிக் கூரிய ஈட்டிகள்
வீசிடத் தாக்குண்டு
உயிர்க் குருதித் தேன் சொரிந்து
பூட்டவிழ்கின்ற புதிய காலையின்
காதலைப் பாடுவேன்
உயிர்மெய்க் காதலைப் பாடுவேன்

வாழ்வுளது தனது வழுக்களுடனும்
வடுக்களுடனும்,
வாசலில் ஆறாத காயங்களுடனும்,
ஆயினும் எழுந்து நில்லென்று
அகத்துள் உந்தும் உயிர்ப்பின் உணர்வு
என்பதால் காதலைப் பாடுவேன்
உயிர் மெய்க் காதலைப் பாடுவேன்

பாடும் பறவைகள் வாருங்கள்
காதலிழந்த வெம் கண்களின் வாசலில்
கூடுகட்டிக் குடியமருங்கள்
கூடிப் புணர்ந்து காதல் முட்டையிடுங்கள்
குஞ்சு பொரித்த காதல் உணர்வு
கண் விழித்தெழுகின்ற பொழுது
காதல் ஜீவித மலர்வின் பொழுதெனக் கூடுங்கள்
உயிர் மெய்க் காதலைப் பாடுங்கள்.

# கவிஞர் சு. வில்வரெத்தினத்தின் இரு கவிதைகள்

## கடந்து செல்தல்

கடந்து செல்

தடையெனக் கருதின்
சிறு துரும்பும் தடைதான்
நடை வலியது என்றால்
நம்மைப் பிணித்த தளைகள் தகரும்

கடந்து செல்

நேற்றைகள் நேற்றைகள் தான்
கடந்து செல்லட்டும் அவை தம் காயங்களோடு
வடுக்கள் தங்காமல் நிகழ் கணத்தை விடுவி
அதோ பெருகி வருகிறது
இன்றெனும் ஊற்று
உதயத்து ஒளியிலிருந்து
ஒளியின் உலைக்கனல்
உன்னைப் புதிது செய்

கடந்து செல்

ஒளியைத் தியானி
ஒளியைப் பருகு
ஒளியினால் உன்
உயிரை ஒளிசெய்
ஒளியின் வார்ப்படமான
அறிவெனும் வீச்சுவாளை உருவி எடு
கிளைகள் சரியட்டும்
ஒளிவளர் விடுதலை ஒன்றே இலக்காக நட

கடந்து செல்

நடைதளராதே நிலைகுலையாதே
உழுபுலமெங்கும் உண்மைக்காதல்
ஒளியை விதைப்போனாக நட

கடந்து செல்

## பண்பாடு

காற்றிலுயிர்க்கும்
காற்றிலுயிர்க்கும் பண்பாடு
கூட்டில் விழிக்கும் குஞ்சிற்கும்
கொஞ்சிக் கொஞ்சி விடுதலை ஊட்ட
காற்றிலுயிர்க்கும்
காற்றிலுயிர்க்கும் பண்பாடு

மூட்டித் தீயை வளர்க்கும்
முழுமையில் இத்தனை தீட்டும்
வேட்டைக்குணங்கள் நீங்கிய விடுதலைப்
போக்கிற்குரமூட்டும் உயிர்
வாட்டம் உற்றவழக்கெல்லாம் நல்
ஊட்டம் தரும் உணவாகும்
மாற்றம் என்பது வையத்தறமென
வளர்க்கும் அன்பினில் வாழ்வு தழைக்கும்
காற்றில் உயிர்க்கும்
காற்றில் உயிர்க்கும் பண்பாடு

வாழ்க்கை புதிய போக்கை எடுக்கும்
வாசற் கதவை ஒளியின் கை தட்டும்
ஒளியின் கையைப் பற்றிக் கொண்டு
உலகை அளக்கும் விழிகள் விரியும்
சிறுமதிக் கூட்டில் அடைபடு பறவை
பேரறிவென்னும் பிறவி எடுக்கும்
பேரறிவெடுத்த வெண் மதிப்பறவை
கூட்டில் விழிக்கும் குஞ்சுகட்கெல்லாம்
கொஞ்சிக் கொஞ்சி விடுதலை ஊட்டும்

காற்றிலுயிர்க்கும்
காற்றிலுயிர்க்கும் பண்பாடு
காதல் வழித்தடம் மாறியது
என்றும் அன்பொடு
கொஞ்சிக் கொஞ்சி விடுதலை ஊட்டும்
பின் சந்ததிக்கும்
பண்பாடு.

# விதைப்பு

நிலவின்தாசன், விடுகை வருடம், பொறியியல் பீடம்

சேகுவாரா.......
என் எழுத்துணர்வுகளில்
உனக்கு இடம் கொடுப்பதால்
உன் வரலாறு களங்கப்படுதல்
கூடுமென்று அஞ்சுகின்றேன்
இருந்த போதும்
என்னால் இருக்கமுடியவில்லை
தாய்ப்பசு நோக்கி
தாவியோடும் கன்றுக்குட்டி போலவும்
அன்னை மடியில்
தஞ்சமாகவே கைநீட்டியழும்
சிறு குழந்தை போலவும்
என்னுள்ளே தெறித்தோடுகிறது
ஒரு தாகவுணர்வு....
பொலிவிய மண்ணின் மைந்தனெனனும்
கியூபாவின் வரலாற்றுச் சிற்பியெனவும்
கூடவே
ஆர்ஜென்டீனாவே தாய் நிலமென்றும்
சொல்வதனை ஒருபோதும்
ஒப்புக்கொள்தல் இயலாது
பொலிவியக் காடொன்றில்
கண்களின் ஒளி மங்காமல்
சிரித்த முகத்தோடு வரலாறாகினாய்
உலகின் மைந்தனே
காதலும் நேசமும் சுயநலமும்
நிறை நிணமும் சதையும் கொள்
சாதாரண மானிடர்களிலே
எப்படி ஐயனே இது
உன்தனால் சாத்தியமாயிற்று

மனிதம் என்ற சொல்லிற்கு
அர்த்தங்கள் தந்த
என்தன் தேவனே
என்தனது ஈஸ்வரனும் நீயே
என்தனது மீட்பரும் நீயே
அல்லா என்ற சொல்லின்
மறு உருவமும் நீயே...
கெரில்லாப் போராட்டத்தின்
ஆரம்ப கர்த்தாவே
புத்தனின் இன்னொரு
அகிம்சையும் நீயே
ஏனஸ்ட்ரே
எப்போது நீ மீண்டும்
பிறப்பெடுக்கப் போகின்றாய்
ஐ. நாவில்
எங்கள் சார்பாகவும்,
ஓருரை நிகழ்த்துவதற்கு

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

பிற்குறிப்பு
தாயை விலைபேசும்
ஈனர்களின் சகவாசத்தால்
நான் அருவருப்படைந்த
காலைப்பொழுதொன்றில்
நாற்றம் மிகு அக்பர்
கழிப்பறையொன்றில்
சேகுவராவினை நினைத்துக் கொண்டேன்
"கொஞ்சம் பொறுத்திரு நண்பா"

# களவு போனது

வேலையா சதீஸ்குமார், இரண்டாம் வருடம், பொறியியல் பீடம்

கனன்று
சுழன்றடித்த
அந்தப்
பேய்ச்சூறாவளியில்
களவுபோனதுவென்
கனவும்
கற்பனையும்

என்வாழ்வும்
இருப்பும்கூட
காணாமல் போனது
வீசிய அந்த
கொடூரக்காற்றில்தான்,

வழியின்றி
விடையின்றி
அபயமற்று
நின்றவெனக்கு
குரல் தந்ததுவந்த
புறாவொன்று

இரத்த வியர்வையில்
நிமிர்ந்தவெனக்கு
உரைத்ததுவது
நிகழ்ந்த நிஜங்கள்
தெரியுமென்றும்
அவற்றின் நிழல்களின்
கறைகள் தான்
அறிந்ததுதானென்றும்

அந்த துயர்தீர்க்க
வந்த புறாவொன்று
புலம்பியது கண்ணீர்விட்டு'

அதன் ஆதரவுக்கரத்தின்
அணைப்புக்குள் என்னைப்
புகுத்தினேன் - என்
விரக்தியின் விம்மல்
அவ்வாறு அமிழ்த்தியது.

என் நீண்டவொரு
காலத்துயர் கரைவதாக
கனவுகூட என்னுள்
விதைக்கப்பட்டது
எனக்குள் பொதிசெய்த
கனவுப் பொட்டலங்கள்
வழங்கப்பட்டன.

இவைபற்றி
நான்
நாளைய நினைப்பில்
நின்றிருக்க
மீண்டுமொரு முறையெனது
கற்பனை
களவாடப்பட்டது.
திடுக்கிட்டு
தலைநிமிர்த்தி
தேடினேன்; என்
நம்பிக்கைகளைத்
தூக்கிப் பறந்து கொண்டிருந்தது
அந்தப்புறா!

ஏமாற்றத்துடன்
துரத்திப்போனவென்
தலைமீது விழுத்தியதுவது
எமக்கு உயர்ப்புடன்
தருவதாகவிருந்த
அதன் சிறகுகளை

தேடியெடுத்த
முறிந்தவதன்
காயப்பட்ட
வெண்சிறகுகளின்
ரணங்களில்
ரத்தமும் எறும்பும்

மீண்டும் கனன்று
சுழன்றடித்த
அந்த
பேய்ச்சூறாவளியில்
களவுபோனதுவென்
கனவும்
கற்பனையும்

# அறிவுச்சட்டை அணிந்த சாத்தான்களும் அழுகை அழியாத அவலமும்

ஸ்ரீ பிரசாந்தன், கலைப்பீடம், இறுதி வருடம்



பட்டதாரி ஆக வந்து
''பட்ட''தாரி ஆனவளே!
என் அக்கா! இனிய ரட்ணசீலி!
குன்றிலெரியும் அறிவுத்தீபத்தில்
அகிலத்தை வாசிக்கவென
இரண்டு கால்களினால் இங்கோடி
வந்தவளே!

இருப்பதை விட அதிகமாய்த் தரும்
அறிவுலகத்தின் இயல்பு
இரண்டு கால்களுடன் வந்த உனக்கு
மூன்று சக்கர வண்டி தந்தது.
பொருளாதாரப் பூதம் பின்னே இழுக்கவும்
அறிவுப்படி ஏறி வந்துவிட்டு
அறிவுச் சொர்க்கம் அடையாமல்
ஏன் நரகத்தை எட்டிப் பார்த்தாய்?
ஸ்நேகங்களைப் பிரசவிக்கத் தெரியாத
மலட்டு மனசு மாணவர்கள்
மகிழ்ச்சிப் பழம் உண்டுவிட்டு
எறிந்த
அழுக்கு வாழைப்பழத் தோலில்
வழுக்கி விழுந்தாய்
வரலாற்றில் தருமம் நொண்டிப் போனது.

சரஸ்வதி வீணை சாத்தான்கள் கைப்பட்டு
ஸ்வரத்தந்தி அறுந்த சோகத்தில்
அழுத கலைவாணியால்
மாவலி ஆறு பெருகியதாம்.
அன்புத்திரவம் உறைந்து அறிவுக் கட்டிகளாய்
உன் மேனியைக் காயம் செய்த பூமியில்
எத்தனை வார்த்தை அட்டைகள்
உன் மனசிருந்து ரத்தம் வடித்தனவோ?
என் அக்கா! இனிய ரட்ணசீலி!
உணர்ச்சித் தீயின் வெம்மை தணிக்கக்
இன்று நீருள் குளிர்ச்சி தேடிய
கனி காணா மரமே!
இருபத்து நாலு ஆண்டுகளாய்
அழுகின்ற மாணவர்க்காய்
உன் அலைவரிசை ஒலிபரப்பிய
சோககீதம்
நேற்றோடு இல்லையென்றானது.
இன்று மௌனம், எங்கும் மௌனம்
சப்த அதிர்வுகள் இல்லாதிருந்தும்
சகல முனகல்களையும் நினைவு படுத்துகிற
அந்த அச்ச மௌனத்தூடு கேட்கிறது
வரப்பிரகாஷின் அம்மாவின் அழுகை.
அன்று உன் அம்மா
சிங்களத்தில் வைத்த ஒப்பாரியின்
தமிழ் மொழிபெயர்ப்பாய்....
கண்ணீருக்கு இனமில்லை என்று காட்டியபடி

குறிப்பு: ரட்ணசீலி:- 1975ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதை காரணமாகக் கால்கள் முடமாகிய சிங்களமாணவி, அப்பாதிப்பினால் விரக்தியுற்று 1999ல் கிணற்றுள் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

# அகதிகள் எம் அவலங்கள்

எ. எ. அஷ்ரப், தமிழ் சிறப்புத்துறை, 2ம் வருடம், பேராதனை வளாகம்

கதியற்றவர்கள் என்பதனாலேயே
அகதிகள் என்கின்றனர் போலும்
வடக்கே
எங்கள் தாயகம்
எங்களால் கைவிடப்பட்டு
ஒன்பதாண்டுகளை நிறைவு செய்து
விழாவும் எடுக்கின்றோம் இன்றதற்கு

வாழ்வுரிமை வஞ்சிக்கப்பட்டு
வரலாற்று வடுவிலே தவிக்கின்றோம்
அவலம் எங்கள் பாரம்பரியச் சொத்து
இதுவே அகதிகள் எங்களின்
அண்டிய நிலை

எம் தாயகம்
எப்போது எங்களை வரவேற்கும்
ஏக்கம் மட்டுமல்ல
எங்கள் எதிர்பார்ப்பும் அதுவே

அல்லல் படுவதனாலேயே
எங்களை அவலங்கள் தொடர்கின்றன
அநாதைகளாக்கப்பட்ட
இந்தப் பரிதாப ஜென்மங்களின்
வேண்டுகோள்
அரசினால் வழங்கப்படும்
திங்கள் ரேசன் காட்டல்ல

அவலங்களை விட்டொழித்து
அகலமாக நாங்கள் நுழைய வேண்டும்
அர்த்தமற்ற எம் உயிர்வாழ்க்கை
அர்த்தமுள்ளதாய் ஜொலிக்க,
ஏ! பாழாய்ப்போன யுத்தமே
உன் முடிவுதான் என்ன?
உன் ஆசை தான் என்ன?

உன் ஆயுதக் குடும்பங்களால்
குண்டு எனும் பிள்ளைகளால்
எங்களையா துரத்த வேண்டும்
எப்பிறப்பில்தான் நாம்
தீங்கு செய்தோம் உமக்கு
சொல்....

நீ இலங்கைக்குக் கிடைத்த
புற்று நோயாம்
செப்பியதோ ஓர் அரசியல்வாதி
நீ இதனை உனக்குள் மட்டும்
பாதுகாத்திருப்பாயானால் - நாம்
நிம்மதியாக தூங்கியாவது
இருப்போம் எங்கள் வீட்டில்.

சின்ன ஆசை எமக்கு
சமாதான ஓடத்தில்
ஊர்வலமாய்ச் செல்லவேண்டும்

உற்சாகமாக எங்கள் வரவை
எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும்
ஏற்புடன் வரவேற்கக் காத்திருக்கும்
எம் சொர்க்கப் பூங்காக்களுக்குள்.

யுத்தம் எனும் தீயினிலே
நிலை தவறிய 'அகதி' எமக்கு
கருணை காட்ட இவ்வுலகில்
ஒன்று மட்டும்தான் உள்ளதாம்
பேசுகின்றனர் அனைவரும்
ஆம் சமாதானம் மட்டும்தானாம்.

இந்தச் சமாதான வெண்புறாவோ
தொலைந்து நெடுநாளாகிவிட்டது
இன்றைய அரசு அதனை
தேடித்தரப் போகிறதாம் - அவர்களின்

தேர்தல் விஞ்ஞாபனத்தில்
பிரதம அதிதி இப்பேச்சே - ஆனால்
ஐந்து வருடங்கள் கடந்தும்
தேடித்தர முடியாத இப்பிரதம அதிதி
இனியாவது விடுவிக்கப்படுவாரா?

ஏ! யுத்தமே, ஏ! அரசே, ஏ! மாந்தர்களே
எம்நிலை அறிந்த பின்பாவது
உதவுவீர்களா? என்பதே
அவலங்கள் நிறைந்த இந்தப்
பரிதாப ஜென்மங்களின்
ஒரே கேள்வி,

### மோகனாங்கி

*தமிழில் எழுதி வெளியிட்ட முதலாவது வரலாற்று நாவல் மோகனாங்கி, 1895ல் வெளியான இந்த நாவல் கி.பி.17ஆம் நூற்றாண்டில் திருச்சி, தஞ்சை பிரதேசங்களை ஆண்ட நாயக்கர் வம்சத்தை பற்றிய சம்பவம் ஒன்றை கதைப் பொருளாகக் கொண்டிருக்கிறது. இதை எழுதியவர் இலங்கை திருகோணமலையைச் சேர்ந்த சரவணமுத்துப்பிள்ளை. பதினேழாம் நூற்றாண்டின் இடைக்-காலத்தில் திருச்சியில் இருந்து ஆட்சி புரிந்தவர் சொக்கநாத நாயக்கர். அப்போது தஞ்சையில் இருந்து அரசாண்டவர் விஜயராகவ நாயக்கர். இவருடைய பெண் மோகனாங்கி மீது காதல் கொண்ட சொக்கநாத நாயக்கர் அவளை மணம் புரிய முயன்றதால் ஏற்பட்ட விளைவுகளை இந்நாவல் சித்தரிக்கின்றது. சரவணமுத்துப்பிள்ளை சென்னையில் பிரஸிடென்ஸி காலேஜில் (இன்றைய மாநிலக்கல்லூரி) நூலகராக பணியாற்றியவர்.*

**திருக்குறளின் மறு நாமங்கள்**

1. முப்பால் நூல்
2. தெய்வ வேதம்
3. தெய்வநூல்
4. பொய்யாமொழி
5. திருவள்ளுவர்
6. வாயுறை வாழ்த்து
7. தமிழ்மறை
8. பொதுமறை

**திருவள்ளுவரின் மறுதிருநாமங்கள்**

1. நாயனார்
2. தேவர்
3. முதற்பாவலர்
4. தெய்வப்புலவர்
5. நான்முகனார்
6. மதானுபங்கி
7. செந்நாப்போதர்
8. பெருநாவலர்

**திருக்குறள் உரையாசிரியர்கள்**


1. தருமர்
2. மணக்குடவர்
3. தாமத்தர்
4. நச்சர்
5. பரிதி
6. திருமலையர்
7. பரிமேலழகர்
8. மல்லர்
9. கவிப்பெருமாள்
10. காளிங்கர்

# உலகினை ஐக்கியப்படுத்துவோம்

ஆங்கிலத்தில் : **Michael Jackson, "Heal The World"**

தமிழில் : லறீனா அப்துல் ஹக், (கலைப்பீடம்)

பூமித்தாயின் மடியெங்கும் யுத்த அரக்கன் சிந்தும் மனித இரத்தம் நிரம்பி வழிகிறது. சிறந்த, அமைதியான, தலமென நாடிச்செல்லும் ஆலயங்களில் கூட போரின் கோரத்தாண்டவம்! இந்நிலையில்.... மில்லேனியம் நோக்கிய மானுட நகர்விலே முழு உலகம் தழுவியதான ஐக்கியத்தின் அவசியத்தை வலியுறுத்தும் ஓர் ஆங்கிலப்பாடலினை என் சிற்றறிவுக்கெட்டிய விதத்தில், இயன்றளவு அதன் கருத்துச் சிதையாமல் மொழி பெயர்த்தளிப்பதில் மகிழ்வெய்துகிறேன்.



உந்தன் இதயத்தில்
ஓரிடம்....
எனக்குத் தெரியும்
அதுதான் அன்பு.

உண்மையாய் நீ
அக்கறைகொண்டால்....
(இவ்வுலகை)
வலிகளும்
துயரங்களும்
அற்ற இடமாக
நீ உணர்வாய்!
இங்கே இனி
அழத்தேவையில்லை என்றும்
நீ கண்டறிவாய்!
அப்போதுதான்
நாளையை விட
இவ்வுலகை
பிரகாசமாய் ஒளிரவைக்கலாம்!

உயிர்களின் வாழ்வுக்கு
உத்தரவாதமளிப்பதற்காய்
ஒரு சிறுஇடத்தை
நிறுவுவோம்;
ஒரு சிறந்த தலத்தை
ஸ்தாபிப்போம்!
நீ அக்கறை கொண்டால்
நிறைய வழிகளில்....
உனக்காகவும் எனக்காகவும்
முழுமனித இனத்துக்காகவும்
உலகினை ஓர்
உயர்தளமாக்குவோம்.
ஏனென்று நீ
அறியவேண்டுமா?
இங்கே.....
மனிதர்கள் (வீணேநிதம்)
மாண்டு போகிறார்கள்.....
எனவே
உலகை ஒரு
சிறந்த இடமாக்குவோம்

(அறிவாயா?)
அன்பு ஒருபோதும்
பொய்த்துவிட முடியாது!
அது....
ஸ்திரமானது;
வலிமையானது
மனமுவந்து வழங்குதலையே
விரும்புகிறது!
நாமும் முயன்றால்
அந்த (அன்பின்) பூரிப்பினை
காணுவோம்;
பயத்தையும் பீதியையும்
உணரமாட்டோம்;
'வெறுமனே இருப்பதை'
விட்டுவிட்டு
'வாழ'த் தொடங்குவோம்
பின்னர்....
நமது வாழ்வுக்கு......
நம் வளர்ச்சிக்கு.......
அன்பே போதுமானது
என்பதை அவ்வாழ்வு(கூட)
உணர்ந்து கொள்ளும்!
எனவே, - ஓர்
உன்னத பூமியை
உருவாக்குவோம்! -அதை
உனக்காகவும் எனக்காகவும்
ஐக்கியப்படுத்துவோம்!
அப்போது....
நாம் கண்டிருந்த
கனவு...
தன் மகிழ்வான முகத்தை
வெளிப்படுத்தி நிற்கும்!
பூமி மீண்டும்
வசீகரமாய் ஒளிவிடும்!


இவ்வுலகம்
சுவனத்தின் தன்மையது
அதை
வெளிப்படையாகவே
அறிந்திருந்தும்
ஏன்
வாழ்வை நசுக்கி....
அகிலத்தை எத்தி
அதன் ஆத்மாவை
சிலுவையிலறைய வேண்டும்?

இறைவனிடத்தில்
ஒளியுடைய (மனத்தின)ராய்
இருப்போமாக!
(அப்போதுதான்)
எம்மால்
அதி உயரே
பறக்க முடியும்.
(அந்த) உத்வேகத்தை
ஒருபோதுமே
இறக்கவிடாதிருப்போமாக!

என்னிதயத்தால்
உங்களனைவரையும்
சோதரராகவே உணர்கிறேன்!
எனவே...
நாமனைவரும்
(ஒன்றாக) இணைந்து
ஆனந்தக்கண்ணீர் வடிக்க
பயமில்லா (த)மல்
ஓர் உலகினை
உருவாக்குவோம் - அதை
உனக்காகவும் எனக்காகவும்
முழுமனித இனத்துக்காகவும்!

அதோ பார்!
(எல்லாத்) தேசமக்களினதும்
நிலைகள் மாறுகின்றன!
அவர்களுடைய
வாட்கள் யாவும்
உறையிலிடப்பட்டுவிட்டன!

# இரைமீட்டல்



# நாடக விழா 1999



## "வராது வந்த மாமணியை"

| | | |
|---|---|---|
| நடிப்பு | : | ஜி. எஸ். எஸ் பெர்னாண்டோ, மௌ. சித்தார்த்தன், சி. சிவேந்திரன், வி சுதேசன், ம. சுதர்சனன், யோ. பிரசன்யா, இ. குமுதினி, ந. சுவர்ணலதா, ந. பாலமுரளி, ப. ரதீஸ், க. விஷ்ணுகரன், ச. ஜெகநாதன், சு. ஜெயரத்தினா, எஸ். ஸ்ரீசங்கர், ப. ஜெயகாந். |
| இசையமைப்பு | : | யோ. கிருசாந்தி, க. ஆனந்த குமார சர்மா |
| பாடல் | : | ஜுட் செல்வராஜன், லெய்ார்  து. தாட்சாயணி, எ. தினேஸா குமாரி. |
| ஒளியமைப்பு | : | ச. பாஸ்கரன், வ. வாகிசன், செ. ஸ்ரீதரன். |
| மேடையமைப்பு | : | பா. சந்திரகாந்தன், அ. ஜெயக்குமார், ஜோ. மோகன்ராஜ் |
| ஒப்பனை | : | ப. ஜெயதிலகன், சுதர்சன் பீரிஸ், க. லோகப்பிரகாசம். |
| தயாரிப்பு | : | ஜி. எஸ். எஸ் பெர்னாண்டோ |
| பிரதியாக்கமும் நெறியாள்கையும் | : | ஸ்ரீ. பிரசாந்தன். |

# நாடக விழா 1999

## "ஓடைகள்"

| | | |
|---|---|---|
| *நடிப்பு* | : | இ. காயினி, பு. சுதாகினி, த. ப. தர்ஷன் , ந. இளங்கோ, ஜெ. ஜெயகாந்தன், க. வேல்வேந்தன், ந. சசிநந்தன், சி. அஜந்தன், வெ. தனேஸ்குமரன், சி. சர்வேஸ்வரன் அ. பார்த்தீபன், வே. சதீஸ்குமார், ஜெ. சுஜந்தா, சி. மணிமேகலை |
| *இசையமைப்பு* | : | த. பகீதரன் |
| *பாடல்* | : | வி. மீரா, கு. தர்மினி, ம. கிருஷாந்தன் |
| *ஒளியமைப்பு* | : | அ. அலங்கேஸ்வரன், அ. லொயிட் |
| *மேடையமைப்பு* | : | வெ. தனேஸ்குமரன், கி. காண்டீபன் |
| *தயாரிப்பு* | : | சு. அரவிந்தன் |
| *பிரதியாக்கம்* | : | வே. சதீஸ்குமார் |
| *நெறியாள்கை* | : | சு. அரவிந்தன் |


# நாடக விழா 1999



## "குழி"

| | | |
|---|---|---|
| நடிப்பு | : | ஜெ. ஜெயராஜசிங்கம், க. விக்னராஜா, க. பிரதாபன், ஜெ. ஜனார்த்தனன், பு. சுரேஸ் கண்ணா, க. இராதாரமணன் த. ஜெயக்குமார், சி. பத்மசீலன், த. தீபககுமார், இ. சுகிதன் இ. கல்பனா, க. யோகசுந்தரி, சி. சிவஜா, பா. உமையாள் |
| இசையமைப்பு | : | வேலு. சந்திரசேகரன், பெ. ரமேஸ் |
| பாடல் | : | பா. உமையாள், பெ. ரமேஸ் |
| ஒளியமைப்பு | : | கு. ஜெகான், க. சிவகுமார் |
| மேடையமைப்பு | : | த. ரொசான், கு. லோகேஸ்வரன், வே. த. சுகிதன், ம. நிரேஷ்குமார் |
| உதவியாளர் | : | பா. பிரேம்குமார், த. சரவணபவன், சே. புஷ்பநாயகம் |
| பிரதியாக்கம் | : | வி. துதிகரன் |
| நெறியாள்கை | : | ப. பிரிதிவிராஜ் |
| உதவி நெறியாள்கை | : | பா. குமரன். |

# நாடக விழா 1999



## "கங்கையைத் தேடும் ஓடம்"

| | | |
|---|---|---|
| நடிப்பு | : | வ. சுகந்தன், யசோதரன், மயூரதன், செல்வமோகன், ம. சங்கர், சுரேன், சி. மைதிலி, அ. அன்பரசி, நான்சி, கி. கலைச்செல்வி, நா. கௌசல்யா, சி. சுமணா |
| இசையமைப்பு | : | நா. சுதன், க. ஈசன் |
| பாடல் | : | க. ஈசன் |
| ஒளியமைப்பு | : | அருள் வரதராஜன் |
| மேடையமைப்பு | : | நிரோஜன் |
| பிரதியாக்கம் | : | க. ஈசன் |
| நெறியாள்கை | : | செ. செல்வமோகன், க. ஈசன். |

# நாடகவிழா 99

வ. ஜெயரூபன், இறுதி ஆண்டு, கலைப்பீடம்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க நடவடிக்கைகளிலே அனைத்து பீட மாணவர்களும் விருப்புடன் ஈடுபடுவதும், அரங்கு நிறையும்படி பார்வையாளர்கள் கூடுவதுமான விழா நாடகவிழாவே என்று கூறுதல் மிகையானதல்ல.

இயலுக்கும், இசைக்கும் இல்லாத எளிமையும், கவர்ச்சியும் நாடகத்துக்கு இருப்பதும், புதிய புதிய கருப்பொருள்களை தங்கள் தங்கள் கற்பனைகளுக்கேற்ப திறமையும் ஆர்வமும் உள்ள இளைஞர்கள் நாடகங்களாக வெளிக்கொணர்வதும் ஆண்டு தோறும் இவ் விழாவின் வெற்றிக்குக் காரணிகளாகின்றன.

இவ்வாறு சிறந்த விழாவாக நடைபெற்றுவரும் "நாடகவிழா" இம்முறை எமது நிர்வாக சபையினால் 29.10.1999 அன்று E. O. E. பெரெய்ரா அரங்கில் நடாத்தப்பட்டது. விழாவில் ஒன்றோடொன்று போட்டியிட்டு மேடையேறிய "ஓடைகள்", "வராது வந்த மாமணியை.....", "கங்கையைத் தேடும் ஓடம்", "குழி", ஆகிய நான்கு நாடகங்கள் பற்றியும் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரன் அவர்கள் விமர்சன உரையில் தெரிவித்த கருத்துக்களையும், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. ஜெய்சங்கர் அவர்கள் தீர்ப்புரையில் தெரிவித்த கருத்துக்களையும் சுருக்கி தமிழ்ச் சங்கச் செயலாளர் என்னும் ரீதியில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**ஓடைகள் :**

போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற நாடகங்களில் ஒன்றான இந் நாடகம் பேராதனை அரங்கு பலமுறை கண்டுவிட்ட கருப்பொருளையே கூறிற்று. இடியப்பம் அவித்து விற்று குடும்பத்தைப் பராமரித்துவரும் ஒரு தாயின் மகன் பல்கலைக்கழகம் வந்து காதல் வசப்படுவதும், அதனால் பரீட்சையிலே தோற்பதுமே கதை. பக்கவாதம் வந்து படுத்து விட்ட அந்தத்தாய் தன் மகனுக்கு குடும்பப் பொறுப்பினை போதிப்பதுடன் நாடகம் முடிகிறது. இவ்வாறு பழைய கருப்பொருளாக இருந்த போதும் நாடகத்துக்கு நடிகர்களது நடிப்பும் (குறிப்பாக தாய்ப்-பாத்திரமும், "அமலன்" என்ற பெயருடைய மகன் பாத்திரமும்), அவர்களது ஒப்பனையும் பலம் சேர்த்தன.

மேடையமைப்பாக நடப்பட்டிருந்த மரத்தை, வெறுமனே அலங்கரிப்பாக மட்டும் கொள்ளாமல் இறுதிக் காட்சியில் நாடகச் செய்திக்கும் பயன்படுத்தியிருந்த தன்மையில் நெறியாளரின் "கெட்டித்தனம்" தெரிந்தது. இந்நாடகம் "சிறந்த நடிகை", "சிறந்த ஒப்பனை" முதலிய விருதுகளைப் பெற்றுக் கொண்டது.

**'வராது வந்த மாமணியை.....'**

இம்முறை முதலிடம் பெற்ற இந்நாடகம் மிகத்தரமான பிரதியாக்கம், நெறியாள்கை, நடிப்பு என்பவற்றைக் கொண்டிருந்தது. ஏனைய நாடகங்கள் பழைய, தற்காலப் பிரச்சினைகள் பற்றிக் கூற இந்நாடகமோ தமிழரது எதிர்கால வாழ்வை எதிர்வு கூறியது. எதிர்காலத் தமிழரது அரசியல் வாழ்வையும் சமுதாய வாழ்வையும் போராளி, அரசியல்வாதி, கட்சித் தொண்டன், விதவைத்தாய், வெளிநாட்டிலிருந்து வந்து மீளக் குடியேறிய தம்பதியினர் முதலிய பாத்திரங்களோடு காட்டியது இந்த நாடகம்.

எல்லா நடிகர்களுமே தத்தமது பாத்திரங்களோடு ஒன்றிச் சிறப்பாக நடித்திருந்தனர். எனினும் போராளிப் பாத்திரம் ஏற்று நடித்தவரது நடிப்பு வியந்து பாராட்டப் பெற்றது. மேடையமைப்பு நாடகத்திற்கு மெருகூட்டியது.

மகாகவி பாரதியாரின் கவிதையோடு தொடங்கி மகாகவியின் கவிதையோடு முடியும் தரமான நாடகப்பிரதியும், எதிர்காலத்தில் தான் எதிர்பார்க்கும் இனச் சகோதரத்துவத்தை ஒரு நிமிடமே வந்து போன இஸ்லாமிய பாத்திரத்தினூடு வெளிப்படுத்திய நெறியாளரின் திறமையும் அனைவராலும் பாராட்டப் பெற்றது.

சிறந்த பிரதியாக்கம், சிறந்த நெறியாள்கை, சிறந்த காட்சியமைப்பு, சிறந்த நடிகர், சிறந்த இசையமைப்பு முதலிய எட்டு விருதுகளைப் பெற்றுக் கொண்ட இந்த நாடகத்தில் பாரதியாரின் பாடலொன்று பிழையாக அடிக்கடி பின்னணியில் பாடப்பட்ட குறை காணப்பட்டது.

**கங்கையைத் தேடும் ஓடம்**

குடிகார அப்பா, மூளை சுகமில்லாத தம்பி, படிக்கும் தங்கை, சாதாரண தாய் முதலியவர்களைக் குடும்பமாகப் பெற்ற ஒரு "பட்டதாரி" வேலை தேடித்தேடிச் சலித்து, தன்னை ஒருதலையாக காதலிக்கும் பெண்ணை நிராகரித்து, குடும்பத்திலேற்பட்ட துன்ப நிகழ்வொன்றுக்குப் பின் கூலி வேலைக்குப் போவதாகக் காட்டியது இந்நாடகம். காலங்காலமாய் பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அரங்கத்தில் நடிக்கப்பட்டு வருகின்ற இவ்விடயத்தைக் கையாள எடுத்துக் கொண்ட நெறியாளர் எவ்வித புதுமையையும் செய்யாதது பெருங்குறையாகத் தெரிந்தது.

நாடகக் கதையோட்டத்தைக் கெடுத்து இரசிகர்களது கவனம் முழுவதையும் தன்பால் ஈர்த்துக் கொண்ட மூளை சுகமில்லாத பாத்திரத்தின் நடிப்பும், நாடகத்துக்கு அடைவில்லாத நேர்முக அலுவலக மேடையமைப்பும் நாடகத்தின் பலவீனங்களாயின. இந் நாடகத்தில் தாய்ப் பாத்திரமேற்றவரின் நடிப்பு நினைவில் நின்றது. பிரதியாகக்கத்திலும், நெறியாள்கையிலும். ஒப்பனையிலும் இன்னும் கவனமெடுத்திருக்க வேண்டும் என்று விமர்சிக்கப்பட்டது.

குழி

போட்டியில் இரண்டாமிடம் பெற்ற நாடகங்களில் மற்றது இதுவாகும். இரட்டையர்த்த வசனங்களைக் கொண்ட குறியீட்டு நாடகமான இது, இன்றைய நம்நாட்டு அரசியல் நிலவரத்தை உருவகப் பாத்திரங்களோடு காட்டியது. கோவில் குருக்கள், நிர்வாகச் சபைத் தலைவர், பொருளாளர், ஊர்த்தலைவி முதலிய பாத்திரங்களூடு தான் சொல்ல நினைத்த நிகழ்கால அரசியலை நாடக ஆசிரியர் இரசிகர்கள் விளங்கும் படியாக நன்றாகவே சொல்லியுள்ளார். நெறியாள்கையும், இசையும் தரமாக இருந்தன. நடிப்பு மிகத் தரமாக இருந்தது. எனினும் சிலரின் நடிப்பில் ஒரே சாயல் (நெறியாளருடையதோ) தெரிந்தது. குருக்கள் ஐயருக்கு நடித்தவருடைய நடிப்புப் பாராட்டுப் பெற்றது. இவ்வாறு பல சிறப்புக்களைப் பெற்ற இந்த நாடகத்தின் பெரிய குறைபாடாக "கதைவிரிவாக்கமின்மையே" காணப்பட்டது. நாடகம் ஒரு குறித்த சில சம்பவங்களையே மீண்டும் மீண்டும் சுற்றிக் கொண்டிருந்தது. ஒரு தளத்தையே சுற்றிக் கொண்டிருந்த கதையையும், ஒரு பாத்திரத்தை முழுமையாக வளர்க்காமல் பங்கிடப்பட்டிருந்த நடிப்பையும் விலக்கிப் பார்த்தால் இந்த நாடகமும் இம்முறை அரங்கிற்குப் பெருமை சேர்த்த ஒரு நாடகம் என்பது மனங் கொள்ளத்தக்கது.

மொத்தமாக நோக்கினால் இம்முறை நாடக விழாவில் மேடையேறிய நாடகங்களின் எண்ணிக்கை குறைவு என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். சென்ற முறை ஆறு நாடகங்கள் அலங்கரித்த மேடையில் இம்முறை நான்கு நாடகங்களே மேடை ஏறின. அடுத்தடுத்த முறைகளில் பல நாடகங்கள் மேடை ஏற வேண்டும் என்பது என் அவா.

இந்த நாடகங்கள் அனைத்திலும் ஒளிப்பயன்பாடு பலவீனமாகவே இருந்தது. அதனால் இம்முறை சிறந்த ஒளியமைப்புக்குரிய விருது வழங்கப்படவில்லை. நாடகத்தில் ஈடுபடும் நண்பர்கள் "ஏதோ போட்டிக்காக அனுப்ப வேண்டுமே" என்ற எண்ணத்தில் குறுங்காலத்தில் நடிப்பை மட்டும் பிரதானப்படுத்தி நாடகத்தை வழங்காமல் ஒளியமைப்பு இசையமைப்பு முதலியவற்றிலும் போதிய கவனமெடுக்க வேண்டும்.

ஒளி, இசை முதலியவற்றில் நாடக ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்கள் தங்கள் ஆற்றலை விருத்தி செய்யவும், அதனூடு நாடகங்களை இன்னும் தரமானவையாக்கவும் இனிவரும் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் வழி செய்தல் அவசியமானது.

# செயலாளர் அறிக்கை 1999/2000

இலங்கையின் புகழ் பூத்த பல்கலைக்கழகமான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்க 65வது செயற்குழுவின் ஆண்டறிக்கையை செயலாளர் என்ற ரீதியில் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**26-07-1999 பொதுக்கூட்டம் :**

கலைப்பீட கன்னங்கரா மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 1999-2000ம் கல்வியாண்டிற்கான தமிழ்ச்சங்க நிர்வாக சபை பொறுப்பேற்றுப் பணிகளை ஆரம்பித்தது.

**09-08-1999 :- புது வசந்தம்**

எமது பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக வருகை தந்திருந்த தமிழ் பேசும் மாணவர்களை வரவேற்பதற்காகவும், அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவும் E. O. E. பெரெய்ரா அரங்கில் நடாத்தப்பட்டது. சங்கீத நாட்டிய சங்கத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் நாடகம், நடனம், கீழைத்தேய இசை, மேலைத்தேய இசை, கவியரங்கு என்பன இடம் பெற்றன.

29-09-1999 :- சக்தி வானொலியின் ஆதரவுடன் அவுஸ்திரேலியாவின் சிட்னி, பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்துடனான வானொலி விவாத அரங்கு இடம் பெற்றது. எமது சங்கத்தின் சார்பில் க. ஜெயநிதி, பொ. நக்கீரன், ஜெ. ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**25-, 27, 28-10-1999 : திரைப்பட விழா**

கலைப்பீடத் திரையரங்கில் நம்மவர், செந்தமிழ்ப்பாட்டு, வள்ளி ஆகிய மூன்று திரைப்படங்களும் எமது சங்கத்தால் திரையிடப்பட்டன.

**29-10-1999 :- நாடக விழா**

சங்கத்தின் உப தலைவர் ப. நிரஞ்சனி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நான்கு நாடகங்கள் மேடை ஏறின. அவை :

1. சு. அரவிந்தனின் "ஓடைகள்"
2. ஜி. எஸ் எஸ் பெர்னாண்டோவின் "வராது வந்த மாமணியே"
3. க. ஈசனின் "கங்கையைத் தேடும் ஓடம்"
4. வி. துதிகரனின் "குழி"

இம்முறை நாடகப் போட்டிக்கு நடுவர்களாக கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. ஜெய்சங்கர், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. வ. மகேஸ்வரன், செல்வி. அம்பிகைவேல்முருகு, திரு. ப. பிரதீபன் ஆகியோர் கடமையாற்றினர். நாடக விமர்சன உரையை பேராதனைப் பல்கலைக்கழக முது நிலை விரிவுரையாளர் கலாநிதி துரை. மனோகரன் அவர்கள் நிகழ்த்தினார். இடைவேளையின் போது மாணவன் பழ. சிறியின் தனிநபர் நடிப்பு நடைபெற்றது.

**இவ்விழாவில் விருதுகள் பெற்ற நாடகங்களினதும், மாணவர்களினதும் விபரம் பின்வருமாறு**

| விருது பெற்றவர் | நாடகம் |
|---|---|
| 1வது சிறந்த நாடகம் | "வராது வந்த மாமணியே" |
| 2வது சிறந்த நாடகம் (02) | 1. "குழி" |
| | 2. "ஓடைகள்" |
| 4வது சிறந்த நாடகம் | "கங்கையைத் தேடும் ஓடம்" |

| விருது | பெற்றவர் | நாடகம் |
|---|---|---|
| சிறந்த பிரதியாக்கம் | ஸ்ரீ. பிரசாந்தன் | "வராது வந்த மாமணியே" |
| சிறந்த நெறியாள்கை | ஸ்ரீ. பிரசாந்தன் | "வராது வந்த மாமணியே" |
| சிறந்த காட்சியமைப்பு | | "வராது வந்த மாமணியே" |
| சிறந்த இசையமைப்பு | கோ. கிருஷாந்தி<br>க. ஆனந்த குமார சர்மா | "வராது வந்த மாமணியே" |
| சிறந்த ஒளியமைப்பு | வழங்கப்படவில்லை. | |
| சிறந்த ஒப்பனை | | "ஓடைகள்" |
| சிறந்த நடிகர் | ஜி. எஸ் எஸ் பெர்னாண்டோ | "வராது வந்த மாமணியே" |
| சிறந்த நடிகை | இ. காயினி | "ஓடைகள்" |
| நினைவில் நின்ற நடிகர் (02) | ப. தர்சன்<br>த. ஜெயகுமார் | 1. "ஓடைகள்"<br>2."குழி" |
| நினைவில் நின்ற நடிகை(03) | ந. சுவர்ணலதா<br>யோ. பிரசன்யா<br>அன்பரசி | 1."வராது வந்த மாமணியே"<br>2."வராது வந்த மாமணியே"<br>3.கங்கையைத் தேடும் ஓடம்" |

**18-11-1999 : புலமைப் பரிசிற்கு மாணவரைத் தெரிதல் .**

முதன் முதலாக தமிழ்ச் சங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களைப் பெறத் தகுதியான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பெருந்தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி முத்துக்குமாரசுவாமி, திரு. வ. மகேஸ்வரன், முன்னைநாள் சங்கத் தலைவர் க. நரேந்திர நாதன் ஆகியோரைக் கொண்ட குழு மாணவர்களைத் தெரிவு செய்தது. 05 மாணவர்கள் தலா 3000 ரூபா பணத்தினைப் பெற்றுக் கொண்டனர்.

**18, 29-11-1999, 02-12-1999: விவாத அரங்கு**

அனைத்துப் பீட மாணவர்களுக்கான விவாதச் சுற்றுப்போட்டி அமரர் பேராசிரியர் அ. துரைராசா நினைவுக் கேடயத்திற்காக விலக்கல் முறையில் நடைபெற்றது. நடுவர்களாக பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திரு. சிவயோகலிங்கம், திரு. வ. மகேஸ்வரன், உதவி விரிவுரையாளர்கள் செல்வி இரா. சர்மிளாதேவி, ரி. விஜயரேணுகா, ஆகியோர் கடமையாற்றினர். எஸ். ஜெயகாந்தன் தலைமையிலான அணி முதலாம் இடத்தையும் ப. ரதீஸ், ம. சுதர்சனன் ஆகியோர் தலைமையிலான அணிகள் இணைந்து 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. பல்கலைக்கழக தமிழ்ச்சங்க விவாத அணிக்காக ஜெ. ஜெயகாந்தன் ப. ரதீஸ், வ. வாகீசன், சு. அரவிந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

**22-11-1999: குறிஞ்சித் தென்றல்**

எமது சங்கம் முதன் முறையாக ஹட்டன் மாநகரில் ஏற்பாடு செய்திருந்த பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி விஜிதா திரையரங்கில் சங்கத் தலைவர் திரு. ருக்ஷகான் தலைமையில் இடம் பெற்றது. காலை மாலை என இரு அமர்வுகளாக நடாத்தப்பட்ட இவ்விழாவிற்கு ஹட்டன், டிக்கோயா நகர சபைத் தலைவர் திரு. எம். ஏ. எஸ் அபுசாலி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக ஹட்டன் பிராந்திய பொலிஸ் அதிகாரி திரு. அசோக மகிந்த வீரக்கொடி, பெருந்தலைவர் பேராசிரியர் திரு. சி. தில்லைநாதன், பேராசிரியர் திரு. சி. சிவகணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். குறிஞ்சித் தென்றலில் கே. சிவரதி, கமலாசுதன், ஆகியோர் நெறியாள்கையில் உருவான "ஸ்வர்ண கானங்கள்" கே. சிவரதியின் தயாரிப்பில் உருவான "பண்ணும் பரதமும்" நாட்டியம், பொ. நக்கீரன் நெறியாள்கையில் பாலநந்த குமாரின் "வரும்" நாடகம், ஏ. குபேரனின் கீழைத்தேய இசைக்கச்சேரி, மா. அமுதராஜின் நெறியாள்கையில் உருவான "பண்டார வன்னியன்" நாட்டுக் கூத்து, நகைச்சுவை நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இவற்றுள் ஸ்வர்ண கானங்கள், பண்ணும் பரதமும் ஆகிய இரு நிகழ்ச்சிகளையும் எமது சகோதர சங்கமாகிய சங்கீத நாட்டிய சங்கம் வழங்கி உதவியது.

**04-122-1999 தேன்தமிழ் நாத நிகழ்வுக்கு ஒத்துழைப்பு**

எமது சகோதர சங்கங்களான இந்து மாணவர் மன்றம், சங்கீத நாட்டிய சங்கம் என்பன இணைந்து கொழும்பில் நடாத்திய தேன்தமிழ் நாத நிகழ்ச்சியில் தமிழ்ச் சங்கத் தயாரிப்பான "வரும்" நாடகமும், நாட்டுக் கூத்தும் இடம் பெற்றது.

**09-12-1999 : அமரர் கலாநிதி கைலாசபதி நினைவு விழா**

அமரர் கலாநிதி கைலாசபதி நினைவாக E.O.E. பெரெய்ரா அரங்கில் நடாத்தப்பட்ட தனிநபர் நடிப்புப் போட்டி இம்முறையும் ஆண்கள், பெண்கள் என்ற இரு பிரிவினருக்கும் வெவ்வேறாக

நடாத்தப்பட்டது. விரிவுரையாளர்கள் கலாநிதி துரை மனோகரன், திரு. வ. மகேஸ்வரன், முன்னாள் உதவி விரிவுரையாளர் செல்வி. அம்பிகை வேல் முருகு ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர்.

மேற்படி போட்டியில் பின்வருவோர் பரிசில்களை வென்றனர்.

| **ஆண்கள் பரிசு** | **பெயர்** |
|---|---|
| 1ம் பரிசு | சி. அஜந்தன் |
| 2ம் பரிசு | சி. சிவேந்திரன் |
| 3ம் பரிசு (02) | பா. சந்திரகாந்தன் ப. சதீஸ். |

| **பெண்கள் பரிசு** | **பெயர்** |
|---|---|
| 1ம் பரிசு | ச. கவிதாஞ்சலி |

கைலாசபதி நினைவுரையை பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து எம்மால் நடாத்தப்பட்ட விவாதச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. மேலும் இ. ருசாந்தன் தலைமையில் "தமிழ்ப் பாரம்பரியத்தில் பெண்ணுரிமைகள், பாதுகாக்கப்பட்டு வருகின்றன. "வரவில்லை" என்ற தலைப்பிலான பட்டிமன்றமும், பொ. நக்கீரனின் நெறியாள்கையில் பாலநந்தகுமாரின் "வரும்" நாடகமும் இடம் பெற்றன.

**25, 26, 27-02-2000 ஓவியக் கண்காட்சி**

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட ஓவியக் கண்காட்சியில் எமது சங்கத்தின் சார்பில் இ. ருசாந்தன், தோ. மௌலியின் படைப்புக்கள் இடம் பெற்றன. இவை மக்களிடையே பெரும் வரவேற்புப் பெற்றன.

**04-03-2000 : குறிஞ்சிக் குமரன் கோவில் சிவராத்திரி விழா**

எமது சகோதர சங்கமான இந்து மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சிவராத்திரி தின விழாவில் விவாத அரங்கு, வில்லுப்பாட்டு, "யான் பெற்ற இன்பம்" எனும் தலைப்பிலான கவியரங்கு, சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகள் எமது சங்கத்தினால் நடாத்தப்பட்டன.

**இளங்கதிர் வெளியீடு**

மேற்கண்ட நிகழ்ச்சிகளை எமது செயற்குழு செவ்வனே நிறைவேற்ற மனதாலும், வாக்காலும் காயத்தாலும் உழைத்த அத்துணைப் பேருக்கும் எமது நன்றிகள்.



இடமிருந்து வலம்

முன்வரிசை : செ.ருக்ஷகான், பேராசிரியர். சி.தில்லைநாதன், உப வேந்தர் கபில குணசேகர, வைத்திய கலாநிதி M.A.M. சித்தீக், வ.ஜெயரூபன்

பின்வரிசை : ப.நிரஞ்சனி, வே.முருகதாசன், ப.குகநேசன், பா.அனுஷா, க.சிவகுமார், வ.சுகந்தன், க. கபிலன், ந.சுவர்ணலதா

# தமிழ்ச் சங்க நிர்வாகம்
## 1999/2000

| | |
|---|---|
| பெருந்தலைவர் | பேராசிரியர். சி.தில்லைநாதன் |
| பெரும்பொருளாளர் | வைத்திய கலாநிதி M.A.M. சித்தீக் |
| தலைவர் | செல்வன். செ.ருக்ஷகான் |
| உப தலைவர் | செல்வி. ப.நிரஞ்சனி |
| செயலாளர் | செல்வன். வ.ஜெயரூபன் |
| இளம்பொருளாளர் | செல்வன். ப.குகநேசன் |
| இதழாசிரியர்கள் | செல்வன். வே.முருகதாசன்<br>செல்வன். சி.மதுராந்தகி |
| வெளியீட்டு அலுவலர் | செல்வன். ஜெ.சிவானந்தன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | செல்வன். வீ.சுதேசன்<br>செல்வி. ந.சுவர்ணலதா<br>செல்வன். ந.குமுதினி<br>செல்வன். வ.சுகந்தன்<br>செல்வி. சி.சுமணா<br>செல்வன். க. கபிலன்<br>செல்வன். பா.அனுஷா<br>செல்வன். சி.கோகுலரமணன்<br>செல்வி. வே.சந்திரசேகரன்<br>செல்வன். க.சிவகுமார் |

# மூடும் முன்....

- ★ இம்மலருக்காக ஆக்கங்கள் தந்துதவிய அனைத்துப் படைப்பாளிகளுக்கும்.....
- ★ பல வகைகளிலும் உதவி புரிந்த உதவி விரிவுரையாளர் செல்வி இரா. சர்மிளாதேவி அவர்கட்கும்......
- ★ பின்பக்க அட்டை ஓவியத்தையும், உட்பக்க ஓவியங்களையும் தந்துதவியதோடு அவ்வப்போது ஆலோசனைகளையும் தந்த இ. ருசாந்தனிற்கும்
- ★ முன்பக்க அட்டைப்பட ஓவியத்தினைத் தந்துதவிய சூ. யோகேஸ்வரனிற்கும்
- ★ இம்மலரை வெளிக்கொணர்வதில் பிரதிகள் ஒப்புநோக்கி உதவிகள் புரிந்த வே. சதிஸ்குமார், த. ஞானக்குமரன், வ. சுகந்தன், க. ஈசன், அ. அலங்கேஸ்வரன், சி. அஜந்தன் மற்றும் ஏனைய மாணவர்களிற்கும்
- ★ புத்தக வெளியீட்டிற்கான நிதியினைத் திரட்டும் குறிஞ்சித் தென்றல் நிகழ்வில் பங்களிப்புச் செய்த அனைவருக்கும்
- ★ மலரை சிறப்புற அச்சிட்டுத் தந்த ரெக்னோ அச்சக உரிமையாளர் தி. கேசவனிற்கும்

எமது மனமார்ந்த நன்றிகள்.

